
# இந்து சமயம்
# ஓர் அறிவியல் பொக்கிஷம்
## பாகம்–1



என்.கே.எஸ்.திருச்செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்**
**பாகம்-1**

நமக்குத் தெரிந்த சம்பிரதாயங்களும்,
தெரியாத உண்மைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயம்
# ஓர் அறிவியல் பொக்கிஷம்
## பாகம்-1

### நமக்குத் தெரிந்த சம்பிரதாயங்களும், தெரியாத உண்மைகளும்

**என்.கே.எஸ்.திருச்செல்வம் B.A**
வரலாற்றுத்துறை-சென்னை பல்கலைக்கழகம்

வெளியீட்டு அனுசரணை
**இந்து ஆராய்ச்சிப் பேரவை**
வெளியீடு
**அருந்ததி பதிப்பகம் - கொழும்பு**
**( இரண்டாம் பதிப்பு )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்**

**நூலாசிரியர் :** என்.கே.எஸ்.திருச்செல்வம்

**உரிமை :** என்.கே.எஸ்.திருச்செல்வம் ©

**வெளியீடு :** அருந்ததி பதிப்பகம்

68/14, ஸ்ரீ சித்தார்த்த வீதி, கொழும்பு-05

**வெளியீட்டு அனுசரணை:** இந்து ஆராய்ச்சிப் பேரவை

**முதல் பதிப்பு :** மாசி 2018

**இரண்டாம் பதிப்பு :** கார்த்திகை 2020

**பக்கங்கள் :** xvi + 253

**அச்சீடு :** குமரன் அச்சகம்

39. 36வது ஒழுங்கை, கொழும்பு-06

தொலைபேசி. 011-2364550

**Indu Samayam or Ariviyal Pokkisham**

**Author :** N.K.S.Thiruchelvam

**Copyright :** N.K.S.Thiruchelvam ©

**Publisher :** Arunthathy Pathippakam

68/14, Sri Siddhartha Road, Colombo-05

**Sponsored by :** Hindu Research Council

**First Edition :** February 2018

**Secound Edition :** November 2020

**Pages :** xvi + 253

**Printer :** Kumaran Printers

39, 36th Lane, Colombo-06

Tel. 011-2364550

**Price : Rs. 650.00**

**ISBN : 978-955-3726-05-6**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பல்லாயிரம் ஆண்டு காலமாக இந்து சமயத்தில் ஏராள மான வழிபாடுகளும், தத்துவங்களும், நடைமுறைகளும், சடங்கு களும், சம்பிரதாயங்களும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை நாம் அறிந்த விடயமே. இந்து சமயத்தில் இந்துக்களுக்கு வழி காட்டியாக வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், உபநிடதங்கள், திவ்யப் பிரபந்தங்கள், பக்தி இலக்கியங்கள் ஆகி யவை விளங்குகின்றன. இவற்றில் சொல்லப்படாத விடயங்களே இல்லை எனலாம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்து சமய நூல்களில் கூறப் பட்டுள்ள விடயங்கள் மற்றும் இந்து சமய வழிபாடுகள், தத்து வங்கள், நடைமுறைகள் ஆகியவை அனைத்திற்கும் அறிவியல், விஞ்ஞானம், மருத்துவம் மற்றும் உடல் சுகாதாரம் தொடர்பான அர்த்தங்கள் பல உள்ளன.

இதுவரை காலமும் இவ்வர்த்தங்கள் பற்றி சாதாரண மக்கள் அறிந்திருக்கவில்லை. இவற்றை அறிந்து வைத்திருந்த ஒரு சில அறிஞர்களும் இவை பற்றிய விபரங்களை சாதாரண மக்களிடம் எடுத்துச் செல்லவுமில்லை. கடந்த சில வருடங்களாக முகப் புத்தகம் எனும் சமூக ஊடகம் சாதாரண மக்கள் மத்தியில் பிர பல்யமான காலகட்டத்தில் பல இந்துக்கள் இந்து சமயத்தை ஆராய்வதிலும், இந்து சமய நூல்களில் கூறப்பட்டுள்ள பலதரப் பட்ட விடயங்களுக்கான உண்மையான விளக்கங்களையும், கார ணங்களையும், அவை தொடர்பான அறிவியல் அர்த்தங்களை யும், கண்டறிவதிலும் அவற்றை தமது சமூகவலைத் தளங்களில் பதிவிடுவதிலும், தமது நண்பர்களுக்கிடையில் பகிர்வதிலும் ஆர் வம் காட்டி வருகின்றனர். இதன் காரணமாக வலைத்தளங்கள், முகநூல், வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்களில் இந்து சம யம் தொடர்பான பல அறிவியல் பூர்வமான விடயங்கள் வரத் தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் நானும் கடந்த மூன்று வருடங்களாக பல இந்து சமய நூல்களை ஆராய்ந்து அவற்றில் உள்ள அறிவியல் தொடர்பான விடயங்கள் பலவற்றை எனது முகநூல்களான *NKS.Thiruchelvam*, சனாதன தர்மம், மற்றும் எனது முகநூல் பக்கங்களான லங்காபுரி, உலகம் முழுவதும் இந்து சமயம், முகநூல் சைவம் தமிழ், சைவம் இந்து சமயம் ஓர் அறிவியல், குமரி நாட்டு சைவத் தமிழன் ஆகியவற்றின் மூலம் நண்பர்களுக்கு பதிவிட்டு வந்தேன். அதேசமயம் வேறு பல இந்து சமய ஆராய்ச்சியாளர்களின் அறிவியல் தொடர்பான தகவல்களையும் இம்முகநூல் பக்கங்கள் மூலம் பகிர்ந்து வந்தேன்.

இத்தகவல்கள் அனைத்தையும் ஓர் தொகுப்பு நூலாக வெளியிட வேண்டும் என எனது நண்பர்கள் பலர் வேண்டுகோள் விடுத்தனர். அதன் பின்பு இதற்காக மேலும் பல தகவல்களை சேகரித்தேன். இதன் மூலம் இந்து சமயம் தொடர்பான அரிய பல அறிவியல் விடயங்கள் ஓர் ஆவணமாக இந்து மக்களின் கைகளுக்குப் போய்ச்சேர வேண்டும் என விரும்பினேன். அதன் பயனாக "இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்" எனும் பெயரில் இத்தொகுப்பு நூல் வெளிவருகிறது.

இந்நூலில் நான் ஆராய்ந்து எழுதிய கட்டுரைகளுடன் "*Tamil and Vedas*" எனும் வலைத்தளத்தில் லண்டன் திரு. சுவாமிநாதன், திரு.எஸ். நாகராஜன் ஆகியோர் எழுதிய கட்டு ரைகளும், திரு. ஏ. விஜயகுமார் அவர்களின் முகநூலில் அவர் எழுதிய அரிய பல கட்டுரைகளும், "*Hinduism facts*-இந்து சமய உண்மைகள்", "அறிவியல் சார்ந்த இந்துமதம்" ஆகிய முகநூல்களில் பதிவிடப்பட்ட கட்டுரைகளும், "தமிழ் இந்து-தமிழரின் தாய்மதம்"ஆகிய வலைத்தளங்களில் பதிவிடப்பட்ட அரிய பல கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. அக்கட்டுரை களை எழுதிய மேற்குறிப்பிடப்பட்டுள்ள சமூக ஊடகங்களுக் கும், அவற்றில் கட்டுரைகளை எழுதிப் பதிவிட்ட லண்டன் திரு. சுவாமிநாதன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.எஸ்.நாகராஜன், திரு.ஏ.விஜயகுமார், திரு. அர விந்தன் நீலகண்டன் ஆகிய ஆராய்ச்சியாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்துக்கள் மட்டுமல்லாது இந்து சமயத்திலுள்ள அறிவியல் விடயங்களை அறிய விரும்பும் அனைவரின் கரங்களுக்கும் இந் நூல் போய்ச் சேர வேண்டும் என்பதால், எந்தவித இலாபமும் கருதாமல், இந்நூலை அச்சிட ஏற்பட்ட செலவை மட்டும் நூலின் விலையாகக் கொண்டு இந்நூலை வெளியிடுகிறேன்.

**என்.கே.எஸ்.திருச்செல்வம் B.A**
**வரலாற்றுத்துறை**
**சென்னை பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

**முன்னுரை** ........................................ v

**நூலாசிரியர் எழுதிய ஏனைய நூல்கள்** ...... Error! Bookmark not defined.

**இந்து சமயமே உலகின் அறிவியல் முன்னோடி** .................... 1

*இந்துமதம் அர்த்தமுள்ளது, அறிவியல் நிறைந்தது, விமர்சனத்திற்கு உள்ளாக்க முடியாதது* .................... 4

*இந்துமத சம்பிரதாயங்கள், சடங்குகள் ஆகியவற்றின் பின்னணியில் உள்ள அறிவியல்* .................... 8

*நம் மூதாதையர்கள் மூட நம்பிக்கையாளர்களா? அறிவியல் அறிஞர்களா?* .................... 9

*விஞ்ஞானிகளையே வியக்க வைத்த நடராஜர் தத்துவம்* .................... 13

*கோயிலுக்கு செல்வதன் பின்னணியில் உள்ள விஞ்ஞான பூர்வமான காரணங்கள்* .................... 17

*கோயிலுக்கு நாம் ஏன் செல்ல வேண்டும்? இதில் உள்ள அறிவியல் என்ன?* .................... 21

*தெய்வச்சிலைகளை கல்லில் அமைப்பது ஏன்?* .................... 26

*ஊரில் கோயில் கோபுரத்தை விட எந்தக் கட்டிடமும் உயரமாக இருக்கக் கூடாது என இந்துக்கள் கூறுவது ஏன்?* .................... 29

*வீட்டில் நாம் விளக்கேற்றுவது ஏன்?* .................... 31

*சுப காரியங்களின்போது வெளியில் இருந்து வீட்டுக்கு வருபவர்களுக்கு ஆரத்தி எடுப்பது ஏன்?* .................... 32

*நாம் ஏன் விபூதி பூசுகிறோம்? இதனால் விளையும் நன்மைகள் என்ன?* .................... 34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அதிகாலையில் குளிக்க வேண்டும் என நம் முன்னோர்கள் சொன்னது ஏன்?* ........................................ 36

*அசைவ உணவை சாப்பிட்ட பிறகு கோயிலுக்குச் செல்லக் கூடாது என நம் முன்னோர்கள் சொன்னது ஏன்?* ........................................ 38

*அறிவியலின் படி மனிதன் சைவப் பிராணியா? அசைவப் பிராணியா?* ........................................ 38

*இந்துக்கள் பசுவை வணங்குவது ஏன்? பசுவின் புனிதத் தன்மை என்ன?* ........................................ 39

**அறிவியல் நிறைந்த நம் சம்பிரதாயங்களும், சடங்குகளும்** ..... 41

*நாம் காலையில் எழும்போது பூமியைத் தொட்டு தலையில் ஒற்றிக் கொள்வது ஏன்?* ........................................ 41

*நம் தாய்மார்கள் அதிகாலை எழுந்ததும் துளசி மாடத்தை சுற்றி வருவதன் காரணம் என்ன?* ........................................ 42

*கணவரை இழந்த பெண்கள் ஏன் பொட்டு வைக்கக் கூடாது?* ......... 43

*காலை ஆட்டிக் கொண்டே இருந்தால் தரித்திரம் பிடிக்கும் என்று சொன்னது ஏன்?* ........................................ 44

*நாம் காது, மூக்கு குத்திக் கொள்வது எதற்காக?* ........................ 46

*நமது துக்க வீடுகளில் ஏன் பறை அடிக்கப்படுகிறது?* ..................... 47

*தோப்புக்கரணம் போடுவது ஏன்?* ........................................ 48

*ஆடி மாதம் அம்மன் கோயில்களில் கூழ் ஊற்றுவது ஏன்?* .............. 51

*ஆடி மாதம் புதுமணத் தம்பதியரை ஏன் பிரித்து வைக்கிறார்கள்?* .... 56

*கிரகண பயம் எதற்காக?* ........................................ 60

*வடக்கை நோக்கி தலை வைத்து படுக்காதீர்கள் என நம் முன்னோர்கள் சொல்வதன் காரணம் என்ன?* ........................... 61

*நம் முன்னோர்கள் துளசி இலையை காதுக்குப் பின் வைப்பது ஏன்?* ........................................ 65

*வெற்றிலை போடுவது ஏன்?* ........................................ 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாசி மாதம் அசைவம் சாப்பிடக்கூடாது என்று சொல்வார்கள். ஏன் தெரியுமா? ........ 68
நெய் ஊற்றி தீபம் ஏற்றுவது ஏன்? ........ 69
பெரியோர்களின் காலில் விழுந்து ஏன் வணங்க வேண்டும்? ........ 70
இடிஇடிக்கும் போது கிராமத்து மக்கள் "அர்ஜுனா அர்ஜுனா" என கூறுவது ஏன்? ........ 73
புதுப்பெண்ணை 'வலது காலை எடுத்து வைத்து வா' என்று கூறக்காரணம் என்ன? ........ 74
அம்மன் கோயில்களில் தீ மிதிப்பு நடத்துவது ஏன்? அறிவியல் பூர்வமான விளக்கம் ........ 75
கோவில் மணியில் இருக்கும் அறிவியல் உண்மைகள் ........ 77
விநாயகர் சதுர்த்தியின் 3ஆம் நாள் விநாயகர் சிலையை ஆற்றில் கரைப்பது ஏன்? ........ 80
கோயில்களில் தரையில் அங்கப்பிரதட்சணம் செய்வது எதற்காக தெரியுமா? ........ 82
பிறந்த குழந்தைகளை புகைப்படம் எடுக்கக்கூடாது என நம் முதியவர்கள் சொல்வது ஏன்? ........ 85
நாம் திருஷ்டி கழிப்பது ஏன்? ........ 86
குழந்தை பிறக்கவில்லையா? அரச மரத்தை சுற்றி வாருங்கள் என நம் முன்னோர் சொன்னது ஏன்? ........ 87
அரச மரத்தை சுற்றினால் குழந்தை கிடைக்குமா? ........ 87
நம் விழாக்களின் போது மாவிலைத் தோரணம் கட்டுவது ஏன்? ........ 90
எந்த வேலையையும் அதிகாலையில் தொடங்க வேண்டும் என்று நம் முன்னோர் சொன்னது ஏன்? ........ 92
நம் பெண்கள் காலையில் கோலம் போடுவது ஏன்? ........ 94
நம் வீடுகளில் காலையில் வீட்டிற்கு முன்னும்,பின்னும் பசுஞ்சாணம் தெளிப்பது ஏன்? ........ 95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்கள் பசுவைக் காமதேனு என்று கூறி தெய்வத்திற்கு இணையாக வணங்குவதேன்? ....................97

நம் முன்னோர்கள் மஞ்சளை அதிகம் உபயோகித்தது ஏன்? .......... 102

பொங்கல் பானை வைக்கும் போது சாணத்தில் பிள்ளையார் பிடித்து, அருகம்புல் சூட்டுவது ஏன்? ....................105

திருமணத்தின் போது முளைப்பாரி வளர்ப்பு, அரசாணிக்கால் நடுதல் போன்ற சம்பிரதாயங்கள் ஏன்? ....................106

திருமணத்தின் பின் கட்டுசாதம் கொடுப்பது, பெரியவர்களின் காலில் விழுந்தால் பணம் கொடுப்பது ஆகிய சம்பிரதாயங்கள் ஏன்? ......... 107

திருமணத்தின் போது மெட்டி, மூக்குத்தி, தாலி அணிவிப்பதன் அறிவியல் காரணம் என்ன? ....................108

திருமணத்தின் பின் புது மணமக்களை மறுவீடு, தீபாவளி, பொங்கல் என்று பல அழைப்புகள் ஏன்? ....................109

பெண்ணை 5ஆம் மாதம் 5 பழங்களை பார்க்க வைத்து அழைத்து, விதவிதமான பலகாரங்கள் செய்து கொடுப்பது ஏன்? ....................110

பெண் கருவுற்ற பின் நடத்தப்படும் அறிவியல் சம்பிரதாயங்களும், சடங்குகளும் ....................111

குழந்தை பிறந்தபின் நடத்தப்படும் அறிவியல் சம்பிரதாயங்களும், சடங்குகளும் ....................116

எண்ணெய்க் குளியலில் இவ்வளவு விஷயங்களா? ....................117

இரவு நேரத்தில் அரச மரம், புளியமரம் அருகில் போகாதீர்கள் என்று நம் பாட்டிமார் சொல்வது ஏன்? ....................119

எலுமிச்சை, மிளகாய் ஆகியவற்றுடன் திருஷ்டி கயிறு கட்டுவது ஏன்? .................... 120

ஈமச்சடங்கு முடிந்த பிறகு குளிக்க வேண்டும் என சொல்வது ஏன்? .................... 120

பயணத்திற்கு முன் தயிரும், சர்க்கரையும் உண்ண வேண்டும் என்று சொல்வது ஏன்? ....................121



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பை கொன்ற பிறகு அதன் தலையை நசுக்க வேண்டும் என நம் பாட்டிமார் சொல்வது ஏன்? ....122

வருடம் ஒரு முறை நாம் ஏன் போகி பண்டிகையை கொண்டாடுகிறோம்? ....122

பெண்களுக்கு ஆலயங்களில் குருக்கள் அல்லது ஐயர் அந்தஸ்து கொடுக்க இந்து மதம் அனுமதிப்பதில்லை. ஏன்? ....123

பெண்கள் மாதவிடாய் காலங்களில் ஆலயங்களுக்கு செல்வது அனுமதிக்கப்படுவது இல்லை. இதன் காரணம் என்ன? ....125

புலி, மான், யானை, பசு, நரி, முள்ளம்பன்றி போன்ற மிருகங்களுடன் தொடர்புடைய விநோதமான இந்துக்களின் நம்பிக்கைகளும், அர்த்தங்களும்.... 126

குடையை வீட்டிற்கு வெளியேதான் திறக்க வேண்டும், வீட்டிற்குள் திறக்க கூடாது என்பது ஏன்? ....130

**நமது முன்னோர்களின் அறிவியல் நுட்பம்** ....131

உயிர்களின் பரிணாமக் கொள்கையை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கூறிய இந்து மதம்.... 131

உலகத்திற்கு வானவியலை முதன் முதலில் அறிமுகப் படுத்தியவர்கள் இந்துக்கள்....135

பூமியின் வயது பற்றி இந்து நூல்களான மனுஸ்மிரிதியும், அதர்வண வேதமும், கிறிஸ்தவ நூலான பைபிளும் கூறியவற்றில் எது சரியானது? ....136

அதர்வண வேதம் கூறும் உலகத்தின் வயது எவ்வளவு தெரியுமா? ..139

இன்றைய அறிவியலுடன் ஒத்துப்போகும் நம் முன்னோர்கள் வகுத்த "கோத்திரம்" .... 141

ஒன்பது எழுத்துக்களைக் கொண்டு,உலக விஞ்ஞானிகளை வியக்க வைத்த,தமிழர் கணிக்கும் பஞ்சாங்கம் .... 146

திருமூலர் கூறிய தனஞ்சயன் வாயுவுக்கு இன்றைய விஞ்ஞானிகள் இட்ட பெயர் என்ன?.... 148



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிரபஞ்சமோ, உயிரோ உருவாவதற்கு ஒளியும்,ஒலியும் ஒத்திருத்தல் வேண்டுமா?....150

திருமூலர் கூறிய அஷ்டமா சித்திகள்-இன்றைய நவீன மனிதனின் வளர்ச்சிக்கு பயன்படும் அதிசயம்.... 151

நாம் பிரம்மாவாக உருவகப்படுத்தும் அமீபா. ....153

புண்ணிய தீர்த்தம் கங்கை-முன்னோர்களின் அறிவியல்....155

பிரம்மா பற்றிய விஞ்ஞான உண்மைகள். ....156

சிவலிங்கம் பற்றி ரஷ்ய விஞ்ஞானியின் ஆராய்ச்சியில் கிடைத்த முடிவு.... 164

உலக அழிவு பற்றி அன்றே சொல்லி வைத்த மகாபாரதம் .... 168

சூரியனைப் பற்றி அன்றே கூறிய நம் சித்தர்கள்....172

நமது முன்னோர்கள் வானியல் நிபுணர்கள் என்பதை நிரூபிக்கும் சான்றுகள்.... 178

வானவியலை போதிக்கும் ரிக் வேதம். .... 180

சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயிலில் உள்ள சில அற்புதமான ரகசியங்கள் .... 181

இந்து புராணங்களில் சொல்லப்பட்டுள்ள நெற்றிக்கண் என்ற ஒன்று உள்ளதா? ....185

இன்று நடந்து கொண்டிருக்கும் கலியுகம் பற்றி 3500 ஆண்டுகளுக்கு முன்பே கூறிய இந்துக்கள். .... 189

கலியுக முடிவு பற்றி லிங்க புராணம்.... 192

புறநானூறு காலத்தில் நீர் மூழ்கிக் கப்பல் இருந்ததா? .... 194

தீராத நோய்கள் தீர வேண்டுமானால் பழனிக்கு காவடி எடுங்கள் என்று நம் முன்னோர்கள் சொன்னது முட்டாள் தனமா?.... 197

எந்தத் தொழில் நுட்ப கருவிகளும் இல்லாத காலத்தில், தண்ணீர் இருக்கும் இடத்தை சரியாகக் கண்டு பிடித்து நம் முன்னோர்கள் எப்படி கிணறு வெட்டினார்கள்? .... 197



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலகின் முதல் அறிவியல் முன்னோடிகள் ........................199**

*இந்துக்களின் மறைக்கப்பட்ட, மறக்கடிக்கப்பட்ட சாதனைகள், புதைக்கப்பட்ட வரலாறு மற்றும் திருடப்பட்ட அறிவு பற்றிய உண்மைகள் ........................................................ 199*

*புவி ஈர்ப்பு சக்தியை முதன் முதலில் கண்டுபிடித்த இந்திய கணித மேதை பாஸ்கராச்சார்யர் ........................................................ 199*

*முதன் முதல் தொலைக்காட்சி பார்த்தவரும், முதல் சோதனைக்குழாய் குழந்தையுமான அகத்தியர் ........................................................203*

*மின்சாரத்தை முதன் முதலில் கண்டுபிடித்த அகத்திய முனிவர் .....205*

*உலகின் முதலாவது மகப்பேற்று மருத்துவர்* (gynecologist) *திருமூலர் ........................................................ 210*

*நாசா விஞ்ஞானிகளை விட பல மடங்கு அறிவுத்திறன் கொண்ட வானியல் நிபுணர் திருமூலர் ........................................................213*

*ஐரோப்பியருக்கு முன்பே அறுவைச் சிகிச்சையின் முன்னோடியாகத் திகழ்ந்த இந்து மகரிஷி சுஷ்ருதர் ........................................................214*

*இந்திய மருத்துவ ஆச்சார்யர் சரகர்........................................................221*

*ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ப் புலவர் ஔவையார் கண்ட அணுசக்தி ........................................................ 225*

*வானொலியின் தந்தை மார்க்கோனியா? ஜெகதீஸ் சந்திரபோஸ் எனும் இந்தியரா? ........................................................228*

*ஆகாய விமானம், விமான தொழில் நுட்பம் ஆகிய அற்புத படைப்புக்களின் முன்னோடிகள் நம் இந்துக்களே........................ 233*

*பண்டைய இந்துக்களின் விமானத் தொழில் நுட்பம்....................246*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் எழுதிய நூல்கள்

1. தென்னிலங்கையின் புராதன இந்துக் கோயில்கள்
2. பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரையும், கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும்
3. கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும், முனிவர்களும்
4. தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு
5. இலங்கையில் இராவணன் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள்
6. இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்
7. புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்
8. யார் இந்த இராவணன்?
9. போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளி கோயில்
10. தென்னிலங்கை பிராமிக் கல்வெட்டுகளில் இந்து சமயமும், தமிழும்
11. முன்னேஸ்வரம்-தொன்மையும் வரலாறும்
12. கன்னியா-பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்
13. கந்தன் கவசங்கள்
14. பண்டைய தமிழ் நூல்களில் சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

இந்து சமயத்தில் புதைந்து கிடக்கும் அறிவியல் விடயங்களை ஆராய்ந்து அவற்றை தங்கள் கட்டுரைகள் மூலம் வெளிப் படுத்திய ஆராய்ச்சியாளர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

இந்நூலில் நான் ஆராய்ந்து எழுதிய கட்டுரைகளுடன் "*Tamil and Vedas*" எனும் வலைத்தளத்தில் லண்டன் திரு. சுவாமி நாதன், திரு.எஸ். நாகராஜன் ஆகியோர் எழுதிய கட்டுரை களும், திரு. ஏ. விஜயகுமார் அவர்களின் முகநூலில் அவர் எழு திய அரிய பல கட்டுரைகளும், "*Hinduism facts*-இந்து சமய உண்மைகள்", "அறிவியல் சார்ந்த இந்துமதம்" ஆகிய முகநூல் களில் பதிவிடப்பட்ட கட்டுரைகளும், "தமிழ் இந்து-தமிழரின் தாய்மதம்" ஆகிய வலைத்தளங்களில் பதிவிடப்பட்ட அரிய பல கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

அக்கட்டுரைகளை எழுதிய மேற்குறிப்பிடப்பட்டுள்ள சமூக ஊட கங்களுக்கும், அவற்றில் கட்டுரைகளை எழுதிப் பதிவிட்ட ஆராய்ச்சியாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**லண்டன் திரு.சுவாமிநாதன்** - *Tamil and Vedas*
**திரு.எஸ்.நாகராஜன்** - *Tamil and Vedas*
**திரு.ஏ.விஜயகுமார்** - *Vijayakumar A*
**திரு. அரவிந்தன் நீலகண்டன்** - தமிழ் இந்து தமிழரின் தாய்மதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயமே உலகின் அறிவியல் முன்னோடி

இந்து மதம் என்பது வெறுமனே கடவுள் நம்பிக்கை சார்ந்தது மட்டுமல்ல. அது உலக அறிவியலுக்கு முன்னோடியாக விளங்கியுள்ளது. இன்று நாம் பார்க்கும், பயன்படுத்தும், அனுபவிக்கும் எல்லா விதமான விஞ்ஞான, அறிவியல் சாதனங்கள் மற்றும் விடயங்கள் அனைத்தும் இந்து சமயம் இந்த உலகிற்கு அளித்த கொடையாகும். இந்து தத்துவ ஞானிகளாலும், முனிவர்களாலும், சித்தர்களாலும் சுமார் 7000 வருடங்களாக அவ்வப்போது கண்டறியப்பட்டு,பயன்படுத்தப்பட்டு, எழுதப்பட்ட விடயங்களே இன்றைய உலகத்தை இயக்கிக் கொண்டிருக்கின்றன.

வானியல், மருத்துவம், விஞ்ஞானம், புவியியல், உடல் சுகாதாரம், கணிதம், இசை போன்ற அனைத்தும் இந்து சமயத்திலே கூறப்பட்டுள்ளன. வேதங்களிலும், புராணங்களிலும், இதிகாசங்களிலும், உபநிடதங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ள அனைத்திற்கும் ஓர் அடிப்படை உண்மை காணப்படுகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆனால் சிலர் புராணங்களிலும், இதிகாசங்களிலும் சொல்லப்பட்டுள்ள அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொள்ளாது அவை கற்பனையாகப் புனையப்பட்டவை எனக் கூறுகின்றனர்.

புராணக் கதைகளிலே வர்ணனைகள் அதிகமாக இருப்ப தால் அவை கற்பனையாக சொல்லப்பட்டவை எனும் மாயை உருவாகிறது. ஆனால் அவற்றிற்குள்ளே ஓர் அடிப்படை அறிவியல் உண்மை இருப்பது ஏனோ பலருக்கு தெரிவதில்லை. பூமித் தகடுகளின் அசைவு பற்றி சிவபுராணமும், கடற்கோள்களின் தாக்கம் பற்றி திருவிளையாடல் புராணமும், உயிர்களின் பரிணாம வளர்ச்சிக் கொள்கை பற்றி விஷ்ணு புராணமும், புவியியல் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாயணமும், அண்டத்தின் பெருவெடிப்பு பற்றி பக்தி இலக்கியங்களும் கூறுகின்றமை இதற்கு சில உதாரணங்களாகும்.

எமது சூரியக் குடும்பத்தில் 9 கோள்கள் இருக்கின்றன என்பதும், அவை சூரியனை மையமாக வைத்து சுற்றுகின்றன என்பதும் இந்துக்கள் இன்று நேற்று கண்ட உண்மை அல்ல. அது எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நவக்கிரக வழிபாட்டில் எடுத்து சொல்லப்பட்டது. ஆலய வழிபாட்டில் நடு வில் சூரியனையும் சுற்றிவர பிறகோள்களையும் அமைத்து வானியலின் அடிப்படைக் கோட்பாட்டை அன்றே சொல்லி விட்டது இந்து சமயம்.

எத்தனையோ மேல்நாட்டு விஞ்ஞானிகள் இந்து மத அறிவியலை பார்த்து வியப்படைத்து போய் உள்ளனர். அதில் மிகவும் முக்கியமானவர் உலக மாமேதை ஐன்ஸ்டீன். அவர் பகவத்கீதை பற்றிக் கூறும் போது "தன்னுடைய கடைசிக் காலத்தில் தான் பகவத் கீதையைப் படிக்க நேர்ந்தது என்றும், முன்னரே படிக்க வாய்ப்பு கிடைத்திருந்தால் தன்னுடைய ஆராய்ச்சியில் புதிய பரிமாணங்களை உருவாக்கி இருக்க முடியும்"என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதிலும் குறிப்பாக விஞ்ஞானத்தையும் தாண்டி வானவியலிலும், மருத்துவத்திலும், கணக்கியலிலும் இந்துக்களின் வளர்ச்சி இன்றைய விஞ்ஞானிகளையே வியக்க வைத்துள்ளது. விஞ்ஞானிகளை விட மிகவும் துல்லியமாக கணிக்கும் சாஸ்திர முறைமை இந்து மதத்தில் உண்டு. பௌர்ணமி, அமாவாசை மற்றும் இதர வானியல்சார் கணிப்புகள் இந்து மதத்தின் பெருமையை பறை சாற்றுவதாய் உள்ளன.

**இந்து மதத்தின் அறிவியல் தொடர்பான ஆதாரங்கள்.**

1. மரத்தில் இருந்து விழுந்த ஆப்பிள் பழத்தை கண்ட நியூற்றன் புவியீர்ப்பு விசையை கண்டார். பின்பு கிரகங்களுக்கு இடையிலான ஈர்ப்பு விசையை அவர் கண்டதன் விளைவாக பல முன்னேற்றகரமான கண்டுபிடிப்புகளை கண்டு பிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இந்து மதத்தின் "பிரஸ்ன உபநிஷதம்" என்கிற ஒரு வேதாந்த நூலில் இது பற்றி ஏற்கனவே குறிப்புகள் கூறப்பட்டு ள்ளன. பிராணா சக்தி, அபனா சக்தி என்ற இரண்டு சொற்கள் மூலம் இது விளக்கப்பட்டுள்ளது. அபனா சக்தி என்பது ஈர்ப் புச்சக்தி. பிரணாசக்தி என்பது எதிர் ஈர்ப்பு சக்தி. இதை கிரகங் களோடு ஒப்பிட்டும் பூமியின் இயக்கத்தோடு ஒப்பிட்டும் அந்த புராணத்தில் பல சுலோகங்கள் உண்டு. இவைகள் எல்லாம் பல ஆயிரம் நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இந்துக்களால் எப்படி சொல்ல முடிந்தது என்பதற்கு ஒரே விடை இறை சக்தி என்பதே.

2. பிரபல விஞ்ஞானி கெப்லரும், கலிலியோவும் பூமியும் மற்ற கிரகங்களும் சூரியனைச் சுற்றி வருவதாக சொன்னார்கள். ஆனால் இவர்களுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஆரிய பட்டர் எனும் இந்துமத அறிவியலாளர் பூமி சூரியனை சுற்றி வருவதை "லாகவ கவுரவா" என்னும் வார்த்தை மூலம் குறிப் பிட்டார். அதாவது ஒரு சிறிய அமைப்பு ஒரு பெரிய அமைப் பால் ஈர்க்கபட்டு சுற்றி வருகிறது என்பது இதன் பொருள்.

அது மட்டுமல்ல ஆத்ரேய பிராமணத்தில் சொல்லப்பட் டுள்ள சில விடயங்களைப் பார்த்து இன்று விஞ்ஞானிகள் பலர் வியப்படைத்து போய் உள்ளனர். அதில் சூரியன் உதிப்பதும் இல்லை, மறைவதும் இல்லை என்றும் பூமி தன்னுடைய அச்சில் தன்னைத்தானே சுற்றிக் கொள்வதால் பகல் இரவுத் தோற்றங்கள் ஏற்படுவதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

ஆரியப்பட்டர் உலகம் உருண்டை எனவும், அது தன்னை தானே சுற்றுகிறது எனவும் குறிப்பிட்டார். உலகம் உருண்டை யாக இருப்பினும் அது ஏன் தட்டையாக நமக்கு காட்சி அளிக் கின்றது எனவும் அவர் சொல்லியிருக்கிறார்.

சித்தாந்த சிரோன்மணி என்னும் நூல் புவியீர்ப்பு சக்தித் தத்துவத்தை விரிவாக விளக்கியுள்ளது. சந்திரன் ஒளியை சூரிய னிடம் இருந்து தான் பெறுகிறது என்றும், சந்திரகிரகணம் என் பது பூமியின் நிழல் சந்திரனின் மீது விழுகின்ற தோற்றப்பாடே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் காளிதாசர் தன்னுடைய ரகுவம்சம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அதைவிட கணிதவியலிலும் இந்து மதம் பெரும் நுட்பங்களை உலகிற்கு தந்தது என்பதும் வியக்கத்தக்க விடயமாகும். எல்லொருக்கும் பைதகரஸ் என்னும் கிரேக்க விஞ்ஞானியை தெரியும். ஆனால் அவருக்கு பல நூற்றாண்டுக்கு முன்பு வாழ்ந்த அதாவது பொ.ஆ.மு 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆபஸ்தம்பர் எனும் இந்து அறிஞரை யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை.

இவர் "தீர்க்கஸ்யாஷ்ணயா ரஜ்ஜி பார்ச்வமானி" என்னும் செய்யுளில் வர்க்கமூலம் இரண்டுக்குரிய துல்லியமான பெருமானத்தை கணித்து உள்ளார். அது **1.4142156** என்பதாய் அமைகிறது. இதை விடுத்து சில கடவுள்களின் தோற்றங்கள் மூலம் கூட மிகப்பெரிய விஞ்ஞான கருத்துகள் வெளியிடப்பட்டன.

உதாரணமாக சூரியன் 7 குதிரைகளை தனது தேரில் பூட்டி ஓட்டினான் என்பதை இந்து புராணங்களின் வாசகங்கள் கூறுகின்றன. அதுவே விஞ்ஞானத்தில் சூரியனில் இருந்து வரும் வெள்ளொளி 7 நிறங்களை கொண்டு அமைவதாகவே கூறுகிறது. இவற்றில் விலகக்கூடிய கதிர் ஊதா எனவும் குறைந்த கதிர் சிவப்பு எனவும் கூறப்பட்டுள்ளது.

## இந்துமதம் அர்த்தமுள்ளது, அறிவியல் நிறைந்தது, விமர்சனத்திற்கு உள்ளாக்க முடியாதது

இன்றைய நவீன விஞ்ஞான உலகில் நாம் பார்க்கும், பயன்படுத்தும், அனுபவிக்கும் எல்லா விதமான விஞ்ஞான, தொழில் நுட்ப, அறிவியல் சாதனங்கள் மற்றும் விடயங்கள் அனைத்தும் பண்டைய காலத்திலேயே இந்து சமய அறிஞர்களால் இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டவையே என்பது தற்போது நிரூபணமாகிக் கொண்டு வரும் இக்கால கட்டத்தில் பகுத்தறிவாளர்கள் சிலர் இந்து தர்மத்தில் அறிவியல் எங்கே இருக்கிறது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கின்றனர். அப்படியானால் இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில்?

1. இராமாயணத்தில் சீதையை இராவணன் விமானத்தில் கடத்தியதாகவும், விமானத்தின் தடம் சிறிது தூரம் சென்று பின் மறைந்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது. இதை அறிவியலில் எவ்வாறு அழைப்பீர்கள்?

2. இராமர் மிதக்கும் கற்களைக் கொண்டு பாலம் அமைத்து இலங்கைக்கு சென்றதாக இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. இதற்கு அறிவியலில் என்ன பெயர்?

3. திருவிளையாடல் புராணத்தில் பொங்கிவந்த கடல் வந்த வேகத்தில் வற்றிப்போய் விட்டது பற்றி கூறப்பட்டுள்ளது. இதை அறிவியலில் எவ்வாறு அழைப்பீர்கள்?

4. உலக மக்கள் உலோகங்கள் குறித்து அறியாத கால கட்ட த்தில் இந்துக்கள் அதை கோபுரங்களின் உச்சியிலும், கருவறை யிலும் அமைத்ததைப் பற்றி அறிவியல் என்ன சொல்கிறது?

5. இமயமலையில் நடந்த சிவன் - பார்வதி திருமணத்தை பொதிகை மலையிலிருந்து அகத்திய முனிவர் பார்த்ததாக சிவபுராணத்தில் கூறப்பட்டுள்ளதே, இதற்கு அறிவியலில் பெயர் என்ன?

6. தேரையார் கதையில் வரும் அகத்தியர் பெருமான் செய்த மூளை அறுவைச் சிகிச்சை குறித்து இன்றைய மருத்துவ அறிவி யல் என்ன சொல்கிறது?

7. மகாபாரதத்தில் 101 குழந்தைகள் குடுவையில் பிறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதே, இதற்கு அறிவியலில் என்ன பெயர்?

8. பதஞ்சலி மகரிஷியால் வகுக்கப்பட்ட யோகாசனக் கலை குறித்து இன்றைய அறிவியல் என்ன சொல்கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*9.* திருமூலரின் தியானத்தைப் பற்றி மனோதத்துவ அறிவியல் என்ன சொல்கிறது?

*10.* கோவில்களில் மலர்கள், துளசி நீர், பருப்புப் பிரசாதங்கள், அபிஷேகப் பால், போன்ற மருத்துவ உணவு வகைகள் குறித்து உணவு அறிவியல் என்ன சொல்கிறது?

*11.* புறநானூறு, அகநானூறு போன்ற சங்க இலக்கியங்களில் கூறப்படும் வளவன் ஏவா வானூர்தி, மரக்கலம், மழுவர்கள் குறித்து இன்றைய கட்டுமான அறிவியல் என்ன சொல்கிறது?

*12.* திருமூலர் கூறிய அஷ்டமா சித்திகள் குறித்து இன்றைய அறிவியல் கூறுவது என்ன?

*13.* மகாபாரதத்தில் திருதிராஷ்ட்டிரருக்கு சஞ்சயன் போர் நிகழ்வுகளை நேரடி வர்ணனை செய்வதாக குறிப்பிடப் பட்டுள்ளது. இதற்கு அறிவியலில் பெயர் என்ன?

*14.* அகத்திய முனிவர் தனது அகத்திய சம்கிருதை எனும் நூலில் மித்ரவருண சக்தி பற்றி குறிப்பிட்டுள்ளார். இதற்கு இன்றைய அறிவியலில் என்ன பெயர்?

*15.* விஷ்ணு பகவானின் பத்து அவதாரங்களான மச்ச (மீன்-நீர் வாழ்வன), கூர்ம (ஆமை-நீர் நிலம் வாழ்வன), வராக (பன்றி-நிலத்தில் வாழும் பாலூட்டி), நரசிம்ம (மிருகமாக இருந்து மனி தனாக மாறும் தன்மை), வாமண (வளர்ச்சி குறைந்த குள்ள மனி தன்), பரசுராம (மூர்க்கமாக வேட்டையாடும் மனிதன்), பலராம (விவசாயம் செய்யும் மனிதன்), ராம (நாகரிக மனித குழுவின் தலைவன்) கிருஷ்ண அவதாரம் ஆகியவை பற்றி ஸ்ரீமத் பாகவத புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இதற்கு அறிவியலில் கூறும் பெயர் என்ன?

*16.* இமயமலையில் நடந்த சிவன்-பார்வதி திருமணத்தைக் காண எல்லோரும் அங்கு கூடியதால் வடக்கு தாழ்ந்து தெற்கு உயர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக புராணங்கள் கூறுகின்றனவே! இது குறித்து இன்றைய அறிவியல் என்ன சொல்கிறது?

**17.** உலகில் வேறு எங்கும் இல்லாத வகையில் கோடிக் கணக் கில் இயற்கை மூலிகைகள் மூலம் பல நோய்களை குணப்படுத் தும் திறன் கொண்ட சைவ சித்தர்களின் சித்த மருத்துவத்திற்கு தாவிரவியல் கூறும் பெயர்கள் என்ன?

*18. பின்னிப் பினையப்பட்ட நரம்புகளை ஆராய்ந்து, எந்த நரம்பு எந்த நோவுக்கு நிவாரணம் என்று கண்டறிந்து, குணப்படுத்தும் வர்மக் கலையை பற்றி நரம்பியல் அறிவியல் என்ன சொல்கிறது?*

**19.** திரிகோண சாஸ்திரம், *(Trigonometry)* அட்சர கணிதம், *(Algebra)* வடிவியல் *(Geometry)* பற்றி நாம் அறிந்திராத காலத் தில் நிழல் படாத தஞ்சை கோபுரத்தை நம் முன்னோர்கள் அமைத்தமை பற்றி கணித அறிவியல் என்ன சொல்கிறது?

இவ்வாறு இந்து சமயத்தில் பொதிந்து கிடக்கும் அறிவியல் பற்றி ஆயிரமாயிரம் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே போகலாம். அன்றைய நம் மூதாதையர்கள் இவற்றையெல்லாம் கண்டு பிடித்தது மட்டுமல்லாமல்,இக்கண்டுபிடிப்புகளில் எவை மனிதன் இயற்கையோடு ஒன்றி வாழ்வதற்கு ஏதுவாக இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் நடை முறையில் கொண்டு வந்தனர்.

அதே சமயம் மனிதனின் வாழ்வில் இயற்கைக்கு முரணாக, பெரும் தீமைகள் விளைவிக்கக் கூடும் எனக் கருதிய தமது கண்டுபிடிப்புக்களை நடைமுறையில் கொண்டு வரவில்லை என்பதும் தெரிகிறது. இவை பற்றிய குறிப்புக்கள் எதிர் காலத் தில் மக்களுக்குப் பயன் படலாம் எனும் நோக்கில் இவை பற் றிய விபரங்களை மட்டும் ஓலைச் சுவடிகளில் பதிவு செய்தனர் என்பதே உண்மையாகும்.

பிற்காலத்தில் நம் நாட்டுக்கு வந்த ஐரோப்பியர் நம் முன் னோர்கள் எழுதி வைத்த ஓலைச்சுவடிகளை தமது நாட்டிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துச் சென்று, அதிலுள்ள விடயங்களைப் படித்துத் தெரிந்து, அவற்றை அடிப்படையாக வைத்து மேலாய்வு செய்து நம் முன்னோர்கள் கண்டு பிடித்தவற்றை முதன் முதலில் தாமே கண்டுபிடித்தது போல அறிக்கைகளை எழுதி வரலாற்றில் தம் பெயரைப் பதித்தனர்.

## இந்துமத சம்பிரதாயங்கள், சடங்குகள் ஆகியவற்றின் பின்னணியில் உள்ள அறிவியல்

பல ஆயிரம் ஆண்டு காலமாக சில இந்துமத சம்பிரதாய ங்கள், சடங்குகள், வழக்கங்கள் இன்றளவும் கூட மிகவும் தீவிர மாக பின்பற்றப்பட்டு வருகின்றன. பலர் இதனை மூட நம்பிக் கைகள் என்று கூறுவதுண்டு. ஆனால் இவை மூட நம்பிக்கைகள் அல்ல. இவை அறிவியல் நிறைந்த சம்பிரதாயங்கள் ஆகும். சில வற்றை சடங்குகள் என்றும் கூறலாம். இவை மனதில் பயத்தை உண்டாக்குவதற்கு மற்றொரு வழி என்றும் கூறுகின்றனர். இந்த வழக்கங்களின் அவசியத்தைப் பற்றி நம்மில் பலரும் கேள்விகள் எழுப்புவர். இன்றைய நவீன உலகத்தில் இவை எப்படி தொடர் புடையதாக இருக்கும் என நாம் வியக்கவும் செய்வோம். இதற்கு முன்னால் பின்பற்றப்பட்டு வந்த இந்த பழக்க வழக்கங்களை நம்மில் பலரும் இன்றைய காலத்தில் மூட நம்பிக்கைகள் எனக் கருதி புறக்கணித்து விடுகின்றனர். ஆனால் அனைத்து இந்துமத மரபுகளும் மூடநம்பிக்கைகளா? அறிவியல் விடயங்களா?

இதற்கான பதில் என்னவென்று தெரிந்தால் நாம் ஆச்சரியப் படுவோம். இந்துமதம் அடிக்கடி கேள்வி எழுப்பப்பட்டு, விமர் சனம் செய்யப்பட்டு, மூட நம்பிக்கைகள் மற்றும் குருட்டுத்தன மான நம்பிக்கைகளை ஊக்குவிப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது என்பது தும், இந்து சமயத்தில் மூடநம்பிக்கைகள் எனக் கூறப்படும் சம்பி ரதாயங்கள் அனைத்தும் அறிவியல் பூர்வமானவை என்பதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மதத்தின் பல்வேறு சடங்குகள், பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றின் பின்னால் அறிவியல் சார்ந்த அர்த்தங்கள் பல உள்ளன என்பதும் தற்போது நிரூபிக்கப்பட்டு வருகின்றன.

இந்து மத சடங்குகளைப் பற்றி கேட்கும் போதும், பார்க்கும் போதும் அர்த்தமற்றதாக இருக்கலாம். ஆனால் இதனை ஆழமாக ஆராயும்போது, இந்த பழக்க வழக்கங்களுக்கான உண்மையான காரணம் புலப்படும். அதனை அறியும் போது நாம் வியப்புக்குள்ளாவோம். இந்துமத மரபுகள், அணிகலன்கள் அணிவது மற்றும் இந்துக் கோவில்களின் பின்புலத்தில் உள்ள பல அறிவியல் சார்ந்த காரணங்களை இந்நூலில் காணலாம்.

## நம் மூதாதையர்கள் மூட நம்பிக்கையாளர்களா? அறிவியல் அறிஞர்களா?

நாம் வாழும் பூமியின் தொன்மையையும், உயர்வையும் எத்தனையோ பாடல்களும், உரைநடைகளும் எடுத்துரைத்துள்ளன. இந்து தேசத்தின் பெருமை அதன் வீரமும், ஞானமும் மிக்க வரலாறு மட்டுமல்ல, அதன் மைந்தர்களாகிய நம்முடைய உயரிய சிந்தனைகளும், பேணி வளர்த்த கலாச்சாரமும் தான். உண்மையில் இன்றைக்கு நம் இந்து தேசம் தளர்வுற்று இருக்கிறது. ஏனென்றால், நம்முடைய தேசத்தின் வலிமிகுந்த வரலாறும், பெருமை மிக்க ஆக்கங்களும் இன்றைய இளையவர்களுக்கு தெரிய வைக்கப்படவில்லை.

செவிவழிச் செய்திகளாக அடுத்தடுத்த தலைமுறைக்கு மாற்றப்பட்டு வந்த மண்ணின் மரபும், வீரமும் ஏதோ ஒரு கட்ட த்தில் நூலறுந்து போய் விட்டது போல் காணப்படுகிறது. மனம் கூசாமல் தாய் நாடு தரமிழந்து விட்டதாக பேசுகின்றனர். இந்த தலைமுறையிலோ அல்லது அதற்கு முந்தைய தலைமுறையிலோ தொடர்பு அற்றுவிட்ட தொன்மை பூமிக்கு ஒரு பந்தம் உண்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்குவோம். நினைவுகளாய், சிதைவுகளாய் மாறிக் கொண்டிரு க்கும் பெருமை மிக்க வரலாற்றினை மீண்டும் தொடர்வோம். மொழி, இனம், மதம் வேற்றுமைகளை தாண்டி நம் தேசத்தின் பெருமையினையும், பெருமைமிக்க மைந்தர்களையும் மீண்டும் அடையாளம் காட்ட இந்த தொடர் ஆரம்பிக்கிறது.

ஆதிகாலத்தில் இருந்து தொடங்குவோம். சில பெருமை மிக்க செய்திகளை தருகிறோம். 2000 ஆண்டுகளுக்கு முன்பே அறிவியல், கணிதம், வானவியல், மருத்துவம் ஆகியவற்றில் சிறந் திருந்த நம் மூதாதையர்களின் சிறப்பு மிக்க குறிப்புகள் வேதங்க ளிலும், சித்தர் பாடல்களிலும் ஓலைச் சுவடிகளாகப் பதியப் பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு தருகிறேன்.

**அறிவியல் :**

சிறப்பான மருத்துவ குறிப்புகளை சித்தர்களின் ஓலைச் சுவடிகளில் காணமுடிகிறது. அகத்தியரின் மூலிகை மருத்துவத்தி லும் *(microbiology)*,போகரின் கனிம மருத்துவத்திலும்*(chemical components)*, புலிப்பாணி சித்தர் விலங்குகளை பயன்படுத்திய மருத்துவ *(biotechnology)* முறைகளிலும் அரிய பல குறிப்புக ளைத் தந்துள்ளனர். கதிரியக்க குறிப்புகளையும், அணு அளவில் மாற்றங்களை நிகழ்த்தக்கூடிய இரசவாத குறிப்புகளையும் சுவடி களின் மூலம் காண முடிகிறது.

பொ.ஆ.மு 3000 ஆண்டுகளில் அணுவின் அமைப்புகளை மாற்றி வேறு ஒரு கனிமமாக மாற்றும் வித்தையை போகர் குறிப் பிட்டுள்ளார். இரத்தம் உறிஞ்சும் அட்டைகளை *(leech)* வைத்து இப்போது ஆராய்ச்சிகள் உலக அளவில் நடைபெறுகின்றன. முதல் முதலில் 1020ஆம் ஆண்டளவில் தான் இது பற்றிய ஆராய்ச்சிகள் ஆரம்பித்தன.ஆனால் 2500 வருடங்களுக்கு முன் பிருந்தே நம் முன்னோர்கள் கண்டுபிடித்த ஆயுர்வேத மருத்துவ த்தில் இது பற்றிய குறிப்புகள் உள்ளன. மருத்துவக் கடவுளாகக் கருதப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்வந்திரி பகவானின் கையில் மருத்துவ உபகர ணங்களுடன் இரத்தம் உறிஞ்சும் அட்டைகளும் உள்ளன.

**வானவியல்:**

ரிக் வேதத்தின் குறிப்புகளை கொண்டு பொ.ஆ 1315 ல் சாயனாச்சார்யர் எனும் விஜயநகரப் பேரரசின் அறிஞர் ஒளியின் வேகத்தை குறிப்பிட்டுள்ளார்."ஓ..சூரிய கடவுளே அரை நிமிஷா வில் 2022 யோசனைகள் கடந்து வரும் உன்னை வணங்குகி றேன்" என்பது அவர் கூற்று. ஒரு யோசனை என்பது 9 மைல் கள். நிமிஷா என்பது 8/75 வினாடிகள். அவருடைய குறிப் பின்படி ஒலியின் வேகம் வினாடிக்கு 186,413.22 மைல்களாகும். நவீன கணிப்பின் படி வினாடிக்கு 186,300 மைல்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

சூரியனின் கதிர்களில் ஏழு வர்ணங்கள் உள்ளன என்பதை பொ.ஆ.மு. 1500 ஆம் ஆண்டிலேயே ரிக் வேதம் குறிப்பிட்டு ள்ளது. அதையே ஏழு குதிரைகளாக தேரில் பூட்டியுள்ளதாக காட்டினர். இதையே நவீன கருத்தின்படி 1671ல் நியூட்டன் முதன் முதலில் ஸ்பெக்டரம் என்று குறிப்பிட்டார்.

வேதங்களின் படி, ஒரு பூஜையினை செய்வதற்கு முன் சங் கல்பமாக கூறப்படுகின்ற வாக்கியத்தில் உலகம் ஆரம்பித்த நாளில் இருந்து இன்றைய நாளினை குறிக்கிறோம்.

இது **"த்விதீய பரார்த்தே, ஸ்வேத வராககல்பே, வைவஸ்வத மன்வந்த்ரே, அஷ்டாவிம்ஸ்திதமே, கலியுகே"** என்று வரும். இதன்படி...

ஒரு மகாயுகம் (சதுர்யுகம்) = 4 யுகங்கள் = 43,20,000 வருடங்கள். ஒரு மன்வந்திரம் = 30,84,48,000 வருடங்கள் (71 மகாயுகம் + 1 க்ரேதா யுகம்)

ஒரு கல்பம் = 432,00,00,000 (14 மன்வந்திரம்+1 க்ரேதா யுகம்) அல்லது 1000 மகாயுகம் ஒரு கல்பம். இதுதான் உலகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதும் ஆகும். நவீன முறைப்படி 454,00,00,000 ஆண்டுகள். ரேடியோ மெட்ரிக் முறையில் கணிக்கப்பட்ட வயது. பூமியுடனேயே பிறந்ததாக சொல்லப்படும் நிலவின் மாதிரி கற்களிலும் ஆராய்ச்சி செய்து இது உறுதிப்படுத்தப்பட்டது.

**கணிதம்:**

பொ.ஆ.மு 3000 ஆண்டளவில் நீளம், எடை ஆகியவற்றை குறிக்கும் அளவீடுகள் வரையறுக்கப்பட்டன. பொ.ஆ.மு 1500ல் வேதகாலம்-வானவியல் கொள்கைகள், கணித வரைபாடுகள், எண்கள் ஆகியன உருவாக்கப்பட்டன.

பொ.ஆ.மு 200-பூஜ்யம் குறிப்பிடப்பட்டது. அது வரை நேர்மறை எண்கள் (+) மட்டுமே குறிப்பிடப்பட்டன. எதிர்மறை எண்களையும் (-) குறிப்பிட முடிந்தது. பொ.ஆ 400-1200-கணித சாஸ்திரத்திற்கான முக்கியமான காலகட்டமாகும். கணிதவியல் வல்லுனர்களான ஆர்யபட்டர், பாஸ்கரா, ஸ்ரீதரா ஆகியோரின் காலம் இது.

ஆர்யபட்டர் ஒரு நாள் என்பது 23 மணிகள், 56 நிமிடங்கள், 4 வினாடிகளும் 0.1 விகிதத்தையும் கொண்டது என்று கணித்தார். நவீன கணக்குப்படி 23 மணி, 56 நிமிடம், 4 வினாடி மற்றும் 0.091 விகிதம் என்று கணிக்கப்பட்டுள்ளது. அவருடைய ஆர்யபாட்டியா என்ற நூலில் ஒவ்வொரு கோள்களின் தொலைவும், அது சூரியனை சுற்றி வரும் நாட்களும் நவீன கணிப்புடன் ஒப்பிடும் அளவிற்கு மிகச்சரியாக கூறப்பட்டுள்ளன.

**யோகா:**

இன்றைக்கு உலகம் முழுவது கொண்டாடிக் கொண்டிருக்கும் யோகாசன முறைகள் பதஞ்சலி முனிவரால் உருவாக்கப்பட்டன. இவர் பொ.ஆ.மு 147 ல் வாழ்ந்தவர். காஷ்யப்ப ரிஷி முதன் முதலில் அணு என்ற ஒன்றைக் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானிகளையே வியக்க வைத்த நடராஜர் தத்துவம்

உலகின் மிகப்பெரும் இயற்பியல் விஞ்ஞானிகளில் ஒருவர் கார்ல் சகன். *(1934-1996)* சிறந்த விஞ்ஞான எழுத்தாளராகவும் விளங்கியது இவரது தனிச் சிறப்பு. பாமரனுக்கும் அறிவியலைக் கொண்டு செல்ல வேண்டும் என்ற அவாவில் இவர் கடுமையாக உழைத்தார். தொலைக் காட்சித் தொடர்களை எளிய முறையில் அமைத்து பெரிய விஞ்ஞான விஷயங்களை அழகுற எளிமையாக விளக்கினார். அமெரிக்காவில் ஒளிபரப்பப்பட்டு உலகெங்கும் உள்ள மக்கள் பார்த்த 'காஸ்மாஸ்' *(Cosmos)* என்ற பிரபஞ்சம் பற்றிய தொடரை எடுக்கும் மாபெரும் பொறுப்பை இவர் மேற் கொண்டார். 13 தொலைக்காட்சித் தொடர்களில் பிரபஞ்சத் தைப் பற்றி விளக்க வேண்டும்.

இந்தத் தொடரை ஒரு நல்ல அறிமுக உரையுடன் தொட ங்க அவர் எண்ணினார். இதற்காக பிரபஞ்சம் பற்றிய அறிவை சரியான முறையில் விஞ்ஞானக் கண்டுபிடிப்பிற்கும், விளக்கத் திற்கும் ஒப்ப எந்த நாகரீகம் கொண்டிருக்கிறது என்று ஆராய ஆரம்பித்தார்.

உலகின் மிகப் பழம்பெரும் நாகரிகங்களான எகிப்திய, சுமேரிய, கிரேக்க, ரோமானிய, பாபிலோனிய நாகரிகங்கள் உள் ளிட்ட அனைத்து நாகரீகங்களையும் ஆராய்ந்தும் அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. பல்வேறு நாகரீகங்களையும் அவை சார்ந்த மதங்களையும் ஆராயப் புகுந்தவர் அவற்றின் இதிகாச புராணங்களையும் படிக்க நேர்ந்தது. இறுதியாக அவர் பார்வை இந்து நாகரீகத்தின் மீதும், இந்து இதிகாச புராணங்களின் மீதும் பதிந்தது. இந்து மதத்தின் அறிவியல் ரீதியான பிரபஞ்சம் பற்றிய கொள்கையைப் படித்துப் பார்த்தபோது அவர் பிரமித்து போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியர்கள் தான் உலகிற்கே பூஜ்யத்தை வழங்கியவர்கள். ஒன்றுக்கு வலப்பக்கத்தில் பூஜ்யத்தைப் போட்டால் அது பத்து, நூறு, ஆயிரம் என்று அதிகரிக்கிறது. ஆனால் ஒன்றுக்கு இடப் பக்கத்தில் எத்தனை பூஜ்யங்களைப் போட்டாலும் ஒன்று ஒன்றாகவே இருக்கிறது. இந்த வியப்பிற்குரிய அமைப்பானது, கணிதத்தையே எளிமையாக்கி, எவ்வளவு பெரிய எண்ணானா லும் எழுதுவதற்கும், கணக்குகளைப் போடுவதற்கும் சௌகரிய த்தை ஏற்படுத்தியது.

ரோமானிய எழுத்துக்களால் எழுதப்படும் எண்ணோ ஒரு பெரிய தொகையை எழுதும்போது பெரிய குழப்பத்தை விளை விக்கிறது. சுலபமான நடைமுறையில் இல்லாத அதை எழுதவே சிரமப்பட வேண்டும். இது மட்டுமன்றி எல்லையற்ற பிரபஞ்சத் தில் ஆயிரம், பத்தாயிரம், லட்சம் என்ற எண்களெல்லாம் மிக மிகச் சிறியவை ஆகிவிடுகிறது. பெரிய பெரிய எண்களைக் குறிக் கும் வார்த்தைகள் எந்த நாகரீகத்தில் இருக்கிறது என்று பார்த்தால் திரும்பவும் பார்வையை இந்து மதத்தின் பக்கமே திருப்ப வேண்டும்.

விஞ்ஞானத்தின் முக்கிய இயல்களில் ஒன்றான இயற்பியல் (பிஸிக்ஸ்) முன்னேற முன்னேற, அதன் புதுப்புதுப் பகுதிகளாக தொகுதி இயற்பியல், (க்வாண்டம் பிஸிக்ஸ்) துகள் இயற்பியல் (பார்டிகிள் பிஸிக்ஸ்) போன்றவை உருவாகி உள்ளன.

கார்ல் சகன் தனது காஸ்மாஸ் டி.வி. தொடருக்காக நட ராஜரைத் தேடி சிதம்பர ரகசியத்தை அறிய தமிழ்நாடு வந்தார். பிரபஞ்சத்தில் எல்லையற்ற காலத்தையும், ஆக்கலையும், அழித்த லையும் சுட்டிக் காட்டும் நடராஜரைப் பற்றி தமிழகத்தில் அறி ந்து கொண்டு நடராஜரைத் தன் காஸ்மாஸ் நிகழ்ச்சியின் பத்தா வது தொடரான தி எட்ஜ் ஃபாரெவரில் *(The edge forever)* பயன்படுத்திக் கொண் டார். கலிஃபோர்னியாவில் பாஸடோனா என்ற இடத்தில் உள்ள நடராஜரை அவர் படம் பிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே காலகட்டத்தில் அணுத் துகள் விஞ்ஞானத்தை விளக்க வந்த உலகின் மிகப்பெரும் இயற்பியல் விஞ்ஞானியான டாக்டர் பிரிட்ஜாஃப் காப்ரா நடராஜரின் நடனத்தைக் கண்டு அதிசயித்திருந்தார். இவர் ஆஸ்திரியாவில் பிறந்த அமெரிக்க விஞ்ஞானியாவார். "தி டாவோ ஆஃப் பிஸிக்ஸ்' (*The Tao of Physics*) என்ற இவரது நூல் உலகப் பிரசித்தி பெற்றது. இந்த நூல் 1975ல் வெளிவந்தது. 23 மொழிகளில் 43 பதிப்புகளாக வெளிவந்த இந்த நூலை லட்சக்கணக்கானோர் படித்தனர். இன்றும் படித்து இன்புறுகின்றனர்.

அதில் அவர் சிவநடராஜரின் நடனம் பற்றிக் பின் வருமாறு கூறுகிறார். "மேலை நாடுகளின் இயந்திரத் தனமான பார்வையை விட கீழை நாடுகளின் பார்வை உயிருள்ள முழுமையான ஒன்றாகும். அது சுற்றுப்புறச் சூழலை ஒட்டியது. கீழைநாட்டு ஞானிகளுக்கு பொருள்கள் எப்போதும் மாறிக் கொண்டே இருக்கும். திரவவடிவம் போன்ற ஒன்று தான் பிரபஞ்சம். இது எப்போதுமே இயங்கிக் கொண்டிருக்கும் பிரிக்க முடியாத ஒன்றாக அவர்களால் காணப்பட்டது. இந்தக் கருத்தே இன்றைய நவீன பௌதிகத்திலும் உருவாகி வருகிறது. நவீன பௌதிகம் அணுத் துகளை, தொடர்ந்து நடனமாடும் ஒன்றாக, அதிர்ந்து கொண்டே இருக்கும் ஒன்றாகக் கூறுகிறது. கீழைநாட்டு ஞானிகள் உலகைப் பற்றி விவரிப்பது போலவே இது உள்ளது. ஆற்றல் நடனம் அல்லது உலகை உருவாக்கி பின்னர் அழிக்கும் நடனமானது சிவ நடராஜரின்நடனம் போலவே உள்ளது."என அவர் கூறியுள்ளார்.

அணுத் துகள் விஞ்ஞானம் கற் கவிரும்புவோர் நடராஜரின் நடனத்தைப் பற்றி முதலில் சற்று அறிய வேண்டும் என்றார் காப்ரா. அணுவில் உள்ள நடனத்தை சிவ நடராஜரின் ஆட்டத்தில் கண்ட காப்ரா அதை அப்படியே லாஸ் ஏஞ்சலீஸில் 1977 அக்டோபர் 29ம் தேதி "பிஸிக்ஸ் அண்ட் மெடா பிஸிக்ஸ்" என்ற கருத்தரங்கத்தில் தான் ஆற்றிய முக்கிய உரையில் உலகத் திற்கு விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கூறியதாவது "நவீன இயற்பியல் விஞ்ஞானிகள் பொருளை அசைவற்ற ஜடமாகக் கருதவில்லை. துடிப்புள்ள, தொடர்ந்து நடனமிடும் ஒன்றாகக் கருதுகின்றனர். இந்தியக் கலைஞர்கள் சிவ நடராஜரின் நடனத்தைச் சித்தரிக்கும் அருமை யான ஓவியங்களையும், சிற்பங்களையும் படைத்துள்ளனர். இவை பிரபஞ்ச நடனத்தின் பார்வை சித்திரங்களாகும். மேற்கத்திய நவீன உபகரணங்களை உபயோகித்து இப்போது நாம் கண்டறிந் துள்ளவை சிவ நடனத்தின் புதிய பிரதியே. இந்து சிற்பங்களில் உள்ள பிரம்மாண்டமும் அழகும் இதிலும் உள்ளன என்றே எனக்குத் தோன்றுகிறது.ஆகவே அவை இரண்டையும் இணைத்து ள்ளேன்." என்று கூறினார்.



நவீன உபகரணங்கள் மூலமாக அணுவின் உள்ளே துகள்கள் நடனமிடும் அற்புதக் காட்சியைப் படம் பிடித்து அதை அப்ப டியே நடராஜரின் நடனத்துடன் ஒப்பிடும் காட்சியைப் பார்த்த உலக விஞ்ஞானிகள் வியந்தனர். விஞ்ஞானிகள் தங்களது நவீன உபகரணங்கள் வாயிலாகக் கண்டதை நம் மெய்ஞானிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்கண் வழியே கண்டு அப்படியே உலகிற்கு எடுத்துரைப் பதன் உதாரணம் தான் அருணகிரிநாதர் தன் திருப்புகழில் பாடிய ...பரமகுருவாய் அணுவில் அசைவாய்... என்ற வரிகளாகும். அருணகிரிநாதர் பாடிய இருவர் மயலோ என்று தொடங்கும் திருப்புகழ் பாடலில் அணுவைப் பற்றி பாடியுள்ளார்.

இதைத் தொடர்ந்து **2004**ம் ஆண்டு ஜூன் மாதம் **18**ஆம் திகதி ஐரோப்பிய அணுத் துகள் இயற்பியல் ஆராய்ச்சி மையத் திற்கு இந்திய அரசாங்கம் **2** மீட்டர் (சுமார் ஆறு அடி) உயர முள்ள நடராஜரின் சிலையை அந்த நிறுவன விஞ்ஞானிகள் இந்தியாவுடன் தொடர்ந்து கொண்டிருக்கும் நல்லுறவைப் போற் றும் வகையில் வழங்கியது. ஜெனிவாவில் அமைந்திருக்கும் இந்த மையத்துக்கு இந்தியா வழங்கிய நடராஜரின் சிலையைப் படத்தில் பார்க்கலாம்.

செர்ன் (CERN) விஞ்ஞானிகள் அணுத் துகள் நடனத் தையும், நடராஜரின் நடனத்தையும் ஒப்பிடுவதைப் போற்றி நன்றி தெரிவிப்பதற்காக இதை வழங்குவதாக இந்திய அரசு பெருமையுடன் தெரிவித்தது. ஆக விஞ்ஞானம் வியக்கும் மெய் ஞான நடனம் நம் சிதம்பர நடராஜரின் நடனம் என்பதை அறியும்போது நம் மெய் சிலிர்க்கிறது. இந்து என்பதில் பெருமை யாகவும் உள்ளது.

## கோயிலுக்கு செல்வதன் பின்னணியில் உள்ள விஞ்ஞான பூர்வமான காரணங்கள்

வளமான பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்திற்கு புகழ் பெற்ற நாடு இந்தியா. இந்த நாடு முழுவதும், ஒவ்வொரு மூலை முடுக்கெல்லாம் எண்ணற்ற இந்துக் கோயில்கள் உள்ளன. பெரும் பாலான மக்கள் கடவுளின் ஆசியைப் பெறுவதற்காக கோயில்க ளுக்கு வருகை தருகிறார்கள். இருப்பினும், வெகுசிலரே கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு செல்வதற்கான பின்னணியில் உள்ள விஞ்ஞான பூர்வ மான காரணத்தைத் தெரிந்து வைத்துள்ளனர்.

**இந்துக்களின் சம்பிரதாயங்களுக்கு பின்னால் ஒளிந்திருக்கும் அற்புதமான விஞ்ஞான காரணங்களும், அதிர்ச்சியூட்டும் 10 வியப்பான சமயம் சார்ந்த சடங்குகளும்.**

கோயில் எனப்படும் புனிதமான இடத்தில் கிடைக்கும் நேர் மறையான ஆற்றல் திறன்கள் அனைத்தையும் தமக்குள் உறிஞ்சிக் கொள்வதே கோயில்களுக்கு பக்தர்கள் செல்வதற்கான முக்கிய மான காரணங்களில் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. மேலும் நம் உடலில் உள்ள ஐம்புலன்களும் முனைப்புடன் செயல்படும் போது மட்டுமே இந்த நேர்மறையான ஆற்றல் உறிஞ்சப்படும். இதைத்தான் கடவுளிடமிருந்து எமக்குக் கிடைக்கும் அருள் என நம் முன்னோர்கள் கூறினார்,

இந்த ஐம்புலன்கள் கோயிலுக்குள் உள்ள எண்ணிலடங்கா செயல்கள் மூலம் தூண்டப்படலாம். அதனால் இந்துசமய நூல்க ளின்படி, கோயில்களுக்கு செல்வதற்கு பின்னணியில் உள்ள விஞ்ஞான பூர்வமான காரணத்தைப் பற்றி பார்க்க போகிறோம்.

**கோவிலின் கட்டமைப்பு மற்றும் இருப்பிடத்திற்கு பின்னணி யில் உள்ள காரணம்**

எப்போதுமே அளவுக்கு அதிகமான நேர்மறை ஆற்றல் திறன்களால் சூழப்பட்டுள்ள இடத்தில் கோயிலின் இருப்பிடம் இருக்கிறது. வடக்கு இறுதியில் இருந்து தெற்கு இறுதிக்கு காந்த மற்றும் மின்சார அலைகள் சுலபமாக பாயும் இடம் தான் கோயிலுக்கான சிறந்த இடமாகும்.

**கடவுளின் சிலை**

கோவிலின் இதயப்பகுதியான மூலஸ்தானம் அல்லது கர்ப் பக்கிரகத்தில் தான் கடவுளின் சிலை வைக்கப்படும். மூலஸ்தான த்தில் தான் பூமி அதிகபட்சமான காந்த அலைகளை கொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருப்பதாக நம்பப்படுகிறது. சிலையை வைத்த பிறகுதான் கோயி லின் கட்டமைப்பு எழுப்பப்படும்.

**கோவிலுக்குள் நுழைவதற்கு முன்பாக காலணிகளை கழற்றி வைப்பதற்கு பின்னணியில் உள்ள காரணம்**

கோவில்களுக்கு செல்வதன் பின்னணியில் உள்ள விஞ்ஞான பூர்வமான காரணத்தை பார்க்கையில், கோயிலுக்குள் நுழைவத ற்கு முன்பாக காலணிகளை கழற்றி வைக்க வேண்டிய விஷயத் தைப் பற்றியும் பார்த்தாக வேண்டும். ஏற்கனவே கூறியதைப் போல் தூய்மையான மின்சார மற்றும் காந்த அலைகளை கொண்ட நேர்மறையான ஆற்றல் திறன் கொண்ட இடத்தில் தான் கோயில்கள் கட்டப்படும்.

பழங்காலத்தில் நேர்மறை ஆற்றல்களின் சிறந்த கடத்தியாக இருக்கும் விதத்திலான தொழில் நுட்பத்தில் கோயில்களின் தரை கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆற்றல் திறன் கோயிலுக்கு வரும் பக்தர்களின் பாதம் வழியாக அவர்களுக்குள் ஊடுருவும். அதனால்தான் கோயிலுக்குள் வெறும் காலுடன் செல்லச் சொல் கிறார்கள்.

**கோயில் மணியை அடிப்பதற்கான காரணம்**

கோயிலுக்குள் நுழையும் போதெல்லாம் மூலஸ்தானத்திற் குள் நுழைவதற்கு முன்பாக கோவில் மணியை அடிக்க சொல் வார்கள். இந்த மணி எழுப்பும் ஒலி உங்கள் கேட்கும் திறனை முனைப்பாக்கும். கோயில் மணியை அடிக்கும்போது அது கூர் மையான ஒலியை எழுப்பும். அது ஏழு வினாடிகளுக்கு எதிரொ லிக்கும். உங்கள் உடலில் உள்ள ஏழு உணர்வு மையங்களை முனைப்பாக்க இந்த 7 வினாடி காலம் போதுமானது.

**சாமி சிலை முன் கற்பூரம் காட்டுவதற்கான காரணம்**

கடவுள் சிலைக்கு முன் கற்பூரம் ஏற்றும் முறையைப் பற்றி தெரிந்து கொள்வதும் மிகவும் முக்கியமாகும். இருட்டான கோயிலுக்குள் சாமி சிலை முன்பு கற்பூரம் ஏற்றுவதனால் உங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது பார்வை உணர்வு முனைப்பாகும். மேலும் இருள் சூழ்ந்த சுவாமி சந்நிதியில் சுவாமியின் உருவம் மட்டும் நம் கண்களுக்குத் தெரியும்.

**தீபாராதனை தட்டில் கைகளை ஒத்தி எடுப்பது எதற்காக?**

தீபாராதனை காட்டும் போது, கற்பூரம் ஏற்றப்பட்டுள்ள தட்டில் கைகளால் ஒத்தி எடுப்போம். பின் கைகளால் கண்களை ஒத்திக் கொள்வோம். இதனால் வெது வெதுப்பான உங்கள் கைகள் கண்களின் பார்க்கும் உணர்வை முனைப்பாக்கும்.

**கடவுளுக்கு மலர்களால் பூஜை செய்வதற்கான காரணம்**

பூக்கள் என்பது மென்மையாகவும், தூய்மையானதாகவும், நல்ல நறுமணத்துடனும் இருக்கக்கூடியவை. அதனை நாம் கோயிலில் உள்ள கடவுளுக்குப் படைக்கிறோம். இருப்பினும், திடமான நறுமணத்தை கொண்ட சில மலர்களை மட்டுமே கடவுளுக்கு அர்ப்பணிக்க முடியும். உதாரணத்திற்கு ரோஜா, மல்லிகை, சாமந்தி போன்ற மலர்கள். பூக்களின் நறுமணம், ஊதுபத்தி மற்றும் கற்பூரத்தின் நறுமணம் ஒன்றாக சேர்ந்து உங்களின் வாசனை உணர்வை முனைப்பாக்கும்.

**தீர்த்தம் குடிப்பதற்கு பின்னணியில் உள்ள காரணம்**

கடவுளுக்கு பூஜைகள் செய்து முடித்த பிறகு பக்தர்களுக்கு நீர் வடிவிலான தீர்த்தம் பிரசாதமாக அளிக்கப்படும். நெய், பால் மற்றும் தயிரை கொண்டு இது செய்யப்படும். தீர்த்தத்தை செப்பு அல்லது வெள்ளிப் பாத்திரத்தில்தான் பொதுவாக வைத்திருப் பார்கள். நம் உடலில் உள்ள 3 வகையான தோஷங்களை சம நிலையுடன் வைத்துக் கொள்ளவே தீர்த்தத்தை செப்பு பாத்தி ரத்தில் வைக்கிறார்கள். இது உங்கள் சுவை உணர்வை முனைப் பாக்கும்.

**மூலஸ்தானத்தைச் சுற்றி வருவதற்கான காரணம்**

பிரார்த்தனை முடிந்த பிறகு, மூலஸ்தானத்தை சுற்றி 8-9 முறை வலப்பக்கமாக சுற்றிவர வேண்டும். இப்படி சுற்றி வருவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் உங்கள் உடல் கோவிலுக்குள் இயங்கி கொண்டிருக்கும் ஒட்டுமொத்த நேர்மறையான ஆற்றல் திறன்களையும் உறிஞ்சி விடும். இதனால் உங்கள் மனதுக்கு அமைதி கிடைக்கும்.

## கோயிலுக்கு நாம் ஏன் செல்ல வேண்டும்? இதில் உள்ள அறிவியல் என்ன?

இதைப் படிக்க ஆரம்பிக்கும் முன் இது எல்லா கோயில்களுக்கும் பொருந்தாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சர்வ லட்சணங்களையும் கொண்டிருக்கும் கோயில்களுக்கு மட்டும் தான் இது பொருந்தும். பழங்காலத்து கோயில்களில் எல்லாம் இது 100 சதவிகிதம் உள்ளது. எப்படி என்று கேட்பவர்களுக்கு இதோ விளக்கம்.

பூமியின் காந்த அலைகள் அதிகம் வீசப்படும் இடங்கள்தான் இந்த கோயில்களின் சரியான அமைவிடம். இது பொதுவாக ஊருக்கு ஒதுக்குப் புறமான இடங்கள், மலைகள், மேட்டுத் திடல்கள் மற்றும் ஆழ்ந்த இடங்கள் ஆகியவையாகும். கோயில்கள் ஒரு அபரிமிதமான காந்த சக்தியையும், நேர்மறை சக்தியையும் அதிகம் கொண்டிருக்கும்.

கோயிலின் முக்கிய சிலைதான் இந்த மையப் பகுதியில் வீற்றிருக்கும். அதை நாம் கர்ப்பகிரகம் அல்லது மூலஸ்தானம் எனக் கூறுவோம். இந்த மூலஸ்தானம் இருக்கும் இடம் தான் அந்த சுற்று வட்டாரத்திலேயே காந்த சக்தி மற்றும் நேர்மறை சக்தி (பொஸிட்டிவ் எனர்ஜி) அதிகம் காணப்படும் இடமாகும். பொதுவாக இந்த மூலஸ்தானம் சுயம்பாக உருவாகும். அல்லது அங்கே கிடைக்கப்பெறும் அல்லது வைக்கப்படும் சிலை முதலில் காணப்படும். அதன் பின்பு தான் கோயில் உருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கர்ப்பக்கிரகத்தின் நேர்மறை சக்தி.**

நிறைய கோயில்களின் கீழே, அதுவும் அங்குள்ள பிரதான கர்ப்பக்கிரகத்தின் கீழே சில செப்புத்தகடுகள் பதிக்கப் பட்டிரு க்கும். அது எதற்கு தெரியுமா? அது தான் கீழே இருக்கும் அந்த சக்தியை பன்மடங்காக்கி வெளிக்கொணரும் வல்லமை பெற்றது. எல்லா மூலஸ்தானமும் மூன்று பக்கங்களும் மூடப்பட்டு முன் பக்க வாசல் மட்டும் தான் திறந்து இருக்கும். சரியான அளவுக்கு கதவுகள் இருக்கும். இது கர்ப்பக்கிரகத்தில் இருக்கும் சக்தியை எங்கும் போக விடாமல் ஒரு வழியாக, அதுவும் வாசலின் இடது மற்றும் வலது புறத்தில் இருந்து இறைவனை வணங்கும் பக்தர்களுக்கு மட்டும் அதிகமாகக் கிடைக்கும். இது உடனே தெரியாமல் இருக்கும் ஒரு சக்தி. தொடர்ந்து கோயிலுக்கு செல்லும் பக்தர்களுக்கு மட்டும் ஒரு வித சக்தி அந்த கோயிலில் கிடைக்கும் என்பது நன்றாகத் தெரியும்.

**கோயிலின் பிரகாரத்தை இடமிருந்து வலமாக சுற்றி வரும் காரணம்,**

இது அந்த சக்தியின் சுற்று பாதை என்பதால் தான் இடமிருந்துவலமாக சுற்றி வருகிறோம். மூலஸ்தானத்தை சுற்றும் போது அப்படியே அந்த சக்தியின் சுற்றுபாதை கூட சேர்ந்து அப்படியே நம் உடம்பில் வந்து சேரும். இந்த காந்த மற்றும் ஒரு வித நேர்மறையான மின்சார சக்தி நமது உடம்புக்கும், மனதிற்கும், ஏன் மூளைக்கும் தேவையான ஒரு நேர்மறையான அண்டவியல் சக்தி (பொஸிட்டிவ் கொஸ்மிக் எனர்ஜி) ஆகும்.

கோயிலின் மூலஸ்தானத்தில் ஒரு விளக்கு தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும். விக்கிரகத்திற்கு பின்பக்கம் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருக்கும். (இப்போது நிறைய கோயில்களில் மின்சார விளக்கு தான் எரிகிறது) அதை சுற்றி கண்ணாடி இருக்கும். அது செயற்கை ஒளி வட்டம் வருவதற்கு அல்ல. அங்குள்ள சக்தியை அப்படியே அதற்குள்ளேயே இருக்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் ஒரு வகையான தொழில் நுட்ப செயலைத்தான் அந்தக் கண்ணாடி செய்கிறது.

அது மட்டுமல்லாது மந்திரம் சொல்லும் போதும், மணிய டிக்கும் போதும் அங்கே செய்யப்படும் அபிஷேகம் அந்த சக்தியை மென்மேலும் கூட்டி ஒரு கலவையாய் வரும் ஒரு அபரிதமான சக்தி உற்பத்தி நிலையம் தான் மூலஸ்தானம் எனும் கருவறை ஆகும்.

இவ்வளவு அபிஷேகம், கர்ப்பூர எரிப்பு, தொடர்ந்து விளக்கு எரிதல் இதை ஒரு *10x10* அறையில் நீங்கள் செய்து பாருங்கள். இரண்டே நாளில் அந்த இடம் சாக்கடை நாற்றம் எடுக்கும். ஆனால் கோயிலில் உள்ள இந்த கர்ப்பக்கிரகம் எத்தனை வரு டம் பால், தயிர், பஞ்சாமிர்தம், தேன், சந்தனம், குங்குமம், விபூதி, எண்ணெய் மற்றும் சீயக்காய் போன்றவற்றைக் கொண்டு அபிஷேகம் செய்தாலும் அந்த இடத்தில் நாற்றம் வரவே வராது. கடைசியில் செய்யும் சொர்ணாபிஷேகம் இந்த சக்தியை ஒவ்வொரு நாளும் கூட்டிக்கொண்டே செல்லும்.

**கோயிலில் கொடுக்கப்படும் தீர்த்தம்**

பூக்கள், கற்பூரம், துளசி, குங்குமப்பூ, கிராம்பு இதை சேர்த்து அங்கு செம்பில் வைக்கப்பட்டு கொடுக்கும் தீர்த்தம் ஒரு அற்புத சுவையைக் கொடுக்கும். மேலும் அந்த சுவை கோயிலில் உள்ளது போல் வேறு எங்கும் கிடைக்காது. இதை ஒரு சொட்டு அருந்தினால் கூட அதில் உள்ள மகிமை மிக அதி கம். இதை தொடர்ச்சியாக உட்கொண்டவர்களுக்கு இது ஒரு நோயெதிர்ப்பு சக்தியை கூட்டும் அருமருந்தாக செயல்படும். இதை மூன்று தடவை கொடுக்கும் காரணம் ஒன்று உங்கள் தலையில் தெளித்து இந்த உடம்பை புண்ணியமாக்க, மிகுதி இர ண்டு சொட்டுக்களும் உங்கள் உடம்பை தூய்மையாக்க.

இன்று ஆயிரம் பற்பசை அமெரிக்காவில் இருந்து வந்தாலும் கூட கிராம்பு, துளசி, வேம்பு ஆகியவற்றில் பற்பசை தயாரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் இது தான். வாய் நாற்றம், பல் சுத்தம் மற்றும் இரத்தத்தை சுத்தப்படுத்துதல் போன்ற அற்புதமான வேலைகளை செய்யும் கலவை தான் இந்த தீர்த்தம். கோயிலுக்கு முன்பெல்லாம் தினமும் சென்று வந்த இந்த மானிடர்களுக்கு எந்தவித நோயும் அண்டியது இல்லை என்பதற்கு இதுதான் காரணம்.

**அபிஷேக நீர்**

கோயிலின் அபிஷேகம் முடிந்து வஸ்த்திரம் சாத்தும் போதும் மற்றும் மஹா தீபாராதனை காட்டும் போதும் கதவை திறக்கும் காரணம் அந்த சுயம்புக்கு செய்த அபிஷேக சக்தி எல்லாம் மொத்தமாக உருவெடுத்து அப்படியே அந்த ஜோதியுடன் ஒன்று சேர வரும்போது தான் கதவை அல்லது திரையை திறப்பார்கள். அது அப்படியே பக்தர்களுக்கு வந்து சேரும். அந்த அபிஷேக நீரை எல்லோருக்கும் தெளிக்கும் போது உங்கள் உடம்பில் ஒரு சிலிர்ப்பு வரும் காரணம் இதுதான். கோயிலு க்கு மேல் சட்டை அணிந்து வர வேண்டாம் என கூறுவதற்கும் இதுதான் முக்கிய காரணம் அந்த சக்தி அப்படியே மார்பு கூட்டின் வழியே புகுந்து உங்கள் உடம்பில் சேரும் என்பது ஐதீகம்.

பெண்களுக்கு தாலி அணியும் காரணமும் இதுதான். நிறைய பெண்களுக்கு ஆண்களை போன்று இதய நோய் வராமல் இருக்கும் காரணம் இந்த தங்க உலோகம் இதயத்தின் வெளியே நல்ல நேர்மறை சக்தியை வாங்கி, கொழுப்பை கூட கரைக்கும் வல்லமை இருப்பதாக அறிவியல் கூறுகிறது. மாங்கல்யம், கார் சாவி மற்றும் புது நகைகள் இதையெல்லாம் இங்கு வைத்து எடுத்தால் அந்த உலோகங்கள் இதன் சக்தியை அப்படியே பற்றி கொள்ளுமாம். இது சில பேனாக்கள் மற்றும் பத்திரிகை மற்றும் எல்லாவற்றுக்கும் பொருந்தும். கல் சிலையின் முன் வைத்து எடுக்கும் இப்பொருட்களுக்கு அங்கிருந்து சக்தி கிடைக்கிறது.

எவ்வளவு பேர் பல மைல் தூரத்தில் இருந்து பயணம் செய்திருப்பினும் சாமி தரிசனத்தின் போது அந்த சில நொடிகளில் நம் உடம்பில் ஒரு மென்மையான சிலிர்ப்பும், ஒரு வித நிம்மதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுவதோடு ஒரு சக்தியும் கிடைத்து மிச்சம் உள்ள எவ்வளவு பெரிய பிரகாரத்தையும் சுற்றி வரும் ஒரு வல்லமையை நமக்குக் கொடுக்கும் ஒரு மீள் சக்தி நிலையம் தான் இந்த கோயிலின் மூலஸ்தானம்.

## கொடிமரமும், கோபுரக் கலசமும்

கோயிலின் கொடி மரத்திற்கும், இந்தக் கருவறைக்கும் ஒரு நேரடி கம்பியில்லாத் தொடர்பு உண்டென்றால் அது மிகையா காது. கோயில் மேல் இருக்கும் கலசம் சில சமயம் இரிடியமாக (மிக அரிதான சக்தி மிக்க ஓர் உலோகம்) மாற இது தான் காரணம். கீழ் இருந்து கிளம்பும் காந்தசக்தி மற்றும் இடியின் தாக்கம் தான் ஒரு சாதாரண கலசத்தையும் இரிடியமாக மாற் றும் திறன் படைத்தது. கோயிலை இடி தாக்கும் அபாயம் இல்லாமல் போனதற்கு காரணம் கோயில் கோபுரத்தில் உள்ள இந்த கலசங்கள் தான். இவை ஒரு சிறந்த மின் கடத்தி ஆகும்.

கோயில் மண்டபத்தில் உள்ள கொடிமரம் இன்னொரு இடி தாங்கியாகும். மற்றும் இதுதான் கோயிலின் வெளிப் பிரகார த்தை காக்கும் இன்னொரு பாதுகாப்புக் கவசம். அது மட்டு மல்லாமல் கோயில் கதவு என்றுமே மரத்தில் செய்யப்பட்ட தாக இருக்கும். ஏன் என்றால் எல்லா உயர் சக்திகளையும் சம நிலைப்படுத்தும் ஒரு சிறப்பான காரியத்தை மரக்கதவுகள் செய்யும். இடி இறங்கினால் கோயிலின் கதவுகளில் உள்ள மணி கண்டிப்பாக அதிர்ந்து ஒருவித ஒலியை ஏற்படுத்தும். இதுவும் ஒரு இயற்கை விஷயம் தான்.

இருவேளை கோயிலுக்கு சென்று வந்தால் மனிதனின் உடல் மட்டுமல்ல அவனின் மனதும் மூளையும் சுத்தமாகும். சித்தசுவா தீனம் இல்லாதவர்களைக் கூட கோயிலில் கட்டிப்போடும் விஷ யம் இந்த சக்தி ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதால் தான். கோயிலின் மடப்பள்ளியில் கிடைக்கும் புளியோதரை ஆகட்டும், சர்க்கரை பொங்கலாகட்டும், இந்த ருசியை எந்த ஒரு நட்சத்திர விடுதி சமயலறையிலும் கொடுத்து விட முடியாது. சில கோயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல்களில் இரண்டு அல்லது நாலு வாசல்கள் இருக்கும். காரணம் இந்த சக்தி அப்படியே உங்களுடன் வெளியே செல்ல வேண்டும் என்று நமது முன்னோர்களும், மூத்தவர்களும் நமக்கு வகுத்த சூத்திரம்தான் இந்த கோயில் வழிபாட்டிலுள்ள தொழில் நுட் பம்.

அருவிகளில் குளித்தாலோ, மலைப்பிரதேசங்களுக்கு சென் றாலோ, கடற்கரைப் பக்கம் போனாலோ உடலுக்கு நல்லது என் கிறது அறிவியல். இங்கே போனால் சுத்தமான காற்றை சுவாசிப் போம். உடல் ஆரோக்கியமடையும். ஆனால், இருக்கிற விலை வாசியில், அந்தப் பக்கமெல்லாம் எல்லாராலும் போய்வர முடி யுமா? இந்தக் குறையைத் தீர்க்கத்தான் உள்ளூரிலேயே கோயில் களைக் கட்டி வைத்தார்கள்.

கருவறையில் சுவாமிக்கு அபிஷேகம் செய்வார்கள். அப் போது அப்பகுதியில் காற்று மண்டலம் ஈரமாகும். எதிர் மின் னோட்டம் அதிகமாகும். ஈரப்பதமும், எதிர் மின்னோட்டமும் இருக்கும் இடத்தில் பிராணவாயு அதிகமாக வெளிப்படும். சுத்தமான பிராணவாயுவை சுவாசிக்கும் போது, இரத்த ஓட்டம், இதயத் துடிப்பு ஆகியவை சீராகும். இதனால் தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று பெரியவர்கள் சொல்லி வைத்தார்கள். இனிமேலாவது, கோயில்களுக்கு தினமும் சென்று வாருங்கள். அது உங்கள் ஆரோக்கிய த்திற்கு மட்டு மல்லாது மனதுக்கும் நல்லது.

## தெய்வச்சிலைகளை கல்லில் அமைப்பது ஏன்?


ஆகம விதிகளின்படி கருங்கல்லால் கட்டப்பட்ட பழங் காலக் கோவில்களிலும் வேத, ஆகம, சிற்ப சாஸ்திர முறைப்படி யந்திர ஸ்தாபனம் செய்து, தெய்வ உருவங்களை கருங்கல் சிலை யாக பிரதிஷ்டை செய்து தினமும் முறையாக பூஜை செய்து வரும் கோவில்களுக்கு நாம் சென்று தரிசனம் செய்யும் வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் நம் உடலில் ஓர் சக்தி ஊடுருவிச் செல்வதை அனுபவ பூர்வமாக உணரக் கூடியதாக இருக்கும்.

ஆகவே தான் பெரும்பாலும் சிலைகளை கருங்கல்லில் வடிவமைக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள எல்லா கோயில்களிலும் விக்கிரகங்களை உலோகத்தால் செய்யாமல் கருங்கல்லால் செய்கிறார்கள். இதற்கு முக்கியமான ஒரு காரணம் உள்ளது. உலோகத்தின் ஆற்றலை விட கருங்கல்லின் ஆற்றல் பல மடங்கு அதிகமானது. எந்த சக்தியையும் தன் வசம் இழுத்துக் கொள்ளும் தன்மையுடையது கருங்கல். இதில் நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் பஞ்சபூத தன்மைகள் அடங்கியுள்ளன. இது வேறு எந்த உலோகத்திலும் வெளிப்படுவது இல்லை.



**நீர்**

கல்லில் இருந்தே நீரூற்று உருவாகிறது. கல்லில் நீர் உள்ளது. எனவே தான் நீர் தனது இயல்பான குளிர்ந்த நிலையிலிருந்து மாறாமலிருக்கிறது. கர்நாடக மாநிலத்தில் சில கோவில்களில் கல்லில் நீரூற்று வருவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலம்**

பஞ்ச பூதங்களில் ஒன்றான நிலம் கல்லின் மேல் தான் உள்ளது. பலகோடி ஆண்டுகளுக்கு முன் உருவான உருண்டைப் பாறை மீது மண் சேர்க்கப்பட்டு இந்த பூமி உருவானதாக ஆய்வுகள் கூறுகின்றன.

**நெருப்பு**

கல்லில் நெருப்பின் அம்சமும் உண்டு. கற்களை உரசினால் நெருப்பு உருவாவதே இதற்கு சான்று.

**காற்று**

கல்லில் காற்று உண்டு. எனவே தான் கல்லில் தேரை கூட உயிர் வாழ்கிறது.

**ஆகாயம்**

ஆகாயத்தைப் போல், வெளியிலிருக்கும் சத்தத்தை தன்னகத்தே ஒடுக்கி பின் வெளியிடும் சக்தி கல்லுக்கு உண்டு. எனவே தான், கருங்கல்லில் கட்டப்பட்ட கோவில்களில் நாம் கூறுவது எதிரொ லிக்கும் அதிசயம் நடக்கிறது. திருவையாறு ஐயாரப்பன் கோயி லில் நாம் பேசுவது அப்படியே எதிரொலிப்பதை நாம் ஆனந்த மாக கேட்டு மகிழலாம்.

இக்காரணங்களினால் இறை வடிவங்களை பஞ்ச பூதங்களின் வடிவில் இருக்கும் கருங்கல்லில் வடிவமைத்து வழிபாடு செய் கிறோம். அபிஷேகம், அர்ச்சனை, ஆராதனைகள் முறைப்படி செய்யும்போது, ஒரு கோவிலின் பஞ்ச பூதங்களின் தன்மை அதிகரிக்கின்றன. அக்கோவிலில் நாம் வணங்கும் போது நம் உடலில் நல்ல அதிர்வுகள் உண்டாகி, அதன் மூலம் நம் வாழ் வில் நல்ல பலன்கள் ஏற்படுகின்றன. இதுவே கருங்கல்லில் சிலைகள் வடிப்பதன் இரகசியமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரில் கோயில் கோபுரத்தை விட எந்தக் கட்டிடமும் உயரமாக இருக்கக் கூடாது என இந்துக்கள் கூறுவது ஏன்?

**பிரமிப்பூட்டும் பழந்தமிழர்களின் விஞ்ஞானம்.**

மன்னராட்சி காலத்தில் ஊரில் கோயில் கோபுரத்தை விட உயரமாக எந்தக் கட்டிடமும் இருக்கக் கூடாது என்று ஒரு எழுதாத சட்டம் இருந்ததாம். இதற்கு என்ன காரணம்? கோயில்களையும், உயரமான கோபுரங்களையும், அதன் மேல் இருக்கும் கலசங்களையும் பார்த்திருப்பீர்கள். அதற்குப் பின்னால் எவ்வளவு பெரிய அறிவியல் ஒளிந்திருக்கிறது என்று தெரியுமா?




கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி, செப்பு அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக்கலசங்களில், அதில் கொட்டப்படும் தானியங்களும், உலோகங்களும் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியினை (Earth) கலசங்களுக்கு கொடுக்கின்றன.

ஒரு இடத்தில் உள்ள இடிதாங்கிகளில் எது மிக உயரமான இடத்தில் அமைந்த இடிதாங்கியோ அது தான் முதலில் இடி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னலில் இருந்து வரும் மின்சக்தியை ஈர்க்கும் வல்லமை கொண்டது. மேலும், அது எத்தனை பேரைக் காப்பாற்றும் என்பது அதன் உயரத்தைப் பொறுத்தது. அடிப்படையில் கோயில் கலசங்களே இடிதாங்கிகளாக செயல்படுகின்றன. உதா ரணமாக கோபுரத்தின் உயரம் ஐம்பது மீட்டர் என்றால் நூறு மீட்டர் விட்டம் அடைக்கும் பரப்பில் எத்தனை பேர் இருந் தாலும் அவர்கள் இடி தாக்காமல் காக்கப்படுவார்கள்.

அதாவது சுமார் 7500 சதுர மீட்டர் பரப்பில் இருக்கும் மனிதர்கள் காப்பாற்றப்படுவார்கள். சில கோயில்களுக்கு நான்கு வாயில்கள் உள்ளன, அது நாலாபுறமும் 7500 சதுர மீட்டர் பரப் பளவை காத்துக் கொண்டு நிற்கிறது. இது ஒரு அண்ணளவான கணக்கு தான். இதை விட உயரமான கோபுரங்கள் இதை விட அதிகமான பணிகளை சத்தமில்லாமல் செய்து வருகின்றன. அது எப்படி என்று கேட்கிறவர்கள் கீழே உள்ள படத்தைப் பார்க் கவும்.

கோயிலின் கோபுரத்தில் உள்ள கலசத்திற்குள் நெல், வரகு, கம்பு, கேழ்வரகு, திணை, சோளம், மக்கா சோளம், சாமை, எள் ஆகியவற்றைக் கொட்டி இருப்பார்கள். குறிப்பாக வரகு எனும் தானியத்தை அதிகமாகக் கொட்டினார்கள். இதற்கான காரண த்தை தேடிப்பார்க்கும் போது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.

வரகு மின்னலை தாங்கும் அதீத ஆற்றலை பெற்றுள்ளது என இப்போதைய அறிவியல் கூறுகிறது. ஆனால் அப்போதே நம் முன்னோர்கள் இந்த அறிவியலைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

இவ்வளவு தானா? இல்லை, பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை குடமுழுக்கு விழா என்ற பெயரில் கலசங்களில் இருக் கும் பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப் பப்படுகின்றன. இதை இன்றைக்கு சம்பிரதாயமாக மட்டுமே கடைப்பிடிக்கிறார்கள். ஆனால் அதன் உண்மையான காரண த்தை தேடினால், அந்த தானியங்களுக்கு பன்னிரெண்டு வருடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தான் சக்தி இருக்கிறது. அதன் பின்பு அது செயல் இழந்து விடுகிறது எனத் தெரிகிறது. இதை எப்படி ஆராய்ந்தார்கள் என வியப்பாக உள்ளது.

அவ்வளவு தானா? அதுவும் இல்லை, இன்றைக்கு பெய்வதை போன்று அன்றும் தொடர்ந்து மூன்று நாட்களாக மழை பெய்தது. ஒருவேளை தானியங்கள் அனைத்தும் நீரில் மூழ்கி அழிந்து போனால், மீண்டும் எதை வைத்து பயிர் செய்வது? இவ்வளவு உயரமான கோபுரத்தை நீர் சூழ வாய்ப்பே இல்லை, இதையே மீண்டும் எடுத்து விதைக்கலாமே.

இதை எல்லாம் பார்க்கும்போது நம் முன்னோர்கள் சொன்ன "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழி தான் நினைவுக்கு வருகிறது. எவ்வளவு உண்மையான பழமொழி.

## வீட்டில் நாம் விளக்கேற்றுவது ஏன்?

நாம் வீட்டிலும், கோவிலிலும் ஏன் விளக்கேற்றுகிறோம்? விளக்கு எரிந்த வீடு வீணாகிப் போகாது என்று ஒரு பழமொழி உள்ளது. எதற்கு என்று தெரியுமா?

சுடருக்கு தன்னை சுற்றி உள்ள தேவையற்ற கதிர்களான எதிர் மறை ஆற்றலை (நெகட்டிவ் எனர்ஜி) ஈர்க்கும் சக்தி உள்ளது. அவ்வாறு ஈர்க்கும் போது நம்மை சுற்றி நேர்மறை சக்தி (பொசிட்டிவ் எனர்ஜி) அதிகரிக்கும். நம் சுற்றுப்புறம் தெளிவாகவும் பலத்தோடும் காணப்படும்.

அதே சமயம் இரண்டு நாட்கள் வீட்டில் விளக்கேற்றாமல் இருந்தாலே அது புரியும். ஏதோ வீடே மயானம் போல் தோன்றும். எல்லாருமே சோர்வாய் இருப்பார்கள். இதுவே விளக்கேற்றுவதன் தத்துவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் உடலில் இருக்கும் ஏழு சக்கரங்களில் மூலாதாரமும், ஸ்வாதிஷ்டானமும் நல்லெண்ணெய் விளக்கு ஏற்றுவதால் தூய்மையடைகின்றன. அதேபோல் மணிபூரகம், அனாஹதம் இரண்டும் நெய்விளக்கு ஏற்றும் போது தூய்மையடைந்து நற் பலனை அடைகின்றன.

நம் உடலில் இருக்கும் நாடிகளில் சூரிய நாடி, சந்திர நாடி, சுஷம்னா நாடி ஆகியவை மிக முக்கியமாகக் கருதப்படுகின்றன. சூரிய நாடி நல்ல சக்தியையும், வெப்பத்தையும் தருகிறது. சந்திர நாடி குளிர்மையைத் தருகிறது. சுஷம்னா நாடி பரம்பொருளு டன் சம்பந்தப்பட்டு ஆன்மீகப் பாதையை வகுக்கிறது. நல்லெண் ணெய் விளக்கு ஏற்றும்போது சூரிய நாடி சுறுசுறுப்பு அடைகி றது. நெய்விளக்கு சுஷம்னா நாடியைத் தூண்டிவிட உதவுகிறது. பொதுவாகவே நெய் தீபம் வீட்டிற்கு சகலவித சுகங்களையும், நலன்களையும் தருகிறது.

திருவிளக்கை எப்போது வேண்டுமானாலும் ஏற்றலாம். இத ற்கு தடையேதும் இல்லை. ஆனால், பொதுவாக மாலை 6.30 மணிக்கு ஏற்றுவதே நமது மரபு. இதை கருக்கல் நேரம் என்பர். சூரியன் மறைந்ததும் சில விஷசக்திகள் சுற்றுச்சூழலில் பரவி வீட்டிற்குள்ளும் வர வாய்ப்பிருக்கிறது. ஒளியின் முன் அந்த விஷசக்திகள் அடிபட்டுப் போகின்றன. எனவேதான் அந்நேரத் தில் விளக்கேற்ற வேண்டும் என நம் முன்னோர்கள் கூறி வைத்து ள்ளனர்.

## சுப காரியங்களின்போது வெளியில் இருந்து வீட்டுக்கு வருபவர்களுக்கு ஆரத்தி எடுப்பது ஏன்?

காலம் காலமாக நமது பழக்க வழக்கங்களில் நாம் கடைப் பிடித்து வரும் ஒன்று ஆரத்தி எடுப்பது. தற்போது நாம் இதை வெறுமென திருஷ்டி கழிப்பதற்காக என்ற எண்ணத்தில் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வருகிறோம். ஆனால், இது திருஷ்டி கழிப்பதற்காக உண் டாக்கப்பட்ட ஓர் சடங்கு முறையல்ல.

நாம் எதற்கு ஆரத்தி எடுப்பதன் பின்னணியில் பெரிய அறிவியல் காரணம் ஒன்று இருக்கிறது. நாம் தினந்தோறும் ஆரத்தி எடுப்பது கிடையாது. முக்கிய நாட்களில் மட்டுமே எடுப்போம். திருமணம் முடிந்த தம்பதியர், பிரசவம் முடிந்த பெண், வெளியூர் பிராயணம் முடித்து வரும் நபர்கள் என இவர் களுக்கு தான் நாம் பொதுவாக ஆரத்தி எடுப்போம். இச்சம் பிரதாயங்களுக்கு பின்னால் அற்புதமான விஞ்ஞான காரணங்கள் ஒளிந்திருக்கின்றன.

நம் முன்னோர்கள் ஏன் இந்த மாதிரியான சூழலில் மட்டும் ஆரத்தி எடுத்தார்கள், இதன் பின்னணியில் இருக்கும் அறிவியல் காரணிகள் என்ன? ஆரத்தி எடுப்பது என்றால் ஒரு தாம்பளத் தட்டில் தண்ணீர் நிரப்பி, மஞ்சள் அரைத்து சேர்த்து, அதில் சிறிது சுண்ணாம்பு சேர்த்து கலக்க வேண்டும். மஞ்சளும் சுண் ணாம்பும் கலந்த தண்ணீர் சிவப்பு நிறமாக மாறும். அந்த சிவ ப்பு நீரை ஒரு பரந்த பாத்திரத்தில் எடுத்து, அதற்கு இரு பக்கங் களிலும் இரண்டு தீச்சுடர் எழுப்பி சம்பந்தப்பட்ட நபரின் உட லுக்கு 3 முறை சுற்றி விடுவதையே ஆரத்தி என்று கூறுகிறோம்.

**சிறந்த கிருமிநாசினி**

மஞ்சள் ஓர் சிறந்த கிருமிநாசினி என்பது நாம் அறிந்தது தான். சுண்ணாம்புக்கும் இந்த திறன் உண்டு. பிரசவித்த பெண், மருத்துவமனைக்கு சென்று வீடு திரும்பும் நபர்கள், பிராயணம் செய்து வருபவர்கள் ஆகியோர் மீது கண்டிப்பாக கிருமிகள் அதி கம் அண்டியிருக்கும். இந்த கிருமிநாசினி நீரில் சூடமேற்றி உடலை சுற்றுவதால், உடல் மேல் அண்டியிருக்கும் கிருமிகள் அழிந்துவிடும்.

**வாசலில் ஆரத்தி எடுப்பது ஏன்?**

உடல் மேல் கிருமிகள் அண்டியிருக்கும் நிலையில், வீட்டுக் குள் வரும்போது அது வீட்டில் இருக்கும் குழந்தைகள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர்களை எளிதில் தொற்றிக்கொள்ளும். இது அவர்களுக்கு சிறுசிறு உடல்நலபிரச்சனைகளை ஏற்படுத்த வாய்ப்புகள் உண்டு. அதனால் தான் வாசலிலேயே ஆரத்தி எடுத்து வீட்டினுள் அழைத்து வருகிறார்கள்.

### முன்னோர்களின் அறிவியல்

நமது முன்னோர்கள் எதையும் அர்த்தமில்லாமல் செய்யவில்லை,அவர்களது செயல்களில் மருத்துவமும், அறிவியலும் புதைந்து இருக்கிறது என்பதற்கு ஆரத்தி எடுக்கும் முறை மற்றுமொரு சான்றாக விளங்குகிறது. சரியான புரிதலின்மையின் காரணமாக, இந்த தலைமுறையினர் இவற்றை எல்லாம் மூடநம்பிக்கை, வீண் சடங்குகள், அறிவியல் வளர்ந்த பிறகும் இதை ஏன் கடைப்பிடிக்கிறீர்கள் எனக் கேற்கின்றனர். எனவே, நமது முன்னோர்களின் செயல்களில் ஒளிந்திருக்கும் ஆழமான விஞ்ஞான அறிவியல் அர்த்தங்களை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## நாம் ஏன் விபூதி பூசுகிறோம்? இதனால் விளையும் நன்மைகள் என்ன?

நீறில்லா நெற்றி பாழ் என்பது நாம் அனைவரும் அறிந்த முதுமொழி. பசுவின் சாணத்தை எடுத்து அதனை சுட்டு சாம்பலாக்கிய பஸ்மமே சுத்தமான விபூதி ஆகும். விபூதி தரிப்பதால் ஆன்மீகம் சம்பந்தமான நன்மைகள் விளைவதுடன், உடல்நலம் சார்ந்த நன்மைகளும் உண்டாகும் என்பது சான்றோர்களின் கருத்தாகும்.

### திருநீரால் விளையும் நன்மைகள்

திருநீறு வீட்டில் இருந்தால் அதன் மூலம் தடுக்கப்படும் வியாதிகள் அநேகம் என்பதை டாக்டர். கணபதி ஆவணப்படுத்துகிறார். அவற்றுள் சில:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தலைவலி நீரேற்றம் தலைப்பாரம் இவற்றிற்கு திருநீற்றை வெளிப்புறம் பூச வேண்டும்.
- பல்வலி, ஈறில் இரத்தம் படித்தல் இவற்றுக்கு திருநீருடன் கற்பூரம் கலந்து பல்துலக்க வேண்டும்.
- எலும்புத்தேய்மானம், உடல் எலும்பு வளர்ச்சியின்மை, குழந்தைகளுக்கு பற்கள் திடீரென்று விழுதல், சளி, வறட்டு இருமல் இவற்றுக்குத் திருநீற்றை தேனுடன் 500 மில்லி கிராம் முதல் 1 கிராம் வரை கலந்து உண்ண வேண்டும்.
- நீர்க்கட்டு, நீர் எரிச்சல் இவற்றை குணப்படுத்த இள நீருடன் திருநீற்றைக் கலந்து கொடுக்க வேண்டும்.
- திருநீறு ஓர் கிருமிநாசினியும் கூட. அதனை உடல் முழு வதும் பூசுவதனால் உடலில் உள்ள துர்நாற்றம் மறையும் என இயற்கை மருத்துவம் கூறுகிறது.
- நெற்றியில் திருநீற்றை தரிப்பதனால் தலைக்குள் சேர்ந்திரு க்கும் நீரினை அது வெளியேற்றுகிறது.
- விதிப்படியமைந்த திருநீற்றை உட்கோண்டால் உடம்பின் அசுத்தங்கள் அனைத்தையும் போக்கி நாடி நரம்புகள் அனைத்திற்கும் வலிமையை கொடுக்கும்.

மனித உடலிலே நெற்றி முக்கிய பாகமாகக் கருதப்படுகின் றது. அந்த நெற்றியிலேயே வெப்பம் அதிகமாகவும் வெளியிடப் படுகின்றது. உள் இழுக்கப்படுகின்றது. சூரியக் கதிர்களின் சக் தியை இழுத்து சரியான முறையில் உள்ளனுப்பும் அற்புதமான தொழிலை திருநீறு செய்கிறது. அதனாலேயே திருநீற்றை நெற்றி யில் இடுவார்கள். எமது இரு புருவங்களுக்கும் இடையிலுள்ள பகுதியில் மிக நுண்ணிய நரம்பு அதிர்வலைகள் உள்ளன. அத னால் அந்த இடத்தைப் பயன்படுத்தி மனோவசியம் செய்ய முடியும். அதனாலேயே மனவசியத்தைத் தடுக்க அந்த இடத்தில் திருநீறு, சந்தனம் போன்றவை இடப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த பொருளை சுட்டாலும் அது கரியாகி பின்னர் சாம் பல் ஆகும். சாம்பலை மேற்கொண்டு எரிக்க முடியாது. இதன் மூலம் இது வாழ்வின் நிலையற்ற தன்மையை உணர்த்துகிறது. முடிவில் முடிசார்ந்த மன்னரும் ஒரு பிடி சாம்பல் ஆகும் நிய தியை இது சுட்டிக் காட்டுகிறது.

## அதிகாலையில் குளிக்க வேண்டும் என நம் முன்னோர்கள் சொன்னது ஏன்?

நமது வீட்டின் வாயிலை அழகு படுத்துவதில் கோலம் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறதோ, அதேபோன்று நமது உடலையும், உள்ளத்தையும் அழகு படுத்துவது தான் அதிகாலை நீராடுதல். தூங்கும்போது இந்திரியங்களில் ஏற்படும் அசுத்தி மற்றும் உடல் அசதி நீங்கி புத்துணர்வு பெற அதிகாலையில் நீராடுதல் சாலச்சிறந்தது.

**நீராடலில் மூன்று வகை உள்ளது. அவையாவன..**

*1.* ரிஷி ஸ்நானம் *(காலை 4 முதல் 5 வரை)* உத்தமம்.
*2.* மனித ஸ்நானம் *(காலை 5 முதல் 6.30 வரை)* மத்திமம்.
*3.* ராட்சக்ஷ ஸ்நானம் *(காலை 6.30க்கு மேல்)* அதமம்.

**காலைக் குளியலின் அறிவியல் விளக்கங்கள்.**

காலை சூரிய ஒளியில் உள்ள விட்டமின் டி எலும்புகளின் பலத்துக்கு மிகவும் முக்கியமானது. எனவே தான் சூரியன் உதிக்கும் கிழக்கு திசை பார்த்து நின்று குளிக்க வேண்டும். நம் உடலில் வெப்ப நிலையை விட வெண்னீரின் வெப்ப நிலை அதிகமாக இருப்பதால் வெண்னீரை முதலில் தலையில் ஊற்றும் போது நரம்புத்தளர்ச்சி ஏற்படும். எனவேதான் பாதத்தில் இருந்து படிப்படியாக ஊற்றினால் உடலின் வெப்ப நிலை பாதிப் படையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இறைவன் பெயரை சொல்லிக் கொண்டே குளிப்பதால் சைனஸ், சளி பிரச்சினை வராது. நம் முகத்தில் குறிப்பாக தாடையில் உள்ள வேகஸ் நரம்புகள் கோஷம் கூறும் போது இயங்குவதால் நீர்க்கோர்வை தடுக்கப்படுகிறது, விரத நாட்களில் உடல் மற்றும் மனதுக்கு தூய்மை அவசியம். எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் மந்திர ஒலிகளின் அதிர்வுகள் நம் உடலில் நுழையத் தடை ஏற்படுகிறது. அதனால் தான் விரத நாட்களில் எண்ணெய் தேய்த்து குளிக்கக் கூடாது என்பதை மரபாக வைத்துள்ளனர் நம் முன்னோர்கள். தவிர விரத நாட்க ளில் பகலில் தூங்கக் கூடாது. எண்ணெய் தேய்த்து குளித்தால் பகலில் தூக்கம் வரும். எனவே வெறும் தலைக்கு குளிக்கலாம் என்றும் கூறினர்.

நீராடுவது என்றால் உடனே தண்ணீரில் குதிப்பது என்று பொருளல்ல. எங்கே எப்படிக் குளிக்க வேண்டும் என்பதற்கும் விதிகள் இருக்கின்றன. ஆற்றில் நீராடும் போது நீரோட்ட திசையில் நின்று நீராட வேண்டும். குளிர்ந்த நீரில் குளித்தால் முதலில் தலையில் நீரை ஊற்ற வேண்டும். வெந்நீர் ஊற்றி தலை குளிக்கும் போது உள்ளங்காலில் ஆரம்பித்து பின் படிப் படியாக உச்சந்தலையில் ஊற்ற வேண்டும் என்பது பெரியோர் அறிவுரை. எனவே நீராடும்போது இறைப்பாடல்களைப் பாடிக் கொண்டோ அல்லது இறைகோஷங்களை ஓதிக்கொண்டோ குளிப்பது நலம்.

இவற்றைத் தவிர, சூரிய உதயத்துக்கு முன் நான்கு நாழிகைகள் அருணோதயம் எனப்படும் நேரத்தில் நீராடுவது பிராதஸ் நானம் எனப்படும். அதிகாலையில் நீராடுபவர்களுக்கு சரீர அழகு, பலம், சுத்தம், ஆயுள், ஆரோக்கியம், தைரியம் ஆகி யவை கிடைக்கும். சாஸ்திர விதிப்படி மூன்று வருட காலம் அதிகாலையில் நீராடுபவருக்கு ஏழு பிறவிகளில் செய்த பாபங்களும் நீங்கும் என்கிறது பராசர ஸ்மிருதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசைவ உணவை சாப்பிட்ட பிறகு கோயிலுக்குச் செல்லக் கூடாது என நம் முன்னோர்கள் சொன்னது ஏன்?

நாம் உண்ணும் உணவுக்கும், மனதிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உதாரணமாக தயிர் அதிகமாக சாப்பிட்டால் தூக் கம் வருவது போன்ற உணர்வு ஏற்படுவதும், காரம் அதிகமாக சாப்பிட்டால் கோபம் வருவதையும் கூறலாம்.

பொதுவாக அசைவ உணவுகள் ஜீரணமாக அதிக நேரம் எடுத்துக் கொள்ளும் என்பதால் அது மனதளவில் மந்த நிலையை ஏற்படுத்தும். பொதுவாக கோயிலுக்குச் செல்லும் போது சுத்தமாகச் செல்ல வேண்டும். இங்கு சுத்தம் என்பது வெறும் உடலை மட்டும் குறிக்கவில்லை. மனதையும் சேர்த்துத் தான் குறிக்கிறது. மனதளவில் மந்த நிலையில் உள்ள ஒருவர் சூட்சும சக்திகள் நிலவும் கோயிலுக்குள் செல்லும் போது அந்த சக்திகளை உணரக்கூடிய ஆற்றலை இழந்து விடுகிறார்.

பொதுவாக அசைவ உணவுகள் சூட்சும சக்தியை உணரும் ஆற்றலைக் குறைக்கும் தன்மை படைத்தவை. எனவேதான் கோயிலுக்குச் செல்லும் போது எளிமையான உணவுகளை மிதமான அளவில் உண்டு, மனதில் உற்சாகத்துடன் இறைவனை தரிசிக்கச் செல்ல வேண்டும் என நம் முன்னோர்கள் கூறியுள் ளார்கள்.

## அறிவியலின் படி மனிதன் சைவப் பிராணியா? அசைவப் பிராணியா?

மனித உடலமைப்பை சைவம் உண்ணும் உடல் அமைப் போடு தான் கடவுள் படைத்துள்ளார். இதற்கு சில அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் உள்ளன. அசைவம் உண்ணும் உயரினங் கள் எல்லாம் தண்ணீரை நக்கித்தான் குடிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக நாய், பூனை, சிங்கம், புலி போன்ற பிராணிகளை பார்த்தால் தெரியும். ஆனால் சைவம் உண்ணும் உயிரினங்களான மாடு, ஆடு, மான் போன்றவை தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கும். மனிதனையும் உறிஞ்சிக் குடிக்கும் தன்மை யுடன் தான் கடவுள் படைத்துள்ளார்.

மேலும் அசைவம் உண்ணும் விலங்குகளுக்கு உணவு உண்ணும்போது சதையை கிழிக்கும் பொருட்டு கோரைப்பல் எனும் நீளமான பல் காணப்படும். இது சைவம் உண்ணும் விலங்குகளுக்கும், மனிதருக்கும் கிடையாது. மேலும் நகங்களின் அமைப்பும் அதேபோல் மாறுபடுகிறது. எனவே மனிதன் சைவம் உண்ணும் பிராணியாகவே படைக்கப்பட்டுள்ளான் என்பதை இதன் மூலம் அறியலாம்.

## இந்துக்கள் பசுவை வணங்குவது ஏன்? பசுவின் புனிதத் தன்மை என்ன?

பசு ஏதாவது விஷத்தன்மை உடைய உணவை உட்கொண்டால் அதிலிருந்து கிடைக்கும் பாலை நாம் அருந்தும் போது நமக்கும் அந்த விஷத்தன்மை வருமா என்று சோதித்துப் பார்த்ததில் விஞ்ஞானிகள் அதிர்ந்து போனார்கள்.

90 நாட்கள் தொடர்ந்து பசுவுக்கு தினமும் விஷத் தன்மையைக் கொண்ட உணவுகளைக் கொடுத்துவிட்டு அதன் பாலை ஆராய்ந்து பார்த்தார்கள். விஷத்திற்கான எந்த தடயமும் அந்த பாலில் இருக்கவில்லை. அந்த விஷம் எங்கு தான் போனது என்று ஆராய்ந்து போது ஆச்சரியம் அடைந்தார்கள்.

ஆலகால விஷத்தை உண்ட பரம சிவன் உலகைக் காக்க அந்த விஷத்தை தன் கழுத்திலேயே தங்க வைத்தான் என்பது நாம் படித்த வரலாறு. அதே போல் பசுவும் விஷத்தை தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்திலேயே தங்க வைத்திருக்கிறதாம். அதனால் தான் பழங் காலம் தொட்டு பசுவுக்கு அகத்திக் கீரை கொடுக்கிறோம்.

அகத்திக் கீரை விஷத்தை முறிக்கும் தன்மை கொண்டது. தான் கொடுக்கும் பாலை தூய்மையாக்கி தன் கன்றுக்கு மட்டு மல்லாது நமக்கும் வழங்கும் பசு தாய் போன்றது. பசு நமக்கு இன்னொரு தாய் என்பது இப்போது புரிகிறதா? இதனால் தான் இந்துக்களாகிய நாம் பசுவைப் புனிதமானதாகக் கருதி அதை தெய்வமாக வணங்குகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் நிறைந்த நம் சம்பிரதாயங்களும், சடங்குகளும்

## நாம் காலையில் எழும்போது பூமியைத் தொட்டு தலையில் ஒற்றிக் கொள்வது ஏன்?

நாம் காலையில் எழும்போது பூமியைத் தொட்டு வணங்க வேண்டும் என்று நம் முன்னோர்கள் கூறிச் சென்றுள்ளனர். இதன் சரியான காரணத்தை அறிந்திருக்காத சிலர் இதை மூட நம்பிக்கை என்று ஏளனம் செய்வதும் உண்டு. ஆனால் இதன் பின்னுள்ள அறிவியல் இரகசியம் என்ன தெரியுமா?

ஒரு நபர் தூங்கும் போது அவர் உடலில் தங்கியிருப்பது 'சமநிலை விசை' அதாவது ஸ்டாடிக் எனர்ஜி அல்லது பொட்டென்சியல் எனெர்ஜி எனப்படும். ஆனால் விழித்தெழும்போது அது சலன விசையாக அதாவது டைனமிக் அல்லது கைனடிக் எனர்ஜியாக மாறுகின்றது. பூமியைத் தொடும்போது உடம்பிலுள்ள ஸ்டாடிக் எனர்ஜி வெளியேறி கைனடிக் எனெர்ஜி நிறைக்க வேண்டும்.

விழித்தெழும்போது கால் முதலாவதாக தரையைத் தொட்டால் ஆற்றல் கீழ்நோக்கி ஒழுகி உடல் பலம் குறைகிறது. ஆனால் கை முதலாவதாக தரையைத் தொடுகின்ற போது ஆற் றல் மேல்நோக்கி பரவி கைவழியாக வெளியேறி உடல் பலம் இரட்டிக்கின்றது.

இதில் இவ்வளவு பெரிய ஒரு விஞ்ஞான இரகசியம் ஒளிந்து கிடப்பதால் தான் நம்நாட்டு ஆசிரியர்கள் விழித்தெழும் முன் பூமியைத் தொட்டு கையை தலையில் வைக்க வேண்டும் என்று தமது தலைமுறைகளுக்குக் கற்பித்துச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் தாய்மார்கள் அதிகாலை எழுந்ததும் துளசி மாடத்தை சுற்றி வருவதன் காரணம் என்ன?

செடிகளிலேயே மிகவும் கீர்த்தி மிக்கது துளசிச் செடியா கும். இதனால் தான் இந்துக்கள் தங்கள் வீடுகளில் துளசியை வளர்க்கின்றனர். அது மட்டுமல்லாமல் காலையில் எழுந்தவுடன் தமது வீட்டு முற்றத்தில் உள்ள துளசி மாடத்தை சுற்றி வந்து வணங்குகின்றனர்.

ஆன்மீக ரீதியாக பார்க்கும் பொழுது துளசி விஷ்ணு பகவானின் அம்சம் எனக் கூறப்படுகிறது. அதன் காரணமாகவே இதை தினமும் காலையில் சுற்றி வருவதாக இந்துக்கள் நம்பு கின்றனர். ஆனால் இதைவிட இதற்கு மிக முக்கிய ஓர் அறிவி யல் காரணமும் உள்ளது.

துளசிச் செடி மொத்தமாக உள்ள 24 மணித்தியாலங்களில் 20 மணிநேரம் நாம் சுவாசிக்கும், நமக்குத் தேவையான பிராண வாயுவை (ஒட்சிசன்) வெளியிடுகிறது. மிகுதி 4மணி நேரமும் ஓசோனை வெளியிடுகிறது. துளசி காலை 6 மணி முதல் அதி காலை 2 மணி வரை ஒட்சிசனையும், அதிகாலை 2 மணி முதல் காலை 6 மணி வரை ஓசொனையும் வெளியிட்டு மனிதனுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், ஓசோன் படலத்துக்கு பாதுகாப்பா கவும், காணப்படும் ஓர் அபூர்வ தாவரமாக விளங்குகிறது.

இவற்றை விட துளசி 4000 விதமான நோய்களைக் குணமா க்கும் அருமருந்தாகவும் விளங்குகிறது. தினமும் 4 துளசி இலை களை சாப்பிட்டு வந்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிக ரிக்கும். இதனால் தான் நம் முன்னோர்கள் துளசிச் செடியை வீட்டின் முற்றத்தில் வளர்த்து அதை தினமும் சுற்றிவரச் சொன் னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவரை இழந்த பெண்கள் ஏன் பொட்டு வைக்கக் கூடாது?

நம் முன்னோர்கள் சம்பிரதாயம் என்னும் பெயரில் பல அறிவியில் பூர்வமான சடங்கு முறைகளை வகுத்துள்ளனர். அதைப் பற்றிய விளக்கங்கள் கொடுக்காததால் பல சடங்கு முறைகளை நாம் ஏன் செய்கிறோம் என்று கூடத் தெரியாமல் செய்து வருகிறோம். அதில் சில சடங்கு முறைகளை தவறாகக் கூட செய்கிறோம்.

ஆண் பெண் எல்லோரும் நெற்றியில் பொட்டு வைப்போம். அதாவது இரண்டு புருவங்களுக்கு மத்தியில் நம் உயிர் ஓட்டத் தைத் தூண்டும் ஆக்கினை என்னும் மையம் உள்ளது. அதைத் தொட்டு தூண்டும் பொருட்டும், அங்கே உருவாகும் வெப்பத் தைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் ஆண், பெண் எல்லோரும் அங்கே பொட்டு வைப்போம். இது எல்லோரும் கடைப்பிடிக் கும் சம்பிரதாய முறையாகும்.

ஆனால் திருமணமான பெண்கள் திருமணத்திற்குப் பிறகு இரண்டாவதாக ஒரு இடத்தில் பொட்டு வைப்பார்கள். அது தான் நடுநெற்றி வகுடு. இந்த இடத்தில் தினமும் பெண்கள் தொட்டு பொட்டு வைப்பதால் அவர்களின் உடலில் அவர்க ளுக்கே தெரியாமல் சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. சில சுரப்பிகள் தூண்டப்படுகின்றன.

பெண்களுக்கு நெற்றி வகிட்டில் தினமும் தொடுவதால் அவர்களுக்கு அடி வயிற்றில் பாலியல் சுரப்பி (sexual gland) நன்கு தூண்டப்படுகிறது. அதே போல் கர்ப்பப்பையும் வலுப் பெறுகிறது. திருமணத்திற்கு பின் பெண்களுக்கு உடலுறவில் நல்ல ஆர்வமும், கர்ப்பப்பை வலுப்பெற வேண்டும் என்பதற்காக தான் நெற்றி வகிட்டில் பொட்டு வைக்கும் முறையை நம் முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சீமந்தம், ஐந்து அல்லது எழாவது மாதம் வளை காப்பு செய்யும்போதும் எல்லோரையும் கூப்பிட்டு நெற்றி வகிட் டில் பொட்டு வைத்து, தொட்டு ஆசிர்வாதம் செய்யச் சொல் கிறார்கள். அங்கே தொட்டால் கர்ப்பப்பை வலுப்பெறும். கர்ப் பப்பை வலுப்பெற்றால் குறைப்பிரசவம் உண்டாகாது. நிறை மாதமாக இருக்கும் போது சுகப்பிரசவம் ஏற்படும்.

ஆனால் கணவரை இழந்துவிட்ட பெண்ணிற்கு பாலியல் சுரப்பி தூண்டப்படாமல் இருப்பதற்காக கணவரை இழந்த பெண்கள் நெற்றி வகிட்டில் உள்ள பொட்டை வைக்க வேண் டாம் என்று சொல்லிவிட்டு சென்றனர். ஆனால் பின்னால் வந்தவர்கள் அந்த விஷயம் தெரியாமல் பொட்டே வைக்க கூடாது என்று மாற்றி விட்டனர். ஆனால் இரு புருவ மத்தியில் உள்ள பொட்டு ஆண், பெண் எல்லோரும் எல்லா நாட்களிலும் வைக்கலாம் என்பதே பலருக்குத் தெரியாத உண்மையாகும்.

## காலை ஆட்டிக் கொண்டே இருந்தால் தரித்திரம் பிடிக்கும் என்று சொன்னது ஏன்?

நம் முன்னோர் பேச்சுவாக்கில் பல விடயங்களை சொல்லி விட்டு சென்றுள்ளனர். அதன் அர்த்தம் தெரியாமல் நாம் பல வற்றை மறந்தும் உள்ளோம். மேலும் அதன் அர்த்தம் தெரியாத தால் சிலவற்றை கடைப்பிடிப்பதும் இல்லை. அப்படி அவர்கள் சொல்லிவிட்டு சென்றதில் ஒன்றுதான் கால் ஆட்டிக் கொண்டே இருந்தால் குடும்பத்தில் தரித்திரம் பிடிக்கும் என்பது.

நாம் காலையில் சாப்பிட்டு விட்டு வேலைக்கு செல்லும் போது நல்ல சுறுசுறுப்பாக செல்லுவோம். மாலை வீடு திரும்பும் போது சோம்பலாக களைப்போடு வருவோம். காலையில் இரு ந்த சுறுசுறுப்பு எங்கே போய் விட்டது. நாம் வேலை செய்யும் போது நம் உடல் சக்தி செலவாகிறது. அதனால் நாம் சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்து மாலையில் வரும்போது களைப்படைகிறோம். இந்த சக்தியை தான் பிராணசக்தி என்பார்கள்.

நாம் எந்த வேலை செய்தாலும் நாம் உடலில் உள்ள பிராண சக்தி செலவாகும். நடப்பது, ஓடுவது, பார்ப்பது, பேசுவது இது போல் எந்த வேலை செய்தாலும் நம் உடலில் உள்ள பிராண சக்தி செலவாகும்.

நம் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான வேலை கள் செய்து செலவாகும் பிராணசக்தியை விட எந்த தேவையும் இல்லாமல் எந்நேரமும் காலை ஆட்டி கொண்டே இருப்பதால் நாம் உடலில் சேமித்து வைத்து உள்ள சக்தி அனைத்தும் செல வாகிவிடும். அதனால் நாம் அன்றாட வேலைகள் செய்யும் போது நம் உடலுக்கு தேவையான சக்தி கிடைக்காது. அதனால் நாம் விரைவில் களைப்படைவோம். இது தொடரும் போது சில காலம் கழித்து நம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி இல்லாமல் விரைவில் நோய்வாய்ப்பட்டு விடுவோம்.

நீங்கள் நினைக்கலாம், அதற்காக கையும், காலும் ஆட் டாமலே இருக்க முடியுமா என்று. கையும் காலும் ஆட்டுவது தவறல்ல, ஆனால் எந்நேரமும் தேவை இல்லாமல் ஆட்டுவது தான் தவறு.

உதாரணமாக நம் வீட்டில் மின்சாரம் உள்ளது, மின் விளக்கு உள்ளது. இரவு நேரம் நம் தேவைக்காக மின் விளக்கு எரிந்து கொண்டு இருந்தால் தவறில்லை. ஆனால் நம்மிடம் மின்சாரம் உள்ளது, மின் விளக்கு உள்ளது என்பதற்காக தேவை இல்லாமல் பகல் முழுவதும் விளக்கு எரிந்து கொண்டே இருந்தால் என்ன ஆகும்? மின் சக்தியும், விளக்கின் ஆயுள் காலமும் தான் விரயமாகும் அதனால் யாருக்கும் எந்த உபயோகமும் இல்லை.

இது போலத்தான் தேவை இல்லாமல் தொடர்ந்து செய்து நோய்வாய்ப்பட்டால் வேலைக்கும் செல்ல முடியாது. மருத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவும் அதிகமாக ஏற்படும். எவ்வளவு வசதி இருந்தாலும் வேலையில் வருமானம் இல்லாமலும் மருத்துவ செலவு மட்டுமே இருந்தால் விரைவில் எல்லாம் இழந்து தரித்திரம் ஏற்படும்.

இந்த விளக்கத்தை ஒவ்வொருவரிடமும் சொல்லி விளக்கம் கொடுக்க முடியாது என்பதால் அதை சுருக்கி கால் ஆட்டி கொண்டு இருந்தால் வீட்டில் தரித்திரம் பிடிக்கும், அல்லது கால் ஆட்டி கொண்டே இருந்தால் குடும்பத்தையே ஆட்டி வைக்கும் என்று நம் முன்னோர்கள் சொல்லி விட்டுச் சென்று ள்ளனர்.

## நாம் காது, மூக்கு குத்திக் கொள்வது எதற்காக?

நம் கலாச்சாரத்தில் பிறப்பு முதல் இறப்பு வரை வேறான்றி யுள்ள சடங்குகளில் காது, மூக்கு குத்திக் கொள்வதும் ஒன்று. இதன் பின்னணியில் உள்ள விஞ்ஞானத்தைப் பற்றி சத்குரு இங்கே விளக்குகிறார்.

இந்த உடல் வெறும் எலும்பு, மாமிசம் மட்டும் இல்லை. இந்த உடலுக்கு அடிப்படையாக ஒரு சக்தி மண்டலமும் இயங் குகிறது. இந்த சக்தி மண்டலத்தில் நம் காது, மூக்கு, தொண் டைக்குழி, மோதிரவிரல் மற்றும் சில கால்விரல்கள் போன்ற சில உறுப்புகள் மிகவும் முக்கியமானவையாக இருக்கின்றன.

நம் உடல் ஆரோக்கியம் மற்றும் மனஉறுதி போன்றவை சமநிலையுடன் இருப்பதற்கு இந்த சில உறுப்புகளில் உள்ள சக்தி மையங்களைக் கவனிப்பது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. அந்த இடங்களில் சிறிது உலோகத்தை உபயோகப்படுத்துகி றோம். இப்படிச் செய்யும்போது அங்குள்ள சக்தி மண்டலம் தூண்டப்படுகிறது. இதனால் உடல்நிலை உறுதியாகிறது. மேலும் ஆரோக்கியமும் மேம்படுகிறது. இதனால் குழந்தைகளுக்கு ஒரு வயது பூர்த்தியாவதற்கு முன்பு காது குத்தப்பட்டது. பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட வயது தாண்டுவதற்கு முன்பு மூக்கு குத்தப்பட்டது. பிறகு அதுவே நாளடைவில் அலங்காரத்திற்காக தங்க நகை, வைரக்கற்கள் என்று அதிகரித்து விட்டது. நம் கலாச்சாரத்தில் மட்டும் காது, மூக்கு குத்தப்படவில்லை. முழுமையாக தனித்தனியாக வளர்ந்த கலாச்சாரங்களில் கூட காது, மூக்கு போன்ற இடங்களைக் குத்தினர். அனைத்துக் கலாச் சாரங்களிலும் ஓர் உணர்தலின் பேரில்தான் இப்படிச் செய்தனர். உண்மையில் இது ஒரு ஆழமான விஞ்ஞானம். இதைப் பலவித மாக நாம் பயன் படுத்த முடியும். நாம் அந்த அளவிற்குப் போகத் தேவையில்லை.

குறைந்த பட்சம் காது, மோதிரவிரல் இந்த இரண்டு இடங்களிலாவது உலோகம் பயன்படுத்தினால் உடல் ஆரோக் கியம், மனஉறுதி, உயிர்த்தன்மையில் சமநிலை ஆகியவை ஏற் படும். ஆனால் இப்போது இதையே பகட்டுக்கான காரியமாகச் செய்கிறார்கள். 10 விரல்களிலும் 20 மோதிரங்கள் போட்டுக் கொள்கிறார்கள். அப்படியெல்லாம் போட வேண்டிய தேவை யில்லை.

காதில் சரியான இடத்தில் பார்த்துக் குத்த வேண்டும். நம் பாரம்பரியத்தில் அதற்காகவே ஆட்கள் இருந்தார்கள். இப்போது டாக்டரிடம் போய் குத்திக் கொள்கிறார்கள். ஆனால் அதற் கென்றே அனுபவம் உள்ள நபரிடம் செல்லும் போது அவர்கள் சரியான புள்ளியில் குத்துவார்கள். அப்போது உடல், மன ஆரோக்கியம் உறுதிப்பட வாய்ப்புள்ளது.

## நமது துக்க வீடுகளில் ஏன் பறை அடிக்கப்படுகிறது?

பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு, நம் நாட்டில் (பொதுவாக உலகில்) மருத்துவர்களும், மருத்துவ வசதிகளும் மிகக் குறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். பேச்சு மூச்சில்லாமல் ஒருவர் சும்மா கிடந்தால் அவர் இறந்து விட்டார் என்ற முடிவுக்கு வருவது மிகவும் சிரமமான காரியமாய் இருந்தது. இப்பிரச்சனையை போக்க சிலர் கண்டு பிடித்தது தான் பறை.

பறையோசை என சொல்லப்படும், பறையிலிருந்து வரும் ஓசைக்கு அசைவு கொடுக்காத மனிதர்களே கிடையாதாம். அதி லிருந்து வரும் சத்தத்தைக் கேட்டவுடன் நாடி, நரம்புகள் அனை த்தும் துள்ளிக் குதித்துக் கொண்டு ஒரு வித அதிர்வைக் கொடுக் குமாம்.

யார் ஒருவர் பறை சத்தத்திற்கும் ஆடாமல் அசையாமல் பிணம் போல் இருக்கிறாரோ, அவர் இறந்து விட்டார் என்ற முடிவிற்கு வந்தார்களாம். இரு சிறிய குச்சிகளைக் கொண்டு அடித்து எழுப்பப்படும் ஓசைக்கு இவ்வளவு பெரிய சக்தி இருக் கின்றது என்பது வியக்க வைக்கும் நம் முன்னோர்களின் அறிவி யல் தான்.

## தோப்புக்கரணம் போடுவது ஏன்?

தோப்புக்கரணம் போடுவது என்பது பாடசாலைகளில் மிகச் சாதாரணமாக நடக்கும் விடயமாகும். தவறு செய்தாலோ, வீட் டுப்பாடம் எழுதி வராவிட்டாலோ ஆசிரியர்கள் மாணவர்க ளைத் தோப்புக்கரணம் போட வைப்பது வழமை. பரீட்சை சமயத்தில் பக்தி அதிகரித்து மாணவர்கள் அதிக புள்ளிகள் பெற தாங்களாகவே பிள்ளையார் முன் தோப்புக்கரணம் போடு வதுமுண்டு. ஆனால் இக்காலத்தில் தோப்புக்கரணம் போடுவதை அதிகமாக நாம் காண முடிவதில்லை.

ஆனால் இந்த தோப்புக்கரணம் அமெரிக்காவில் ஆராய்ச் சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆச்சரி யமாக இருக்கிறதல்லவா? லொஸ் ஏஞ்சல்ஸைச் சேர்ந்த மருத் துவர் எரிக் ராபின்ஸ் ( *Dr.Eric Robins*) இந்த எளிய உடற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சியால் மூளையின் செல்களும், நியூரான்களும் சக்தி பெறுகின்றன என்கிறார். அவர் தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு அந்த உடற் பயிற்சியை சிபாரிசு செய்வதாகக் கூறுகிறார். பரீட்சைகளில் மிகக் குறைந்த புள்ளிகள் எடுக்கும் ஒரு பள்ளி மாணவன் தோப்புக்கரண உடற்பயிற்சியைச் சில நாட்கள் தொடர்ந்து செய்தபின் மிக நல்ல புள்ளிகள் வாங்க ஆரம்பித்ததாகக் கூறுகிறார்.



யேல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நரம்பியல் நிபுணரான டாக்டர் யூஜினியஸ் அங் என்பவர் காதுகளைப் பிடித்துக் கொள்வது மிக முக்கிய அக்குபஞ்சர் புள்ளிகளைத் தூண்டி விடுகின்றது என்று சொல்கிறார். அதனால் மூளையின் நரம்பு மண்டல வழிகளிலும் சக்தி வாய்ந்த மாற்றங்கள் ஏற்படுவதாக அவர் தெரிவிக்கின்றார். இடது கையால் வலது காதையும், வலது கையால் இடது காதையும் பிடித்துக் கொண்டு உட்கா ர்ந்து எழுகையில் மூளையின் இரு பகுதிகளும் பலனடைகின்றன என்றும் சொல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோப்புக்கரணம் போடுவதால் ஏற்படும் மாற்றங்களை *EEG* கருவியால் டாக்டர் யூஜினியஸ் அங் அளந்து காண்பித்தார். மூளையில் நியூரான்கள் செயல்பாடுகள் அதிகரிப்பதை பரிசோத னையில் காண்பித்த அவர் மூளையின் வலது, இடது பாகங்கள் சமமான சக்திகளை அடைவதாகவும் சொல்கிறார்.மிக நுண்ணிய தகவல் அனுப்பும் காரணிகள் வலுப்பெறுவதும் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. டாக்டர் யூஜினியஸ் அங் தானும் தினமும் தோப்புக்கரணம் போடுவதாகக் குறிப்பிடுகிறார்.

*Autism, Alzheimer* போன்ற, இக்காலத்தில் அதிகரித்து வரும் நோய்களுக்குக் கூட இந்த தோப்புக்கரண உடற்பயிற் சியை ஆராய்ச்சியாளர்கள் பரிந்துரைக்கிறார்கள். தோப்புக்கரணம் தினமும் செய்வதன் மூலம் மேற்கண்ட நோய்களால் பாதிக்கப் பட்ட குழந்தைகள் மிக நல்ல பலன்களைப் பெறுவதாக அவர்க ளது பரிசோதனைகள் சொல்கின்றன.

ப்ராணிக் சிகிச்சை நிபுணர் கோ சோக் சூயி *(Master Koa Chok Sui)* தன்னுடைய *Super Brain Yoga* என்ற புத்தகத்தில் தோப்புக் கரணத்தைப் பற்றியும் அதன் பலன்கள் பற்றியும் குறிப் பிட்டுள்ளார். தன்னுடைய சொற்பொழிவுகளிலும் இதை அதிகம் குறிப்பிடுகிறார்.

இதனால் தான் தோப்புக்கரணம் பாடசாலைகளில் நம் முன்னோர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கலாம் என்று தோன்றுகிறது. படிக்காத மாணவர்கள் தோப்புக்கரண முறை யால் தண்டிக்கப்படுவதன் மூலம் அவர்களது அறிவுத் திறன் அதிகரிக்க வழியும் காண்பிக்கப்பட்டிருக்கிறது என்று தோன்று கிறது. இந்த தோப்புக்கரணப்பயிற்சியை தினந்தோறும் மூன்று நிமிடங்கள் செய்தால் போதும் வியக்கத்தக்க அறிவு சார்ந்த மாற்றங்களைக் காணலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருது கிறார்கள். அவர்கள் பரிந்துரைக்கும் தோப்புக்கரண பயிற்சியை அவர்கள் சொல்கின்ற முறையிலேயே காண்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கால்களை உங்கள் தோள்களின் அகலத்திற்கு அகட்டி வைத்து நின்று கொள்ளுங்கள். உங்கள் பாதங்கள் நேராக இருக்கட்டும். வலது காதை இடது கையின் பெருவிரலாலும், ஆட்காட்டி விரலாலும் பிடித்துக் கொள்ளுங்கள். அதே போல் இடது காதை வலது கையின் பெருவிரலாலும் ஆட்காட்டி விரலாலும் பிடித்துக் கொள்ளுங்கள். பிடித்துக் கொள்ளும் போது இடது கை உட்புறமாகவும், வலது கை வெளிப்புறமாகவும் இருக்க வேண்டும் என்பது முக்கியம்.

மூச்சை நன்றாக வெளியே விட்டபடி அப்படியே உட்கார்ந்து மூச்சை உள்ளே நன்றாக இழுத்தபடி எழுந்து நில்லுங் கள். மூச்சும், உட்கார்ந்து எழுவதும் ஒரு தாள லயத்துடன் இருக்கட்டும்.

செய்து பழக்கமில்லாதவர்களுக்கு ஆரம்பத்திலேயே மூன்று நிமிடங்கள் தொடர்ந்து தோப்புக்கரணம் செய்வது கடினமாக இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் ஒரு நிமிடம் செய்வதில் இருந்து ஆரம்பித்து நாட்கள் செல்லச் செல்ல இரண்டு நிமிடங்கள், பிறகு மூன்று நிமிடங்கள் என அதிகரியுங்கள்.

## ஆடி மாதம் அம்மன் கோயில்களில் கூழ் ஊற்றுவது ஏன்?

ஆடி மாதம் நல்ல காரியங்களுக்கு உகந்த மாதம் இல்லை என்பார்கள். ஆனால் ஆடி மாதம் நமக்கு மட்டுமின்றி சிவபெருமானுக்கே சக்தியை வழங்கும் அம்பாளுக்கு உரிய அற்புதமான மாதம் என்கிறது இந்துமதம்.

திருமணம், பூப்புனித நீராட்டு விழா போன்றவற்றை ஆடி மாதம் செய்யமாட்டார்கள். ஆனால் இம்மாதத்தில் கோயில் களில் விழாக்களும், விசேடங்களும், வழிபாடுகளும், அதிகளவில் நடக்கின்றன. குறிப்பாக அம்மன் கோயில்களில் தீக்குழி இறங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவது, காவடி எடுப்பது, கூழ் ஊற்றுவது, கஞ்சி ஊற்றுவது என்று ஆடி வெள்ளிகளில் தெருவுக்குத் தெரு திருவிழா தான். ஏன் ஆடியில் மட்டும் அம்மனுக்குச் சிறப்பு? ஏன் இத்தனை திருவிழாக்கள் என்று ஆராயப் போனால் அதில் தமிழ் மண் ணின் கலாசாரப் பெருமையும், மனிதநேயமும், மருத்துவ அறி வும் இருப்பதை உணரலாம்.

பொதுவாக அம்மன் வழிபாடு என்பது கிராமப்புற மக்கள், விவசாயம் செய்யும் மக்களின் வழிபாடாகத் தான் தொடங்கி யது. அந்தக் காலத்தில் அம்மை, கொலரா போன்ற நோய்கள் வந்து கொத்துக் கொத்தாக மனித உயிர்களைப் பலி வாங்கும். அது எப்படி வருகிறது எப்படிப் பரவுகிறது என்று அறியாமலே பலர் உயிர்களை இழந்தனர்.



அம்மை நோயிலிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக மாரியம்மனை கிராமப்புற மக்கள் வழிபடத் தொடங்கினர். அது போல கொலரா நோயிலிருந்து தங்களைக் காப்பாற்ற வேண்டும் என காளியம்மனுக்கு வழிபாடுகளைச் செய்தார்கள். சூடு தணிக் கும் உணவையே பிரசாதமாக விநியோகித்தார்கள். அதில் முக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமானது கூழ். அம்மை நோய் என்பது கடும் வெயில் காலமான சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மாதங்கள் முடிந்து அடுத்த பருவ காலம் தொடங்குகிற ஆடியில் தான் அதிகமாகக் காணப் படும். அதற்குக் காரணம் அதீத வெப்பம் மற்றும் வறட்சியான காற்று. வெப்பம் மற்றும் வறட்சியால் ஏற்படுகிற அந்த நோய், மழை பெய்து மண் குளிர்ந்தால் தான் குறையும். அதனால் மாரி யம்மனை வழிபட்டு, மழையை வேண்டி பூஜைகள் செய்தனர்.

சூரியன் தன் கதிர்வீச்சு திசையை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மாற்றுகிறது. அதன்படி ஆடிமாதத்தில் சூரியகதிர்கள் திசை மாறுகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை உஷ்ணம் நிறை ந்த கோடைகாலம் ஈரப்பதம் நிறைந்த குளிர்காலமாக மாறுகிறது. இத்தருணத்தில் வைரஸ் போன்ற கிருமிகளால் ஏற்படும் நோய் கள் அதிகளவில் பரவும் என்பது அறிவியல் சொல்லும் செய்தி. அதன்படி ஆடி மாதத்தில் சின்ன அம்மை, தட்டம்மை போன்ற நோய்கள் அதிகளவில் பரவும்.அப்படி வரக் கூடிய நோய்களு க்கு எதிர்ப்புச் சக்தியை கொடுப்பதற்கே கேழ் வரகு கூழ் ஊற் றும் வழக்கத்தை நம் முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

இந்தக் கூழ் உடலை குளிர்விக்கும். மேலும் இரும்பு, கல்சி யம் மற்றும் நார்ச்சத்து கொண்டது. அம்மைகளில் இருந்து காக் கும் மாரியம்மனை வணங்கி கூழ் ஊற்றுவதன் மூலம் உஷ்ணத் தில் இருந்து உடலைக் காப்பாற்றிக் கொண்டனர்.

மேலும் கூழ் பானையைச் சுற்றி மஞ்சளும், வேப்பிலையும் வைப்பார்கள். வேப்பிலையும், மஞ்சளும் சிறந்த கிருமிநாசினி கள். நோய் பரவாமல் தடுக்கும் நம் முன்னோரின் பழக்கங்கள் கண் மூடித்தனமானவையல்ல. அர்த்தமுள்ளவை என்பதை இதன் மூலம் அறியலாம்.

ஆடி மாதத்தில் 18ம் நாள் ஆடிப்பெருக்கு கொண்டாடப் படுவதற்கும் ஓர் ஐதிகம் உண்டு. ஆடி மாதத்தில் காவிரி ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவாகமாக காட்சி தரும். காவிரி அம்மன் மசக்கை கொண்டி ருப்பதான ஐதிகப்படி ஆடி பதினெட்டம்நாள் சித்ரான்னங்கள் தயாரித்து நிவேதனம் செய்யப்படும். அன்றைய தினம் காவேரி அன்னைக்கு கருகமணி, காதோலை, மஞ்சள், குங்குமம், விளக்கு ஆகியவற்றை சமர்ப்பித்தால் வாழ்க்கை ஆரோக்கியமாகவும்,செல் வச் செழிப்போடும் அமையும் என்பது நம்பிக்கை.

மேலும் ஆடி மாதம் வீசக்கூடிய காற்றின் வேகம் அதிக மாக இருக்கும். அதனால் எங்கும் தூசியாக இருக்கும். இதனால் இருமல் போன்ற நோய்கள் வரலாம். இதையும் தவிர்க்கவே மாரியம்மன் கோயில்களில் ஆடி மாதம் முழுவதும் கூழ் ஊற்றப் படுகிறது.

அதிலும் விவசாய வேலை இல்லாத மாதமான ஆடி மாதத்தில் உற்சவங்களை நடத்தினார்கள்.சித்திரையில் அறுவடை முடிந்து வைகாசி, ஆனி மாதம் வரை நெல்லோ, தானியங்களோ இருப்பு வைத்திருக்கும் ஏழைத் தொழிலாளர்கள் ஆடியில் அது தீர்ந்து உணவுக்குத் தடுமாறுவார்கள்.பஞ்சமும் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பஞ்சத்தைத் தீர்க்கவும் ஆடிமாத வழிபாடு உதவியிருக் கிறது. அப்போதைய மக்களின் பிரதான உணவு கூழ்தான். அந்தக் கூழ் கிடைக்காமல் பட்டினி சாவுகள் நடக்கும். இதனால் ஆடி மாதத்தில் கோயிலில் வைத்துக் கூழ் ஊற்றினார்கள்.

**கூழ் ஊற்றுவதன் பின்னணி**

ஜமதக்னி முனிவர் தவத்தின் மூலமாக பெரிய வரங்களைப் பெற்றுவிடுவாரோ என அஞ்சிய கார்த்தவீரியார்சுனனின் மகன் மார் அவரைக் கொன்று விடுகின்றனர். முனிவரின் மனைவி ரேணுகாதேவி தன்னுடைய இன்னுயிரையும் மாய்த்துக் கொள்வ தற்கு தீயை வளர்த்து அதில் இறங்கினாள். அப்போது இந்திரன் மழையைப் பொழிந்து தீயை அணைத்தார். தீப்புண்களால் ரேணுகாதேவியின் உடலில் கொப்பளங்கள் ஏற்பட்டன. வெற்று டலை மறைக்க அருகில் இருந்த வேப்பமர இலைகளைப் பறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடையாக அணிந்துகொள்கிறார் ரேணுகாதேவி. பசியால் மயக்கம் வரும் நிலை ஏற்பட்டது. கிராமத்திலிருக்கும் மக்களிடம் உணவு கேட்டார். மக்கள் அவருக்கு பச்சரிசி, கேழ்வரகு, வெல்லம், இளநீர் ஆகியவற்றை உணவாகக் கொடுத்தனர். இந்தப் பொருட்களைக் கொண்டு ரேணுகாதேவி கூழ் காய்ச்சிக் குடித்தார்.

ரேணுகா தேவியின் முன்பாக சிவபெருமான் தோன்றி உலக மக்கள் அம்மை நோயிலிருந்து விடுபட, நீ அணிந்த வேப்பிலையே சிறந்த மருந்தாகும். நீ உண்ட கூழ் சிறந்த உணவாகும். இளநீர் சிறந்த நீராகாரமாகட்டும் என்று வரம் அளித்தார். ஆடி மாதத்தில் அம்மன் கோயில்களில் கூழ் வார்க்கும் திருவிழாவின் இறுதி நாளன்று இன்றைக்கும் கூழ் ஊற்றுவது இந்தப் புராணக் கதையை ஒட்டித்தான் என்று கூறப்படுகிறது.

ஆடி மாதத்தில் மக்களின் பசியையும் உடல் சூட்டையும் தணிக்கும் கூழ் எப்படித் தயாரிக்கப்பட வேண்டும் தெரியுமா?

கேழ்வரகு மாவை முதல் நாள் இரவே மூன்று பங்கு தண்ணீர் ஊற்றிக் கரைத்து வைத்துக்கொள்ள வேண்டும். அடுத்த நாள் மாலை ஓர் அகண்ட பெரிய பாத்திரத்தில் ஆறு குவளை தண்ணீர் ஊற்றிக் கொதிக்கவிட வேண்டும். நன்றாகக் கொதித் ததும் அரிசி நொய்யைக் கழுவிப் போட வேண்டும். அரிசி நொய் வெந்ததும் கரைத்து வைத்துள்ள கேழ்வரகு மாவைச் சேர்த்துக் கட்டியில்லாமல் கிளறவும். மாவு வெந்ததும் இறக்க வும். அதற்கடுத்த நாள் காலை, காய்ச்சிய கூழுடன் உப்பு, தண்ணீர் சேர்த்துக் கரைக்கவும். தண்ணீருக்குப் பதிலாக நீர் மோர் சேர்த்தாலும் நன்று. வெங்காயத்தை அதிகம் சேர்க்கச் சேர்க்க கூழின் சுவை அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாதம் புதுமணத் தம்பதியரை ஏன் பிரித்து வைக்கிறார்கள்?

ஆடி வந்துவிட்டது. அனைத்தையும் தள்ளுபடியில் வாங்கிக் குவிப்போம் என்று பலருக்கும் மனதில் உற்சாகம் நடைபோடும் நேரம். ஆடிப்பட்டம் தேடி விதை என்பதற்கு தக்கபடி விவ சாய வேலைகளைத் துரிதப்படுத்த விவசாயிகள் புறப்படுகிறா ர்கள். ஆடியில் தேடிக்குளி என ஆடி 18 ஆம் பெருக்கை வர வேற்க பெண்கள் தயாராகுவர். ஆடி வந்துவிட்டதும் அம்மனு க்கு கூழ் ஊற்றி ஆனந்தமடைவர் ஆன்மிக அன்பர்கள்.

இப்படி எல்லோரும் ஆடியின் வருகையை ஆரவாரமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும்போது, ஐயோ ஆடி வந்துவிட் டதே என மனம் ஏங்குகின்றனர் புதுமணத் தம்பதிகள். ஆடி மாதத்தில் இத்தனைச் சிறப்புகள் இருக்கும்போது, புதிதாகத் திருமணம் ஆன பெண் ஏன் முதல் ஆடி மாதத்தில் தன் கணவரைப் பிரிந்திருக்கவேண்டும்? பெற்றோர்கள் ஆடி மாதத் தில் புதுமணத் தம்பதியரை ஏன் பிரிக்கிறார்கள்? ஆடி மாதத்தில் புதுமணத் தம்பதியர்கள் ஏன் ஒன்றுசேரக் கூடாது? இந்தக் கேள்விகளுக்கான அறிவியல் காரணங்கள் இதோ.

இந்தியாவில் பருவமழை காலமான ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் என்பது ஓய்வெடுத்து புத்துணர்வு பெறும் மாதங்களாக கருதப்படுகின்றன. இந்த மாதங்களின் போது உட லுறவு கொள்ள அனுமதிப்பதில்லை. மரபுகளை ஆழமாக பின் பற்றாதவர்களுக்கு இது மூடநம்பிக்கையாக, முட்டாள் தனமாக இருக்கலாம். ஆனால் இதன் பின்னணியில் உள்ள சரியான கார ணங்களை இன்றைய அறிவியல் அறிஞர்கள் கண்டு பிடித்து ள்ளனர்.

இந்த அமங்கலமான மாதத்தில் உடலுறவு கொள்வது உகந்ததல்ல. அதனால் தம்பதிகள், குறிப்பாக புதிதாக திருமண மான தம்பதிகள் இந்த மாதத்தின் தொடக்கத்தில் பிரித்து வைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுவார்கள். ஆடியின் முதல் நாளை ஆடிப்பிறப்பு என கூறு வார்கள். அதற்கு முந்தைய நாள் புதிதாக திருமணமான பெண் ணின் பெற்றோர், தங்கள் பெண்ணையும், மாப்பிள்ளையையும் விருந்திற்கு அழைத்து, புதிய ஆடைகள் மற்றும் தங்க ஆபரணங் களை பரிசளிப்பார்கள். அந்த மாதத்தை அப்பெண் தன் பெற் றோரின் வீட்டில், தன் கணவனை பிரிந்து கழிக்க வேண்டும்.

ஓர் வருடத்தில் பருவமழை மாதங்கள் தான் மிகவும் வலு விழந்த மாதங்களாகும்.கொட்டும் மழையால் ஏற்படும் வானிலை மாற்றத்தினால் சுலபமாக பல வியாதிகள் நம்மை வந்தடையும். இந்நாட்களில் பருவமழை பலமாக இருக்கையில், தண்ணீர் மற்றும் காற்றின் வழியாக வியாதிகள் பரவும். அதனால் இந்த மாதத்தின் போது உடலுறவு கொள்வது பல பிரச்சினைக ளையும், சிக்கல்களையும் உண்டாக்கும். அதனால் தான் இந்த மாதத்தில் திருமணங்கள், குடும்ப விழாக்கள் மற்றும் பிற சமுதாய சடங்குகள் நடைபெறுவதில்லை.

மேலும் இந்த மாதத்தில் ஊட்டச்சத்து நிறைந்த பானங்கள், மற்றும் சூப் ரசங்களை குடித்து, உடல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் தம்பதிகள் வலுவை பெற முயற்சிக்க வேண்டுமாம். ஆடி மாதம் பருவ மழைக்காலம் என தமிழர்களாலும், கர் கிடகா என மலையாளிகளாலும் அழைக்கப்படும். இந்த மாதத் தில் இரண்டு மாநிலங்களிலும் பல்வேறு இந்து மத திருவிழாக் களும், சடங்குகளின் கொண்டாட்டங்களும் குறிப்பிட்ட முக்கிய த்துவத்தைப் பெறுகின்றன.தற்போதைய தலைமுறைகளுக்கு மரபு ரீதியாக வந்தடைந்துள்ள பழைய சடங்குகள் மரபுகளின் மீது மக்களுக்கு ஒரு இணைப்பை உண்டாக்கும். இந்த மரபுக ளின்படி, இது அமங்கலமான மாதமாகும். அதனால் தெய்வங்க ளுக்கு வழிபாடு நடத்தி, சடங்குகளை மேற்கொள்வது ஒரு கட்டாயமாகிறது.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் சூரியன் தன் பயணத்தை வட துருவத்தில் இருந்து தென் துருவத்தை நோக்கி ஆரம்பிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். ஆடியின் தொடக்கம் தக்ஷிணாயனத்தின் (தெற்கை நோக்கி பயணிக்கும் சூரியன்) தொடக்கத்தைக் குறிக்கும். அப்படியானால் வானுலக பொருட்களுக்கு அது சூரிய அஸ்தமனமாகும். எனவே இம்மாதத்தில் புனித நூல்களை படித்தும், தியானத்தில் ஈடுபட்டும் பொழுதை கழிப்பார்கள். மருந்தாக கருதப்படும் உணவுகள் மற்றும் பானங்கள், உடலையும் மனதையும் வலுவடையச் செய்யும். மேலும் சூரிய பகவானுக்கு விசேஷ வழிபாடுகளும் நடைபெறும்.

தம்பதிகளை பிரிப்பதற்கு பின்னணியில் பல்வேறு விஞ்ஞான பூர்வ காரணங்கள் உள்ளன என இந்து மரபுகளின் அறிஞர் ஒருவர் கூறுகிறார். இந்த மாதத்தில் மணப்பெண் கர்ப்பமானால், மே மாதத்தின் முற்பாதியில் (சித்திரை) குழந்தை பிறக்கும். இது தான் வருடத்தின் மிக வெப்பமான மாதமாகும். இது தாய் மற்றும் சேய் என இருவருக்கும் தீங்கை விளைவிக்கலாம். மேலும் இந்த மாதத்தில் நிலவக்கூடிய பெரிய அம்மை, தட்ட ம்மை போன்ற பரவக்கூடிய நோய்களாலும் ஆபத்து ஏற்பட லாம். பிறந்த குழந்தைக்கு மிக எளிதாக நோய்கள் தோற்றக் கூடும். மேலும் தாய்க்கும் உஷ்ணம் சம்பந்தமான நோய்கள் வரும். போதாக்குறைக்கு அக்னி நட்சத்திரமாகவும் இருக்கும். அதனால்தான் புதுமணத் தம்பதியைப் பிரித்து வைத்தனர்.

ஆனால், பஞ்சாங்கங்களில் ஆடியில் முகூர்த்தம் உள்ளதே, சில வகுப்பினர் ஆடியில் திருமணம் செய்கின்றார்களே என்றெல்லாம் பலர் கேள்விகளைக் கேட்கின்றனர். இதில் மனக் கட்டுப்பாட்டுக் கொள்கையைப் பின்பற்றும் சமூகத்தினர் அல்லது மனக் கட்டுப்பாடு உள்ளவர்கள், ஆடியில் திருமணம் செய்யலாம். சாந்தி முகூர்த்தத்தை ஆவணியில் சுபநாட்களாகப் பார்த்துத்தான் அமைப்பார்கள் என்று ஆடியைப் பற்றி பலவிதமான தகவல்களை ஜோதிடர்கள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதிட சாஸ்திரப்படி, பூமியின் வடகிழக்குப் பகுதி கன்னி வீடாக அமைகின்றது. பூமிக்கும், ஆகாயத்துக்கும் உள்ள தொடர் பில் கன்னியிலிருந்து தான் பிரபஞ்ச அலைகள் மீனத்தை நோக்கி வருகின்றன. ஆனால், காந்தப் புயலோ கும்பம், மகரத்திலிருந்து கடகம், சிம்மம் நோக்கி பாய்கின்றது. இந்த வகையில், வடக்கில் இருந்து தெற்கு நோக்கிச் செல்லும் காந்தப்புயல் கடக வீட்டில் அதாவது ஆடி மாதத்துக்கு அதிக ஆற்றலுடன் வருகின்றது. இதனையே கடகம் ஆடி முதல் மேல் வரிசையாக ஆனி, வைகாசி, சித்திரை, பங்குனி, மாசி ஆகிய மாதங்கள் சக்தியான பராசக்தி யாகவும், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம் சிவன் எனும் பரமேஸ்வரராகவும் கொள்ளப்படுகிறது.

மேலும் இந்த மாதம் சாகுபடி செய்ய வேண்டிய மிக முக்கிய வேளாண்மை நடவடிக்கைக்கான காலமாகும். அதனால் உடலுறவு நடவடிக்கைகளின் மீது கவனத்தை சிதற விடாமல், மணமகன் தன் முழுமையான கவனத்தையும் வேளாண்மை செயல்களில் ஈடுபடுத்த வேண்டியிருக்கும். மேலும் பருவ மழையால் ஆறுகளிலும், ஓடைகளிலும் தண்ணீர் நிரம்பி வழியும். அதனால் பிற நடவடிக்கைகளில் ஆண்கள் தங்கள் நேரத்தை வீணாக்காமல், தினமும் அதிகாலையில் எழுந்து தங்கள் கடமைகளை கவனிக்க தொடங்க வேண்டும்.

மனிதர்களின் சமுதாய வாழ்வில் ஒவ்வொரு திருவிழாக் களும் முக்கிய பங்கை வகிக்கின்றன. இவ்வகையான சமூக தாக்கங்களுக்கு இந்து மதம் அதிக முக்கியத்துவத்தை அளிக்கிறது. மேலும் இவ்வகையான சடங்குகளும், கொண்டாட்டங்களும் விளை பொருட்களை விற்பனை செய்வதற்கான நிகழ்வுகளை உருவாக்கும். அறுவடை செய்யப்பட்ட கரும்பு மற்றும் பிற பயிர்கள் கடவுளுக்கு படைக்கப்படும். சந்தைகளிலும், கண் காட்சிகளிலும் அவை விற்கப்படும்.

சமூக வாழ்க்கையின் ஒரு அங்கமே உடலுறவு. அது நம் இயல்பு வாழ்க்கையை எந்த விதத்திலும் பாதிக்கக் கூடாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக சிறந்த ஆரோக்கிய வாழ்விற்கு அது உதவிட வேண்டும். அதனால் இந்த மாதத்தில் உடலுறவுக்கு மரபு ரீதியாக விதிக்கப் பட்டுள்ள தடையை நியாயப்படுத்தலாம். ஆனால் பிறப்பு கட் டுப்பாடு அல்லது குடும்ப கட்டுப்பாடு தேவைப்படாமல் இருந்த ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த மரபு ரீதியான பழக்க த்தை நம் முன்னோர்கள் பின்பற்ற தொடங்கிவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. *(By: Ashok CR Published: Friday, July 31, 2015, 11:32 [IST] Subscribe to Boldsky)*

## கிரகண பயம் எதற்காக?

பல இந்துக்களின் வீட்டில், கிரகணத்தின் போது வீட்டை விட்டு வெளியே செல்ல அனுமதிப்பதில்லை. அந்த நேரத்தில் கிரகத்தை நேரடியாக பார்க்கவும் அவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். குறிப்பாக இந்நேரத்தில் கர்ப்பிணி பெண்கள் வீட்டிற்குள் தான் இருக்க வேண்டும்; அப்போது தான் அவர்கள் வயிற்றில் உள்ள குழந்தை எந்தவித குறைபாடும் இல்லாமல் பிறக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல் கிரகணத்தின் போது உணவருந்தவோ, சமை க்கவோ கூடாது எனவும் கூறப்படுகிறது. சில வீடுகளில் ஒவ் வொரு உணவு பண்டத்தின் மீதும் துளசி இலை போடுவார் கள். இதனால் அந்த உணவுகள் கெட்டுப் போகாமல் இருக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை.

கிரகண பயத்திலுள்ள ஒரே பிரச்சினை என்னவென்றால், கிரகணத்தை நேரடியாக உங்கள் கண்களால் பார்த்தால், சூரிய ஒளியின் தீவிரத்தால் உங்கள் விழித்திரை வெகுவாக பாதிக்கப் படும். ஒளி உணர் அணுக்களுக்கும், கம்பிகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதால், சில நேரங்களில் விழித்திரை எரிச்சல் கூட உண் டாகலாம். மேலும் கிரகணத்தின் போது நுண்ணுயிரிகள் முனை ப்புடன் செயல்பட்டு உணவுகளை கெடச் செய்யும். அதனால் உணவுகளில் துளசி இலையை போடும் போது, அதிலுள்ள மருத்துவ குணங்களால் உணவுகள் கெட்டுப் போகாமல் இருக்கும்.

## வடக்கை நோக்கி தலை வைத்து படுக்காதீர்கள் என நம் முன்னோர்கள் சொல்வதன் காரணம் என்ன?


வடக்கில் தலை வைத்து படுக்கக் கூடாது என்று இந்து மத நூல்கள் கூறுகின்றன. சதாசாரம் என்னும் நூல் நாம் அன்றாடம் பின்பற்றவேண்டிய பழக்க வழக்கங்களைப் பற்றிக் கூறுகிறது. மற்ற திசைகளில் தலை வைத்துப் படுக்கலாம். இந்த சாத்திர விதிக்கு ஏதேனும் விஞ்ஞான விளக்கம் உண்டா என்று கேட் டால் "உண்டு" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லலாம்.

கொம்பஸ் என்னும் திசை காட்டும் கருவியை நாம் அறிவோம். அதன் ஊசி எப்போதும் வடக்கு திசையையே காட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக் கொண்டிருக்கும். புல் மேயப் போகும் மாடுகளும், காட்டில் திரியும் மான்களும் ஒரே திசையை நோக்கி நின்று கொண்டு புல் மேய்வதைக் கண்ட விஞ்ஞானிகள் ஆச்சரியப் பட்டார்கள். அவை ஏன் இப்படி நின்று புல் மேய்கின்றன என்பது நீண்ட காலமாகப் புரியாத புதிராகவே இருந்தது. இப்போழுது கூகுள் விண்கல புகைப்படங்களை வைத்து ஆராய்ந் ததில் புதிய தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.



இந்த மாட்டு மந்தையோ மான்கள் கூட்டமோ உயர் அழுத்த மின்சாரம் *(High Voltage Pwer lines)* செல்லும் கம்பிகளுக்குக் கீழாக வந்தால் இப்படி ஒரே திசையில் நிற்காமல் வெவ்வேறு திசையை நோக்கி நிற்பதும் கூகுள் படங்கள் மூலம் தெரியவந்தது. பெரும்பாலும் அவை வடக்கு தெற்கு அச்சுக்கு அனுசரணையாகவே நிற்கும். ஆனால் மின்சார கம்பிகளுக்கு 30 மீட்டருக்குக் கீழாக வந்தால் இது மாறிவிடுகிறது. இதற்கு என்ன காரணம்?

மாடுகள், மான்கள் மற்றும் வௌவால் போன்ற பல பிராணிகளின் உடலிலும், பறவைகளின் மூக்கிலும் காந்தம் *(magnetite)* இருப்பது தெரிகிறது. இந்த காந்த துருவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சாரக் கம்பிகள் வெளிவிடும் அலைகள் மூலமாக "*extremely low-frequency magnetic fields*" (*ELFMFs*) திசை மாறும் என்பது தெரிந்ததே.

பூமி என்பது மிகப் பெரிய காந்தம். இப்போது நாம் மனித ர்களை நினைத்துப் பார்ப்போம். நம் உடம்பிலும் காந்தம் இருக்கிறது. நாம் தூங்கும் போது நம்முடைய தலையை வடக்கே வைத்தால் அது நம்மை பாதிக்கும். எப்படி என்றால் தலையை காந்தத்தின் வடதுருவம் என்று வைத்துக் கொண்டால் கால்கள் தென் துருவம் ஆகும்.

இயற்பியல் படித்தவர்களுக்குத் தெரியும் "ஒரே துருவங்கள் ஒன்றை ஒன்று தள்ளிவிடும், மாற்று துருவங்கள் ஒன்றை ஒன்று ஈர்க்கும் அல்லது கவரும்". (*Like poles repel each other, unlike poles attract*) ஆக நம் உடல் என்னும் காந்தம் வடக் கைத் தவிர எந்தப் பக்கத்தில் தலை வைத்தாலும் பாதிக்காது.

**கண்டங்கள் உருவானது எப்படி?**


இந்த பூமியானது கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தனித்தனி கண்டமாக இல்லாமல் ஒரே நிலப் பகுதியாக இருந் தது. (*Pangaea*) பிறகு சிறிதுசிறிதாக (*Continental Drift*) விலகி இப்போதைய நிலக்கு வந்துள்ளது. இன்னும் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னால் பார்த்தால் ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்கள் இப்போதைய நிலையில் இருக்காது.

ஆனால் உலகப் படத்தைப் பார்த்தீர்களானால் ஒரு வியப் பான விஷயத்தைக் கவனிக்கலாம். ஒரே நிலப்பரப்பு விலகி விலகி சென்றபோது ஏன் வடக்கே மட்டும் அதிக நிலப்பரப்பு (*land mass*) போயின? தெற்கே ஏன் அதிகம் கடற்பரப்பு (*oceans*) வந்தன? ஏன் எல்லா கண்டங்களும் கீழே குறுகியும் மேலே பருத்தும் இருக்கின்றன. ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, இந்தியா ஆகிய நிலப்பரப்பைப் பாருங்கள். வடக்கில் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப் பரப்பும் தெற்கில் சுருங்கி தீபகற்பமாகவும் (*peninsular*) இருக்கும். ஏன் இப்படி வந்தது என்றால் இதுவரை யாரும் விடை சொல்ல முடியவில்லை.




பூமியில் வடக்கில் காந்த சக்தி அதிகம் இருந்ததால் கண்டங்களை இப்படி மேல் நோக்கி இழுத்தனவா? அல்லது தன்னிச்சையாக வடக்கில் நிலப்பரப்பு கூடியதால் அங்கே காந்த சக்தி அதிகரித்ததா? இதற்கு விடை கிடைத்தாலும் விடை கிடைக்கா விட்டாலும் வடக்கில் நிலப்பரப்பு குவிந்திருப்பதை யாரும் காணலாம். ஆக பூமி என்னும் காந்த உருண்டைக்கு மதிப்பு கொடுத்து அதனுடன் மோதாமல் இருக்க வேண்டுமானால், வடக்கைத் தவிர வேறு திசையில் தலை வைத்தும் உறங்கலாம். கிழக்கு திசையிலோ, தெற்கு திசையிலோ தலைவைத்துப் படுப்பது உத்தமம்.

வடக்குத் திசையில் தலை வைத்துப் படுக்கும் போது அது வடதுருவம் என்ற காரணத்தினால் உங்கள் தலை ஒரு காந்தமாக செயல்படும். தூங்கும் போது வடக்கு திசையை நோக்கி தலை இருந்தால் உடலின் வட துருவமும், பூமியின் வட துருவமும் ஒன்றோடு ஒன்று தள்ளும். இதனால் நமது உடலில் இரத்த ஓட்டம் பாதிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புனித திசை வடக்கு**

இந்துக்களுக்கு வட திசை மீது மதிப்பும் மரியாதையும் அதிகம். கையிலாயமும், மேருவும் இருக்கும் புனித திசை அது. உண்ணாவிரதம் இருந்து உயிர் துறக்க விரும்புவோர் வட திசை நோக்கி அமர்ந்து உயிர்விடுவர். சங்க இலக்கிய நூல்கள் பிசிராந் தையாரும் கோப்பெருஞ் சோழனும் உண்ணாநோன்பு இருந்ததை வடக்கிருத்தல் என்றே அழைப்பர். மஹாபாரதத்தில் பஞ்ச பாண்டவர்கள் ஐவரும் வட திசைப் பயணம் நோக்கிப் பயணம் செய்து ஒவ்வொருவராக உயிர் விட்டதையும் படித்திருப்பீர்கள். இதை மஹா பிரஸ்தானம் என்று அழைப்பர்.

நூறாண்டுக் காலம் வாழ்க! நோய் நொடி இல்லாமல் வளர்க என்று வேதம் கூறுகிறது (பஸ்யேம சரதஸ் சதம், ஜீவேம சரதஸ் சதம், நந்தாம சரதஸ் சதம், ப்ரப்ரவாம சரதஸ் சதம்) தீர்க்காயுஷ்மான் பவ: (by: London Swaminathan)

## நம் முன்னோர்கள் துளசி இலையை காதுக்குப் பின் வைப்பது ஏன்?

காதுக்குப் பின் துளசிக்கதிர் அல்லது இலை சூடுவதற்கு இக்காலத்தில் யாரும் தயாராக மாட்டார்கள். அப்படிச் சூடுப வர்களை "காதில் பூ வைத்தவன்" என்று ஏளனமாகக் கூறுவது உண்டு.

ஆனால் காதுக்குப் பின் துளசி வைப்பதனால் பண்டைய மக்கள் பெரும் பயனடைந்தனர். மனித உடலில் கூடுதல் உறிஞ் சும் சக்தியை உடையது காதின் பின்புறம் என விஞ்ஞானம் நிரூபித்திருக்கின்றது. துளசியின் மருத்துவ குணங்களை நாம் நன்கறிவோம். இந்த மருத்துவ குணங்கள் காதுக்குப் பின் உள்ள சருமம் வழியாக ஊடுருவிச் செல்லும். இதனாலேயே பண்டைய மக்கள் துளசி இலையை காதுக்குப் பின் சூடி வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் முன்னோர் வெற்றிலை சாப்பிடுவது எதற்காக?

பழந்தமிழர் மரபாகட்டும், இந்திய பண்பாடாக இருக்க ட்டும் அவை எல்லாமே காரணகாரியத்தோடு உருவாக்கப் பட்டது தான். முடி வெட்டுவதில் இருந்து மன்னர்கள் முடி சூடுவது வரை கடைப்பிடிக்கப்படும் சடங்குகளில் பல்வேறு வாழ்க்கைத் தத்துவங்கள் அடங்கியுள்ளன. வாழ்க்கையை நெறிப் படுத்தும் தத்துவ முறைகள் மட்டுமல்லாது உடலை வளப் படுத்தும் நல்ல காரியங்கள் கூட அதில் அடங்கி இருக்கும்.

தாம்பூலம் தரிப்பதில் (வெற்றிலை போடுதல்) கூட இப்படி ஒரு நல்ல விஷயம் அடங்கி இருக்கிறது. இது வெற்றிலை போடும் நிறைய பேருக்கு தெரியுமா என்பது நமக்கு தெரியாது. பொதுவாக வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றை சரி யான விகிதத்தில் கலந்து சுவைக்கும் போது அந்த சுவை உட லையும், மூளையையும் சுறுசுறுப்படையச் செய்கிறது. அதே நேரம் இதயத்தையும் வலுப்படுத்துகிறது.

மனித உடலுக்கு நோய் ஏன் வருகிறது என்பதற்கான கார ணத்தை ஆயுர்வேதம் சொல்லும் போது உடம்பில் உள்ள வாதம், பித்தம், கபம் போன்றவைகள் சரியான விகிதத்தில் இல்லாமல் கூடும் போதோ குறையும் போதோ நோய் வரு கிறது என்று சொல்கிறார்கள். இது முற்றிலும் சரியான காரண மாகும். இந்த மூன்று சத்துக்களும் சரியான கோணத்தில் உடம் பில் அமைந்துவிட்டால் நோய் வராது என்பதை விட நோயை எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடம்பிற்கு வருகிறது. இந்த மூன்று நிலைகளையும் சரியானபடி வைக்க தாம்பூலம் உதவி செய்கிறது.

பாக்கில் இருந்து கிடைக்கும் துவர்ப்பு பித்தத்தை கண்டிக்க கூடியது. சுண்ணாம்பில் உள்ள காரம் வாதத்தை போக்க வல்லது. வெற்றிலையில் உள்ள உரைப்பு கபத்தை நீக்கி விடும். இப்படி பார்த்தால் தாம்பூலம் போடுதல் என்ற ஒரே பழக்கத்தில் உடம்பில் உள்ள மூன்று தோஷங்களையும் முறைபடுத்தும் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்து விடுகிறது. இதுமட்டுமல்லாது தாம்பூலத்தோடு சேர்க்கும் ஏலம், கிராம்பு, ஜாதிபத்திரி போன்றவைகள் வாயில் உள்ள கிருமிகளை மட்டுப் படுத்துகிறது. ஜீரண சக்தியை அதிகரிக்கவும் செய்கிறது.

ஆக மொத்தம் தாம்பூலம் தரிப்பதில் இத்தனை நல்ல விஷயங்கள் அடங்கி உள்ளன. அதனால் தான் நமது விருந்துகளில் வெற்றிலைக்கு முக்கிய பங்கு கொடுக்கப்படுகிறது. தாம்பூலம் போடுவது எந்த இடத்தில் கெட்ட பழக்கமாக மாறுகிறது என்றால் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்போடு புகையிலையும் சேரும் போது தீய பழக்கமாக மாறி விடுகிறது. நமது முன்னோர்களின் தாம்பூலத்தில் புகையிலை கிடையாது. புகையிலை என்பது இடையில் சேர்க்க பட்ட தீய பழக்கமாகும்.

இப்போது வயதானவர்களுக்கு இருக்ககூடிய அபாயங்களில் மிக முக்கியமானது எலும்பு முறிவு ஆகும். சிறிதளவு முறிவு ஏற்பட்டு விட்டாலும் முதுமையின் காரணமாக பெரிய பிரச்சினைகளை ஏற்படுத்தி விடுகிறது. பல நேரங்களில் சாதாரண எலும்பு முறிவே மரணத்தை பரிசாகத் தந்து விடுகிறது. ஆனால் பத்து, இருபது வருடங்களுக்கு முன்பு முதியவர்களுக்கு எலும்பு முறிவு என்பது அவ்வளவு சீக்கிரம் ஏற்படாது இதற்கு காரணம் அவர்களிடமிருந்த தாம்பூலம் தரிக்கும் பழக்கமே. ஒரு குறிப்பிட்ட அளவு சுண்ணாம்பு சத்து உடம்பிற்கு நேராக கிடைக்கும் போது எலும்புகள் வலுப்பட்டு விடுகிறது.

தாம்பூலம் போடுவதற்கென்று தனிப்பட்ட நெறிமுறையே நமது முன்னோர்களால் வகுக்கப்பட்டிருக்கிறது. காலையில் சிற்றூண்டிக்கு பிறகு போடும் தாம்பூலத்தில் பாக்கு அதிகமாக இருக்க வேண்டும். காரணாம் மதிய நேரம் வந்து வெப்பம் அதிகமாகும் போது உடம்பில் பித்தம் ஏறாமல் அது பாதுகாக்கும். அதே போல மதிய உணவிற்கு பிறகு சுண்ணாம்பு சத்து அதிகம் எடுத்துகொள்ள வேண்டும் அது உணவில் உள்ள வாதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது வாயுவை கட்டுபடுத்தும். இரவில் வெற்றிலையை அதிகமாக எடுத்துகொண்டால் நெஞ்சில் கபம் தங்காது. இந்த முறையில் தான் தாம்பூலம் தரிக்க வேண்டும் என்பது நமது முன்னோர்களின் கட்டளை இதை மீறும் போது தான் சிக்கல் வருகிறது.

வெற்றிலை, இந்து மதப் பண்டிகைகள், விசேஷம், விரதம், திருமணம் என அனைத்திலும் முக்கிய இடம் வகிக்கிறது இறைவனுக்கு வெற்றிலை, பாக்கு வைத்து வணங்குவது நமது மரபு. தாம்பூலம் எனப்படும் வெற்றிலைக்கு ஜீரணத்தன்மையை அதிகரிக்கச் செய்யும் ஆற்றல் உண்டு. வெற்றிலையோடு சேர்ந்த சுண்ணாம்பு உடம்புக்கு தேவையான கல்சியச் சத்தையும் தருகிறது. சுபநிகழ்ச்சிகளில், விருந்துக்குப் பிறகு ஜீரணத்துக்காக வெற்றிலை பாக்கு கொடுத்து வழியனுப்பும் வழக்கம் ஏற்பட்டது. திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு அழைக்கும்போது அழைப்பிதழோடு வெற்றிலை, பணம் வைத்து அழைப்பார்கள்.

## புரட்டாசி மாதம் அசைவம் சாப்பிடக்கூடாது என்று சொல்வார்கள். ஏன் தெரியுமா?

புரட்டாசி மாதம் வெயிலும், காற்றும் குறைந்து மழை ஆரம்பிக்கும் மாதம். ஆனால் பூமி குளிர மழை பெய்யாது. இத்தனை மாதமாக வெயிலால் சூடாகியிருந்த பூமி மழை நீரை ஈர்த்து வெப்பத்தை குறைக்க ஆரம்பிக்கும். சூட்டைக் கிளப்பி விடும் காலம் என்பார்கள். இது வெயில் கால வெப்பத்தை காட்டிலும் கெடுதல் தரக்கூடியது. இந்த நேரத்தில் அசைவம் சாப்பிடுவது உடல் சூட்டை அதிகப்படுத்தி உடல் நலத்தைக் குறைக்கும். வயிறு சம்பந்தமான பிரச்சனையை ஏற்படுத்தும். அதனால் தான் புரட்டாசி மாதம் அசைவத்தை நம் முன்னோர் ஒதுக்கினார்கள். அது மட்டுமன்றி சரிவர பெய்யாத மழை திடீர் வெப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுதல் நோய்க்கிருமிகளை உருவாக்கிவிடும். காய்ச்சல் சளி தொந்தரவு அதிகரிக்கும். இதனால் தான் முக்கிய விரதங்கள் புரட்டாசியில் இருந்து தொடங்குகின்றன.

## நெய் ஊற்றி தீபம் ஏற்றுவது ஏன்?

இந்து சமுதாயம் உலகின் தலைசிறந்த விஞ்ஞான சமுதாயம் என்பதால் தான் நம் உடல், மனம், புத்தி மற்றும் ஆத்ம பயிற்சி களை கடவுள் நம்பிக்கையின் பெயரால் அனுதினமும் தொடர் கின்றோம்.

நம்மை சுற்றி நாம் இருக்கும் இடம் முழுதும் பிராணவாயு (ஒக்ஸிஜன்) நிரம்பி இருந்தால் உடல் ஆரோக்கியத்திற்கும், நம் சிந்தனை திறனுக்கும் நல்லது என்பதை உணர்ந்துதான் நம் முன்னோர்கள் நெய்யால் வேள்வி செய்தனர். ஒவ்வொரு தோலா நெய்யும் (11.66 கிராம்) 1 டன் பிராணவாயுவை உருவாக்கு கிறது. ஒரு ருபாய் மதிப்புள்ள பசுநெய்யின் மகத்துவம் என்ன என்பதைப் பாருங்கள்.



நிறைய பிராணவாயு இருக்கும் இடத்தில் கொசு குறைவாக இருக்கும். வீட்டில் தினமும் 10 கிராம் நெய் ஊற்றி தீபம் ஏற்றுங்கள். நம் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளை சிறப்பாக வேலை செய்ய ஆக்சிஜன் தேவை. கரியமிலவாயு (காபனீர்ஒக்சிட்) நம் உடலில் இருந்து வெளி யேறுவதை மோப்பம் பிடித்துத்தான் கொசுக்கள் நம்மை நோக்கி வருகின்றன என்பதெல்லாம் இப்போதைய விஞ்ஞான கண்டு பிடிப்புகள். இதை சொல்லாமலேயே அன்று நம் முன்னோர்கள் நமக்கு தீர்வைக் கொடுத்துள்ளனர்

**நொச்சித்தினை**

தமிழில் நொச்சித்தினை என்று ஒன்று உண்டு. அதாவது கோட்டை மதிலை காவல் காக்கும் வீரர்கள் நொச்சிப்பூவை அணிந்துதான் போர் புரிவர்.அதற்காக கோட்டைக்குள் நொச்சிப் பூ மரம் வளர்க்கத்தான் வேண்டும். நொச்சி இருக்கும் இடத்தில் கொசுக்கள் வராது. ஆக மூளை வேலை செய்யும் ஒக்சிஜனை உருவாக்கும் நெய் விளக்கும், கொசுவை விரட்டும் நொச்சி மரமும் குடும்பத்தின் இன்றியமையாத தேவைகளாகும்.

## பெரியோர்களின் காலில் விழுந்து ஏன் வணங்க வேண்டும்?

கோயிலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்க வேண்டும். ஒரு யோகியை பார்த்தால் காலில் விழ வேண்டும், பெற்றோர் மற்றும் பெரியவர்களிடமும் காலில் விழுந்து வணங்கி ஆசீர் வாதம் பெற வேண்டும் என நம் முன்னோர்கள் நமக்கு கூறி வைத்துள்ளனர். இவ்வாறு காலில் விழுந்து வணங்குவதன் கார ணம் என்ன? இவற்றில் ஏதேனும் விஞ்ஞான பூர்வமான அடிப் படை உள்ளதா?

காலைத் தொட்டு வணங்குவது, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வது போன்றவற்றில் கலாச்சார அடிப்படையும் உண்டு, விஞ்ஞான அடிப்படையும் உண்டு. கலாச்சாரம் என்று பார்த் தால், மனிதர்கள் தம் மனதில் உள்ள மரியாதை உணர்வினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தும் விதம் என்று சொல்லலாம். நாம் ஏன் நமது தாய், தந்தையரின் காலில் விழ வேண்டும்? நாம் இவ்வுலகில் பிறப்பதற்கே அவர்கள் தான் காரணம். நாம் கடவுளை இன்னும் உணராமல் இருக்கலாம். ஆனால் கடவுள் இருக்கிறார் என்று சொன்னது கூட பெற்றோர் தானே? எனவே நாம் வாழ்வதற்கு மூலகாரணமான அவர்களை நாம் வணங்கு கிறோம்.



யோகா முறைப்படி சொல்லப் போனால்,சாஷ்டாங்க நமஸ் காரம் என்பது சூரிய நமஸ்காரத்தில் மிக முக்கியமான ஒரு நிலை. விஞ்ஞானப்படி சொல்வதென்றால், உங்கள் உடலை வெறும் தசை, எலும்பு, நரம்பு என்று வெறும் உறுப்புகளாகப் பார்க்கலாம். அல்லது உடல் என்பதை சக்தி அடிப்படையிலும் பார்க்கலாம். இந்த சக்தி தான் உங்கள் எல்லா உறுப்புகளையும் உருவாக்க அடிப்படையாக இருக்கும். இதை குறிப்பிட்ட வகையில் ஒருங்கிணைத்தால், ஒருவரின் உடலிலிருந்து சக்தி வெளிப்படும் விதமாகச் செய்ய முடியும். நம் பாதங்கள் மிக அதிகமான சக்தி வாய்ந்தது என்று விஞ்ஞான பூர்வமாக நிரூ பித்து இருக்கிறார்கள். அதை உபயோகப்படுத்துவதற்காக உருவா க்கப்பட்டது தான் காலில் விழும் பழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு யோகியையோ, குருவையோ பார்த்தால் வெறுமனே போய் காலில் விழுந்தால் போதாது. எப்படி விழவேண்டும், எப் படி அவர் பாதங்களைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்கு குறிப்பிட்ட வழிமுறைகள் உண்டு. அதை அறிந்து அவர்களின் பாதம் பற்றினால், மிகுந்த சக்தியை அவரிடமிருந்து நீங்கள் எடுத்துக்கொள்ள முடியும். அதனால் தான் அந்த யோகியோ, குருவோ விரும்பினால் மட்டுமே அவர் பாதங்களை நீங்கள் தொட அனுமதிப்பார்கள். எல்லா சமயங்களிலும் தொடுவதற்கு அனுமதி இல்லை.

ஏன் கோயிலில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்? அங்கு கடவுள் சக்திரூபமாக இருக்கிறார். அங்கிருக்கும் சக்தியை பெற்றுக் கொள்ளும் தன்மை இயல்பாகவே அனைவருக்கும் இருப்பதில்லை. எனவே அதனுடன் நீங்கள் தொடர்பில் வர வேண்டும். அதற்காகத்தான் கோயிலில் நீங்கள் தரையில் உட் கார வேண்டும் அல்லது உடல் தரையில் படும்படி விழுந்து வணங்க வேண்டும் என்றார்கள். அதுவும் ஆண்கள் என்றால் சட்டையைக் கழற்றிவிட்டு சாஷ்டாங்கமாக தரையில் விழுந்து வணங்கலாம். பெண்கள் என்றால் ஈர உடையுடன் சாஷ்டாங் கமாக வணங்க வேண்டும் என்று வகுத்தார்கள். யோகா முறைப் படி சொல்லப் போனால், சாஷ்டாங்க நமஸ்காரம் என்பது சூரிய நமஸ்காரத்தில் மிக முக்கியமான ஒரு நிலை. சாஷ்டாங்க நமஸ்காரம் என்றால் உடலின் எட்டு அங்கங்கள் மட்டுமே தரையில் பட வேண்டும்.

ஆனால் தற்சமயம் பொத்தென்று உடலை கீழே போட்டு உடலின் அனைத்து பாகங்களும் தரையில் படுமாறு வணங்கு கிறோம். கோயிலில் படுத்து உறங்குவது போல் கீழே கிடப்பதில் அத்தனை சுகமோ என்னவோ? ஆனால் பாரம்பரிய முறைப்படி சாஷ்டாங்கமாகத்தான் ஒருவர் விழுந்து வணங்க வேண்டும். இவ்வாறு செய்வதற்கு பல சிறப்புகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடிஇடிக்கும் போது கிராமத்து மக்கள் "அர்ஜுனா அர்ஜுனா" என கூறுவது ஏன்?

நம் ஊரில் மழை பெய்யும் போது இடி இடித்தால் நம் பெரியவர்கள் அர்ஜுனா...அர்ஜுனா என்பார்கள். இதை சிலர் கேலி செய்வதுமுண்டு. இடிதாங்கி கண்டுபிடித்து எத்தனையோ வருஷங்களாகியும் அதை வீட்டின் மேல் வைக்காமல் இன்னமும் அர்ஜுனா அர்ஜுனா என்று புலம்பிக்கொண்டு இருக்கிறீர்களே என்று பாட்டியை கிண்டல் செய்வதுமுண்டு. உண்மையில், இதன் அறிவியல் காரணம் என்ன தெரியுமா?

உலகத்தின் தலைசிறந்த கார் கம்பனியான பென்ஸ் அண்மையில் தமது புதிய கார்களுக்கு நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கார் விபத்துக்குள்ளாவதற்கு முன்பு அதைக் கண்டு பிடித்து ஒரு ஒலியை எழுப்பும். அப்போது தானாகவே காரில் உள்ளவர்களின் காது மடல்கள் மூடப்பட்டு விடும். பின்பு விபத்து நடந்தாலும் நம் செவிப்பறை பாதிக்காது. வெள்ளையர் கள் இப்போது கண்டு பிடித்த இந்த அறிவியல் நுட்பத்தை நம் முன்னோர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டு பிடித்து விட்டனர்.

இடி பலமாக இடிக்கும் போது, சிலரது காது அடைத்து "ஙொய்ங்' என்று சத்தம் வரும். செவிப்பறை பாதிப்படையும். இதிலிருந்து தப்ப "அர்ஜுனா அர்ஜுனா அர்ஜுனா" என்று சில தடவைகள் சொன்னால் போதும். காது அடைக்காது. "அர்' என்று சொல்லும் போது, நாக்கு மடிந்து மேல் தாடையைத் தொடும். "ஜு' என்னும் போது வாய் குவிந்து காற்று வெளி யேறும். "னா' என்னும் போது, வாய் முழுமையாகத் திறந்து காற்று வெளியே போகும்.

இப்படிக் காற்று வெளியேறுவதால் காது அடைக்காது. அதற்குத் தான் "அர்ஜுனா' வை நம்மவர்கள் துணைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்தார்கள். அர்ஜுனன் கிருஷ்ண பக்தன் என்ப தால், அவன் பெயரை உச்சரிப்பது மனதுக்கு பலம் என்ற ஆன்மீக காரணத்துடன், காது அடைத்து விடக்கூடாது என்ற அறிவியல் காரணமும் இதில் புதைந்து கிடக்கிறது.

## புதுப்பெண்ணை 'வலது காலை எடுத்து வைத்து வா' என்று கூறக்காரணம் என்ன?

புதியதாக திருமணம் முடிந்து வீட்டுக்கு வருகிற மண மகளை, வலது காலை எடுத்து வைத்து வா என்று கூறுவதற்கு என்ன காரணம்? மனிதன் ஒரு சமுதாய விலங்கு. அதாவது மனிதனால் ஒரு போதும் தனிமையில் வாழ முடியாது. அப்படி வாழ்வதும் வாழ நினைப்பதும் விதிவிலக்காக கொள்ளலாமே தவிர விதியாக கொள்ள இயலாது. சமூகமாக கூடி வாழ்வத ற்காக தான் மனிதன் படைக்கப்பட்டிருக்கிறான்.

பத்துப்பேர் இருக்கும் ஒரு சபையில் எல்லோருக்குமான கட்டுப்பாடு உண்டு. தனிமனித சுதந்திரம் என்ற பெயரில் நாலு பேர் முன்னால் நாம் மட்டும் தனித்த ஒரு செயலை செய்ய முடியாது, செய்யவும் கூடாது. அப்படி செய்வதனால் பொது அமைதி கெட்டுவிடும். இதனால் தான் நமது முன்னோர்கள் நீதியை, பொது நீதி, தனி நீதி என்று இரு பகுதிகளாக பிரித்து நமக்கு தந்தார்கள்.

உலகப்பொதுமறை தந்த வள்ளுவன் கூட, உலகத்தவரோடு ஒட்டி உறவாடி செல்லாதவன், பலவிதமான கல்வியை கற்றிரு ந்தாலும் பயனில்லை என்று கூறுகிறார். நாலுபேர் ஒரு பாதை யில் போகும் போது நாமும் அதை கடைபிடிக்க வேண்டும் தனி பாதை போட நினைத்தால் தடுமாற வேண்டிய சூழல் வரும். நாம் வாழுகிற இந்த பூமி வலது புறமாகவே சுற்றுகிறது. இத னோடு சேர்ந்து மற்ற கிரகங்களும் வலது முகமாக தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்கின்றன. நீனும் அதைபோலவே உலகம் போகிற பாதையில் சேர்ந்து இணைந்து போக வேண்டும் என்பதை நினைவுபடுத்தி வலியுறுத்தி காட்டுவதற்காகவே வலது காலை எடுத்து வைத்து வா என்று சொன்னார்கள்.

## அம்மன் கோயில்களில் தீ மிதிப்பு நடத்துவது ஏன்? அறிவியல் பூர்வமான விளக்கம்

நம் முன்னோர்கள் கோவில்களில் தீ மிதிக்கும் வழக்கத்தை பண்டைய காலம் முதல் செய்து வருகின்றனர். தீ மிதித்தல் என்பது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, வட இந்தியாவிலும் நடை பெறுகிறது. தீ மிதித்தல் என்பது அண்மையில் தோன்றியது அல்ல, சுமார் *3200* ஆண்டுகளுக்கு முன்பே இது இந்தியாவில் நடத்தப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. தீ மிதிப்பது உடலுக்கும், உள்ளத்திற்கும் ஆரோக்கியத்தைக் கொடுக்கவல்லது.

**அறிவியல் உண்மை:**

தீ மிதிப்பவர்கள் குறிப்பாக ஆடி மாதத்தில் தான் மிதிப்பர். குறிப்பாக அம்மன் கோயில்களில் இத் தீமிதிப்பு விழா நடை பெறும். ஆடி மாதம் என்பது இந்தியாவில் வெயில் மற்றும் மழைக்காலத்திற்கு இடைப்பட்ட காலமாகும். இக்காலத்தில் பலவிதமான நோய் தொற்றுக்கள் எளிதில் உண்டாகும். இந்த மாதத்தில் தீ மிதிப்பதால் உடலின் பல நோய்கள் நீங்கும் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். எனவே தான் பழங் காலத்தில் மஞ்சள் காமாலை முதலிய நோய்களுக்கு காலில் சூடு வைத்து குணப்படுத்தப் பட்டது. இதுவே தீ மிதித்தலுக்குப் பின் உள்ள அறிவியல் உண்மையாகும்.

தீ மிதிப்பின் மகிமையை அறிந்த ஐரோப்பியரும், அமெரிக் கரும் இதை ஓர் பயிற்சி வகுப்பாக நடத்துகின்றனர். இதற்கென விசேட பயிற்சியாளர்கள் தீ மிதிப்பினால் உள்ள பயன்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுக்குக் கிடைக்கும் நன்மைகளையும் கூறி முறையாக எப்படி தீ மிதிப்பது என்பதற்கான பயிற்சிகளை வழங்கி வகுப்புகளை நடத்தி வருகின்றனர்.

உலகில் சீனா, இலங்கை, தாய்லாந்து, ஜப்பான், பிஜி தீவுகள், நியூசிலாந்து, ஸ்பெயின், பல்கேரியா, தாஹிட்டி போன்ற நாடுகளிலும் தீ மிதிப்பு நடத்தப்படுகிறது.



இந்துக்கள் மட்டும் அல்ல, தற்போது வட இந்தியாவில் பக்ரித்தின் போது முஸ்லிம்களும் தீ மிதிக்கிறார்கள். ஜப்பானில் புத்த மதத்தினரும், ஸ்பெயினில் கிறிஸ்தவர்களும் தீ மிதித்தலில் ஈடுபடுகிறார்கள். மேலும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் உலகின் பல பகுதிகளில் தீ மிதிக்கிறார்கள். அமெரிக்காவில் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை தீ மிதித்தலை ஒரு அமைப்பு நடத்துகிறது. இதற்காக 2000 ரூபாய் பயிற்சி கட்டணமாக பெற்றுக் கொள்கிறது. அறிவியல் பூர்வமாக விளக்கம் கொடுத்து பலரை தீ மிதித்தலில் ஈடுபடச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவில் மணியில் இருக்கும் அறிவியல் உண்மைகள்.

கோவிலுக்கு செல்லும் அனைவரும் ஏன்? எதற்கு? என தெரியாமல் பின்பற்றும் விஷயங்களில் ஒன்று கோவில் மணியை அடிப்பதாகும். சிலர் கோவில் மணி அடித்து விட்டு வணங்கி னால் கடவுள் காது கொடுத்து கேட்பார் என கூறுகின்றனர். ஆனால், அது அல்ல உண்மை. மணி அடிப்பது பூஜை செய்யும் போது பயன்படுத்தப்படும் ஒரு வழக்கம் என்பதை கடந்து, இதன் பின் ஒரு அறிவியல் நுண்ணறிவும் இருக்கிறது.

இந்துக்கள் வீட்டில் பூஜையின் போதும், கோயில் வழி பாட்டின் போதும் மணி அடிப்பது பண்டைய காலம் தொட்டு வழக்கமாக உள்ளது. இறை வழிபாட்டில் மணியின் முக்கிய பங்கும் இருக்கிறது. இறைவனுக்கு தீபாராதனை காட்டும் போதும் மணி அடிப்பது வழக்கமாக நடைபெறுகிறது. இந்த மணி அடிக்கும் சடங்கு எதற்காக தொடங்கப்பட்டது, என்ப தையும் மணி அடிப்பதால் ஏற்படும் மாற்றங்களின் அறிவியல் பூர்வமான தெளிவையும் இங்கே பார்க்கலாம்.

**கோவில் மணியின் அமைப்பு:**

கோவில் மணி ஏதோ ஒரு உலோகத்தால் செய்யப்படுவது கிடையாது. ஏழு உலோகங்களின் கலவையால் செய்யப்படுவது தான் இந்த மணி. கோயில் மணியானது தகரம், (கேட்மியம்) ஈயம், (லெட்) துத்தநாகம், (ஜின்க்) வெள்ளை லோகம், (நிக்கல்) எஃகு, உருக்கு, (குரோமியம்) மாங்கனீஸ் ஆகிய 7 உலோகங்க ளின் கலவையில் செய்யப்படும்.

மணியின் தயாரிப்பில் ஒவ்வொரு உலோகத்தின் சேர்க்கை அளவின் விகிதம் உண்மையான வியக்கத்தக்க அறிவியலாகும். ஆகம சாஸ்திரத்தின்படி மணிகள் பஞ்ச லோகத்திலும் தயாரிக் கப்படுகின்றன. அவை, தாமிரம், வெள்ளி, தங்கம், வெண் கலம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்பு ஆகிய உலோகங்களாகும். இது பஞ்ச பூதங்களை குறிப்பிடுகிறது.

மனித மூளை வலது, இடது என்று பிரிக்கப்பட்டது. இரண்டும் இருவேறு செயலாற்றல் தன்மைகளை கொண்டது. இந்த இரண்டையும் ஒன்றாக இணைக்கும் தன்மை கோவில் மணியில் இருந்து எழும் ஒலிகளுக்கு உண்டு. அத்தகைய விதத்தில் தான் இந்த மணி தயாரிக்கப்படுகிறது. இது முதலாவது ஆச்சரியம்.

**காண்ட மணி:**

நாம் கோவில் காண்டா மணியை அடித்தவுடன், அதிலிருந்து ஒரு பலத்த ஒலி எழும்புகிறது. அந்த மணியின் ஓசை எதிரொலியுடன் கூடிய ஆழ்ந்த, இடைவிடாத ஒலியாக உரக்க ஒலிக்கும். ஒலியின் முடிவில் கேட்கும் எதிரொலிகள் நம் காதுகளில் 7 வினாடிகள் நீடிக்கிறது. இது மனித உடலின் 7 சக்கரங்கள் எனப்படும் சக்தி மையங்களை தாக்குகிறது. அந்த ஏழு சக்கரங்கள் மூலாதாரம், சுவாதிஷ்டனா, மணிபுரம், அனாகதம், விசுத்தம், ஆக்கினை, சகஸ்ராரம் ஆகியனவாகும்.

**கர்ப்பகிருக மணி:**

மணியில் இருந்து வரும் ஓசையில் நாம் "ஓம்" என்ற மந்திரத்தை உணர முடியும். கர்பகிருகத்தில் இருக்கும் மணியை இறைவனுக்கு தீபாராதனை காட்டும்போது, இறைவனுக்கு அபிஷேகம் நடக்கும்போது, உணவு படைக்கும் போது என்று சில நேரங்களில் மட்டும் அடிப்பதுண்டு. ஒவ்வொரு கோயிலிலும் கர்ப்பக்கிருகத்தில் உள்ள மணியை அடிப்பதற்காக ஒவ்வொரு சாஸ்திரம் பின்பற்றப்பட்டு வருகிறது.

**கோவில் வாசலில் கட்டும் மணி:**

பொதுவாக கோயில் வாசலில் மணியை கட்டியிருப்பதை நாம் பார்த்திருப்போம். உள்ளே நுழைந்ததும், அதனை இழுத்து ஓசை எழுப்புவோம். கோயிலுக்குள் நுழையும் போது நமது ஆழ் மனதை விழிக்க செய்வதற்காகவே இந்த ஒலியை எழுப்புகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோம். உடலால் தூங்குபவர்களை ஓசையின் மூலம் எழுப்புவது போல், மனதையும் எழுப்பவே இந்த முறையை பின்பற்றுகி றோம். இந்த ஒலியால் மனமும் உடலும் விழிப்படையும் நேரம் கோயிலில் இருந்து வரும் நறுமணமும், விளக்கின் ஒளியும் நம்மை மேலும் ஊக்குவிக்கின்றன.

**கோவில் மணி ஒலியின் விளைவுகள்:**

கோவில் மணியின் ஒலியை கூர்ந்து கேட்பது ஒரு வகையில் தியானம் செய்வதை போன்றதாகும். கோவில் மணியில் இருந்து ஒலி எழும்பும் அந்த நேரம் நம் மூளையில் உள்ள நினைவுகள் அழிக்கப்படுகின்றன. நாம் தன்னிலை இழந்த நிலைக்கு செல்ல தயாராகிறோம். மனம் விழிப்புணர்ச்சி அடைகிறது.

இந்த நிலையில் இருந்து மீண்டுவர நமக்கு சிறிது அவகாசம் தேவைப்படும். கோயில் மணிகளை அதன் தண்டை இழுத்து அடிப்பதால், அதன் ஒலி பல அலைவரிசைகளை வெளியேற் றுகிறது. இது வளி மண்டலத்தில் பரவுகிறது. ஒலிகள் வெளிப் படும்போது அதனுடன் சேர்த்து புனிதமான கதிர்களும் வெளி வருகின்றன. இவை வளி மண்டலத்தில் உள்ள தீய ஆற்றல்களை அழிகின்றன.

**வீடுகளில் மணியோசை:**

பொதுவாக இந்துக்களின் வீடுகளில் பூஜையின் போது மணி யோசை எழுப்பி இறைவனை வணங்குவது ஒரு வழக்கம். மணி யோசையால் இறைவனை அழைப்பதும் ஒரு வழக்கமாக இருந்து வருகிறது. மணியோசையின் ரீங்காரத்தால் தீய சக்திகள் வீட்டி லிருந்து நீங்கி விடும் என்பதும் ஒரு எண்ணமாகும்.

இறைவனை வணங்கும்போது எந்த கெட்ட வார்த்தை களும், கேட்கக் கூடாத ஓசைகளும் செவிகளில் விழக்கூடாது என்பதற்காக இந்த ஒலியை எழுப்பி இறைவனை வணங்குவர். நமது முன்னோர்களின் காலம் முதல் இன்றைய காலம் வரை மணியின் பயன் இருந்து வருகிறது. நம் முன்னோர்கள் எல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாவற்றையும் அர்த்தத்துடனும், உடல் ஆரோக்கியத்திற்காகவும் செய்தனர் என்பது இன்று அறிவி யல் பூர்வமாக விளக்கப்படும் போது தான் நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. அதனால் அவர்களின் பழக்க வழக்கங்களை மாற்றாமல் பின்பற்ற முயற் சிப்போம்.

*https://tamil.boldsky.com/insync/life/2017/surprising-science-behind-temple-bell-017126.html-By: Ambika Saravananat.*

## விநாயகர் சதுர்த்தியின் 3ஆம் நாள் விநாயகர் சிலையை ஆற்றில் கரைப்பது ஏன்?


விநாயகர் சதுர்த்தியில் விநாயகரை ஆதிகாலம் முதலே நாம் வணங்கி வந்தாலும் அதனை மக்கள் அனைவரும் கொண்டாடும் வகையில் பிரபலப் படுத்தியவர் பாலகங்காதர திலகர் என்ப வராவார். 1893 ஆம் ஆண்டிலிருந்து விநாயகர் சதுர்த்தி என்ற விழா எடுத்து விமர்சையாக கொண்டாட வழிவகுத்தார். அவரது விருப்பப்படி முதன் முதலாக பூனாவில் உள்ள விநாயகர் கோவி லில் தான் விநாயகர் சதுர்த்தி விமர்சையாக கொண்டாடப் பட்டது. விநாயகர் சதுர்த்தி கொண்டாடி முடித்த பிறகு அந்த சிலைகளை தண்ணீரில் கரைப்பதை வழக்கமாக கொண்டிருக் கிறோம். விநாயகர் சிலைகளை நீரில் கரைப்பதற்கு அறிவியல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் என்னென்ன காரணங்கள் இருக்கிறது தெரியுமா?

உலகத்தில் தோன்றிய எல்லாருக்கும் ஒரு முடிவு உண்டு என்பதை உணர்த்துகிறார். மண்ணோடு மண்ணாகி புழுவாகி மீண்டும் நெளிவோம். எதுவுமே நிரந்தரமில்லை. என்பதை உணர்த்துகிறார். களிமண்ணில் உருவாகிறார் பிள்ளையார். அதா வது பஞ்சபூதத்தில் ஒன்றான மண். அதைப் பிரதிஷ்டை செய் யும்போது அதில் உயிர்ப்பு உருவாகிறது. அவரது சக்தியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்து உருகி வணங்குகிறோம். பின்னர் கொண்டாடி, பக்திப் பரவசத்துடன் விநாயகரை வழியனுப்புகிறோம். விநாயகரை நீரில் கரைக்கும் போது உயிர்ப்பில் இருந்து விடுபடுகிறான். பஞ்சபூதமான நீரில் கரைந்து மீண்டும் மண்ணாகவே மாறு கிறான்.




விநாயகர் சிலைகளை நீரில் கரைப்பதற்கு அறிவியல் கார ணமும் உள்ளது. ஆடிப்பெருக்கு அன்று வெள்ளம் ஏற்பட்டு ஆற்றில் உள்ள மணலை எல்லாம் வெள்ள நீர் அடித்துச் சென்று விடும். இதனால் அந்த இடத்தில் நீர் தங்காமல் நிலத்தடி நீர் குறைந்து விடும். இதனை சமாளிக்கவே கெட்டியாக தங்கிடும் களிமண்ணினால் செய்த பிள்ளையாரை 3ஆம் நாள் ஆற்றில் கரைத்தார்கள். ஆயிரக்கணக்கான களிமண் சிலைகளை ஆற்றில் கரைக்கும் போது அக்களிமண் நிலத்தில் சேர்ந்து நிலத்தடி நீரை சேமிக்கும் என நம் முன்னோர்கள் நம்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று நாள் கழித்து ஏன் கரைக்கின்றனர் என்பதற்கும் காரணம் உள்ளது. விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டங்கள் முடிந்து மூன்றாம் நாள் தான் சிலையை கரைப்பார்கள். இதற்கு காரணம், களிமண்ணினால் செய்யப்பட்ட விநாயகர் சிலை ஆரம்பத்தில் ஈரப்பதத்துடன் இருக்கும். இதனை அன்றைய தினமே கரைத்தால் ஈரமான களிமண் தங்காமல் வெள்ள நீரில் அடித்துச் சென்றுவிடும் என்பதால் தான் நன்றாக காயும் வரை காத்திருந்து மூன்றாம் நாள் கரைக்க வேண்டும் என்று உருவாக்கிக் கொண்டார்கள்.

*https://tamil.boldsky.com/insync/pulse/2017/why-lord-ganesha-idol-immersed-water-016886.html - By:Aashika*

## கோயில்களில் தரையில் அங்கப்பிரதட்சணம் செய்வது எதற்காக தெரியுமா?

அங்கப்பிரதட்சணம் என்பது தரையில் படும்படி படுத்து கொண்டு தானும் சுற்றி (உருளுவது) கோவில் பிரகாரத்தையும் சுற்றுவது ஆகும். கோவில் பிரகாரத்தை சுற்றி அங்கப் பிரதட்சணம் செய்வது மிகவும் நலம் தரக்கூடிய விசயமாகும். பிரபஞ்சத்தின் ஒவ்வொரு இயக்கமுமே ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறையில் இயங்குகிறது. பூமி தானும் சுற்றிக்கொண்டு சூரியனை சுற்றுகிறது. சந்திரன் அதன்படியே பூமியை வலம் வருகிறது.

ஒவ்வொரு கோயிலின் கர்ப்பக்கிரகம் பிரபஞ்ச ரகசியத்தின் அடிப்படையிலேயே அமைக்கப்படுகிறது. பொதுவாகவே கோயிலைச் சுற்றி நன்மை செய்யக்கூடிய கதிர்வீச்சுகள் இருக்கும். அதன் பலன் நமக்கு முழுமையாக கிடைக்க இறைவனை சரணடைந்து உருளுகின்றோம். இந்த கதிர்களின் தாக்கத்தை நாம் பெறுவதற்காகத்தான், சாமி தரிசனம் முடிந்ததும் கோயிலில் சிறிது நேரம் அமருகிறோம். மேலும் சன்னதியில் பல சித்தர்கள், ரிஷிகள், புண்ணியம் செய்தவர்கள் கால் தடம் பட்டியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் பாதம் பட்ட பூமியில் வணங்கினால் நம்முடைய பாவங்கள் நீங்கி வாழ்வு வளம் பெறும் என்று நம்பிக்கையில் இந்துக்கள் கோயிலைச் சுற்றி அங்கப் பிரதட்சணம் செய்கின் றனர். பொதுவாக கோவிலுக்குச் செல்பவர்கள் இடமிருந்து வலப் பக்கமாக மூன்று முறையாவது தெய்வச்சிலை உள்ள கருவ றையைச் சுற்றி நடப்பார்கள். ஆனால் சிலர் மட்டும், வேண்டு தல்படி, நடப்பதற்குப் பதிலாக படுத்து உருண்டு கொண்டு சுற்றுவார்கள்.



ஒரு சக்தி வடிவத்தை சுற்றி வரும்போது, தெய்வீக சக்தியை கிரகிக்கும் தன்மை அதிகரிக்கிறது. ஆனால் நாம் வாழும் இட த்தைப் பொறுத்து அது இரண்டு விதமாக உள்ளது. பூமத்திய ரேகைக்கு வட பகுதியில், அதாவது இந்தியா போன்ற நாடுக ளில் வாழ்பவர்கள், கருவறையைச் சுற்றி வலப்புறமாகவும் (கடி காரம் சுற்றும் திசையில்), பூமத்திய ரேகைக்கு தென் பகுதியில் வாழ்பவர்கள் இடப்புறமாகவும் சுற்றவேண்டும்.

இந்த வேறுபாட்டினை ஒரு உதாரணம் மூலம் விளக்கு வோம். பூமத்திய ரேகைக்கு வட பகுதியில் நீர்த் துளியோ, வேறெதோ பொருளோ மேலிருந்து கீழ் வரும்போது, அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் சுழன்றுக் கொண்டே கீழே விழுமானால், அது வலப் புறமாக சுற்றி விழும். குழாயைத் திருப்பினால்கூட நீர் வலப் புறமாகவே சுற்றி விழுவதைப் பார்க்க முடியும்.

பூமத்திய ரேகைக்கு கீழே அதாவது தென்புறமுள்ள நாடு களில் இது இடப்பக்கம் நிகழும். சரியாக பூமத்திய ரேகையில் அமைந்துள்ள ஊர்களில் இதை ஒரு சுற்றுலா அம்சமாக வைத்தி ருப்பார்கள். பூமத்திய ரேகைக்கு அந்தப்பக்கம் உள்ள குழாயைத் திருப்பினால் தண்ணீர் ஒரு திசையிலும், இந்தப் பக்கம் குழா யைத் திருப்பினால் தண்ணீர் வேறு திசையிலும் சுற்றி விழும். இதனால்தான், பூமத்திய ரேகைக்கு மேல் புறமுள்ள நம் நாட் டில் ஒரு சக்தி ரூபத்தை பிரதட்சிணம் செய்யும்போது வலப்புற மாக சுற்றுகிறார்கள். இதனால் தெய்வீகத்தின் தன்மையை கிரகிக் கும் திறன் அதிகமாகிறது.

ஆனால் ஏன் படுத்துக் கொண்டு உருளுகிறார்கள் என்ப தற்கும் காரணம் உள்ளது. அனைவராலும் ஒரு இடத்திலேயே உட்கார்ந்து கொண்டு முழுமையாக தங்களை அர்ப்பணிக்க முடிவதில்லை. ஏதோ ஒரு செயல் மூலம் தான் தங்களை அர்ப் பணிக்க முடிகிறது. செயல் எந்த அளவு தீவிரமாக இருக்கிறதோ அந்த அளவிற்கு அவர்களால் தங்களை முழுமையாக அர்ப் பணிக்க முடிகிறது. அதனால் தான், மக்கள் இது போன்ற வழி களை உருவாக்கிக் கொண்டார்கள். நடந்து சுற்றுவதற்குப் பதி லாக உருண்டு கொண்டே சுற்றுகிறார்கள். ஆனால், கஷ்டப் பட்டு செய்யும் போதுதான், மக்களுக்கு ஒரு அர்ப்பணிப்பு உணர்வும், மனநிறைவும் ஏற்படுகிறது. இப்படிச் செய்யும்போது சக்தியை கிரகிப்பதற்கு ஏதுவாக, தங்களை அதிகமாக திறந்த நிலையில் வைத்துக் கொள்ள முடிகிறது. இதனால் தான் உருண்டு கொண்டே கோவிலைச் சுற்றுகிறார்கள். அதுவும், கோவிலைச் சுற்றி வெளிப்புறமுள்ள கருங்கல் தரை, சுட்டெரிக்கும் சூரியன் என எதுவும் தடையாய் இருப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த குழந்தைகளை புகைப்படம் எடுக்கக்கூடாது என நம் முதியவர்கள் சொல்வது ஏன்?

பிறந்த குழந்தைகளை புகைப்படம் எடுக்கக்கூடாது, மீறி எடுத்தால் குழந்தைகளின் ஆயுள் குறைந்துவிடும் என்று மக்களை பயமுறுத்தி வைத்தனர் பெரியோர்கள். ஏன்?

பத்துமாதம் தாயின் கருப்பை இருட்டில் வளரும் குழந்தை, பின்னர் தாய்மடியில் வளர்ந்து உலக நடைமுறைகளை பகல் இரவு வேலைகளைக் கண்களால் கண்டு வளர்ந்தாலும், குழந்தை களை நேராக சூரியனைப் பார்க்க வைப்பதில்லை. அதற்கு காரணம் பிறந்த குழந்தைகளின் கண்களில் உள்ள கருவிழியை, பார்வைத்தன்மையை, அதிக கதிர்வீச்சு கொண்ட சூரியக் கதிர்கள் பாதித்து, குழந்தைகளின் கண் பார்வையைப் செயல் இழக்கச் செய்துவிடும் என்பதால் மட்டுமே. இயற்கை சூரிய ஒளியே குழந்தைகளின் கண் பார்வைத்திறனை குறைக்கும் ஆற்றல் கொண்டதாக இருக்கும்போது, செயற்கை ஒளிவெள்ளம் பாய்ச்சி, அக்காலங்களில் ஸ்டுடியோக்களில் புகைப்படங்கள் எடுத்ததால் குழந்தைகளின் கவனத்தை திசை திருப்பும் அந்த செயற்கை ஒளிக் கதிர்களை, குழந்தைகள் ஆர்வமாக காணும் போது, அவற்றால் கண்பார்வைக் குறைபாடுகள் நிச்சயம் ஏற்படும் என்றே நம் முன்னோர்கள் நம்பினார்கள்.

குழந்தைகளை இரண்டு வயது வரை புகைப்படம் எடுக்க அனுமதிப்பதில்லை. இக்கால விஞ்ஞான வளர்ச்சிகளில் புகைப் படம் ஸ்டுடியோவில் எடுப்பது போய் இப்போது வீடுகளில் கைபேசிகளில் குழந்தைகளின் குறும்புகளை வீடியோக்களாக எடுக்கும் காலம் வந்துவிட்டது. ஆயினும், இரண்டு வயதுக்குட் பட்ட குழந்தைகளை படங்கள் எடுக்காமல் இருப்பதே சாலச் சிறந்ததாகும். அதைவிட பிளாஷ் எனும் செயற்கை ஒளி பாய்ச்சி எடுப்பது அறவே கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் திருஷ்டி கழிப்பது ஏன்?

புதுமணத் தம்பதிகளையோ, மகப்பேறு முடிந்து குழந்தையுடன் வரும் பெண்களையோ, அல்லது நீண்ட காலம் வெளியூரில் இருந்துவிட்டு வரும் உறவுகளையோ, அவர்கள் வீட்டில் நுழையுமுன் ஆரத்தி எடுத்து திருஷ்டி கழிப்பது காலங்காலமாக, தமிழர் வாழ்வில் கடைபிடிக்கப்படும் ஒரு மரபாகும். இது என்ன மூடநம்பிக்கையா? இல்லை வேறு ஏதேனும் சமயச் சடங்கா?

இரண்டும் இல்லை, நம் முன்னோரின் அறிவியல் பூர்வமான, அற்புத விஞ்ஞான செயல்முறை தான் இது. தாம்பளத் தட்டு, மஞ்சள், சுண்ணாம்பு, வெற்றிலை, கற்பூரம் மற்றும் தண்ணீர் ஆகியவை திருஷ்டிக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களாகும். தாம்பளத்தில் தண்ணீர் நிரப்பி, அதில் மஞ்சள் தூளுடன் சுண்ணாம்பை கலக்க, தண்ணீர் சிகப்பு நிறமாக மாறி விடும். அதில் ஒரு வெற்றிலையை வைத்து, அதில் கற்பூரம் ஏற்றி, வீட்டுக்கு வருபவர்களின் முன் அவர்களின் தலையை மூன்று முறை சுற்றிய பிறகு ஒரு ஓரமாக அந்த நீரைக் கொட்டி விடுவதையே திருஷ்டி கழித்தல் என்கிறோம்.

இதன் அறிவியல் விளக்கம் என்ன? மருத்துவமனையிலிருந்து வீடு திரும்புபவர்களுக்கு,பொது இடத்தில் காணப்படும் வியாதித் தொற்று பாதிப்புகள் உடலில் இருக்கும். இதுபோலவே, வெளியூரில் இருந்து பயணம் செய்து வருவோர் மீதும் தொற்றுக்கள் இருக்கும். இவற்றுடன் அவர்கள் வீட்டின் உள்ளே சென்றால், வீட்டில் உள்ள பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைவருக்கும் எளிதில் பரவி, உடல் நலப்பாதிப்புகளை உண்டாக்கும் தன்மையுடையது.

எனவேதான், உலகின் மிகச்சிறந்த கிருமிநாசினியான மஞ்சளை மற்றொரு கிருமிநாசினியான சுண்ணாம்புடன் நீரில் கலந்து, அதன்மேல் வெற்றிலையில் உள்ள சூடத்தின் தீப ஒளியை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் உடல் மேல் பரவலாகக் காட்டி சுற்ற, உடலில் உள்ள நச்சுக்கிருமிகள் எல்லாம், மஞ்சள் சுண்ணாம்பு கலவையுள்ள நீரின் ஆற்றலில் உள்ள அந்த தூய ஒளியின் பால் ஈர்க்கப்பட்டு, அழிந்துவிடும்.

இவற்றை வெறுமனே அறிவியல் ரீதியாகச் சொன்னால், அதெல்லாம் எனக்கு எந்த பாதிப்புகளும் வராது என்று ஏற்க மறுப்பார்கள் என்றுதான், கண் திருஷ்டி நீங்க ஆரத்தி எடுப்ப தாக சொல்லி வைத்தார்கள் நம் முன்னோர்கள். பெரியவர்கள், வெறுமனே மதச்சடங்குக்காக எதையும் சொல்லி வைக்கவில்லை. அதில் எல்லாம் அரிய அறிவியல் உண்மைகளை ஒளித்தே வைத் திருந்தார்கள்.

இது போலத்தான், தினமும் வெளியில் சென்றுவிட்டு வீடு திரும்பும் அனைவரும் கை, கால், முகம் கழுவிவிட்டே அடுத்த வேலையில் ஈடுபட வேண்டும் என்றும் சொன்னார்கள். இன்றைய பள்ளிக் கல்லூரி வயது பிள்ளைகள் முதல் அலுவலகம் செல்லும் இளைஞர்கள் வரை, எத்தனை பேர் இந்த சுத்தத்தைக் கடைப் பிடிக்கிறார்கள் என்பது நாம் அறிந்தது தானே? நம் முன்னோர் சொன்ன கருத்துகளில் மதிப்பு வைத்து வீடுகளிலும், நம் மனதி லும் சுத்தத்தை கடைபிடித்தால், வீடும், சமூகமும் நலமாகும்.

## குழந்தை பிறக்கவில்லையா? அரச மரத்தை சுற்றி வாருங்கள் என நம் முன்னோர் சொன்னது ஏன்? அரச மரத்தை சுற்றினால் குழந்தை கிடைக்குமா?

குழந்தை இல்லாதவர்கள் அரச மரத்தை சுற்றி வந்தால் மகப் பேறு கிடைக்கும் என நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.மரத்தை சுற்றி வந்தால் குழந்தை கிடைக்குமா? இது என்ன முட்டாள் தனம் என நினைக்கலாம். இது மூட நம்பிக்கையின் உச்சக் கட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் எனக் கூறுவோரும் உண்டு. உண்மையில் இது சாத்திய மாகுமா?

நம் முன்னோர்கள் சொல்லி வைத்த எல்லா நடைமுறை களுக்கும், நம்பிக்கைகளுக்கும் ஓர் அறிவியல் காரணம் உள்ளது. அது போல அரச மரத்தைச் சுற்றினால் குழந்தை கிடைக்கும் என்பதற்கும் அறிவியல் அடிப்படையில் ஓர் காரணம் உள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கூறிய இவ்வுண்மையை விஞ் ஞான ரீதியாக இன்று மறுக்க முடியவில்லை. நம் முன்னோர்கள் கூறிய அறிவுரையில் மறைந்து கிடக்கும் மருத்துவ உண்மைதான் என்ன?

பெண்களுக்கு கர்ப்பப்பை என்ற அமைப்பு உள் ளது. பெண்ணின் ஓவரிக்கு சினை முட்டைகள் வந்து சேரமுடி யாவண்ணம் ஃபிலோப்பியான் ட்யூப் என்ற உள் உறுப்பில் ஏதா வது தடை அல்லது அடைப்பு ஏற்பட்டு இருக்கலாம். இந்த ஃபிலோப்பியான் ட்யூப்க்கு அடியில் தசை வளர்ச்சி ஏற்பட்டு அதன் மூலம் அடைப்பு ஏற்பட்டும் இருக்கலாம்.

இத்தடையை நிவர்த்தி செய்ய பெரியோர்கள் கூறிய ஒப் பற்ற வழி தான் அரசமரப் பிரதட்சிணம். புத்திர பாக்கியம் அடைய வேண்டுமானால், பெண்கள் அரச மரத்தைச் சுற்ற வேண்டும் என்றும், இதை 108 முறை செய்ய வேண்டும் என் றும், அவ்வாறு செய்யும் போது வெறுமனே சுற்றி வராமல், ஒவ்வொரு சுற்று முடிந்ததும் மரத்தின் அடியில் வீற்றிருக்கும் வினாயகப் பெருமான் சிலை முன்போ, அல்லது நாகர் சிலை முன்போ குனிந்து வணங்கி பஞ்சாங்க நமஸ்காரம் செய்தாக வேண்டும்.

ஒவ்வொரு சுற்றுக்கும் ஒரு பெண் இப்படி செய்து நமஸ் கரிக்கும் போது பெண்ணின் அடிவயிறு அழுத்தப்படுகின்றது. இவ்வாறு 108 முறை அழுத்தப்படும்போது அந்த அடைப்பானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது சிறிதாக நீங்கி விடக்கூடும். அதன்பிறகு பரிபூரணமாக தடை ஏற்படுத்தும் அடைப்பு நீங்கியவுடன், சினை முட்டை கள் எளிதாக கருப்பையைச் சென்று எளிதாகச் சேர்ந்துவிட முடியும். பிறகு புத்திர பாக்கியம் சுலபமாக ஏற்பட்டு விடும். இப்படிப்பட்ட உடற்பயிற்சி யோகாவில் கூட சொல்லித் தரப்படும். ஆதலின், இப்பயிற்சியை வீட்டிலேயே செய்யலாம். அதே சமயம் இதற்கு அரசமரத்தை ஏன் நாடிச் செல்ல வேண்டும் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அதற்கான காரணத்தையும் விஞ்ஞான ரீதியிலேயே நாம் தெளிந்தறியலாம்.

தாவரங்களில் அதிகப்படியான பிராண வாயுவை வெளியிடும் தாவரம் அரசமரம் தான். அதற்கடுத்து வேப்ப மரம். சூரிய உதயத்தில் அரச பிரதட்சிணம் செய்யும்போது இம்மரத்தடியில் ஆரோக்கியமான வகையில் காற்றோட்டம் அமைந்திருப்பதுதான். அதாவது சூரிய ஒளிக்கு முன் இம்மரத்திற்கு மேல் ஓஸோன் எனும் காற்றழுத்த மண்டலம் ஒன்று அமையப்பெற்று, பிராண வாயுவை வெளியிடாமலும், சிதற விடாமலும், மரத்தடியில் உள்ளவர்க்கு அளிக்கின்றது. இந்த அமைப்பு சூரிய ஒளி ஏற்பட்டவுடன் சிதறி காற்றழுத்தத்தையும் சிதைத்து விடுகின்றது.

ஆகையினால்தான் வீட்டில் கூடாது என்றும், அரச மரத்தை நாடிச் சென்று அதனைப் பிரதட்சிணம் செய்து 108 முறை முடியாவிட்டாலும், தம்மால் இயன்றவரை குனிந்து நமஸ்கரித்து வந்தால், நிச்சயம் மலட்டுத் தன்மை நீங்கப் பெற்று புத்திரப் பேற்றை அடையமுடியும் என்றும் நம் முன்னோர்கள் கூறிய அறிவுரை தற்கால விஞ்ஞானத்துடன் எந்த அளவுக்குப் பொருந்தி வருகிறது என்பதை நினைக்கும் பொழுது வியப்படைவதுடன் நம் முன்னோர்களின் அறிவாற்றலைக் கண்டு பூரிப்படைகிறோம். பிரதி வருடமும் ஐந்து திங்கட்கிழமைகளில் அமாவாசை வரும். இந்த தினங்கள் விஷேஷ பலனை அளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது சரி, பிள்ளைப்பேறு பெறுவதற்கு அரசப் பிரதட்சிணம் என்றால், திருமணம் ஆகாதவர்கள் திருமணம் ஆகவேண்டும் என்று சுற்றுகிறார்களே அதற்கு விளக்கம் என்ன என்று கேட்க லாம். திருமணம் ஆகாதவர்களுக்கும் அரசமரத்தை வலம் வருவ தால், நிச்சயம் பலன் உண்டு. ஆனால், அவர்கள் 108 முறை விழுந்து வணங்கி நமஸ்கரிக்க வேண்டும் எனும் கட்டா யம் இல்லை. இந்தப் பயிற்சி புத்திர ஸ்தானம் அடைய விரும்பு பவர்களுக்கே.

பெண்களின் திருமணத்துக்கு சில தோஷங்கள் தடையாக அமைந்துள்ளன. அவைகளுள் நாக தோஷம் ஒன்றாகும். அரச மரத்தடியில் பெரும்பாலும் வினாயகர் சிலையுடன், நாக தேவ தைகளின் சிலைகளும் நிறுத்தப்பட்டிருக்கும். காலையில் குளித்து முடித்து நம்பிக்கையோடு மரத்தை சுற்றி வரும் போது நாக தோஷத்தின் பாதிப்பும் விலகி சுப காரியம் இனிது நிறைவேறும்.

மேலும் அரச மரத்தின் கீழ் ஓர் ஆகர்ஷன சக்தி உள்ளதாக அறிஞர்கள் கூறுகின்றனர். அரச மரத்திலிருந்து நிறைய அமோ னியா வெளிப்படுவதாகவும், இந்த அமோனியா பெண்களின் கர்ப்பப்பைக்கு மிகவும் தேவையான ஓர் தாதுப் பொருள் என வும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

## நம் விழாக்களின் போது மாவிலைத் தோரணம் கட்டுவது ஏன்?

விழாக்களின் போதும், சுப நிகழ்ச்சிகளின் போதும் நாம் மாவிலைத் தோரணம் கட்டுவோம். இதன் பின்னணியில் முக்கிய அறிவியல் காரணம் உள்ளது என்பதை நம்மில் பலர் அறிந் திருக்க வாய்ப்பில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்களின் போதும், சுப நிகழ்ச்சிகளின் போதும் மக்கள் அதிகம் கூடுவர். கும்பல் பெருகுமிடங்களில் ஏற்படுகின்ற அசுத் தங்களினால், காற்று மாசடைகிறது. தூய்மை கெடுகிறது. சுற்றுப் புறச்சூழல் பாதிப்படைகிறது. காற்றின் மூலம் தொற்று நோய்க ளைத் தருகின்ற கிருமிகளும், பாக்டீரியாக்களும் மக்களைத் தாக்குகின்றன. உடல் நலத்தைக் கெடுக்கின்றன.

மக்கள் வெளியிடும் கரியமில வாயுவை தன்னுள் இழுத்து வைத்துக்கொள்ளும் சக்தி மாவிலைக்கு உண்டு. காய்ந்து உலர்ந்து விட்ட மாஇலைகளிலும் அதன் சக்தி குறையாது. மாவிலை ஒரு கிருமிநாசினி. இதற்கு துர்தேவதைகளை வீட்டிற்குள் நுழைய விடாமல் தடுக்கும் சக்தியும் உண்டு. மேலும் மாவிலை அழுகு வது கிடையாது. முறையாக காய்ந்து உலரும். இதுபோல், வாழ்க்கையும் கெட்டுப் போகாமல் நீண்டகாலம் நடைபெற்று முற்றுப்பெற வேண்டும் என்ற நம்பிக்கையுடன் மங்கலம் பெருக மாவிலைத் தோரணம் கட்டுகிறோம்.

மாவிலைத் தோரணம் கட்டுதல், தமிழர்களின் நிகழ்வுக ளைக் குறிக்கும் பண்பாட்டு அடையாளமாக செய்யும் ஒரு அலங்கார அமைப்பாகும். இதை தென்னங் குருத்தோலை என்பவற்றால் செய்வார்கள். இவற்றில் செய்யப்படும் மடிப்புக் கட்டமைப்பு குருவிகள் எனப்படும். இவற்றுடன் மாவிலைக ளையும் சேர்த்துக் கட்டுவர். இது மாவிலை தோரணம் எனப் படும்.
தோரணங்கள் பொதுவாக இரண்டு வகைகளாக வகுக்கப் படும். அவை மங்கள தோரணம். அமங்கள தோரணம் எனப் படும். சமய விழாக்கள் மற்றும் திருமணம் முதலான மங்க ளகரமான நிகழ்வுகளின் போது கட்டப்படுபவை மங்கள தோர ணங்கள் எனப்படும்.

இவை நான்கு குருவிகளைக் கொண்ட தாகக் காணப்படும். குருவிகளின் தலை மேல் நோக்கியும் வால் கீழ் நோக்கியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவேண்டும். மரணவீடு முதலான அமங்கள நிகழ்வுகளில் கட்டுவது அமங்கள தோரணம் எனப்படும். இது மூன்று குருவி களைக் கொண்டிருக்கும். குருவிகளின் தலை கீழ் நோக்கியும் வால் மேல் நோக்கியும் இருக்கவேண்டும்.

## எந்த வேலையையும் அதிகாலையில் தொடங்க வேண்டும் என்று நம் முன்னோர் சொன்னது ஏன்?

நம் நாடு பழம் பெரும் நாடு. நாம் அதன் புதல்வர் எனும் போது நமக்குள் ஒரு சக்தி பிறக்கின்றது. நம்மை அறியாமலே ஒரு சிலிர்ப்பு ஏற்படுகிறது. நம் முன்னோரின் திறமை கண்டு அயல் நாட்டினர் வியக்கின்றனர். நமது ஞானிகளும் விஞ்ஞானி களே என்று பாராட்டுகின்றனர். ஆனால் நாம் நமது பழைய சம்பிரதாயங்களை மூடப்பழக்கங்கள் என்று தட்டிக் கழிக்கி றோம். இதனால் களை எடுக்கிறேன் என்று பயிரையே கிள்ளி எறியும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டோம்.

நம் முன்னோர்கள் சொன்னவற்றை நாம் கேட்டு, அதை செய்து விட்டு நாம் போய் விட்டோம்.அவர்களிடம் ஏன் என்ற கேள்வி கேட்க மறந்து விட்டோம். எதற்கு என்று அவர்கள் விளக்கவும் இல்லை. எனவேதான் இந்த குழப்பம் இதனை விளக்க ஒரு சுவாரஸ்யமான உதாரணம் இதோ.

குரு ஒருவர் சீடர்களுக்கு யாகம் நடத்துவது பற்றி விரி வாகப் பாடம் நடத்தினார். யாகத்தில் வார்க்கப்படும் நெய்யின் வாசனையால் ஈர்க்கப்பட்ட ஆசிரமப் பூனை நெய் பாத்திரத்தை வட்டமிட்டது. எனவே யாகம் ஆரம்பிக்கும் முன் பூனையை ஒரு தூணில் கட்டி போட்டுப் பின்னரே குரு யாகம் நடந்துவது பற்றி செயல் விளக்கம் கூறி வந்தார். ஒரு மாதம் பாடம் தொட ர்ந்தது. பாடம் முடிந்ததும் ஒரு மாணவனிடம் யாகம் செய்ய முதலில் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார் குரு. பூனையைப் பிடித்து எதிரில் இருக்கும் தூணில் கட்டி அதன்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனையின் எதிரே யாகம் தொடங்க வேண்டும் என்றான் மாணவன். அந்த மாணவனின் நிலையே இன்று நம்மில் பலரு க்கு ஏற்பட்டிருக்கிறது. காரணம் ஏன் என்ற கேள்வியை நாம் கேட்க மறந்ததன் விளைவு. எதற்கு என்று அவர்களும் விளக்கா மல் மூடகமாகவே சொல்லி வைத்ததும் ஒரு தவறு.

எந்த விஷயத்தையும் அதிகாலையில் தொடங்குவது அதிக நன்மை பயக்கும் என்று முன்னோர்கள் சொல்லி வைத்திருக் கிறார்கள். அதிகாலை நேரத்தை பிரம்ம முகூர்த்தம் என்றும் சொல்வார்கள். திருமணம், புதுமனை புகுவிழா இரண்டும் அதிகாலையில் செய்வது மிகவும் விசேஷம். அதிகாலைக்கு அப்படி என்ன சிறப்பு உள்ளது?

அதிகாலையில் தான் ஓஸோன் நிரம்பிய தூயகாற்று நம் மைச் சுற்றி நிறைந்திருக்கும். அவ்வேளையில் புறச்சலனங்கள் அதிகம் கிடையாது. எனவே எதிலும் இயல்பாக ஆற்றல் அதிக ரிக்கிறது. எனவே தான் காலை எழுந்ததும் படிப்பு என்று சொல்லி வைத்தார்கள். பின்னர் யோகா, உடற்பயிற்சி, நடைப் பயிற்சி, முற்றத்தைக் கூட்டுதல், கோலம் போடுதல், வீட்டை துப்பரவு செய்தல், ஆலயவழிபாடு, என்று அனைத்தையும் நம் முன்னோர்கள் அதிகாலையில் செய்யச் சொன்னார்கள்.

ஆலயதரிசனத்திலும் உறைக்காலதரினம் என்ற அதிகாலை தரிசனம் வெகுசிறப்பு. தில்லையில் பக்தர்களை ஈர்க்கும் தரிச னமாக ஆண்டு முழுவதும் நடக்கும் அற்புத தரிசனமாக இது விளங்குகிறது. ஆண்டு முழுவதும் இல்லாவிட்டாலும் ஒருமாதம் மட்டுமாவது அதிகாலை தரிசனம் செய்வது அவசியமானது என நம் முதியவர்கள் கூறுகின்றனர்.

அந்த ஒரு மாதம் மார்கழி மாதமாகும். மார்கழிக்கு மட்டுமே இந்த சிறப்பு. எனவேதான் அந்த மாதவன் மாதங் களில் நான் மார்கழி என்று சொல்லி வைத்தான். மார்கழிப் பனியின் தாக்கத்தில் இருந்து தப்பிக்கவே மார்கழி பஜனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பாவை, திருவெம்பாவை பாராயணம் என்பன உருவாக்கப் பட்டன. அதன் பின்னர் மிளகுப் பொங்கல், சுண்டல் போன்ற பனி எதிர்ப்பு உணவுகளை உண்பார்கள்.

## நம் பெண்கள் காலையில் கோலம் போடுவது ஏன்?

மார்கழிப் பனியில் அதிகாலையில் எழுந்து குளித்து, முழுகிக் குனிந்து நிமிர்ந்து கோலம் போடும் போது அதுவே பெரிய உடற்பயிற்சி ஆகிறது. உடற்பயிற்சியோடு உள்ளத்திற்கும் கோலம் போடுவதால் பயிற்சி கிடைக்கிறது. எத்தனை புள்ளி, எத்தனை வரிசை, நேர் புள்ளியா, சந்து புள்ளியா, ஓரப் புள்ளி எத்தனை என்பது மனதில் பதிவாகி விடுகிறது. இது மனதில் படக்காட்சியாக மாறி தரையில் கோலமாகப் படர்கிறது. இதன் மூலம் பெண்களின் ஞாபக சக்தி கூடுகிறது.

மேலும் அரிசி மாவினால் இடும் கோலம் பல ஜீவராசி களுக்கு உணவாகிறது. கல்லு மாவில் கோலம் போடுபவர்கள் இது பற்றி யோசிப்பதில்லை. குறிப்பாக எறும்புகளுக்குக்கு இது வரப்பிரசாதம். எனவேதான் "எறும்பு தின்றால் கண் தெரியும்" என்று நம் முதியோர் கூறினார். அவ்வளவு புண்ணியம். பார் வைக் குறைவு ஏற்படாது. கோலம் போடும் போது தப்பித் தவறி புள்ளி பிசகி விட்டால் அதனைக் கண்டு பிடித்து சரி செய்த பின் ஏற்படும் மனநிறைவு இருக்கிறதே, அடடா அற் புதம். அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும், அதன் சுவை.

மனசுக்கு உற்சாகம் தர செயற்கை மனஅழுத்தம் ஏற்படுத்தும் ஆறு வித்தியாயங்கள், குறுக்கெழுத்துப் போட்டிகள் போன்றவை நலன் பயக்கும் என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள். இந்த செய ற்கை "டென்ஷன்" மூலம் மனம் தளர்வடைகிறது. உண்மையான கடினமான வேலைகளை லாவகமாகக் கையாளும் திறன் அதிகரிக்கிறது என்கின்றனர். இதனை கோலமிடுவதன் மூலம் நம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் அன்றே செய்தனர். எனவே தான் பழைய தலை முறைப் பெண்களுக்கு "டென்ஷன்" என்ற வார்த்தையே தெரி யாமல் போயிற்று. அத்தோடு கோலத்தில் ஏற்படும் சிக்கலைக் கண்டுபிடித்து சீர் செய்யும் பழக்கத்தின் காரணமாகக் பிற்காலத் தில் வாழ்வில் ஏற்படும் சிக்கல்களை எளிதில் சரி செய்யும் திற னும் நம் பெண்களுக்கு அதிகரிக்கிறது.

## நம் வீடுகளில் காலையில் வீட்டிற்கு முன்னும்,பின்னும் பசுஞ்சாணம் தெளிப்பது ஏன்?

கிராமங்களில் தினமும் காலையில் வீட்டு முற்றத்தையும், கொல்லைப் புறத்தையும் கூட்டி துப்பரவு செய்த பின் நம் வீட் டிற்கு முன்னும், பின்னும் பசுஞ்சாணம் தெளிப்போம். கொல் லைப்புற வாசலுக்கும் சாணம் தெளிப்பது உண்டு. மேலும் பசுஞ்சாணத்தை கிழமைக்கு ஒரு தடவை வீட்டில் தரையில் பூசுவதும் உண்டு. இதை நாம் ஏன் செய்கிறோம் தெரியுமா?

இதில் ஓர் முக்கிய அறிவியல் உண்மை உள்ளது. பசுவின் சாணம் ஒரு சக்தி வாய்ந்த கிருமி நாசினியாகும். பசுஞ்சாணம் இன்றைய “டெட்டோல், பினாயில்” போன்றவற்றுக்கு இணை யான காசு செலவு இல்லாத ஓர் கிருமி நாசினியாகும். வாசலில் அதை மிதித்து வரும் போது வெளி உலகக் கிருமிகள் அங்கேயே ஒழிக்கப்படுகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்னே வடஇந்தியாவில் 'போபால்' என்னும் நகரத்தில் விஷவாயுக் கசிவு ஏற்பட்டது. அதன் தாக்கம் இன்னும் எச்சமாக தேங்கி நின்று பல பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. நகரே மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்டது. பல்வேறு உபாதைகளுக்கு ஆளாயிற்று. ஆனால் ஒரு வீட்டில் மட்டும் இதன் தாக்கம் ஏதுமில்லை. இந்த அசம்பாவிதத்தை உணரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை. விடிந்த பின் தான் அவர்களுக்கு விபரமே தெரிய வந்தது.

அவர்களுக்கு மட்டும் ஏன் பாதிப்பு இல்லை என ஆய்வு செய்ய உள்நாட்டு, வெளிநாட்டு விஞ்ஞானிகள் களம் இறங் கினர். அவர்கள் செய்த ஆய்வுகளின் முடிவு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

சம்பவம் நடந்த நேரத்தில் அந்த வீட்டில் அக்னிஹோத்ரம் செய்து கொண்டிருந்தார்கள். எனவே அந்த வீட்டில் மட்டும் விஷவாயுவின் தாக்கம் இல்லை. 'அக்னி ஹோத்ரம்' என்பது பசுஞ் சாணத்தின் வரட்டியில் நெய் விட்டு தீமூட்டி சிறிது பச்சரிசியைத் தூவி செய்யும் ஒரு ஹோமம். அந்தப்புகை நச்சுப் புகையில் இருந்து காத்து இருக்கிறது.

பழைய நாட்களில் மார்கழி மாதம் கோலத்தின் மீது பசுஞ் சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து அதன் மீது பரங்கிப் பூ சூட்டி அழகு படுத்துவார்கள். மாலையில் அந்தப் பிள்ளை யாரை பரங்கிப் பூவின் மீது வரட்டியாகத் தட்டி சேர்த்து வைப் பார்கள். அந்த வரட்டியை பொங்கலன்று அடுப்பெரிக்க உப யோகிப்பார்கள்.

பொங்கல் பானையை இறக்கி வைக்கும் போது நெய் கலந்த பொங்கலில் ஒரு கரண்டி அடுப்பில் போடுவார் கள். இது வேதம் படிக்காதவர்களும் கடைப்பிடித்த எளிமையான அக்னி ஹோத்ரம் ஆகும். அத்தோடு அன்று அடுப்பெரிக்க வரட்டியே பயன்பட்டது. தினமும் சமையல் முடிந்ததும் அக்னி பகவானுக்கு அர்ப்பணம் என்று சிறிது சாதத்தை அடுப்பில் இடுவதும் வழக்கமாக இருந்தது. இந்தப்புகை சுற்றுச் சூழல் மாசுபாட்டிலிருந்து மக்களைக் காக்கும் கவசமாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கள் பசுவைக் காமதேனு என்று கூறி தெய்வத்திற்கு இணையாக வணங்குவதேன்?

இந்துக்கள் சாணத்தைத் தரும் பசுவைக் காமதேனு என்று அழைத்தார்கள். அதன் ஒவ்வொரு உறுப்பிலும் ஒவ்வொரு தேவதை குடியிருப்பதாக சொல்லி வைத்தார்கள். பசுவின் சிறப் பை விளக்க ஒரு சுவையான கதை ஒன்று உள்ளது.

இரு மாணவர்கள் கல்விக் கேள்விகளில் சம அளவில் சிற ந்து விளங்கினர். குருவுக்கு யாரை முதல் மாணவனாகத் தேர்வு செய்வது என்று குழப்பம். எனவே புதிதாக ஒரு பரீட்சை வைத் தார். யார் முதலில் இரண்டு பக்கமும் தலை உள்ள பசுவைக் கண்டு வணங்கி வருகிறார்களோ அவரே சிறந்த மாணவன் என்று அறிவித்தார். ஒரு மாணவன் இரண்டு பக்கமும் பசுவிற்குத் தலை எப்படி இருக்கும் என்று ஒதுங்கி விடுகிறான். ஆனால் இன்னொரு மாணவனோ பசுக் கூட்டங்களில் தனது தேடுதலைத் தொடர்கிறான்.

அவன் தேடியது கிடைத்து விட்டது. இரண்டு புறமும் தலை உள்ளப் பசுவைக் கண்டு விட்டான். சுற்றி வந்து வணங்கி னான். குருவிடம் கண்ட காட்சி பற்றிக் கூறி சிறந்த மாணவ னாகத் தேர்வாகினான். ஒதுங்கிய மாணவன் அது எப்படி சாத் தியம் என்று கேட்க குரு விபரம் கூறினார்.

பசு கன்று ஈனும் போது இருபுறமும் தலை இருக்கும் அதா வது பின்புறம் கன்றின் தலை வெளிப்படும் நிலை. அதுதான் இருபுறம் தலை உள்ள பசு. தற்போதும் பசு கன்று ஈனும் போது நம் கிராமங்களில் உள்ள மக்கள் அதை சுற்றி வந்து வணங்கும் வழக்கம் உண்டு.

அப்படி என்ன சிறப்புத் தன்மைகள் பசுவிற்கு மட்டும் உள்ளது என்று பார்த்தால், குழந்தைகளுக்கு தாய்ப்பாலுக்கு அடுத்தபடி சிறந்த உணவு பசும் பால் மட்டுமே. அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாணம் சிறந்த கிருமி நாசினி. இளம் சினைப் பசுவின் சிறுநீர் குழந்தைகளின் கக்குவான் இருமலுக்கு அந்நாளில் சிறந்த நிவார ணியாகும். தற்போது கக்குவான் தடுப்பூசி மூலம் தடுக்கப்பட்டு விட்டது. எனவே தான் வீட்டில் புண்ணியாதானம், கணபதி ஹோமம் போன்ற சிறப்பு பூஜைகள் செய்யும் போது பசுவின் சிறுநீரை வீடெங்கும் தெளிப்பது வழக்கம். மேலும் பூஜை முடி ந்ததும் பஞ்சகவ்யம் என்ற பிரசாதம் வழங்குவதும் மரபு.

பஞ்சகவ்யம் என்றால் என்ன? பசுவிலிருந்து பெறப்படும் சாணம், சிறுநீர், தயிர், பால், நெய் எனும் ஐந்து பொருட்களின் கூட்டுக் கலவையே பஞ்சகவ்யம் எனப்படும். இன்று இதனை பயிருக்கு சிறந்த கிருமி நாசினியாகவும். உரமாகவும் பயன்படுத்து கின்றனர். அண்மையில் ஒரு வார இதழில் படித்த செய்தி. மெத்தப் படித்த இளைஞர் ஒருவர் அயல்நாட்டு வேலை வாய்ப் புகளை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு கோசாலை நடத்துகிறார் எனும் செய்தி பத்திரிகைகளில் வந்தது.

ஒரு நாட்டுப் பசுவின் மூலம் நாளொன்றுக்கு 500 ரூபாய் வருவாய் ஈட்டலாம் என அவர் விவரிக்கிறார். ஒரு லிட்டர் பசுவின் சிறுநீரை அயல் நாடுகள் 200 ரூபாய்க்கு வாங்குவதா கவும், அதனை எப்படி சேகரிப்பது, எப்படி விற்பனை செய்வது என்றும் அவரே வகுப்பு எடுக்கிறார். விரும்புவோருக்கு பசுவை லாபகரமாக வளர்ப்பது எப்படி என்றும் கூறுகிறார். அவரே பசுவைப் பெற்றுக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்கிறார். போற போக்கைப் பார்த்தால் பசுவின் கழிவுகளுக்கு அயல் நாடுகள் காப்புரிமை பெற்றாலும் ஆச்சரியம் இல்லை. நாம் அதற்குள் முந்திக் கொள்ள வேண்டும்.

மேலும் தமிழ் நாட்டில் திருத்துறைப் பூண்டியை அடுத்த கட்டிமேடு என்னும் கிராமத்தில் உள்ள விவசாயி ஒருவர் பஞ்ச கவ்யம் உபயோகித்து நமது பழைய மரபு சார்ந்த நெல் வகைக ளில் உயர் விளைச்சல் காண்கிறார். ஒரே தூரில் நூற்றுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட கதிர்கள் வெளிவரும் சாதனையையும் கண்டு இருக்கி றார். இது பற்றி பயிற்சியும் மேற்கொள்கிறார்.

பசுஞ்சாணத்தின் மேன்மை சொல்லிமாளாது. சொல்லில் அடங்காது. பசுஞ்சாணத்தின் சாம்பல் தான் திருநீறு என்று பெயர் பெறுகிறது. சைவசமயத்தின் புனித சின்னமாகவும் இது கருதப்படுகிறது. சிவராத்திரி அன்று விபூதி மூட்டம் இடும் பழக் கம் இன்றும் பல வீடுகளில் உண்டு. அந்த மூட்டம் புகையும் சிறந்த கிருமி விரட்டி.

மேலும் பழங்காலத்தில் தற்போது உள்ளது போல் கொசு விரட்டி கிடையாது. கொசு வலையும் கிடையாது. அப்படி யானால் இவர்கள் எப்படி கொசுவை சமாளித்தார்கள்? வரட் டியை மூட்டம் போட்டு அத்துடன் நொச்சி இலை, வேப்ப இலை, வேப்பம்பூ, மாம்பூ என சீசனுக்குத் தகுந்தாற் போல் சேர்த்துக் கொள்வார்கள். இப்படிப் பல வகைகளிலும் பசுவின் பயன்பாடு முன் நிறுத்தப்பட்டது.

வைத்தீஸ்வரன் கோவில் ஆலயத்தில் திருநீறு கலந்த திருச்சாந்து உருண்டை என்ற அருட் பிரசாதம் வழங்குவார்கள். இது தீராத நோயையும் தீர்த்து வைக்கும். இது பற்றித் "தஞ்சைத் தரணியிலே" என்ற எனது புத்தகத்தில் "பிணிதீர்க்கும் பெம்மான்" என்ற கட்டுரையில் விபரமாகக் காணலாம்.

அத்துடன் திருநீற்றை குறிப்பிட்ட இடத்தில் மட்டும் தான் பூசுகிறார்கள். நெற்றி, தோள்பட்டை, முழங்கை, மணிக்கட்டு, மார்பு ஆகிய இடங்கள் விபூதி பூசுவார்கள். இந்த இடங்களில் நீர் கோர்த்துவிடும். அதன் காரணமாக வலி ஏற்படும். இந்த இடங்களில் உள்ள மூட்டுகளில் தங்கும் அதிகப்படியான நீரை இந்த விபூதி உறிஞ்சிடும். எனவேதான் குழந்தைகளுக்கு, குழந்தை பெற்றவளுக்கு, நோய்வாய் பட்டவர்களுக்கு தலைக்கு ஊற்றிய தும் உச்சியில் திருநீற்றை அழுத்தித் தேய்ப்பது வழக்கம். இதன் காரணமாக மண்டையில் நீர் தேங்குவது தவிர்க்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சிறு குழந்தைகளுக்கு சளி பிடித்துத் திணறும் போது வரட்டியின் சாம்பலை மூட்டையாக கட்டித் தலைய ணையாக உபயோகிப்பது வழக்கம். இதன் மூலம் திணறல் குறைந்து சளி முறிந்து வெளியேறி விடும். ஆனால் இன்று நாகரீ கம் காரணமாக முகப்பவுடரைக் குழைத்துப் பட்டை போட்டுக் கொள்கிறார்கள்.

சைவ சமயம் திருநீற்றை முன்னிலைப் படுத்துவது யாவரும் இறுதியில் பிடிசாம்பல் ஆவது உறுதி என்று உணர்த்தவே. வைணவ சமயம் திருமண்ணை முன்னிறுத்துவதும் அந்த வகை யில் தான். எல்லோரும் ஒரு நாள் மண்ணோடு மண்ணாவது திண்ணம் என்பதைத்தான் திருமண் உணர்த்துகிறது.

அடிபட்டு ரத்தக்கட்டு ஏற்பட்டால் பசுஞ்சாணத்தை நன்கு பிசைந்து உருண்டையாக்கி விறகு அடுப்பில் போட்டு எரிக்க வேண்டும். உருண்டையில் ஆவி பறக்க சூடு வரும்போது அதை ஒரு பருத்தித் துணியில் சுற்றி ஒற்றடம் கொடுத்தால் ரத்தக் கட்டு கரையும். இது இன்றும் கிராமங்களில் நடக்கும் எளிய வைத்திய முறை.

மேலும் பசுவின் பித்தப்பையில் இருந்து எடுக்கப்படும் "கோரோசனை" பிறந்த குழந்தைகளுக்கு சிறந்த மருந்தாகும். சில குழந்தைகள் பிறக்கும் போது பிரசவக் கழிவுகளைக் குடித்து விடும். இது நெஞ்சில் கபமாக கட்டித் தொந்தரவு கொடுக்கும். இதற்கு அற்புத மருந்து கோரோசனை ஆகும். இது குடித்த அழுக்குகளை மலத்தின் வழியே வெளியேற்றிவிடும். மேலும் குரல் நாண்களை வலுப்படுத்தி நல்ல குரல் வளம் கூட்டும். எனவே தான் ஆணித்தரமாகப் பேசுபவர்களை கோரோசனை நிறைய குடித்தவர்கள் என்று கூறுவது வழக்கம்.

மேலும் இன்று பெரியம்மை தடுக்கப்பட்டமைக்குக் காரணம் பசுக்களே. அம்மைக் கிருமிகளை பசுவின் கன்றுகளு க்குச் செலுத்தி அந்த அம்மைக் கொப்புளத்தில் இருந்து பெறப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் மருந்தே அம்மைப்பால் எனும் அம்மைநோய் தடுப்பு மருந்தாகும்.

மேலும் பழங்காலத்தில் குழந்தை பிறந்ததும் கையாந்தரை சாறு எடுத்து வீட்டிலேயே கண்மை தயாரிப்பார்கள். அதில் பசு வெண்ணை இட்டுக் குழைத்து உபயோகிப்பார்கள். இதனால் குழந்தைகளின் கண்களில் தீட்சண்யமான பார்வை கிட்டும். கண் நோய்கள் தவிர்க்கப்படும்.

இறந்தும் பசுக்களின் பயன்பாடு அதிகம். இதன் தோல் இசைக்கருவிகளுக்கும் பயன்படுகிறது. காலணி, பர்ஸ், பெல்ட் தோல்பை என பலவற்றிலும் இதன் பயன்பாடு அதிகம். இதன் கொம்புகள் சீப்பு, சின்னஞ் சிறிய சிமிழ்கள் செய்ய பயன்படுத் தப்பட்டன.

இது தவிர ஆன்மீகத்திலும் பசுக்களின் ஆதிக்கம் உண்டு. சைவ சமயத்தில் அன்னையே பசுவாகப் பிறந்து இறைவனை வழிபட்டதாகப் பல்வேறு தல வரலாறுகள் கூறுகின்றன. நாம் ஆண்டவனையே மாடு மேய்க்கும் சிறுவனாக உருவகப்படுத்தி யவர்கள். கோபாலன் என்று கூறி வழிபட்டவர்கள். மேலும் வைணவ சம்பிரதாயத்தில் திருவிழாக்களில் 'வெண்ணைத் தாழி' என்று ஒரு சிறப்பு வழிபாடும் உண்டு.

இறந்தவர்களை எரியூட்டிய பின் மறுநாள் 'பால் ஒளி' என்று ஒரு சம்பிரதாயம் உண்டு. பசும்பாலில் கைகளை நனை த்துப் பின் எரிந்த சாம்பலைக் கலைத்து எலும்புகளை பொறு க்கிச் சில சடங்குகள் செய்து பின் நீரில் இடுவார்கள்.

பாலில் கை நனைப்பது ஏன்? எரிந்த பிணத்திலிருந்து ஏதும் கிருமிகள் தொற்றாமல் இருக்கவே இந்த ஏற்பாடு. டெட்டோல் போன்று கிருமி நாசினியாகப் பயன்பாடும் உண்டு. மேலும் "எட்டு" என்று ஒரு சடங்கு செய்வார்கள்.அன்று மிளகைப் பால் விட்டு அரைத்துப் பாலில் கரைத்து படையில் செய்து அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலை ரத்த சம்பந்தம் உள்ள அனைவரும் தேய்த்து முழுக வேண்டும் என்பது சம்பிராயம் இது ஏன்?

இரத்த உறவுகள் அதிகம் சோக வசப்பட்டு சரியாக உண் ணாமல், உறங்காமல் மன இறுக்கத்திற்கு ஆளாகித் தவிப்பர். அதைத் தவிர்த்து மூளைக் கொதிப்பை மாற்றி மனதை தளர்வு செய்யும் ஆற்றல் இதற்கு உண்டு. அத்துடன் மனமும், உடலும் இயல்பு நிலைக்கு மெல்ல மெல்ல மாற ஆரம்பிக்கும். இத்த கைய அதிசய சக்தி கொண்டது இந்த மிளகுப்பால்.

இந்துக்கள் பசுவை மையமாக வைத்து கோ பூஜை எனும் சடங்கை நடத்துகின்றனர். மணிவிழா, கிருகப்பிரவேசம் போன்ற விழாக்களில் இது கண்டிப்பாக உண்டு. அத்துடன் வீடு கட்ட மனைபோடும் போது முதல் நாள் அந்த மனையில் பசுவையும், கன்றையும் கட்டி வைப்பது வழக்கம். மேலும் புதுமனை புகுவிழாவில் முதலில் பசுவையும், கன்றையும் வீட்டிற்குள் பிர வேசிக்க வைப்பார்கள். அப்போது சிறுநீர் இட்டு சாணம் போட் டால் நல்ல சகுனம் என்று சொல்வது வழக்கம்.

இவையெல்லாம் மறைமுகமான சுற்றுச் சூழல் பராம ரிப்பே. அதாவது தற்போது பலர் கூடும் இடங்களில் 'ப்ளீச்சிங்' பவுடர் தெளிப்பது போன்று, அந்த நாளைய "ப்ளீச்சிங்' தெளிப்பே இவை. எனவேதான் இத்தனை சிறப்பு வாய்ந்த பசுவிற்காக ஒரு தினத்தையே ஒதுக்கினார்கள். அதுதான் மாட்டுப் பொங்கல்.

## நம் முன்னோர்கள் மஞ்சளை அதிகம் உபயோகித்தது ஏன்?

மஞ்சள் மகிமை எனும் சொல்லை நம் முன்னோர்கள் அடிக்கடி கூறுவதுண்டு. உண்மையிலேயே மஞ்சள் மகிமை மிக்கது தான். பெண்களின் முக்கிய முகப்பூச்சு. சருமரோக நிவாரணி. வலிநீக்கி எனப் பல பரிணாமங்கள் மஞ்சளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. எனவே தான் அம்மை நோய் கண்டவருக்கு மஞ்சளும், வேப்பிலையும் அரைத்துப்பூசி குளிக்கச் செய்வர். மேலும் அம்மை நோய் கண்டவருக்கு வெந்நீர் குளியல் கூடாது. எனவே காலையிலேயே ஒரு வாய் அகன்ற பாத்திரத்தில் தண்ணீரை நிறைத்து வேப்பிலை போட்டு வெய்யிலில் வைத்து விடுவார்கள். சூரியனின் கதிர்கள் நீரில் ஊடுறுவி தண்ணீர் சற்றே வெது வெதுப்பாக மாறும். கூடவே வேப்பிலையின் சாரும் நீரில் இறங் கியதும் ஒரு டெட்டோல் குளியலுக்கு இணையான குளியலை சம்பிரதாயம் என்ற போர்வையில் செய்து வைத்தார்கள்.

அத்துடன் ஆரத்தி கரைப்பது என்று ஒரு வழக்கம். மஞ்சள் பொடியில் சிறிது சுண்ணாம்பு கலந்து தண்ணீர் விட்டுக் கரை த்து அந்த நீரை தாம்பாளத்தில் இட்டு விழா நாயகர், நாயகியை சுற்றி வாசல் எதிரே கொட்டுவார்கள். இதுவும் சாணம் தெளிப் பது போல் ஒரு கிருமிநாசினி தெளிப்பே.

வளைகாப்பு, காதுகுத்து போன்ற வைபவங்களுக்கு மஞ் சளில் பிள்ளையார் பிடித்து வைத்து அதற்கு அருகம்புல் சூட்டி வணங்குவது உண்டு. அருகம்புல் ஒரு அற்புத மூலிகை. மஞ்ச ளும், சாணமும், அருகம்புல்லும் இணையும் போது அதன் ஆற்றல் அதிகரிக்கிறது.

இடுப்பு எலும்பை வலுப்படுத்தி பிரசவத்தை எளிதாக்க மஞ்சள் பொடி கலந்து துவரம் பருப்பு சேர்த்துப் பொங்கல் என்ற சத்துணவு வழங்கப்பட்டது. இன்று இதை எல்லாம் மறந்து புதுமை என்ற போர்வையில் செயல் படுகிறோம். பின்னர் அவதி யும் படுகிறோம்.

உலகெங்கும் புற்று நோயின் தாக்குதல் அதிகரிப்பதாக செய்திகள் வந்துள்ளன. இதில் இந்தியாவும் விலக்கு அல்ல. இருந்தாலும் மலக்குடல் புற்று நோய் மட்டும் இந்தியாவில் அதி கம் இல்லை. இது ஏன் என்று மேலை நாடுகள் ஆய்வு செய்யக் களம் இறங்கின. மஞ்சளின் மகிமை காரணமாக மலக்குடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றுத் தாக்கம் குறைவு என்பதே ஆய்வின் முடிவு. புற்று நோய் மட்டுமல்ல மேலும் 250 நோய்களுக்கான எதிர்ப்புத் திறன் மஞ்சளில் உண்டு என்று கண்டு பிடித்து இருக்கிறார்கள். நிறமி யாக சேர்க்கும் மஞ்சளுக்கு இத்தனை மகிமை. இதை உணர்ந்த நம்பவர் மருந்தையே உணவாகக் கண்ட திறன் நம்மை வியக்க வைக்கிறது. இனிமேலாவது நிறத்திற்கு செயற்கைப் பவுடரை உபயோகிப்பது தவிர்த்து மஞ்சளை உபயோகிப்போமா?

மேலும் அந்தக் காலத்தில் பிரசவித்த பெண்களுக்கு மூன்று நாட்கள் மஞ்சளை அரைத்துக் கொடுப்பது வழக்கம். இது புண் ஆற்றும் திறன் கொண்டது. இதனால் பிரசவத்தில் ஏற்படும் உள் மற்றும் வெளிப் புண்கள் எளிதில் ஆறியது. அடி பட்டால் மஞ்சளை அரைத்து சூடு செய்து பற்று போட்டால் வலி வீக்கம் போய்விடும். சளி பிடித்தால் இந்தப் பற்றையே முகத்தில் பூசி வர சளி முறிந்து வெளியாகும். சளி இருமல் இருந்தாலும் மஞ்ச ளும், மிளகும் சேர்த்துப் பசும்பாலில் இட்டுக் காய்ச்சி சாப்பிட இருமல் குறையும்.

குழந்தை பிறந்ததும் அந்த அறையில் பெரிய தாம்பாளத்தில் மஞ்சள் கரைத்த நீரை ஊற்றி வைப்பது வழக்கம். நடுவில் அடுப்புக்கரி ஒரு துண்டு வைப்பது வழக்கம். ஏன் என்று கேட் டால் திருஷ்டி கழிய எனக் கூறுவார்கள்.

மஞ்சள் நீர் சுற்றுச்சூழல் மாசு படாமல் இருக்க காற்றி னிலே இருக்கும் ஈரப்பதத்தை உறிஞ்சவும், கழிவுகளின் வாடை யைத் தவிர்க்கவும் உதவுகிறது. உதரணமாக குளிர்சாதனப்பெட்டி யில் இருந்து வரும் கெட்ட வாடையை போக்க ஒரு கரித் துண்டு வைப்போம் அல்லவா அது போல. அத்துடன் கர்பிணிப் பெண்களுக்கு பலகாரம் செய்து எடுத்துக் கொண்டு போகும் போது கரித்துண்டும், இரும்புத்துண்டும் வைப்பது இதற்காகத் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் பானை வைக்கும் போது சாணத்தில் பிள்ளையார் பிடித்து, அருகம்புல் சூட்டுவது ஏன்?

சாணத்தை நிழலில் வைத்தால் புழு புழுக்கும். ஆனால் அருகம்புல் செருகிய சாணத்தில் புழு உண்டாவதில்லை. இது பிள்ளையார் மகிமை மட்டுமல்ல. அருகம் புல்லின் மகிமையும் கூட. இதன் வீரியம் ஒரு ஆண்டு மட்டுமே. எனவேதான் முதல் ஆண்டு பிடித்தப் பிள்ளையாரை நீரில் கரைத்துப் புதுப் பிள்ளை யாரை நடுவீட்டில் மாடத்தில் வைப்பது. இது இடை விடாது தனது ஆற்றலை வெளியிட்டு சுற்றுச் சூழல் நலம் காக்கும். எனவேதான் ஆல் போல் தழைத்து அருகுபோல் வேரோடி என்ற வாழ்த்து ஏற்பட்டது. ஆலமரம் அடிமரம் இற்றுப் போனாலும் விழுதுகள் தாங்கிப் பிடிக்கும். அது போல் விழுதாகக் குடும்ப த்தைத் தாங்க வேண்டும் என்றே இந்த வாழ்த்து. அருகம்புல் ஒவ்வொரு கணுவிலும் வேர் பிடிக்கும் குணம் கொண்டது இடையே வெட்டுப் பட்டாலும் கணுவில் இருந்து துளிர்த்து தழைக்கும் அது போல் எந்த இடர் வந்து சிதைத்தாலும் சிதை யாமல் குடும்பத்தைக் காக்கும் குணம் வேண்டும் என்றே இந்த வாழ்த்தின் உட்பொருள்.

எனவேதான் அருகம் புல் சாறு என்று ஒரு புதிய அலை இன்று வீசுகிறது. மேலும் பெண் வயதுக்கு வந்ததும் அருகம் புல்லை நல்லெண்ணையில் தோய்த்து உச்சியில் வருகுவது என்ற சம்பிரதாயம் ஏற்பட்டது. புதிய மாற்றம் காரணமாக உடல் ரீதியாக, மன ரீதியாக பல சிக்கல்கள் பெண்ணுக்கு ஏற்படும். அதைச் சமன் செய்யவே இந்த ஏற்பாடு. மேலும் அம்மிக் குழ வியை சுற்றித் தூளியில் இட்டு ஆட்டுவது போன்றவை மறைமுக "செக்ஸ்" கல்வியே. இதை தற்போது பள்ளியில் போதிக்கிறா ர்கள். ஆனால் நம்மவர்கள் சம்பிரதாயம் என்ற போர்வையில் மிக இலகுவாக இவற்றை ஊட்டினர். எனவே பெண் வயதுக்கு வந்ததும் தலைக்கு சுற்றாமல் நிலைப்படி தாண்டக் கூடாது என்று சொல்லி வைத்தனர். ( *http://mangudibalaa.weebly.com/*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் அர்த்தமுள்ள நம் திருமணம், பிள்ளைப்பேறு மற்றும் மரணம் தொடர்பான சம்பிரதாயங்கள்

## திருமணத்தின் போது முளைப்பாரி வளர்ப்பு, அரசாணிக்கால் நடுதல் போன்ற சம்பிரதாயங்கள் ஏன்?

திருமணத்தின் போது பாலிகை வளர்ப்பு என்று ஒரு சம்பிரதாயம் உண்டு. நவதானியங்களை ஐந்து நாட்கள் முன்னரே ஊறப் போட்டு வளர்ப்பார்கள்.அதற்கு தூபதீபம் காட்டுவார்கள். இதனைத் தென் மாவட்டங்களில் "முளைப்பாரி" என்னும் பெரு விழாவாக ஆண்டு தோறும் குறிப்பிட்ட மாதத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுவார்கள். இது தீபாவளி, பொங்கல் பண்டிகைகளை விட முக்கிய விழாவாகும்.

அத்தோடு திருமணத்தின் போது அரசாணிக்கால் நடுவது என்று ஒரு சம்பிரதாயம் உள்ளது. அதாவது பூவரசம் மரக்கிளை இரண்டை கொண்டு வந்து, இந்த இரண்டு கிளைகளையும் பந்தலில் நாட்டி, மஞ்சள் குங்குமம் சந்தனம் பூசி, பூச்சூட்டி, பட்டுக் கட்டி, பூசை செய்த பிறகே திருமண சடங்குகள் ஆரம்பமாகும். திருமணம் முடிந்த பின்னர் இந்த இரண்டு கிளைகளையும் நட்டு மணமக்கள் நீர் ஊற்றி நன்கு பராமரிக்க வேண்டும். மரம் செழித்தால் தான் வாழ்க்கை செழிக்கும் என்று பெரியவர்கள் கூறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் அந்த காலத்திலேயே இது விவசாய விழிப் புணர்வு ஏற்படுத்தும் ஒரு சடங்காகும். மரம் வளர்ப்பு பற்றிய நம் மூதாதையரின் ஆனையே இது. மரம் வளர மழை பெருகும், சுற்றுச் சூழல் சிறக்கும் என்றே இந்த ஏற்பாடுகள். ஆண்மகன் பூவரசம் மரம் போல் உறுதியாக நிமிர்ந்து நிற்க வேண்டும். பெண் தலை குனிந்த பேச்சுடன், கணவனை அனுசரித்து, வளை ந்து கொடுத்து இல்லறம் காண வேண்டும் என்பதே இதன் தார்ப்பரியமாகும்.

## திருமணத்தின் பின் கட்டுசாதம் கொடுப்பது, பெரியவர்களின் காலில் விழுந்தால் பணம் கொடுப்பது ஆகிய சம்பிரதாயங்கள் ஏன்?

திருமணத்தின் பின் கட்டுசாதம் கட்டிக் கொடுப்பார்கள். பத்து பசையோடு போனால் தான் உறவு ஒட்டும் என்று நம் பெரியவர்கள் கூறுவார்கள். உண்மையில் இதன் பிண்ணணி என்ன?

அந்த காலத்தில் வாகன வசதியும், ஒட்டல் வசதியும் இருக்கவில்லை. எனவேதான் வழியில் பசியாறிச் செல்லும் வகை யில் கட்டுசாதம் என்ற சம்பிரதாயத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். கூடவே பலகாரச் சீரும் அனுப்புவார்கள். இன்று விமானத்தில் சென்றால் கூட இது தொடரும் அதிசயத்தைக் காண்கிறோம். அர்த்தம் புரியாமல் அனைவரும் மேற்கொள்ளும் சம்பிரதாய மாக இது மாறி விட்டது. மணமகன் வீட்டில் ஆடம்பரமாக விருந்து ஏற்பாடு செய்யும் போது இந்த கட்டுசாதக் கூடை வீணாக குப்பைக்குப் போகிறது.

அடுத்தது பெரியவர்கள் காலில் விழுந்தால் பெண்ணுக்கும், மாப்பிள்ளைக்கும் தனித்தனியே பணம் கொடுப்பார்கள். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யோடு சேராது. ஏன் என்றால் புது மணமக்களின் கை செலவுக்காக ஏற்படுத்தப்பட்ட சம்பிரதாயம் இது.

தற்போதும் சில குடும்பங்களில் ஒரு பழக்கம் உண்டு. குறிப் பாக இது கிராமத்தில் இன்றும் நடைபெறுகிறது. இவ்வாறு பெண் கிடைக்கும் பணத்தை அப்படியே ஒரு ஆட்டுகுட்டியோ, அல்லது கன்றுக்குட்டியோ பணத்திற்கு ஏற்ப வாங்கிக் கொடுத்து விடுவார்கள்.அதன் மூலம் வரும் வருமானம் பெண்ணின் சொந்த செலவுக்கு மட்டுமே பயன்பட வேண்டுமாம். நம் முன்னோருக்கு எவ்வளவு உயர்ந்த சிந்தனை.

## திருமணத்தின் போது மெட்டி, மூக்குத்தி, தாலி அணிவிப்பதன் அறிவியல் காரணம் என்ன?

திருமணத்தின் போது மெட்டி அணிவிப்பது என்பது நமது சம்பிரதாயமாகும். மெட்டி அணியும் விரலுக்கும், கருப்பைக்கும் நேரடித் தொடர்பு உள்ளதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். அது விரலில் உருளும் போது அந்த நரம்புகள் நன்கு தூண்டப்பட்டு கரு உருவாகக் காரணமாக அமைவதாகவும் கூறப்படுகிறது. சில சமூகத்தில் இளம் பருவத்திலேயே மெட்டி அணிவிக்கும் பழக் கம் உண்டு. இது வரவேற்கத்தக்க விஷயமே. தற்போது நாகரீ கம் என்று அனைத்து விரல்களிலும் மெட்டி அணிவது பழக்க மாக உள்ளது. இது தவறு.

அது போல மணமகள் மூக்கு குத்தி மூக்குத்தி அணிந் திருக்க வேண்டும். மூக்கு குத்தவில்லை என்றாலும் திருமணத்தின் போதாவது மூக்கு குத்த வேண்டும் என்பது கட்டாயமாகும். இது ஏன்?

மூக்குத்தியின் தங்கத் திருகாணி வழியே மூச்சு வெளியேறும் போது அதே காற்றைக் கணவனும் சுவாசிப்பான். அது அவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியமாக வாழ வழி வகுக்கும். தங்கபஸ்பம் எப்படி செயல்படுகிறதொ அப்படி. எனவே தான் விதவை மணம் அங்கீ கரிக்கப்படாத அந்த நாளில் விதவைகள் மூக்குத்தி அணிவது தவிர்க்கப்பட்டது. இந்த அறிவியல் சாத்தியமா என்பது நமது கேள்வி. புகைபிடிக்கும் போது அந்தப் புகை அருகில் உள்ளவர் களுக்கும் புகையின் பாதிப்பு ஏற்படுகிறதே, அது போலவே மூக் குத்தி சுவாசம் அருகில் இருக்கும் கணவனுக்கும், வயிற்று சிசுவு க்கும் கவசமாக அமைகிறது.

மேலும் பெண்களுக்கு தாலி அணிவிப்பது ஏன்? ஆண் தலை நிமிர்ந்து நடப்பவன். அவன் பார்வையில் தாலி படும் போது இவள் வேறு ஒருவனுக்கு உரிமையானவள். இவளை தாயக நினைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். அது போல பெண் தலை குனிந்து நடப்பவள். அவள் எப்படி திரு மணம் ஆன ஆண்மகனை அடையாளம் காண்பது? எனவே தான் திருமணமான ஆணுக்கு கால் பெருவிரலில் மெட்டி அணிவிக்கும் பழக்கம் ஏற்பட்டது. ஆனால் இன்று மெட்டி அணிவித்த ஒன்று மறுநாளே கழற்றி விடுகிறார்கள். மேலும் தற்போது ஆண்கள் சப்பாத்து, காலுறை, அணிவதால் அதைக் கண்டு பிடிப்பதும் சிரமமே?

## திருமணத்தின் பின் புது மணமக்களை மறுவீடு, தீபாவளி, பொங்கல் என்று பல அழைப்புகள் ஏன்?

திருமணத்தின் பின் புது மணமக்களை மறுவீடு அழைப்பு தீபாவளி, பொங்கல் என்று பல தடவைகள் அழைப்பார்கள். மரு மகன், அவரது வீட்டார் பற்றிய விபரம், அவர்களது குண நலன் கள், மற்றும் மகளை அவர்கள் எப்படி வைத்து இருக்கிறார்கள் என்று அறியவும், அதன் மூலம் இரு வீட்டாரும் தமக்குள்ள ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துணர்வை ஏற்படுத்தி நட்பை வளர்த்துக் கொள்ளவே இந்த அழைப்புக்கள் எல்லாம் நடைபெறுகின்றன.

மேலும் பெண் ஒரேயடியாக மணமகன் வீட்டிலேயே தங்கினால் அவளால் பிறந்த இடத்தை முற்றிலும் மறக்க முடியாமல் தவிப்பாள். இதனால் புகுந்த வீட்டில் சரிவர ஒன்றிப்போக முடியாது. இந்த சிக்கலைத் தீர்க்கவே இந்த ஏற்பாடு. ஆனால் சில இடங்களில் இது இன்று பெண் வீட்டில் பிடுங்கித் தின்னும் சம்பிரதாயமாக மாறிவிட்டது துரதிருஷ்டமே.

## பெண்ணை 5ஆம் மாதம் 5 பழங்களை பார்க்க வைத்து அழைத்து, விதவிதமான பலகாரங்கள் செய்து கொடுப்பது ஏன்?

பெண் கருவுற்றதும் 5ஆம் மாதம் ஐந்து விதமான பழங்கள் வைத்துப் பார்த்து அழைத்து வரவேண்டும். பின்னர் வளர்பிறையில் பச்சிலை பிழிவது என்று ஒரு சம்பிரதாயம் உண்டு. கர்ப்பிணிக்கு அதிக சத்து சேர வேண்டும் என்று பழம் வைத்து அழைக்கும் சம்பிரதாயம் ஏற்பட்டது. மேலும் இக்காலம் போல் அக்காலத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்குத் தடுப்பு ஊசி போன்றவை கிடையாது, எனவே வருமுன் காப்பாக ஐந்து மூலிகைகளை நசுக்கி சாறு எடுத்து கர்ப்பிணிகளுக்கு கொடுப்பது வழக்கம். மேலும் பெண்ணுக்கு இந்த சமயத்தில் தாய் வீட்டு ஞாபகம் வருவது இயற்கையே. எனவே இந்த இரண்டு காரணங்களுக்காகவும் 5ஆம் மாத அழைப்பு ஏற்படுத்தப்பட்டது.

பின்பு விதவிதமான பலகாரங்கள் செய்வது, கர்ப்பிணி ஆசைபட்ட உணவுகளைச் செய்து தருவது போன்ற சம்பிரதாயங்கள் நடைபெறும். மசக்கையினால் இருக்கும் பெண்ணுக்கு சாதாரண உணவு வகைகள் ருசிக்காது. அதற்காக இந்த விஷேட உணவு ஏற்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் கருவுற்ற பின் நடத்தப்படும் அறிவியல் சம்பிரதாயங்களும்,சடங்குகளும்

கருவுற்றிருக்கும் பெண்ணுக்கு தலைக்கு எண்ணை தேய்த்துக் குளிக்கும் அன்று வெற்றிலையில் குங்குமப்பூ வைத்துக் கொடுப்பது வழக்கம். இதுவும் ஒரு வருமுன்காப்பு நடவடிக்கையே. சளி, சுரம் போன்றவை வராது தடுக்கும் ஆற்றல் குங்குமப் பூவிற்கு உண்டு.

அடுத்து ஏழாம் மாதத்தில் வளைகாப்பு விழா, எட்டாம் மாதம் சீமந்தம் போன்றவை நடைபெறும். எவ்வளவு பணக்காரர்களாக இருப்பினும் கை நிறைய கலர் கலராக கண்ணாடி வளையல்களை அணிவிப்பார்கள். இதில் ஒரு பெரிய உளவியல் தத்துவமே ஒளிந்து இருக்கிறது.

கண்ணாடி வளையல்கள் கனமானவை. பல்வேறு நிறங்கள், கலகலவென இனிய ஒலி, இதன் காரணமாகவே நம் முன்னோர் வளைகாப்பு விழாவுக்கு கண்ணாடி வளையல்களைத் தேர்வு செய்தனர். பெண்களின் முழங்கைக்குக் கீழே மணிக்கட்டு வரை கருப்பையைக் சார்ந்த வர்மப் புள்ளிகள் உண்டு. கனமான கண்ணாடி வளையல் அணியும் போது அந்த புள்ளிகள் அழுத்தப் படுகின்றன. அடிக்கடி கைகளை மேல் நோக்கி உயர்த்தும் போது சர்றென்று கீழிறங்கும் வளையல்கள் அந்த புள்ளிகளுக்கு சரியான அழுத்தம் அதாவது அக்குபிரஷர் (ஊசிவழி அழுத்த சிகிச்சை) செய்கின்றன. அதன் காரணமாக கருப்பை நன்கு செயல்பட்டு குழந்தை ஆரோக்கியமாக வளர வழி செய்கிறது. பல்வேறு நிறங்கள் மனதுக்கு ஆரோக்கியம் அளிக்கும். இனிய ஒலி இன்னிசையாக மாறி செயல்படுகிறது.

மேலும் கர்பிணிகள் படுக்கும் போது வளையல் அணிந்த கைகளை தன் வயிற்றில் மீதே வைத்துக் கொள்வார்கள். அந்த ஓசையை கருவில் இருக்கும் குழந்தை கேட்டுக் கேட்டு மான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீகமாக தன் தாயை அடையாளம் காண்கிறது எனக் கூறப் படுகிறது. தாயின் வயிற்றில் உள்ள சிசுவிற்கு மனமும், சிந்தனை யும் உண்டு என்று இன்றைய விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இதை வாய் பிளந்து நம்பும் நாம், இதையே நம் முன்னோர்கள் அன்றே கண்டுபிடித்து, அதற்கிசைவான காரியங்களையும் சம்பிர தாயங்களாக செய்வதைக் கண்டு வியப்படைவதில்லை. அதை நம்பாமல் வெறும் சாத்திரங்கள் என கேலி செய்து சிரிக்கிறோம்.

மகாபாரதத்தில் அர்ச்சுனன் மகன் அபிமன்யு தாயின் கருவில் இருந்த போதே சக்கர வியூகத்தை எப்படி உடைப்பது என்று கிருஷ்ணன் மூலம் கேட்டு உணர்ந்தாகவும், குருஷேத்திரப் போரில் அதன் படி செயல்பட்டதகவும் நூல்கள் கூறுகின்றன.

விஷ்ணு புராணத்தில் நாரதர் கூறிய "ஓம் நாரயண" என்ற மந்திரத்தை தாயின் கருவில் இருந்து கொண்டே கேட்டு வளர் ந்த பிரகலாதன் விஷ்ணுவையே தனது கடவுளாகக் கொண்டு, தந்தை இரண்யகசபுவின் தண்டனைகளில் இருந்து தப்புகிறான். இறுதியில் பிரகலாதன் கேட்டுக் கொண்டபடி விஷ்ணு பகவான் நரசிம்ம அவதாரம் எடுத்து இரண்யனை அழிக்கிறார். இதை யெல்லாம் கட்டுக்கதை என்ற நாம், மேலை நாட்டு விஞ்ஞா னிகள் சொல்வதை மட்டும் நம்புகிறோம். நம் முன்னோர்கள் மீது நமக்கே நம்பிக்கை இல்லாமல் போனது காலத்தின் கோலமா, அல்லது அறியாமையா?

எப்போதும் வளையோசை மட்டுமே கேட்பது சாத்திய மில்லை அல்லவா? அந்த ஒலியிலிருந்து மற்ற ஒலிகளை குழந் தைக்கு அறிமுகப்படுத்த என்ன செய்வது? அதற்கும் வழி கண்டார்கள் நம் முன்னோர்கள். குழந்தை பிறந்து முதல் பதி னாறாம் காப்பு வரை குழந்தையை நீராட்டியதும் இரண்டு வளையல்களைத் தலைச்சுற்றித் தரையில் உடைக்க வேண்டும். அப்போது வேறு ஒலி பழகி மெல்ல மெல்லத் தாயின் குரல் பழக ஆரம்பிக்கும். இதை திருஷ்டி கழிப்பது என்று பூடகமாக சொல்லி வைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சமூகங்களில் எத்தனை பிள்ளைகள் பிறந்தாலும் வளையல், கட்டுசாதம், சீர் என்பவை கட்டாயமாக உண்டு. இது வரவேற்கத் தக்க விஷயமே. அடுத்து வளைகாப்பு விழாவின் போதும், குழந்தைக்கு பதினாறாம் காப்பிடும் போதும் முதலில் வேப்பிலை ஈக்கில் செய்த காப்பையே இடுவார்கள். வேப்பிலை நல்ல கிருமிநாசினி. எனவே அனைவராலும் வளையல் அணிவிக்கும் போது எந்த வித தொற்று நோயும் அண்டாமல் இருக்கவே இந்த ஏற்பாடு.

அத்தோடு குழந்தையைக் குளிப்பாட்டியதும் ஒரு முறத் தைப் பசும் சாணியால் நன்கு மெழுகி, அதில் நெல்லைப் பரப்பு வார்கள். அதன் மேல் வேப்பிலையைப் பரப்பி அதில் குழந் தையை இட்டு லேசாக புரட்டுவார்கள். நெல் குழந்தையின் மேனியில் குத்தும். அதற்கு மாற்றாக வேப்பிலை ஒற்றடம். இது சிறந்த நோய் எதிர்ப்பு ஆற்றலாக அமைகிறது..

மேலும் கர்ப்பிணிக்கு ஐந்தாம் மாதத்தில் பச்சிலை பிழியும் சடங்கில் வேப்பிலை, துளசி, மூக்கரட்டை, வில்வம், தும்பை போன்ற ஐந்து மூலிகைகளின் சாற்றை குடிக்கக் கொடுப்பார்கள், அது தற்போதைய தடுப்பூசிக்கு நிகரானது. அதை தற்போது ஏழாம் மாதம் அல்லது ஒன்பதாம் மாதம் வளையணி விழா வோடு சேர்த்துச் செய்கிறார்கள். அலைச்சலையும், செலவையும் தவிர்க்கவே இந்த ஏற்பாடு. இது தவறு அந்த அந்த மாதத்திற் குறிய தடுப்பு நடவடிக்கைகளைக் குறைவின்றி செய்ய வேண் டும். இதுவே தாய், சேய் இருவருக்கும் நலம் பயக்கும்.

அடுத்தது சீமந்தம். இது எட்டாம் மாதம் நடக்கும் ஒரு சடங்கு. பல்வேறு மூலிகைகளை இடித்து, சாறு பிழிந்து, அதை தங்கம் வெள்ளிப் பூவில் சேகரித்து கர்ப்பிணியின் மூக்கின் வழியே இழுக்கச் செய்வார்கள். மூலிகைச்சாறு தங்க வெள்ளிச் சத்துடன் சுவாசம் வழியே கருப்பையை சென்றடைந்து குழந்தை யின் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஐந்தாம் மாதம், ஏழாம் மாதம், ஒன்பதாம் மாதம், என்று பெண் பிறந்த வீட்டுக்கு வரும் போது அவள் விரும் பியதை சாப்பிட்டு, விரும்பியவர்களுடன் அளவளாவி, புடவை, வளையல் என பல பரிசுகளை சுமக்கும் போது தாய்க்கு மனம் மகிழும். அந்த மகிழ்வு குழந்தையின் மன நலத்திற்கும், உடல் நலத்திற்கும் ஏதுவாக அமையும். இப்படி மருத்துவ ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் அமையப் பெற்றவையே நமது சம்பிர தாயங்கள்.

அடுத்தது பிரசவம். அப்போது ஏற்படும் வலியின் அளவை 12 விழுக்காடு என்று மருத்துவ வல்லுநர்கள் நிர்ணயித்து இருக்கி ன்றனர். அதில் ஆறு விழுக்காடு வலியைத் தாங்கும் வலிமை கூட யாருக்கும் கிடையாது. ஓர் ஆணுக்கு கூட இந்த வலியைத் தாங்க முடியாது. உடனடி மரணம் ஏற்படும் என மருத்துவர்கள் சொல்கின்றனர். இப்படி ஆண்களால் கூட தாங்க முடியாத வலியை பிரசவத்தின் போது பெண் தாங்குகிறாள். வலியை தாங் கித் தாங்கியே மனஉறுதியில் பெண் வலிமை படைத்தவள் ஆகி றாள். எனவே தான் பெண்ணை சக்தி என்று அழைக்கிறோம்.

எனவே அந்த வலியை ஆண்கள் உணர வேண்டும். அந்த சமயத்தில் மனைவிக்குத் துணையாய் கணவன் அங்கிருக்க வேண் டும் என்று ஒரு புதிய அலை தற்போது மேலை நாடுகளில் பரவி வருகிறது. இதில் நம்மவருக்கு உடன் பாடில்லை. அதற்கு அவர்கள் கூறும் காரணம், பெண்களின் அவஸ்த்தையை நேரில் காணும் ஆணுக்கு அதன் பின் இல்லறத்தில் நாட்டம் ஏற் படாது என்பதுதான் அவர்களது வாதம். எனவே தான் 15ம் நாள் தலைக்குத் தண்ணீர் விட்ட பின்னர் தான் ஆண்கள் பார்க்கலாம். கணவன் உட்பட அனைவருக்கும் இந்த சட்டம் பொருந்தும்.

தேசபிதா காந்தி அவர்கள் தனது சுயசரிதையில் இது பற்றிக் குறிப்பிடுகிறார். தென்னாப்பிரிக்காவில் காந்திஜியின் கடைசிக் குழந்தை பிறந்தது. அப்போது உடனிருந்து உதவ ஒருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. காந்திஜியே உடனிருந்து உதவினார். அப்போது மனைவியின் அவஸ்த்தையைக் கண்ட அவர் பிரம்மச்சரியம் மேற்கொண்டார். இருமுறை அதில் தவறி விட்டதாகவும் அவரே கூறுகிறார், எனவே தான் அவர் மகாத்மா.

ஆனலும் தலைச்சன் பிள்ளைக்காரிக்கு பிரசவம் பற்றிய பயம் நீங்க பெண்ணுக்கு அன்பான கருத்துரை (கவுன்சிலிங்) தேவை என்பதையும் அவர்கள் உணர்ந்து இருந்தார்கள். அந்த வகையில் அவர்கள் தேர்ந்தெடுத்தது ஒரு அற்புத கவுன்சிலிங் முறை.

வளைகாப்பு போடும் போதே அக்கம் பக்கத்தினர் அழைக்கப் படுவார்கள். அவர்கள் வீட்டில் கர்ப்பிணிகள் இருக்கின்றனரா என்று தெரிந்து கொள்வார்கள். இது அடுத்தடுத்த தெருவுக்கும் பரவும். அடுத்து யாருக்கு எப்போது பிரசவம் என்ற புள்ளி விபரக் கணக்கெடுப்பு நடக்கும்.

யார் வீட்டில் முதலில் குழந்தை பிறந்தாலும், வலி எடுத்தவுடன் மருத்துவப் பெண்மணிக்கு ஆள் அனுப்பும் போதே தலைச்சன் பிள்ளைக்காரி வீட்டிற்கும் தகவல் பறக்கும். நள்ளிரவு நேரம் என்றாலும் அவர்கள் வீட்டு பெரியவர்களுடன் தலைச்சன் பிள்ளை கர்ப்பிணியும் வருவாள். இதன் மூலம் பிரசவம் பற்றிய நேரடி விளக்கம் அவளுக்குக் கிடைக்கும். பயம் விலகும். தலைச்சன் பிள்ளைக்காரி மனதளவில் பிரசவத்தை எதிர்கொள்ளத் தயாராவாள்.

இந்த சம்பிரதாயத்திற்கு ஜாதி, மதம், ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் எதுவும் கிடையாது. பரஸ்பரம் கர்ப்பிணிகள் என்ற தகுதி மட்டுமே தேவை. சண்டைக்காரர்களும் இதில் விலக்கல்ல. பகையாளிகள் அழைக்காவிட்டாலும்,அப்படி அழைத்தும் போகாவிட்டாலும் என்ன செய்வது? அதற்கும் ஒரு சம்பிரதாயத்தை நம் முன்னோர்கள் வைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது குழந்தைக்கு நஞ்சுக் கொடி நறுக்கு முன் தலைச்சன் பிள்ளைக்காரியிடம் குழந்தையை காட்ட வேண்டும். அப்போது தான் பிறந்த குழந்தையும், பிறக்கப் போகும் குழந்தையும் நலமாய் இருப்பார்கள். அதற்கு அப்புறம் பகையாவது ஒன்றாவது! எப்படி நம் முன்னோர்களின் வியூகம்.

## குழந்தை பிறந்தபின் நடத்தப்படும் அறிவியல் சம்பிரதாயங்களும்,சடங்குகளும்

குழந்தை பிறந்த பின் அக்குழந்தையின் நலனுக்காகவும், தாயின் நலனுக்காகவும் சம்பிரதாயம், சடங்கு என்ற பெயரில் பல அறிவியல் விஷயங்கள் நடக்கும். குழந்தை விடாது அழுதால் திருஷ்டி பட்டு விட்டது என்று கூறி திருஷ்டி சுற்றுவார்கள். அது எப்படி?

மூன்று அல்லது ஐந்து மிளகாய் வற்றல்களை ஈக்குச்சியில் கோர்த்து, அதன் நுனியில் ஒரு வெள்ளை பருத்தி துணியைச் சுற்றி, நல்லெண்ணையில் தோய்த்துப் பற்ற வைப்பார்கள். அதைக் குழந்தை பார்க்கும் வண்ணம் இடம் வலமாகச் சுற்று வார்கள். எதையாவது கண்டோ, அல்லது கனவு கண்டோ அதே நினைவில் சொல்லத் தெரியாது அழும் குழந்தை இந்த புதிய ஒளியைக் கண்டு அதிசயிக்கும். அதனுடைய பார்வை ஒளியின் மீதே பதியும். அதன் ஆழ்மனதில் படிந்த பயஉணர்வு மெல்ல மெல்ல அகலும். இந்த வெளிச்சம் மட்டுமே மனதில் நிறையும். அத்துடன் மிளகாயும், எண்ணையும் கலந்த புகை நெடியை சுவாசித்து சுவாசம் சீரடையும். நெஞ்சில் சளி இருந்தால் இருமல் தும்மல் மூலமாக வெளியேறும். சிறு குழந்தைகளுக்கு சிவப்பு, வெள்ளை நிறங்கள் மட்டுமே இனங்காண முடியும் எனவே இந்த ஏற்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்த குழந்தைகளுக்கு உப்பு மிளகாய் சுற்றிப் போடுவார் கள், கண் கொட்டாச்சியை நன்கு எரியவிட்டு அதில் உப்பு, மிளகாயை தலையைச்சுற்றி போட்டு வாசலில் கொட்டுவதும் வழக்கம். கண் கொட்டாஞ்சி மருத்துவ குணம் நிரம்பியது. எனவே இந்த அனல் மூலம் உடம்பில் உள்ள கெட்ட நீர் வியர்வையாக வெளியேறிவிடும்.

மேலும் நம் உடலைச்சுற்றி ஒரு ஒளிவட்டம் உண்டு. அதற்கு ஆரோ என்று பெயர் (கடவுளின் தலைக்குப் பின்னே மட்டுமே காலண்டரில் ஒளி வட்டத்தை பார்க்கிறோம்) இந்த ஒளி வட்டத்தை மற்றவர்களின் எதிர்மறை எண்ணங்கள் உறிஞ் சும் போது நமது ஆற்றல் குறையும். நமது ஆற்றலை பலப் படுத்தி எதிரியின் ஆற்றலை குலைக்கவே இந்த ஏற்பாடு. எனவேதான் "ரெய்கி" என்ற மருத்துவ முறையில் உப்பு முக்கிய பங்கு வகிக்கிறது, ஆலயங்களில் உப்பு வாங்கிக் கொட்டுவதும் அதற்காகத்தான். அவ்வளவு ஏன் அந்நியரான ஆங்கிலேயரின் ஆற்றலை ஒடுக்க முக்கிய காரணமே அண்ணல் காந்திஜியின் உப்பு சத்தியாக்கிரகம் தான்.

## எண்ணெய்க் குளியலில் இவ்வளவு விஷயங்களா?

ஒரு குடும்பத்தில் ஆணும் பெண்ணும் தாம்பத்ய சுகத்தில் ஈடுபடும் போது ஒரு குளிர்ந்த உடல், ஒரு வெப்ப உடல் எனும் சேர்க்கை நிகழ்கிறது.

ஒரு வெளிநாட்டுப் பெண்மணியின் ஆய்வில் அடுத்தடுத்த கட்டங்கள் மிக சுவாரஸ்யமானவை. அதில் பெண்கள் செவ் வாய், வெள்ளியில் எண்ணெய் தேய்த்து தலைமுழுக்கு போடுவ தும் ஒன்று. நல்லெண்ணெயில் ஊறிக் குளிப்பது என்பதே அந்த பெண்ணுக்கு ஓர் அதிசயமன விஷயமாகத்தான் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த பெண்ணே குளித்தும் பார்த்த போதுதான் அதன் சுகமும் விளங்கியது. அன்றெல்லாம் மிக ஆழ்ந்த உறக்கம். கண்களிலும் அப்படி ஒரு குளிர்ச்சி. ஜலதோஷம் கூட பிடித்துக் கொண்டது. பிறகுதான் அந்த பெண்மணிக்கு பல புதிய செய்தி கள் தெரிய வந்தன. வீட்டு வேலைகளால் உண்டாகும் உஷ்ண த்தை குறிப்பாக, அடுப்படியில் விறகு அடுப்பு அருகே அமர்ந்து சமைக்கும் போது உருவாகும் வெப்பத்தை தணிக்கத் தான் எண் ணெய்க்குளியல். எல்லாவற்றுக்கும் மேலாக உடம்பின் ரோமக் கால்கள் நல்லெண்ணெயால் நெகிழ்ந்து போகின்றன. தோலிலும் பளபளப்பு கூடுகிறது. உடம்பு வெளியிடும் வெப்பம் குறைகிறது.

இந்த எண்ணெய்க் குளியலையும் செவ்வாய்,வெள்ளி என்று வைத்ததன் பின்னே ஒரு நுட்பமான காரணம் இருந்தது. பெண்க ளுக்கு செவ்வாய், வெள்ளி என்றால் ஆண்களுக்கு புதனும் சனி யும். இதனால் ஒரு குடும்பத்தில் ஆணும் பெண்ணும் தாம்பத்ய சுகத்தில் ஈடுபடும்போது ஒரு குளிர்ந்த உடல், ஒரு வெப்ப உடல் என்கிற சேர்க்கை நிகழ்கிறது. இது கருச்சேர்க்கைக்கும் பெரிதும் உதவுகிறது.

எண்ணெய்க் குளியலை அடுத்து பொட்டு வைத்துக் கொள் ளும் அந்த கலாச்சாரம்.புருவ மையத்தில் வைக்கப்படும் மஞ்சள் மற்றும் செந்தூரம் கலந்து உருவாக்கப்பட்ட குங்குமம் இரு விதங்களில் செயலாற்றுகிறது. ஒரு பெண்ணைப் பார்ப்பவரின் பார்வைத் தாக்கத்தை குங்குமப்பொட்டு சிதற அடிக்கிறது. கழு த்து உடம்பில் புருவ மையத்தில் தான் ஆக்ஞா சக்கரம் உள்ளது. அது அங்கு தேங்கும் துர்நீரை உறிஞ்சி ஆவியாக்கி அந்த பாகத்தை பாதுகாக்கிறது.இதனால் பார்வைக்கோளாறு தவிர்க்கப் படுவதோடு நுட்பமாக சிந்திக்கும் ஆற்றலும் வளர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு நேரத்தில் அரச மரம், புளியமரம் அருகில் போகாதீர்கள் என்று நம் பாட்டிமார் சொல்வது ஏன்?

இரவு நேரத்தில் அரசமரம், புளியமரம் ஆகியவற்றில் பேய் குடி கொண்டிருக்கும், அதனால் அந்தப் பக்கம் போகக் கூடாது என கிராமங்களில் உள்ள பலரும் சொல்வதுண்டு. இதனால் அந்தப் பக்கமே யாரும் போவதில்லை. அப்படி போய் வந்தவர் களும் அடுத்த நாள் காய்ச்சல் வந்து படுத்துக் கிடப்பார்கள். இதை கேள்விப்பட்ட கிராமத்தவர்கள் அவருக்கு பேய் அடித்து விட்டது அல்லது பேயைக் கண்டு பயந்து விட்டார் என்று கூறுவார்கள்.

இப்படிச் சொல்வது உண்மையா? உண்மையிலேயே இம் மரங்களில் பேய் குடிகொண்டிருக்கிறதா? பேயைக் கண்டுதான் அவருக்கு காய்ச்சல் வந்ததா?

உண்மைதான். அரசமரம் அல்லது புளியமரத்தின் கீழ் இரு ந்து வந்தவருக்கு காய்ச்சல் வந்தது உண்மைதான். ஆனால் அதற் குக் காரணம் பேய் அல்ல. இங்கு பேய் இருக்கிறது என்பதெல் லாம் பொய்.

இரவு நேரத்தில் தான் இம்மரங்களில் இருந்து கரியமில வாயு வெளிவரும். இது மனிதர்கள் சுவாசிப்பதற்கு உகந்ததல்ல. மேலும் அவ்விடத்தில் நாம் சுவாசிக்கும் பிராணவாயு மிகக் குறைவாகவே காணப்படும். அதனால் இரவு நேரத்தில் அம்மரங் களின் கீழ் இருப்பவர்கள் நோய் வாய்ப்பட வேண்டி வரும். இதனால் தான் நவீட்டில் உள்ள தாத்தா, பாட்டிமார் இரவில் இம்மரங்கள் இருக்கும் இடத்தின் அருகில் போக வேண்டாம் என்று சொல்லி வைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எலுமிச்சை, மிளகாய் ஆகியவற்றுடன் திருஷ்டி கயிறு கட்டுவது ஏன்?

எலுமிச்சை, மிளகாய் ஆகியவற்றுடன் திருஷ்டி கயிறு என்பது தீய கண்களில் இருந்து நம்மைப் பாதுகாக்கும் என நம்பப்படுகிறது. எலுமிச்சை மற்றும் பச்சை மிளகாய் ஆகியவை நம் சாத்திர, சம்பிரதாயங்களுடன் ஒன்றிப்போன விடயங்களாகும். இது ஓர் மூடநம்பிக்கை என சிலர் கூறுவதுண்டு.

உண்மையில் எலுமிச்சை, மிளகாய் ஆகியவற்றை நாம் சேர்த்துக் கொள்வதற்குக் காரணமாக இருப்பது அவற்றின் அற்புத குணப்படுத்தும் தன்மையே. இவை இரண்டிலுமே பல வைட்டமின்கள் அடங்கியுள்ளன. அதனால் தான் நம் முன்னோர்கள் அதன் பயனை விளக்கும் விதமாக அதனை நம் சடங்குகளில் பயன்படுத்தினர். அதுவே நாளடைவில் ஒரு புகழ் பெற்ற வழக்கமாக மாறி விட்டது.

## ஈமச்சடங்கு முடிந்த பிறகு குளிக்க வேண்டும் என சொல்வது ஏன்?

நாம் இறந்த வீட்டிற்கு அல்லது மாயானத்திற்கு சென்று வந்தபின் குளித்து விட்டே வீட்டுக்கு வர வேண்டும் என நம் முதியோர்கள் கூறுவதுண்டு. மேலும் ஈமச்சடங்கில் கலந்து கொள்பவர்கள் அது முடிந்ததும் உடனே குளிக்க வேண்டும் எனவும் கூறுவதுண்டு. நம்மில் பலர் இதை கடிப்பிடித்தும் வருகிறோம். இப்படிச் செய்யாவிட்டால் பிரேத ஆத்மாக்கள் உங்களை பிடித்து விடும் என்ற மூட நம்பிக்கை தான் இதற்கு காரணம் என சிலர் கூறுவதுண்டு.

ஆனால் உண்மை அதுவல்ல. இது நுண்ணுயிர்கள் அல்லது நோய்க்கிருமிகள் சம்பந்தப்பட்ட விடயமாகும். ஒருவர் இறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு அவரின் உடல் கொஞ்சம் கொஞ்சமாக அழுகத் தொடங் கும். ஈமச்சடங்கில் கலந்து கொள்பவர்கள் இறந்த நபருக்கு அரு கில் தான் இருக்க வேண்டி வரும்.

இதனால் அழுகிக் கொண்டிருக்கும் இறந்த உடலில் இரு ந்து வரும் பாக்டீரியாக்களால் அவர்கள் பாதிக்கப்படலாம். அத னால் தான் ஈமச்சடங்கை முடித்த கையோடு, பிற வேலைகளை செய்வதற்கு முன் குளிக்க வேண்டும் என நம் முன்னோரர் கூறி யுள்ளனர். இறந்த வீட்டிற்கோ, மயானத்திற்கோ சென்று வந்தவர்கள் குளித்து விட்டே வீட்டிற்குள் வர வேண்டும் என்ப தற்கும் இதுவே காரணம்.

## பயணத்திற்கு முன் தயிரும், சர்க்கரையும் உண்ண வேண்டும் என்று சொல்வது ஏன்?

வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முன் தயிரும், தேனும் கொடுப்பது நம்மில் பலரின் வழக்கமாக உள்ளது. இது அதிர்ஷ் டமானது என நம்பப்படுகிறது. உண்மையில் இது அதிஷ்டம் சம்பந்தப்பட்டதா? இல்லை. இது உடல் சுகாதாரம் சம்பந்தப் பட்ட விடயமாகும். தயிரில் கல்சியம் மற்றும் புரதம் உள்ளது. கூடவே இயற்கை சர்க்கரையும் சிறிதளவில் உள்ளது.

இதனால் வயிற்றுக்கும், செரிமான அமைப்பிற்கும் இது நல்லதாகும். அதனால்தான் வெளியே செல்லும் முன் இதனை உண்ணச் சொல்கிறார்கள். இதில் குளிர்ச்சி தன்மையும் உள்ளது. அதனால் அழுத்தம் நிறைந்த வேலைகளை செய்ய கிளம்புவதற்கு முன் இதனை உண்ண வேண்டும் என நம் முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாம்பை கொன்ற பிறகு அதன் தலையை நசுக்க வேண்டும் என நம் பாட்டிமார் சொல்வது ஏன்?

பாம்பை கொல்ல முயற்சி செய்பவரை பாம்பு அதன் கண்களால் படம் பிடித்து வைத்துக் கொள்ளும் எனவும், அதன் பின்பு எப்போதாவது அவரைப் பழி வாங்கும் எனவும் கூறு வார்கள். அதனால் அதன் தலையை நசுக்கி கொல்ல வேண்டும் எனக் கூறுவர். ஆனால் அதற்கு சொல்லப்படும் காரணம் தவறா னது.

உண்மையான காரணம் என்னவென்றால் பாம்பை கொன்ற பிறகும் கூட அதன் பல்லில் விஷம் இருக்கும். இதனால் அது இறந்தாலும் ஆபத்தானதே. அதனால் பாம்பின் தலையை நசுக்கி னால் அந்த விஷம் அழிந்து விடும். துண்டிக்கப்பட்ட பாம்பின் தலை எதிர் செயலாற்றி, கடிக்கச் செய்யலாம். இந்தக் காரணத்தி ற்காகவே பாம்பின் தலையை நசுக்கிக் கொல்லச் சொல்வதுண்டு.

## வருடம் ஒரு முறை நாம் ஏன் போகி பண்டிகையை கொண்டாடுகிறோம்?

இன்று டெங்கு, சிக்கன்குனியா, பன்றிக் காய்ச்சல் என்று பல தோற்று நோய்கள் வந்து நம்மில் பலரின் உயிர்களைக் காவு கொள்கின்றன. இதற்குக் காரணம் நம் வீடும், சுற்றுச் சூழலும் துப்பரவு இல்லாமையே. இவ்வாறு நோய்கள் வரக்கூடாது என்பதற்காகத் தான் நம் முன்னோர்கள் போகி எனும் பண்டிகை மூலம் சுத்தமாக்க வேண்டிய பழைய பொருட்களையெல்லாம் எரித்து வீட்டை சுத்தம் செய்து நோய் நொடிகளில் இருந்து தம்மை காப்பாற்றிக் கொண்டனர்.

அது மட்டுமல்லாமல் போகியின் பின்பு வரும் சிவராத்திரி, சித்திரை வருடப் பிறப்பு, நவராத்திரி, தீபாவளி போன்ற பண்டிகைகளுக்கு முன்னரும் தமது வீட்டில் உள்ள அழுக்குகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பரவு செய்து வர்ணப் பூச்சு பூசி வீட்டை அழகு படுத்தினர். இந்த ஆன்மீக கொண்டா ட்டங்களின் பேரில் தம்மை நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள நம் முன்னோர்கள் ஏற்படுத்திய அறிவியல் மிக்க சம்பிரதாயங்களை எப்படிப் பாராட்டுவது?

## பெண்களுக்கு ஆலயங்களில் குருக்கள் அல்லது ஐயர் அந்தஸ்து கொடுக்க இந்து மதம் அனுமதிப்பதில்லை. ஏன்?

எந்த ஒரு காரியத்திற்கும் காரணம் ஒன்று நிச்சயமாக இருக்கும். பிரபஞ்சத்தில் எந்த ஒரு காரியம் நடைபெறினும் அதற்கான காரணம் நிச்சயம் உண்டு. சில காரணங்கள் பாமர மக்களால் விளங்கிக்கொள்ளகூடியதாக இருக்கும். சிலவற்றை பண்டிதர்களாலும் படித்து தெளிவடைந்த சிலரால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். எம்மால் புரிந்து கொள்ள முடிய வில்லை என்பதற்காக காரணங்கள் இல்லை என்று எண் ணுவதோ அல்லது காரணம் புரியாமல் செய்வதோ தவறான தொரு செயலாகும். அந்த தவறை நம்மில் 99 சதவீதமானோர் புரிந்த வண்ணம் உள்ளனர். எம்மால் எல்லா காரியங்களுக்கும் காரணங்களை புரிந்து கொள்ள இயலாது. எனினும் எம்மால் புரிந்து கொள்ள கூடிய வகையில் உள்ள எளிய விடயங்களை தெரிந்து நடந்து கொள்ளலாம் அல்லவா?

இந்துமதத்தின் எல்லா சம்பிரதாயங்களும் ஏதோ ஒரு வகை யில் அறிவியலுடன் சேர்ந்தே பயணிக்கும். இந்து மதத்தில் உள் ளவை அவ்வாறான அறிவியல் சார்ந்த விடயங்களே. இவ் வாறான சில விடயங்கள் இதோ.

பெண்களை ஆலயங்களின் கருவறையிலோ அல்லது சாதார ணமாகவோ மந்திரங்கள் அதாவது சமஸ்கிருத மந்திர உச்சாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணம் செய்யவோ, குருக்கள் அல்லது பிராமண அந்தஸ்து கொடுக்கவோ இந்து மதம் அனுமதிப்பதில்லை. இதற்கான காரணம் என்ன?

உண்மையில் மந்திரங்கள் என்பது வெறுமனே கடவுள் நம்பிக்கை சார்ந்தது மட்டும் அல்ல. அது இயல்பியலுடனும் உரசிச் செல்கிறது. மந்திர ஒலி என்பது அலைகளின் அதிர்வெண் *(Frequency)* சார்பாக உருவாக்கபட்டது. ஒவ்வொரு மந்திரங் களும் ஒவ்வொரு அதிர்வெண்ணில் அமையப் பெற்றது. மந்திர ஒலி என்பது ஒவ்வொரு சுருதியில் அமைந்து இருக்கும். அம் மந்திரங்களை காதால் கேட்கும் போது கடத்தப்படும் அதிர்வு களை விட வாயினால் ஜெபிக்கும் போது, உடலை ஊடுவிச் செல்லும் அதிர்வு, தாக்கம் அதிகம். இந்த அடிப்படை கார ணத்தை முதலாக கொண்டே பெண்கள் மந்திரங்கள் ஜெபிக் கவோ அல்லது பிராமணர்களாகவோ அனுமதிக்க படுவதில்லை.

ஏனெனில் ஆண்களை விட பெண்களின் உடல் நிலை மனரீதியாக வலிமை குறைந்தது. ஆகவே பெண்கள் இம்மந்தி ரங்களை ஜெபிக்கும் போது அதிகளவில் தாக்கபடுவர். அதாவது பெண்களின் மார்பகங்கள், மற்றும் கருப்பைகள், போன்ற பகுதி கள் இந்த அதிர்வுகளை தாங்க இயலாது போகலாம். அதனால் மலட்டு தன்மை மற்றும் பெண்மை சார்ந்த பல தாக்கங்கள் உருவாகலாம். அதைவிட பெண்களின் மாதவிடாய் காரணங்க ளினால் மாதத்தின் எல்லா நாட்களிலும் அவர்களால் பணியை தொடர இயலாமல் போகலாம். இத்தகைய காரணங்களினா லேயே பெண்கள் அனுமதிக்கபடுபவது இல்லை.

அமெரிக்க விஞ்ஞானியான ஸ்ட்ராங்ளர் என்பவர் மந்திர ராஜம் எனப்படும் காயத்ரி மந்திரத்தை ஆராய்ந்து, இது வினாடி க்கு இரண்டு லட்சம் அதிர்வுகளை ஏற்படுத்தும் அபூர்வமானது எனவும், அது ஒலிக்கப்படும் இடத்திலிருந்து சுமார் 1600 மைல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரம் வரை சுற்றுப்புறத்தைத் தூய்மைப் படுத்துகிறது எனவும் கூறியுள்ளார்.

ஹான்ஸ் ஜென்னி எனும் ஆராய்ச்சியாளர் மந்திரங்களின் மகிமையைப் பற்றி ஆராய்ந்தார். இவரது கண்டுபிடிப்புகள் உல கினரை பிரமிப்பின் உச்சத்திற்கே கொண்டு சென்றன. இந்துக்கள் அனைவரும் பெருமை கொள்ளும் விதத்தில் மந்திரங்களைப் பற்றிய அரிய உண்மைகளை இவர் உலகினருக்கு அறிவித்தார்.

## பெண்கள் மாதவிடாய் காலங்களில் ஆலயங்களுக்கு செல்வது அனுமதிக்கப்படுவது இல்லை. இதன் காரணம் என்ன?

இதற்கும் முன்பு குறிப்பிட்ட அதிர்வு சார்ந்த காரணம் இதற்கும் பொருந்தும். சாதாரண காலங்களை விட மாதவிடாய் காலங்களில் பெண்களின் உடல்நிலை பலவீனமாக காணப்படும். அவ்வாறான பலவீனமான சந்தர்ப்பங்களில் ஆலய மந்திர ஒலி அதிர்வுகள் காதினால் கேட்கும் போதே பாதிப்புகளை ஏற்படு த்தலாம் என்பதே பிரதான காரணம்.

அதை விட ஆலயமணி ஒலி, மற்றும் இரைச்சல்கள் பெண் களை எரிச்சல் அடையச் செய்யலாம். அத்துடன் அவ்வாறான நேரங்களில் அலைச்சல்களை தவிர்பதற்காகவே பெண்கள் ஆல யங்களுக்கு செல்வது தடுக்கபட்டது. ஆனால் காலப்போக்கில் துடக்கு என்னும் சொல்லை மட்டும் வடித்து எடுத்து கொண்ட மக்கள் உண்மையான காரணங்களை புரிந்து கொள்ளத் தவறி விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலி, மான், யானை, பசு, நரி, முள்ளம்பன்றி போன்ற மிருகங்களுடன் தொடர்புடைய விநோதமான இந்துக்களின் நம்பிக்கைகளும், அர்த்தங்களும்.

புலித்தோலில் உட்காருவது, மான் தோலில் உட்காருவது பசுஞ்சாணத்தில் அடுப்பு வீடு மெழுகுவது, பசு மூத்திரத்தை தலையில் தெளிப்பது குடிப்பது, யானை லத்தியை காலில் மிதிப்பது, தேநீரில் கலந்து சாப்பிடுவது, யானை முடியை அணிந்து கொள்வது, நரி முகத்தில் விழிப்பது, புலிப்பல், புலிநகம் அணிவது, முள்ளம் பன்றி முள்ளால் தலையில் கோடு போடுவது போன்ற வினோதமான நம்பிக்கைகளை இந்துக்கள் பண்டைய காலம் முதல் கடைப்பிடித்து வருகின்றனர். இதற்கான காரணங்கள் என்ன?

பெரிய ரிஷி முனிவர்களின் படத்தைப் பார்த்தால் கீழே மான்தோல் அல்லது புலித்தோல் இருப்பதைக் காணலாம். நம் தாய்மார் தினமும் இரவில் எல்லோரும் சாப்பிட்டு முடித்த பின்னர் பசுஞ்சாணத்தை வைத்து அடுப்பை மெழுகுவர்.







நம் கன்னிப் பெண்கள் தினமும் காலையில் வாசலைக் கழுவி விட்டு பசுஞ்சாணத்தைக் கலந்து தெளித்து விட்டு கொம் பாஸ் உபகரணங்கள், அடிக்கோல் எதுவும் இல்லாமல் கனகச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதமாக சதுரங்கள், கோணங்கள் வட்டங்களுடன் மாக்கோலம் போடுவார்கள். நம்மில் பலர் மாட்டுச் சாணியையும், எரு வரட்டியையும் வாங்கிச் செல்வார்கள். எங்காவது பசுமாடு மூத்திரம் பெய்தால் ஓடி வந்து கையில் ஏந்தி தலையில் தெளித்துக் கொள்வார்கள்.

நம் தெரு வழியாக வாரத்துக்கு ஒரு முறையாவது யானைப் பாகன் கோவில் யானையை அழைத்து வருவான். நம் தாய்மார்கள் எல்லோரும் வீட்டு வாசலில் அரிசி, வெல்லம் வைத்துக் கொண்டு காத்திருப்பார்கள். அதை வாங்கிக் கொண்டு, கூடவே காசு கொடுத்தால் ஒரு செம்பில் அல்லது வாளியில் வைத்திருக்கும் தண்ணீரைத் துதிக்கையால் உறிஞ்சி சிறுவர்கள் மீது!, கஜலெட்சுமிக்கு யானை அபிஷேகம் செய்வது போல எல்லோரையும் "குளிப்பாட்டி" விடுவான். தெருவில் போகும் யானை அங்கேயே காலைக் கடன்களை முடித்தால் அனைத்து சிறுவர்களும் ஓடிச்சென்று அந்த யானை லத்தி மீது கால்களை வைத்து மிதித்து ஆனந்திப்பார்கள். காலில் சேற்றுப்புண் உடைய பெண் களும் வந்து மிதிப்பார்கள்.



புரோகிதர் பூணூல் போடும் போது பூணூலில் ஒரு மான் தோலை முடித்து வைப்பர். சின்னப் பையானாக இருந்தால் கோவணத்தைக் கட்டி, கையில் அரசங்குச்சியையும் கொடுத்து, இடுப்பில் அரைஞான்கயிறு கட்டும் இடத்தில் முஞ்சிப்புல்லால் கட்டியும் விடுவார். கிராமங்களில் காலையில் தோட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரிகள் வந்து ஊளையிட்டால் நம் பெண்கள் ஓடிப் போய் பார்த்து அதன் மூஞ்சியில் விழிப்பார்கள். நம்மில் சிலர் கழுத்தில் தங்கச் சங்கிலியில் புலிப்பல் அணிந்திருப்பர். இன்னும் சில பெரியவர்கள் புலி நகத்தை அணிந்திருப்பதையும் பார்க்கலாம்.

நம் வீட்டில் என்ன பூஜை புனஸ்காரம் நடந்தாலும் ஐயர், அதாவது புரோகிதர் வந்து கையில் பவித்ரம் என்று ஒரு தர்ப் பைப்புல் மோதிரத்தை அணியச் சொல்லுவார். தர்ப்பைப் புல் இல்லாமல் நல்லதோ கெட்டதோ எந்தக் காரியமும் செய்ய மாட்டார்கள். நம் பெண்கள் கர்ப்பமாக இருந்த போது வளை காப்பு சீமந்தத்துக்கு வந்த புரோகிதர் அவர்களுடைய தலையில் நடு வகுட்டில் ஒரு முள்ளம் பன்றி முள்ளால் கோடு போடுவர். பல யானைகள் வசிக்கும் யானைகள் காப்பகத்திற்கு செல்லும் போது யானை பாகர்கள், ரகசியமாக, இடது கையில் காசு வாங்கிக் கொண்டு வலது கை வழியாக யானை வாலின் முடி யைக் கொடுப்பார்கள்.

திருஷ்டி வராது, நோய் வராது என்றெல்லாம் சொல்லி எல்லோரும் அதை வாங்குவர். யானை முடிக்கு அப்படி என்ன கிராக்கி. முக்கியப் பண்டிகைகளில் பிராமணர்கள் பஞ்சகவ்யம் சாப்பிட வேண்டும். இதில் பால், வெண்ணெ, தயிர், பசுஞ் சாணம், பசு மூத்திரம் ஆகிய ஐந்தும் மிகச்சிறு அளவில் கலந் திருப்பர். இது உடல் பொருள் ஆவியைச் சுத்திகரிக்கும் அதிசய மருந்து என்பர். பண்டைய ரிஷிகளும், முனிவர்கலும் கமண் டலம் என்னும் சிறிய கலசத்தில் தண்ணீர் கொண்டு செல்லுவர். இது தாகத்தைத் தணிக்கவா? அல்லது வேண்டியோருக்கு அபூர்வ வரங்களைக் கொடுத்து வேண்டாத வர்களைச் சபிக்கவா? தண் ணீருக்கு அப்படி ஒரு அதிசய சக்தி உள்ளதா?

இப்படி நூற்றுக்கணக்கான பழக்க, வழக்கங்களை, சம்பிரா தாயங்களைச் சேர்த்துக் கொண்டு போனால் பட்டியல் நீண்டு விடும். இவை எல்லாவற்றிற்கும் சுருக்கமான விடை இதோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்கள் வாழ்வு இயற்கையோடு இணைந்தது. இதில் குறிப்பிட்ட எல்லாப் பொருட்களும் மீள்சுழற்சி ஆகி மீண்டும் நம் உபயோகத்துக்கே வரும். புறச்சூழலை பாதிக்காது.

பசுஞ் சாணம், பசு மூத்திரம் ஆகியவற்றுக்கு உள்ள "பக்டீரியா எதிர்ப்பு சக்தி" பற்றி நமக்குத் தெரியும்.

தர்ப்பைப் புல் பற்றியும் இங்கொன்றும் அங்கொன்றுமாக நடந்த, குறிப்பாக கிரகண கால ஆய்வுகள் உள்ளன.

மான் தோல் சத்வ குணத்தை உண்டாக்கும் என்றும், புலித் தோல் ஒருமுக மனக் குவியத்தையும், குறிக்கோளை அடைவதில் முனைப்பையும் உண்டாகும் என்றும் அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

புலிப்பல், தாலி முதலியன குறித்து சிலப்பதிகாரம், பெரிய புராணம் முதலிய நூல்கள் கூறுகின்றன. வீரம், மன உறுதி, லட்சியத்தை அடையும் முனைப்பு, வேகம் ஆகியவற்றை அளிக்க வல்லது புலிநகம், புலிப்பல் தாயத்து என்பர்.

பசு மூத்திரம் இப்பொழுது பாட்டில்களில் கூட விலைக்கு வந்துவிட்டது. யானை லத்தி பற்றி ஆராயாவிட்டாலும் யானை லத்தியுடன் வரும் காப்பிக் கொட்டைக்கு மதிப்பு அதிகம். யானை லத்தி காப்பி ஒரு கோப்பையின் விலை ரூ.300. ஆப் பிரிக்க மலை ஜாதி மக்கள் யானை லத்தியை புகையிலை போல சிகரெட் செய்து புகைப்பர். அது மட்டுமல்ல ஆப்பிரிக்க பபூன் குரங்குகள், யானை லத்தியைச் சாப்பிடுகின்றன. நமக்கும் முன் பாக மிருகங்களும் பழங்குடி மக்களும் இதுபோல பல ரகசி யங்களைக் கண்டுபிடித்து வைத்திருக்கின்றனர். உலகிலேயே இரண்டு பிராணிகளின் மலம் தான் நாற்றம் எடுக்காமல் பாக் டீரியாக்களைக் கொல்லும் சக்தி வாய்ந்தவை எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணிரின் சக்தி பற்றி இன்னும் நிறைய ஆராய்ச்சி செய்ய வேண்டி இருக்கிறது. வரம் கொடுக்கவும், சபிக்கவும் ஏன் தண் ணீரை பயன்படுத்தினர்? பிராமணர்கள் தினமும் முக்கால சந் தியா வந்தனத்தில் தண்ணிரை மட்டுமே அளித்து காயத்ரியைத் திருப்திப் படுத்துவது ஏன்? இறந்து போன முன்னோர்களுக்கும் எள்ளும், நீரும் மட்டும் இரைத்து அவர்களை திருப்திப்படுத்து வது எப்படி?

மனுவும் கூட கறுப்பு நிற மான் (கிருஷ்ணசாரம்) எங்கு இருக்கிறதோ அதுதான் புண்ணிய பூமி, மற்றதெல்லாம் மிலேச்ச பூமி என்பார். அந்த கறுப்பு நிற மான் தோலை கிருஷ்ணாஜினம் என்பர். அதையே பிராமணச் சிறுவர் பூணூலில் அணிவர். இப்படி இந்து மத சம்பிரதாயங்கள் அனைத்தும் அறிவியலின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன என்பதே பலர் அறியாத உண்மையாகும்.
நன்றி- லண்டன் சுவாமிநாதன்.

## குடையை வீட்டிற்கு வெளியேதான் திறக்க வேண்டும், வீட்டிற்குள் திறக்க கூடாது என்பது ஏன்?

அதற்கான காரணம் மிகவும் சாதாரணமானதே. அந்த காலத்தில் குடைகளுக்கு கூர்மையான கம்பிகள் இருந்தன. இத னால் அதனை வீட்டிற்குள் திறக்கும் போது, அது பிறரை காயப் படுத்தலாம் அல்லது பொருட்களை உடைக்கலாம். அதுவே ஒரு வழக்கமாக மாறி நாளடைவில் மூடநம்பிக்கையாக மாறி விட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது முன்னோர்களின் அறிவியல் நுட்பம்

## உயிர்களின் பரிணாமக் கொள்கையை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கூறிய இந்து மதம்

சார்லஸ் ராபர்ட் டார்வின் கடல் வழியே, எச்.எம்.எஸ் பீகிள் *(HMS Beagle)* என்னும் கப்பலில் உலகில் பல இடங்களுக்கும் சென்று, உயிரினங்களின் தோற்றம் பற்றி ஆராய்ந்தார். ஊர்வன, பறப்பன, நடப்பன ஆகியவற்றின் பல எலும்புகளை சேகரித்து ஆய்வு மேற்கொண்ட போது, அவைகளுக்குள் சில ஒற்றுமைகள் இருப்பதை அறிந்தார். அவைகளைக் கொண்டு உயிரினங்களின் தோற்றம் எனும் நூலில் விவரித்துள்ளார். இதனை பரிணாமக் கொள்கையென கூறுகின்றார்கள். இந்த டார்வினின் பரிணாம வளர்ச்சி கொள்கை பெரும்பாலான ஆய்வாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட படைப்புக் கொள்கையாகும்.



பூமியில் நீர் மட்டுமே சூழ்ந்திருந்த காலத்தில் நீர் வாழ்வன தோன்றின. பின் நாட்களில் நீர் வற்றி, நிலம் தென்பட்ட போது, நீரில் வாழும் உயிர்களில் சில நீர் நில வாழ்வனவாக மாற்றம் அடைந்தன. அவற்றிலிருந்து ஊர்வன உயிரினங்கள் தோன்றின. பின் பாலூட்டிகளாக அவை மாற்றம் அடைந்தன. பாலூட்டிகளில் ஒன்றான குரங்கினம் சிந்தனை செய்யத் தொட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ங்கிது. அதனால் ஆறறிவு பெற்ற மனிதன் தோன்றினான். மற்ற பாலூட்டிகள் போல் அல்லாமல் இரண்டு கால்களால் மனிதன் நடந்தான். மூர்க்கமாக வேட்டையாடும் குணம் அவனுக்குள் இருந்தது. அதனால் வேட்டையாடி மிருகங்களைக் கொன்று உண்டான்.

தனித்தனியாக இருந்த மனிதன் குழுவாக இணைந்தான். தங்களுக்குள் தலைவன் ஒருவனை தேர்ந்தெடுத்து அவன் பின் மற்றவர்கள் சென்றார்கள். அவன் சொல்படி நடந்தார்கள். நதிப் பகுதியில் விவசாயம் செய்து நாகரீக மனிதனாக மாறினான். கால்நடைகளை விவசாயத்திற்கு பயன்படுத்தினான். அவைகளை காடுகளில் மேய்ச்சல் செய்து பிழைத்தான். பின் தன்னுடைய அறிவினைப் பயன்படுத்தி தற்போதுள்ள விஞ்ஞான மனிதனாக மாறிவருகிறான். வருங்காலத்தில் உலகினையே அழிக்கும் சக்தியுடைவனாக மாறுவான் என்பதில் சந்தேகமில்லை. இதுவே டார்வினின் பரிணாமக் கொள்கையாகும். டார்வினின் பரி ணாமக் கொள்கையை எளிமையாக விளக்கும் இந்து மதத்தி னைப் பற்றி காண்போம்.

## தசாவதாரம்- திருமாலின் பத்து அவதாரங்கள்

உலகில் அதர்மம் அதிகமாகும் பொழுது தர்மத்தினை நிலை நாட்டுவதற்காக திருமால் அவதாரம் எடுக்கிறார். எண்ணற்ற அவதாரங்களை திருமால் எடுத்திருந்தாலும் மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமண அவதாரம், பரசுராம அவதாரம், ராம அவதாரம், பலராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், கல்கி அவதாரம் என்ற பத்து அவதாரங்கள் மட்டும் தசாவதாரங்கள் என்று பெருமையாக அழைக்கப்படுகின்றன இந்த அவதாரங்களை சற்று உற்று நோக் கும் போது, இதில் ஒளிந்திருக்கும் பரிணாமக் கொள்கையை அறிய இயலும். டார்வினின் பரிணாம வளர்ச்சி கொள்கை உயிரினங்களில் இருந்து மனிதன் தோன்றியதோடு நின்று விடுகிறது. அதன் பிறகு மனிதனின் பரிணாமம் துவங்குகிறது. தசவதாரத்தின் முதல் ஐந்து அவதாரங்கள் உயிர்களிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனாக மாற்றம் அடைந்ததை விவரிக்கின்றன. அடுத்த ஐந்து அவதாரங்களும் மனிதனின் படிவளர்ச்சியை விவரிக்கின்றன.

**மச்ச அவதாரம் (மீன் - நீர் வாழ்வன)**

பிரளய காலத்தில் மீனாக திருமால் அவதாரம் எடுத்து உலகை காப்பாற்றியதாக புராணம் கூறுகிறது. இது தசாவ தாரத்தின் முதல் அவதாரமாகும். பரிமாணவியல் கொள்கைபடி நீரில் வாழும் உயிரினமான மீனிலிருந்தே உயிரினங்களின் தோற் றம் ஆரம்பித்ததை குறிக்கிறது.

**கூர்ம அவதாரம் (ஆமை - நீர் நில வாழ்வன)**

திருமாலின் இரண்டாவது அவதாரம் கூர்மம். பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடையும் போது, மேரு மலையைத் தாங்கிப் பிடிக்க திருமால் ஆமை ரூபத்தில் அவதாரம் எடுத்த தாக புராணம் கூறுகிறது.பரிணாமக் கொள்கைப்படி நீர் வாழும் உயிர் நீர் நில வாழும் உயிராக மாற்றம் அடைந்ததாக கூறப் படுகிறது.

**வராக அவதாரம்- (பன்றி - நிலத்தில் வாழும் பாலூட்டி)**

தசவதாரத்தின் மூன்றாவது அவதாரம் வராகம். இரணி யாசுரன் எனும் அரக்கனிடமிருந்து பூமியை காப்பற்ற திருமால் எடுத்த அவதாரம் என்று புராணம் கூறுகிறது. பரிணாமவியல் கொள்கைபடி, நீர் நில வாழ்பவையாக இருந்தவை நில வாழ்ப வையாக மாறியதை குறிக்கிறது.

**நரசிம்ம அவதாரம்-(மிருகமாக இருந்து மனிதனாக மாறும் தன்மை)**

தசவதாரத்தின் நான்காவது அவதாரம் நரசிம்மம். நரன் என்பது மனிதனைக் குறிக்கும் சொல். மனிதன் பாதியாகவும், மிருகம் பாதியாகவும் இருக்கின்ற திருமாலின் அவதாரம் இரணி யனை கொல்ல எடுக்கப்பட்டதாக புராணம் கூறுகிறது. நிலவாழ் பவைகளாக இருந்த மிருகம் சிந்தனை திறன் பெற்று மனிதன் பாதி, மிருகம் பாதியாக இருந்த தொடக்க நிலையை இந்த அவதாரம் குறிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாமண அவதாரம்- (மனித தோற்றம்)**

தசவதாரத்தின் ஐந்தாவது அவதாரமான வாமண அவதாரமே முழுமனிதனாக திருமால் எடுத்த அவதாரமென புராணங்கள் கூறுகின்றன. பரிணாமக் கொள்கைபடி முழு மனிதனை இந்த அவதாரம் குறிக்கிறது.

**பரசுராம அவதாரம்-(மூர்கமாக வேட்டையாடும் மனிதன்)**

தசவதாரத்தின் ஆறாவது அவதாரம் பரசுராம அவதாரம். மிகவும் மூர்க்க மனிதராக இந்த அவதாரம் சித்தரிக்கப் பட்டு ள்ளது. கோடாரி ஆயுதத்தினை சிவனிடமிருந்து பெற்ற மனித ராக பரசுராமர் புராணங்களில் குறிப்பிடப்படுகிறார். மனிதனாக மாற்றம் அடைந்த பின்பு,மிருகங்களை மூர்க்கதனமாக வேட்டை யாடியதை இந்த அவதாரம் குறிக்கிறது.

**ராம அவதாரம்-(குழுக்களாக இணைந்து தலைவனை தேர்ந் தெடுத்தல்)**

தசவதாரத்தின் ஏழாவது அவதாரமான ராம அவதாரம் இரா வணனை அழிப்பதற்காக திருமாலால் எடுக்கப்பட்டதாக புராண ங்கள் கூறுகின்றன. மனிதன் குழுக்களாக இணைந்து தலைவனை தேர்ந்தெடுத்து வாழ்ந்தமையை ராம அவதாரம் குறிக்கிறது.

**பலராம அவதாரம்-(விவசாயம் செய்யும் மனிதன்)**

தசவதாரத்தின் எட்டாவது அவதாரம் பலராமர். கிருஷ்ண னின் அண்ணனாக திருமால் அவதரித்தாக புராணம் கூறுகிறது. பலராமர் கைகளில் ஏர் கலப்பை விவசாயம் செய்யும் மனிதனை குறிக்கிறது.

**கிருஷ்ண அவதாரம்-(கால்நடைகளை மேய்க்கும் மனிதன்)**

தசவதாரத்தின் ஒன்பதாவது அவதாரம் கிருஷ்ணவதாரம். கிருஷ்ணன் கம்சன் எனும் அரக்கனை அழிக்க அவதரித்ததாக புராணங்கள் கூறுகின்றன. கிருஷ்ணன் ஆடுகளையும், மாடுகளை யும் மேய்க்கும் சிறுவனாக இருந்தது கால்நடைகளை தங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளுக்கு பயன்படுத்திக் கொண்ட மனிதர்களின் பரிணா மத்தினை குறிக்கிறது.

**கல்கி அவதாரம்**

தசவதாரத்தின் இறுதி அவதாரம் கல்கி அவதாரமாகும். இது கலியுகத்தின் முடிவில் திருமால் எடுக்கும் அவதாரமாக புராணம் கூறுகிறது. ஆயுதங்களும், வாகனமும் கொண்ட அவதாரமான கல்கி தினம் தினம் சிந்தனையில் வளர்ந்து கொண்டிருக்கும் மனிதன் மகாசக்தியாக மாறுவதைக் குறிப்பதாகும்.

மேலைநாட்டு அறிஞர்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு ஆய்வு செய்து அறிந்து கொண்ட பரிணாமவியல் கொள்கை இந்து மதத்தின் தசவதாரத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தெளிவுற எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## உலகத்திற்கு வானவியலை முதன் முதலில் அறிமுகப் படுத்தியவர்கள் இந்துக்கள்


ஜோதிட மற்றும் வானவியல் மேதை வராகமிகிரர் விக்கிரமாதித்தனின் அரசவையை அலங்கரித்த நவரத்தினங்களுள் புகழ் மிக்க ஒருவராய் வீற்றிருக்கும் பேறு பெற்றவர். இவரது பஞ்ச சித்தாந்தம் எனப்படும் நூல், வானியல் சாஸ்திரத்தின் அரிச்சுவட்டில் நீங்காத இடம் பெற்றுள்ளது.

சந்திரனுக்கும் மற்ற கோள்களுக்கும் சுயமாக ஒளி வீசும் தன்மை இல்லை என்றும், அவைகள் சூரியனிடமிருந்தே ஒளியைப் பெற்று பிரதி பலிக்கின்றன என்றும் தமது கருத்தை வெளியிட்டார். இவரது பிருஹத் சம்ஹிதை மற்றும் பிருஹத் ஜாதக் ஆகிய நூல்களில் நட்சத்திரக் கூட்டங்கள் மற்றும் கிரகங்களின் நிலைகள், அவை பூமியின் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் போன்றவற்றை (அதாவது தாவர, விலங்குகளின் மீது) விளக்குகின்றன. இவரது தாவரவியல் துறையிலான ஆய்வுகளில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம், செடி, கொடிகளுக்குத் துன்பத்தை விளைவிக்கும் நோய் களையும் எடுத்தியம்பி உள்ளார். ஜோதிட வியலுக்கும், வானியலு க்கும் வராகமிகிரரின் தனித்துவமான பங்களிப்பு என்றென்றும் போற்றத்தக்கது.




## பூமியின் வயது பற்றி இந்து நூல்களான மனுஸ்மிரிதியும், அதர்வண வேதமும், கிறிஸ்தவ நூலான பைபிளும் கூறியவற்றில் எது சரியானது?

நாம் வாழும் பூமியின் வயது பற்றி பல பண்டைய நூல்கள் கூறியுள்ளன. விஞ்ஞானிகளின் கூற்றுப்படி பிக்பேங் எனப்படும் மாபெரும் வெடிப்பு நிகழ்ந்தது 1400 கோடி ஆண்டுகளுக்கு முன்பு என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்துக்கள் கூறும் மன்வந்தரக் கணக்கும் இதுவும் கிட்ட தட்ட ஒத்துப் போகிறது. இந்துக்கள் பூஜை செய்கையில் சொல் லப்படும் சங்கல்பத்தில் "14ஆவது மன்வந்தரமான வைவஸ் வத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்வந்தரத்தில் இந்த ஆண்டில் இந்த மாதத்தில் இன்ன திதியில் இதைச் செய்கிறேன்" என்று சொல்லுவார்கள்.

ஆனால் இறைவன் உலகத்தைத் தோற்றுவித்த ஆறாவது நாளன்று களிமண்ணிலிருந்து முதல் மனிதனைத் தோற்றுவித்தான் என்று ஐரோப்பியர்கள் நம்பிகொண்டிருந்த வேளையில், இந்துக் கள் விஷ்ணு சஹஸ்ர நாமம் முதலியவற்றில் சஹஸ்ர கோடி யுக கணக்குகளைப் போட்டுக் கொண்டிருந்தனர்.

பொ.ஆ.மு.1500ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "மனுஸ் மிரிதி" எனும் இந்துமத நூலில் பூமியின் வயது பற்றிய குறிப்பு கள் இருக்கின்றன. பூமியின் வயதை இந்துமத படைப்புக் கடவு ளான பிரம்மாவின் வாழ்க்கையை கொண்டு கணக்கிட்டிருக்கி றார்கள். அதன்படி, நாம் வாழும் இந்த பூமியின் வயது 430 கோடி வருடங்கள் என மனுஸ்மிரிதி கூறுகிறது.

அதர்வண வேதத்தில் உலகத்தின் வயது பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. நூறால் பத்தாயிரத்தைப் பெருக்கி வருவதுடன் இர ண்டு, மூன்று, நான்கு என்ற எண்களைச் சேர் என்ற குறிப்பு இதில் உள்ளது. அதாவது, 100x10,000=1,000,000 2 3 4= 4321,000,000. இது 432 கோடியே 10 லட்சம் ஆண்டுகள் ஆகும். இவ்வளவு காலமும், ஒருவன் வாழ வேண்டும் எனவும், நம் ஆயுள் நீடிக்கவும் இந்த வேதம் வாழ்த்துகிறது.


அதேசமயம் நாம் வாழும் பூமிக்கு அக்டோபர் 23ஆம் தேதி 6017 ஆவது பிறந்த தினம் என்ற செய்தியை லண்டன் மெட்ரோ பத்திரிகை சில நாட்களுக்கு முன் வெளியிட்டது. இந்த விந்தையான 6017 என்ற எண் எங்கிருந்து வந்தது?

1654 ஆம் ஆண்டு ஆர்மாக் ஆர்ச்பிஷப் ஜேம்ஸ் உஷர் பூமியின் வய தைக் கண்டுபிடித்தார். பைபிள் கணக்குப்படி பூமி தோன்றியது கி.மு 4004 அக்டோபர் 23 என்ற "மகா பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை அவர் வெளியிட்டார்" என்பதையும் மெட்ரோ பத்திரிகை குறிப்பிட்டது.




இந்த கணக்கை ஐரோப்பிய உலகம் அப்படியே ஏற்றுக் கொண்டது. இந்தியாவைப் பற்றியும், இந்துமத நூல்கள் பற்றியும் ஆராய்ச்சி நூல்கள் எழுதிய ஐரோப்பிய கிறிஸ்தவ அறிஞர்கள் கி.மு.4004ல் தான் உலகம் தோன்றியது என்று பலமாக நம்பிய தால் ரிக் வேதம் முதலிய நூல்களுக்கு மிகமிகத் தவறான வய தைக் கணித்தார்கள். இந்துமதம் பற்றிய எல்லாவற்றையும் பிற் காலத்திற்குரியது என்று முத்திரை குத்தினார்கள். அப்போது ஆங்கிலம் கற்ற இந்திய அறிஞர்களும் சத்தமின்றி அந்தத் தேதியை ஏற்றுக் கொண்டார்கள்.

நவீன அறிவியல் பூர்வமாக கண்டுபிடிக்கப்படும் வரை, பூமியின் வயதை 10 கோடி வருடங்கள் என்று ஐரோப்பியர்கள் எண்ணி வந்தார்கள். ஆனால் பிறகு விஞ்ஞானிகள் பலவகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் ஆதாரங்களை வைத்து கணக்கிட்டு பூமியின் வயது 454 கோடி வருடங்கள் என்று தற்போது கூறியுள்ளார்கள்.

- இந்துமத நூலான மனுஸ்மிரிதி 3500 ஆண்டுகளுக்கு முன் சொன்ன பூமியின் வயது - 430 கோடி ஆண்டுகள்.
- இந்துமத நூலான அதர்வண வேதம் 3000 ஆண்டுகளுக்கு முன் சொன்ன பூமியின் வயது - 432 கோடி ஆண்டுகள்.
- கிறிஸ்தவ மத நூலான பைபிள் 1900 ஆண்டுகளுக்கு முன் சொன்ன பூமியின் வயது - 6000 ஆண்டுகள்.
- இன்றைய விஞ்ஞானிகள் நவீன அறிவியல் ஆதாரங்களின் படி சொன்ன பூமியின் வயது - 454 கோடி ஆண்டுகள்.

மனுஸ்மிரிதியும், அதர்வண வேதமும் குறிப்பிடப்பட்டுள்ள பூமியின் வயது இன்றைய விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ள பூமி யின் வயதுடன் கிட்டத்தட்ட ஒத்துப் போகிறது. இதில் 24 கோடி ஆண்டுகளே வேறுபடுகிறது. ஆனால் பைபிள் குறிப் பிட்டுள்ள பூமியின் வயது மலைக்கும், மடுவிற்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுகிறது.

இன்றைய விஞ்ஞானிகள் நவீன அறிவியல் ஆதாரங்களை வைத்து கணித்த பூமியின் வயதை, 2500 ஆண்டுகளுக்கு முன்பே இந்துக்கள் கணித்து விட்டார்கள் என்றால், இந்துக்கள் அறிவிய லில் அன்றே திறமை மிக்கவர்கள் என்பதையல்லவா இது கோடி ட்டுக் காட்டுகிறது.

## அதர்வண வேதம் கூறும் உலகத்தின் வயது எவ்வளவு தெரியுமா?


நூறாண்டு காலம் வாழ்க என்று தான் நாம் வாழ்த்துகிறோம். ஆனால், 432 கோடியே 10 லட்சம் ஆண்டுகள் வாழ்க என்று கூறுகிறது அதர்வண வேதம். வியாசர் அதர்வண வேதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமந்து என்னும் முனிவருக்கு உபதேசித்து மக்களிடம் பரவச் செய்தார். இதில் *20* காண்டங்களும், *5038* செய்யுள்களும் உள்ளன. வருணன், அக்னி, விஷ்ணு, வாசஸ்பதி, சோமன், இந் திரன், மருத்து, அஸ்வினி தேவர்கள், சூரியன், வாயு, கந்தர் வர்கள், அப்ஸரஸ்கள் போன்ற தேவதைகள், இயற்கைச் சக்திகள் பற்றிய தகவல்கள் இதில் இடம் பெற்றுள்ளன.




தர்வ என்றால் பயம். அதர்வம் என்றால் பயமற்ற தன்மை யைத் தருவது என்பது பொருள். இச்சொல்லே அதர்வணம் என திரிந்தது. தீயசக்திகளிடம் இருந்தும், சம்சார பந்தத்தில் இருந்தும் ஏற்படும் அச்சத்தைப் போக்குவதால் அதர்வண வேதம் என்னும் பெயர் உண்டானது. தற்காலத்தில், அதர்வண காளி வழிபாடு முக்கியம் பெற்றுள் ளது. பிரத்யங்கிரா, காளி போன்ற சக்திகளே இவர்கள். கலியுக த்தில் மக்கள் தங்கள் பயத்தைப் போக்க இந்த தெய்வங்களுக்கு வழிபாடு நடத்துகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதர்வண வேதத்தில் உலகத்தின் வயது பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. நூறால் பத்தாயிரத்தைப் பெருக்கி வருவதுடன் இர ண்டு, மூன்று, நான்கு என்ற எண்களைச் சேர் என்ற குறிப்பு இதில் உள்ளது. அதாவது, 432 கோடியே 10 லட்சம் ஆண்டு கள். இவ்வளவு காலமும், ஒருவன் வாழ வேண்டும் என நம் ஆயுள் நீடிக்கவும் இந்த வேதம் வாழ்த்துகிறது.

## இன்றைய அறிவியலுடன் ஒத்துப்போகும் நம் முன்னோர்கள் வகுத்த "கோத்திரம்"

அகராதியில் இந்தச் சொல்லுக்கு வம்சம் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இந்த வம்சத்தைச் சார்ந்தவர் என்பதைச் சொல்லுவது தான் கோத்திரம். இந்தக் கோத்திரங்களின் முக்கிய மானவர்களாக ஏழு ரிஷிகள் கூறப்பட்டுள்ளனர். இவர்களைக் கோத்திர பிரவர்த்தகர்கள் என்று சொல்லுவர். இந்த ரிஷிகளின் பெயர்கள் பின்வருமாறு:

1. பிருகு 2. அங்க்ரஸர் 3. அத்ரி 4. விஷ்வாமித்ரர் 5. வஸிஷ்டர் 6. கஸ்யபர் 7. அகஸ்த்யர்

ஒரு சில கோத்திரங்கள் ஒரு ரிஷியையும், சில இரண்டு ரிஷிகளையும், சில மூன்று ரிஷிகளையும், சில ஐந்து ரிஷிக ளையும், சில ஏழு ரிஷிகளையும் பிரவரமாகக் கொண்டவை.

கோத்ரம் பிராமணர்களுக்கு மட்டுமே உரியது என்பதே நடைமுறையாக உள்ளது. அவர்களே ரிஷிகளின் வம்சாவளிகள் என்பது அவர்களால் தீர்மானிக்கப்பட்ட விஷயம். இந்தக் கோத் திரங்கள் எல்லா இனத்தவருக்கும் உண்டு. குறிப்பாகப் பிராம ணர்கள் இடையே இது அதிகமாகப் பழக்கத்தில் உள்ளது. கோத்திரம் தெரியாதவர்கள் சிவ கோத்திரம், விஷ்ணு கோத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தங்களைச் சொல்லிக் கொள்வதும் நடைமுறையில் உள்ளது.

ஆண்களுக்கு மட்டும்தான் கோத்திரம் என்பது இல்லை. பெண்களும் தங்களின் கோத்திரத்தைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். பெண்கள் திருமணம் செய்துகொண்ட பின் கணவனுடைய வம்சத்தைச் சார்ந்தவர்களாகி, அந்த வம்ச சந்த தியை விருத்தி செய்பவர்கள் என்பதால் கணவனுடைய கோத்திர த்தைச் சார்ந்தவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

ஆண்கள் கோத்திரம் திருமணத்தால் மாறுவதில்லை. ஆனால் ஒரு ஆண் மற்றொரு குடும்பத்திற்குத் தத்து (ஸ்வீகாரம்) அளிக்கப்பட்டு விட்டால் அந்த வம்சத்து வாரிசாக மாறி விடுவதால் அந்தக் கோத்திரத்தைச் சார்ந்தவராகி விடுவதால் பிறந்த கோத்திரம் மாறிவிடும். ஆண் பெண்களுக்குத் திருமணம் நிச்சயிக்கப்படும் போது முதலில் கோத்திரத்தின் அடிப்படை யிலேயே தான் செய்யப்படுகிறது. ஒரே கோத்திரத்தைச் சார்ந்த ஆணும் பெண்ணும் உடன்பிறந்தவர்கள் என்று கருதப்படுவதால் இவர்களுக்குத் திருமணம் செய்யப்படுவதில்லை. ஆணின் கோத் திரத்திற்காக அல்லது பெண்ணின் கோத்திரத்திற்காக அன்னிய மான கோத்திரத்தில் தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும்.

கோத்ர பிரவர்த்தகரின் கீழ் பல ரிஷிக்கள் கோத்திரங்கள் உள்ளன. ஆனால், ரிஷிகள் அறிந்தும் பிரவர்த்தக ரிஷி மாறுவ தில்லை. பிரவர்த்தக ரிஷியின் பெயர் கட்டாயம் பிரவரத்தில் இருக்கும் என்பதால் பிரவரத்தில் உள்ள ரிஷியின் பெயர் ஆண், பெண் கோத்திரங்களில் ஒன்றாக இருந்தாலும் திருமணம் செய்வதற்கில்லை.

உதாரணத்திற்கு ஒன்றைக் காட்டலாம். ஆணின் கோத்திரம் ஒமதக்னி. பெண்ணின் கோத்திரம் கர்கிய. ஒமதக்னியும், கர்கி யரும் வேறு வேறு ரிஷிகள் என்றிருந்தாலும் இவர்கள் பிருகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சத்தில் வந்தவர்கள் என்பதால் பிரவரத்தில் பகுதி ரிஷியின் பெயர் கட்டாயம் இருக்கும். ஆக, இந்த இரண்டு கோத்திரங் களைச் சார்ந்த ஆண் பெண்களுக்கும் திருமணம் செய்ய கோத் திரப் பொருத்தம் இல்லை.

ஆண், பெண் திருமணத்திற்குப் பார்க்கும் பத்து வித பொருத்தங்களில் முதன்மையானது கோத்திரப் பொருத்தம். இது இல்லை எனில் மற்ற எல்லா வகையிலும் நூறு சதவிகிதம் சரியாகப் பொருந்தி இருந்தாலும் திருமணம் செய்வதற்கில்லை. அங்ஙனம் திருமணம் செய்வது சகோதர சகோதரிக்கு இடையே செய்த திருமணமேயாகும்.ஆண் தன்னுடைய கோத்திரத்தைத் தெரிந்து கொள்வதுடன் தன் மனைவியின் தந்தை கோத்திரத் தையும் கட்டாயம் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு.**

பெண்கள் உன்னதமான நிலையில் இருக்க வேண்டியவர் கள். பெண் திருமணம் ஆகிக் கணவன் வீடு வருவதையும், அவளுக்குக் கணவனின் கோத்திரமே தான் கோத்திரமாக மாறுகிறது என்பதையும் அறிவோம். ஆகவே பெண் என்ன மட் டமானவளா? ஆண் என்ன உசத்தியா? என்றெல்லாம் கேட்ப தோடு ஆண்குழந்தை பிறந்தால் தான் வம்சவிருத்தி எனச் சொல் வதையும் தவறாகவே புரிந்து கொள்கிறோம். பெண்ணில்லாமல் கருவைச் சுமக்க யாரும் இல்லை. ஆகவே பெண் வேண்டாம் என யாருமே சொல்வதில்லை.

**விஞ்ஞான ரீதியிலேயே இதற்கான பதிலைக் காண்போமா?**

விஞ்ஞான முறையில் யோசித்தால் ஒரு குழந்தை ஆணா, பெண்ணா என்பதை முடிவு செய்வது ஆணே. ஒவ்வொரு குழந்தைக்கும் *23+23* க்ரொமொசோம்கள் உள்ளன என்பதை அறிவோம். இது தாய் மூலம் *23*, தந்தை மூலம் *23* என்பதை யும் அறிவோம். இதிலே பிறக்கப் போகும் குழந்தை ஆணா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணா என்பதைத் தந்தையின் க்ரொமொசோமே முடிவு செய்கிறது. தாயிடம் $xx$ க்ரோமோசோம்கள் மட்டுமே இருக்கின்றன. தந்தைக்கோ, $xy$ என இருவிதமான மாறுபட்ட க்ரோமோசோம்கள் உள்ளன. ஆணின் $y$ யுடன் பெண்ணின் $x$ சேர்ந்தால் ஆண் குழந்தையும், இருவரின் $x+x$ சேர்ந்தால் பெண் குழந்தையும் பிறக்கின்றது என்பதை விஞ்ஞானம் அறுதியிட்டுக் கூறியுள்ளது.

ஒரே கோத்திரத்தில் திருமணம் செய்யக் கூடாது என்பதன் காரணமும் இதை ஒட்டியே. ஒரே கோத்திரத்தில் பிறந்த பெண்ணோ, ஆணோ ஒருவரை ஒருவர் அறியாதவர்களாகவே இருந்தாலும் அவர்கள் சகோதர, சகோதரியாகவே கருதப்படுகி றார்கள் என்பதை நம் சனாதனதர்மம் திட்டவட்டமாய்க் கூறுகிறது.

ஏனெனில் பெண் குழந்தையை உருவாக்கும் $x$ க்ரோமோசோம் இருவரிடமும் இருக்கையில் ஆண் குழந்தையை உருவாக்கும் $y$ க்ரோமோசோம் மட்டும் ஆணிடம் தான் உள்ளது. பெண்ணிற்கு $y$ க்ரோமோசோம்கள் தந்தை வழி வருவதில்லை. ஆனால் அதே ஆண் குழந்தைக்குத் தந்தையிடம் இருந்து $y$ க்ரோமோசோம்கள் வருகின்றன. ஏனெனில் அவன் மூலம் தான் வழிவழியாக வம்சம் மீண்டும் வளரப்போகின்றது.

வழி வழியாக என்பதில் இருந்தே நாம் புரிந்து கொள்ள லாம், முப்பாட்டனார், பாட்டனார், மகன், பேரன், கொள்ளுப் பேரன், எள்ளுப் பேரன் எனத் தொடர்ந்து இது ஒவ்வொருவரிடமும் விதைக்கப்பட்டுத் தொடர்ந்து காப்பாற்றப் பட்டு வருகின்றது என்பதை. இதன் முக்கியத்துவம் குறித்து அறிந்தே நம் முன்னோர்கள் ஆண் குழந்தைகளுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கின்றனர்.

இதே முப்பாட்டி, பாட்டி, மகள், பேத்தி, கொள்ளுப் பேத்தி, எள்ளுப்பேத்தி என $x$ க்ரோமோசோம்கள் வழி வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதில்லை. தன் தாயிடம் இருந்தும், தந்தையிடம் இருந்தும் *x* க்ரோமோசோம்கள் மகளுக்குக் கிடைக்கின்றது. ஆனால் இயற்கையின் மாபெரும் அதிசயமாக *y* க்ரோமோசோம்கள் பெண்களுக்குக் கடத்தப்படுவதில்லை என்பதோடு, தந்தையிடம் இருந்து மகன் பெறுவதும் அவன் பரம்பரையின் *y* க்ரோமோசொம்கள் மட்டுமே.

ஒரு ஆணால் மட்டுமே இந்த *y* க்ரோமோசோம்களைத் தன் மகனுக்கு அளிக்க முடிகிறது. பெண்ணிற்கோ எனில் ஆணின் *y* க்ரோமோசோம்கள் கிடைப்பதில்லை. பெண் எப் போதும் 100% பெண். ஆனால் ஆணோ 50% பெண் எனலாம். இதிலே வேடிக்கை என்னவெனில் ஆணின் *y* க்ரோமோசோம் கள் மிகவும் பலவீனமான ஒன்று. ஆனால் அதிலே உருவாகும் ஆண் பெண்ணை அடக்கி ஆள்கிறான் என்பதும் விந்தையிலும் விந்தை. (ஆனால் இது இப்போது தலை கீழாக மாறி உள்ளதை யும் உணரலாம்)

மேலும் தொடர்ந்து காலம் காலமாக இந்த *y* க்ரோமோ சோம்கள் அவரவர் பரம்பரை ஆண் மக்களுக்குச் சென்று கொண்டிருப்பதால் இன்னமும் பலவீனம் ஆகிக் கொண்டிருக் கிறதாம். ஆகவே தான் ஏற்கெனவே பலவீனமான *y* க்ரோமோ சோம்கள் மேலும் பலவீனம் அடையக்கூடாது என்பதாலும், பரம்பரை நோய்கள் தொடரக்கூடாது என்பதாலுமே சொந்த இரத்த உறவுகளுக்கிடையே திருமணம் தவிர்க்கப்படுகிறது.

குழந்தை உருவாகும் இந்த விஞ்ஞான ரீதியான கருமுட்டை பற்றிய விடயங்கள் அப்படியே இந்துக்களின் கோத்திரங்களில் வாரிசுகள் உருவாகும் விடயங்களுடன் ஒத்துப் போவது எப்படி? அதுதான் நம் முன்னோர்களின் அறிவியல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பது எழுத்துக்களைக் கொண்டு, உலக விஞ்ஞானிகளை வியக்க வைத்த,தமிழர் கணிக்கும் பஞ்சாங்கம்

பல பிரம்மாண்டமான நவீன கருவிகளைக் கொண்டு கணிணியின் துணையுடன் துல்லியமாகக் கணிக்கப்படும் கிரகணங்களைத் தமிழர்களின் பஞ்சாங்கம் அந்தக் கருவிகளின் துணை இன்றி வினாடி சுத்தமாகக் கணித்துப் பல நூறு ஆண்டுகளாகச் சொல்லி வருகிறது என்றால் அதிசயமாக இல்லையா? இதை எப்படித் துல்லியமாக தமிழர்களால் கணிக்க முடிகிறது என்று உலகெங்கிலும் உள்ள வானியல் விஞ்ஞானிகளே ஆச்சரியப் படுகின்றனர்.

உலகமே வியக்கும் பஞ்சாங்கம் நம் அபூர்வ வானியல், கணித, ஜோதிட அறிவைத் தெளிவாக விளக்கும் ஒரு அபூர்வ கலை. இப்படிப்பட்ட பஞ்சாங்கம் நம்மிடம் இருப்பதை எண்ணிப் பெருமைப்படாமல் அதை இகழும் பகுத்தறிவாளர் களை தமிழர்கள் என்று எப்படிக் கூற முடியும்? இதை நாம் காப்புரிமை (Patent) எடுக்காவிட்டால் மஞ்சளைத் காப்பு ரிமை எடுக்க முயன்றது போல் இதையும் அமெரிக்கா உள்ளி ட்ட நாடுகள் தனதுடைமையாக்கிக் கொள்ளும்.

தமிழர்களின் பஞ்சாங்கக் கணிப்பு அதிசயமான ஒன்று. **அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ** ஆகிய ஒன்பது எழுத்துக்களை வைத்துக் கொண்டே பஞ்சாங்கத்தைத் தமிழர்கள் கணித்து விடுவது வியப் புக்குரிய ஒன்று. ஐந்து விரல்களை வைத்துக் கொண்டு ஜோதிடர் கள் துல்லியமாகப் போடும் கணக்கு நேரில் பார்த்து வியக்கத் தக்கது.

தமிழர் அல்லாத ஏனைய பாரத மாநிலங்கள் காதி ஒன்பது எழுத்துக்கள், டாதி ஒன்பது எழுத்துக்கள், பாதி ஐந்து எழுத்து க்கள், யாதி எட்டு எழுத்துக்கள் என 31 எழுத்துக்களைக் கொண்டு பஞ்சாங்கத்தைக் கணிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய கிரகணம், சந்திர கிரகணம் ஆகியவற்றை இவர்கள் துல்லியமாகக் கணித்து பஞ்சாங்கத்தில் பதிவது உள்ளிட்ட ஏரா ளமான திதி, வாரம், நட்சத்திரம்,யோகம், கரணம் பற்றிய உண் மைகளைப் பஞ்சாங்கம் தெரிவிக்கிறது. இது இல்லாமல் நமது வாழ்க்கை முறை இல்லை.

## 1980ல் ஏற்பட்ட முழு சூரிய கிரகணம் பற்றிய தினமணியின் செய்திக் கட்டுரை

காலம் காலமாக கிரகணங்களைப் பற்றிய உண்மைகளைப் பஞ்சாங்கம் தெரிவித்து வருகிறதென்றாலும் கூட 1980ல் அபூர் வமாக ஏற்பட்ட முழு சூரியகிரகணம் நமது பஞ்சாங்கம் பற்றிய அருமையை உலகம் உணர வழி வகுத்தது. 16.2.1980 சனிக் கிழமை அமாவாசையன்று கேது கிரஸ்தம், அவிட்ட நட்சத்திரம் சென்னை நேரப்படி பகல் இரண்டு மணி 29 நிமிட அளவில் பூரண சூரியகிரகணம் ஆரம்பமாகி மாலை 4.35 க்கு முடிவடை ந்தது.

உலகெங்கிலும் இருந்து விஞ்ஞானிகள் அபூர்வமாக நிகழும் இந்த பூரண சூரிய கிரகணத்தைப் பற்றி ஆராய்ச்சி நடத்தவும் அனுபவ பூர்வமாகப் பார்ப்பதற்கும் இந்தியாவில் சூரிய தேவன் ஆலயம் இருக்கும் கோனார்க்கை நோக்கி விரைந்து வந்தனர். ஏனெனில் இப்படிப் பட்ட பூரண சூரிய கிரகணம் அடுத்தாற் போல இன்னும் 360 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் ஏற்படும். அந்த சூரிய கிரகணத்தை ஒட்டி தின மணி நாளேடு தனது 14-2-1980 இதழில் புராதனமான கணித சாஸ்திர வெற்றி என்ற தலைப்பில் வெளியிட்டிருந்த சிறப்புச் செய்தியின் சாராம்சத்தை இங்கு பார்ப்போம்.

இந்தியர்களின் வானஇயல் கணித மேன்மைகள் இன்று நிரூ பிக்கப் படுகிறது. காலம் காலமாக வானஇயல் வல்லுநர்கள் கிரக சாரங்களையும் அதன் சஞ்சாரங்களையும் மிக துல்லியமாக மதிப்பிட்டு பலவற்றைச் சொல்லி உள்ளார்கள். அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய விஞ்ஞானத்தின் வசதிகள் எதுவும் கிடையாது. கணி னிகள் கிடையாது. மிக நுட்பமான வான ஆராய்ச்சிக்கான கருவி கள் கிடையாது. அவர்களிடம் ராக்கெட் மூலம் படம் எடுத்து பார்க்கத்தக்க கருவிகள் கிடையாது. எதுவுமே இல்லை. கணக்குத் தான் உண்டு.

நாள் தவறினாலும் பஞ்சாங்கம் பார்க்காத நபர்கள் மிகக் குறைவு. இந்த பஞ்சாங்கம் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கிறது. காகிதமும் அச்சும் வருவ தற்கு முன்பு கூட ஏடுகளில் பஞ்சாங்கம் கணிக்கப்பட்டது. பஞ் சாங்கம் கணிப்பவர்கள் ஓராண்டுக்கு முன்பாகவே இன்ன தேதி, இத்தனை வினாடியில் சூரிய, சந்திர கிரகணம் தோன்றும், கிர கண அளவு (பரிமாணம்) இவ்வளவு, இந்தெந்த பகுதிகளில் தெரியும் அல்லது தெரியாது என்பவற்றை எல்லாம் மிக கச்சித மாக எழுதி வைப்பார்கள். அதில் ஒரு வினாடி தப்புவது கிடை யாது. கிரகண காலத்தில் இவைகளைச் செய்யலாம் செய்யக் கூடாது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்வாறு அந்த செய்தி கூறுகிறது. நம் முன்னோர் என்ன சாமானியர்களா?

## திருமூலர் கூறிய தனஞ்சயன் வாயுவுக்கு இன்றைய விஞ்ஞானிகள் இட்ட பெயர் என்ன?

காற்று இல்லாமல் மனித பிறப்பு நிகழாது. இதைத்தான் இன்றைய விஞ்ஞானிகள் *Fatal Air* என்பார்கள். இதற்கு திருமூலர் இட்ட பெயரோ தனஞ்சயன் வாயு.

எமது ஆசான் திருமூலரை என்னவென்று சொல்வது ஞானியா? விஞ்ஞானியா? நுட்ப விஞ்ஞானியா? அதி நுட்ப விஞ்ஞானியா? ஞானம் இருந்தால் தானே விஞ்ஞானம் பிறக்கும் அதனால் எம் ஆசான் ஞானிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை பிறப்பிற்கு தனஞ்சயன் வாயு சீராக இருப்பது அதி முக்கியம். ஏனெனில் தனஞ்சயன் வாயுதான் மூளைக்கு அடியில் உள்ள முக்கிய சுரப்பியை (*Pituitary Gland*) செயல்பட வைப்பது. இதை எவ்வளவு அழகாக திருமூலர் கூறியிருக்கிறார்.

**"பூவின் மணத்தைப் பொருத்திய வாயுவும்**
**தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்**
**மேவிய சீவனில் மெல்ல நீள் வாயுவும்**
**கூவி அவிழும் குறிக்கொண்ட போதே" திருமந்திரம்- 456**

**பொருள்:**

எவ்வாறு வண்டானது பூவின் மணத்தை காற்றால் உணர்ந்து தேனெடுக்க வேண்டி அப்பூவின் மகரந்தத்தை எடுத்து மற்றொரு இடத்திற்கு கொண்டு சேர்த்து இனவிருத்தி செய்கிறதோ, அது போல பெண் கருவறையில் உள்ள தனஞ்சயன் என்ற காற்றானது ஆண் விந்துவுடன் எழுந்து பெண் கருவில் நுழைகிறது. அப் போது சீவன் உருவாகிறது.

**விஞ்ஞானமும் அஞ்ஞானமும்:**

காற்று இல்லாமல் உருவாக்கம் இல்லை என்பதுதான் பிரபஞ்சத்தின் கோட்பாடு. அணு சக்தியால் உண்டான வெடி ப்பு காற்றின் வேகத்தால் வெடிப்பின் தூரத்தில் சென்று நிலை கொண்டது. அது போல உலகில் எந்த ஒரு உயிர் உருவாவது என்றாலும் காற்றின் துணை மிகவும் முக்கியம். இதை இல்லை என்று மறுக்கும் எந்த அறிஞர்களும் இல்லை. ஆன்மீகமே விஞ்ஞானம். மெஞ்ஞானமே விஞ்ஞானத்தின் ஆதி சக்தி என்பது தான் உண்மை.

(நன்றி-*A*.விஜயகுமார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பிரபஞ்சமோ, உயிரோ உருவாவதற்கு ஒளியும்,ஒலியும் ஒத்திருத்தல் வேண்டுமா?

திருமூலரின் கூற்றுப்படி ஒளியும், *(Light)* ஒலியும் *(Sound)* இணைந்து தான் பிரபஞ்சமும், உயிரும் உருவாகியது என திருமந்திரம் கூறுகிறது. அதையே நவீன அறிவியலும் உறுதிப் படுத்துகிறது. தற்போது ஒளியும் ஒலியும் ஒத்திருந்தால் தான் பிரபஞ்சமும், உயிரும் உருவாகும் என்று சொல்கிறார் திருமூலர். இதை *Doppler Shift* எனும் அறிஞரும் உறுதிப்படுத்துகிறார்.

**"விந்துவும் நாதமும் ஒக்க எழுந்திடில்-**
**விந்துவும் நாதமும் ஒக்க விரை அது ஆம்;**
**விந்தில் குறைந்திடு நாதம் எழுந்திடில்-**
**விந்துவை எண் மடி கொண்டது வீசமே" - (திருமந்திரம்: 1276)**

**பொருள்:**

விந்துவும் (ஒளியும்) நாதமும் (ஒலியும்) ஒத்து இருந்தால் வானக் கூற்றான அண்ட கோசத்துக்கு விதையைப் போல் விளங் கும். ஒளி குறைந்து ஒலி மட்டும் உயர்ந்து நின்றால் ஒளியை விட ஒலி 8 மடங்கு கூடுதல் எனப் புகழ்வர்.

**அறிவியல்:**

ஒளிக்கும் ஒலிக்கும் உண்டான ஆற்றல் சம அளவுதான். ஆனால் அது விரிவடைதலில் தான் வித்தியாசம் உள்ளது. ஒலியை விட ஒளி வேகமாக பயணிக்கிறது. ஒரு நொடியில் ஒலி யானது 300 மீட்டர்கள் பயணிக்கிறது எனில் ஒளியானது ஒரு நொடியில் 300 மில்லியன் மீட்டர் பயணிக்கும். இந்தக் கோட் பாட்டை நாம் *Doppler Shift* மூலம் அறியலாம். ஒளி மற்றும் ஒலியில் ஆற்றல் ஒத்து இருந்ததால் தான் பெருவெடிப்பு *(Big Bang)* நிகழ்ந்தது. அதன் காரணமாக பிரபஞ்சமும் ஜீவராசி களும் உருவாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு நுட்பமாக ஆராய்ந்த திருமூலர் ஒரு மெஞ்ஞானியை நாம் அனைவரும் சாமியார் என்ற மிக சிறிய வட்டத்திற்குள் அடைத்து விட்டோம். என்னே நமது அறியாமை.
(நன்றி-*A*.விஜயகுமார்)

## திருமூலர் கூறிய அஷ்டமா சித்திகள்-இன்றைய நவீன மனிதனின் வளர்ச்சிக்கு பயன்படும் அதிசயம்

ஒரே பாடலில் அணிமா *(Nano)*, மகிமா *(Macro)*, இலகிமா *(Vapor-Compression)*, ப்ராப்தி *(Goal Attainment)*, பிராகாமியம் *(Cloning)*, ஈசத்துவம் *(Market leader)*, வசித்துவம் *(Attraction)*, கரிமா *(Remote sensing)* என இத்தனை அறிவியலை போதிக்க முடியுமா? முடியும் என்று நிரூபிக்கிறார் திருமூலர்.

*Nano, Macro, Vapor-compression, Goal attainment, cloning, market leader, attraction, Remote sensing* இவை அனைத்திற்கும் நமது முன்னோர்கள் இட்ட பெயர் அஷ்டமா சித்திகள்.

**"சித்திக ளெட்டொடும் திண்சிவ மாக்கி**
**சுத்தியு மெண்முத்தித் தூய்மையும் யோகத்துச்**
**சத்தியு மாந்திர சாதக போதமும்**
**பத்தியு நாத னருளில் பயிலுமே" - திருமந்திரம்: *1575***

**பொருள்:**
ஒருவனுக்கு அஷ்ட்டமா சித்திகளையும் கற்றுக் கொடுத்து சிவனை உணரச் செய்தல், அவனை அஷ்ட சத்தியால் கட்டுப் படுத்த முடியாதவனாய் மாற்றியமைத்து, யோகத்தாலும் மந்திரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை உபதேசிப்பதாலும் இறைவனை நாடச் செய்வதே சிவ குருவின் வேலை.

**அறிவியல்:**

1. அணிமா-பெரிய உருவத்தில் இருந்து நுண்மையாக மாறுதல் *(Nano Technology);*

2. மகிமா-சிறு உருவத்தை பெரிதாக உருமாறுதல் *(Macro Science Ex. telescope, lenses, etc);*

3. இலகிமா-கடினத்தில் இருந்து இலகுவாக மாறுதல் *(Vapor-compression Ex. making things to vapor such as Acids, vaporing oils such as petrol, gas, etc);*

4. ப்ராப்தி-மனதில் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ளுதல் *(Fixing Goals and attaining it);*

5. பிராகாமியம்-ஒரே உருவமாக எங்கும் நிறைந்திருத்தல் *(Cloning,* இதைத்தான் இன்றைய விஞ்ஞானிகள் *Matrices* என்கிறார்கள்*);*

6. ஈசத்துவம்-தானே பிரம்மமாகி தேவர்களையே பூஜிக்க வைத்தல் *(Capturing the Market i.e market leader);*

7. வசித்துவம்-கவர்ந்து இழுத்தல் *(market attraction, Mesmerism);*

8. கரிமா-பற்றற்று புலன்களால் நுகர்தல் *(Remote Sensing,* இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு அனைத்து வேலை களையும் செய்து முடித்தல்*).*

திருமூலர் கூறியிருக்கும் இவ்வளவு பெரிய அறிவியல் உண் மைகளைத்தான் இன்று மூட நம்பிக்கை என்று கூறிக்கொண்டு திரிகிறார்கள். நம் மக்களுக்கு எதையுமே தமிழில் சொன்னால் மூட நம்பிக்கை தானே. வெள்ளைக்காரன் எந்த பொய்யைச் சொன்னாலும் அதுதான் உண்மை என நம்பிக் கொண்டு எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோர்கள் எழுதி வைத்த நூல்களை கற்பனை என்று சொல்வது எத்தனை முட்டாள்தனமானது என்பது இப்போது புரிகிறதா? மாற்றன் தோட்டத்து மல்லிகையை விட நம் தோட்டத்து மல்லிகை அதிக மணமுள்ளது என்பதை இப்பொழுதாவது நம்புவோமா? (நன்றி-*A*.விஜயகுமார்)

## நாம் பிரம்மாவாக உருவகப்படுத்தும் அமீபா.

அமீபா (*Amoeba*) என்னும் ஓர் செல் உயிரினத்தை பற்றி வெள்ளைக்காரன் 17ஆம் நூற்றாண்டில் தான் கண்டறிந்தான். ஆனால் அதை நாம் பிரம்மாவாக பல ஆயிரம் ஆண்டுகளாக உருவகப்படுத்தி வருகிறோம்:

உலகில் தோன்றிய முதல் உயிரினம் அமீபா என்று இன்று பல அறிவியல் அறிஞர்களால் அறியப்படுகிறது. இதில் இருந்தே பல உயிர்கள் பரிணமித்தது என்பது இன்றைக்கு அநேக அறிவியல் அறிஞர்களாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய கருத்து. முதலில் அமீபாவை பற்றி அறிந்து கொள்வோம்.

**அமீபா**

- அமீபா ஓர் செல் நுண்ணுயிரி.
- அமீபா பாலியல் சேர்க்கையில் ஈடுபடாமல் தன்னுள் ளேயே பிளவை ஏற்படுத்திக்கொண்டு இனவிருத்தி செய்யும்.
- அவ்வாறு இனவிருத்தி செய்யப்படும் முதல் கருவானது பெண்ணாகவே அமையும்.
- நன்னீர் குட்டைகள், ஆறுகள், தாமரை குளங்கள் இவைகளே தத்தமது பிறப்பிடமாகக் கொண்டிருக்கும்.
- இதன் உடலில் எந்த ஒரு பாகம் வெட்டுண்டாலும் அது மீண்டும் வளரும் தன்மையுடையது.
-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அமீபாவிற்கு சுவாச உறுப்புகள் என ஏதும் தனியே இல்லை.
- அமீபா உடலின் மேற்பரப்பு முழுவதும் சுவாசித்தலில் பங்கு பெறுகிறது.

**பிரம்மா**

- பிரம்மா தனது உடலில் இருந்து சரஸ்வதி தேவியை படைத்தார்.
- பிரம்மா தனது உடலில் இருந்துதான் 17 புத்திரர்களையும் படைத்தார்.
- பிரம்மா தோன்றியது நன்னீரில் மிதந்து வந்த தாமரையிலே.
- பிரம்மா தனது உடல் முழுவதும் பிராணத்தை அடக்கி வைத்திருந்ததால் தான் உடல் உருப்புகளில் இருந்து படைப்பை ஏற்படுத்த முடிந்தது.
- பிரம்மாவின் உடலில் எந்த பாகம் வெட்டுண்டாலும் மீண்டும் முளைக்கும்.
- பிரம்மா முதலில் படைத்தது பெண் தான்.

**பிரம்ம தத்துவம்**

பிரம்மதேவரின் அகந்தையை அழிக்கும் பொருட்டு பிரம்ம தேவரின் அகந்தையின் உருவமாக இருந்த ஐந்தாவது முகத்தை பிய்த்து எரிந்து அறத்தை போதிக்கும் 4 வேதங்களை 4 முகங்க ளாய் இருக்க அருள் செய்தார். எனவே நம் பிரம்ம தத்துவமே அறிவியல் அறிஞர்களின் அமீபாவாகியுள்ளது.

(நன்றி-A.விஜயகுமார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணிய தீர்த்தம் கங்கை-முன்னோர்களின் அறிவியல்

உலக புவியியல், வன ஜீவராசிகள், சமூகவியல் ஆகியவை தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை உலகறியச் செய்யும் தொலைக்காட்சி அமைப்பான *Discovery Channel* மற்றும் *National Environmental Engineering Research Institute of India* ஆகியவற்றின் ஆய்வறிக்கைகள், நமது முன் னோர்களின் வழிபாடு அறிவியல் சார்ந்தது என்பதை திண்ண மாக நிரூபிக்கிறன. நமது முன்னோர்களின் வழிபாடுகள் அர்த்த முள்ளதாகவே என்றைக்கும் இருந்துள்ளது அதற்கு கங்கை வழி பாடு ஒன்றும் விதிவிலக்கல்ல. கங்கை என்ற சொல் தமிழில் கங்கம் என்ற சொல்லில் இருந்து தோன்றியது.

கங்கம் என்றால் தீப்பொரி, பருந்து, கழுகு என்று பொருள் படும். இவை அனைத்தும் தீயவைகளை தனக்குள்ளே கிரகித்துக் கொண்டு சுற்றுச் சூழலை தூய்மையாக வைக்கும் ஆற்றலைக் கொண்டவை. எப்பொழுதும் தீய கிருமிகளை தனக்குள்ளே கிரகித்துக் கொண்டு எப்போதும் தூய்மையான தண்ணீரையே மக்களுக்கு அளிப்பதால் கங்கை எனப் பெயர் பெற்றது.

## *National Environmental Engineering Research Institute of India* எனும் அமைப்பின் அறிக்கை.

இவ்வமைப்பின் அறிக்கையில், நோயை ஏற்படுத்தும் கிருமி களை அழிக்கும் நுண்பாசிகள் *(Pathogenic Escherichia coli)* கங்கையில் அபரிமிதமாக இருப்பதால் கங்கை நதி மாசடை வதில்லை எனக் கூறப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் கங்கை நீரில் நுண்ணுயிர் கொல்லி *(Antimicrobial)* இருப்பதால் அதை பருகும் உயிரினங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை என வும் அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கங்கையா னது ஓடிக் கொண்டே இருப்பதால் அதில் சேரும் கழிவுகள் அதில் தங்குவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Discovery Channel* எனும் அமைப்பின் அறிக்கை.

*DiscoveryChannel* எனும் இவ்வமைப்பு *13/08/2013* அன்று தொகுத்து வழங்கிய *'Ganga River Divine'* என்னும் நிகழ்ச்சியிலும் *National Environmental Engineering Research Institute of India* கூறிய அறிக்கையை உறுதிப்படுத்தியுள்ளது. கங்கையில் தாது சத்துக்கள் நிறைந்துள்ளபடியால் அதனோடு ஒட்டி உறவாடும் உயிர்களும் ஆரோக்கியம் குன்றாமல் செழிப்பாகவே வாழ்கின்றன. கங்கை நீரை பருகியதால் மக்கள் நோய் வாய்பட்டதாக எந்த புள்ளி விபரமும் இல்லை என்று *Discovery Channel* சொல்கிறது.

### உயிரினங்கள் நிறைந்த கங்கை:

கங்கையில் டொல்பின் வகை உயிரினங்களும், நீர் நாய்களும் செழித்து வாழ்கின்றன. சில விசமிகள் பரப்பும் பொய் பிரச்சாரம் உண்மையெனில் கங்கையில் வாழும் உயிரினங்களின் எண்ணிக்கை குறைந்து அழிந்தும் போயிருக்கும். ஆனால் அண்மையில் ***UNESCO*** வெளியிட்ட அறிக்கை "கங்கையில் வாழும் உயிரினங்கள் செழிப்பாகவே இருக்கின்றன" என்று கூறுகின்றது. இவர்கள் பிணங்கள் மிதப்பது போன்று படம் போடுவதால் கங்கை நதி மாசுப்பட்டுவிட்டது என்று பொருள்படாது. நித்தம் நித்தம் நீர் நிலைகளில் உயிர்கள் மாண்டு கொண்டுதான் இருக்கின்றன. கங்கை அன்னை தீமைகளை தனக்குள்ளேயே எடுத்துக் கொண்டு நமக்கு நன்மைகளையே தருகின்றார்.

ஆதாரம்:***http://www.ncbi.nlm.nih.gov/pubmed/18810537***

## பிரம்மா பற்றிய விஞ்ஞான உண்மைகள்.

இந்து மதத்தில் நவீன அறிவியல் உண்மைகள் *(Advanced Science)*இருப்பதை உலகம் வெகுவேகமாக உணர்ந்து வருகிறது. "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதிலோர் மகிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. திறமான புலமை எனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்று சொற்தேரின் சாரதியாம் பாரதி பாடி வைத்தான். அது உண்மையாகி வருகிறது.

சிவபெருமானின் நடனத்தில் பிரபஞ்சத்தின் தாள லயங்கள் *(Dance of Shiva)* இருப்பதை பல வெளிநாட்டு அறிஞர்கள் ஆங்கிலத்தில் புத்தகம் வாயிலாக வெளியிட்டனர். அதை நடராஜர் என்னும் அற்புதமான பஞ்சலோக சிலையாக வடித்த தமிழ் ஸ்பதிகளின் பெருமையை இன்றும் உலகமே வியந்து பாராட்டி வருகிறது. நடராஜர் சிலை இல்லாத மியூசியம் உலகில் இல்லை. நடராஜர் படமோ விக்கிரகமோ இல்லாத வெளிநாட்டு இந்தியவியல் அறிஞர் எவரும் இல்லை.

கண்ணபிரானின் விஸ்வரூப தரிசனம் பகவத்கீதையின் 11 ஆவது அத்தியாயத்தில் இருக்கிறது. உலகின் மிகப்பெரிய அணு விஞ்ஞானி *(Father of Atomic Bomb)* ராபர்ட் ஒப்பன்ஹீமர், அணுகுண்டின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். அவர் முதல் அணுகுண்டு வெடித்த கட்சியைப் பார்த்துவிட்டு பகவத் கீதை யின் 11ஆவது அத்தியாயத்தின் 12ஆவது ஸ்லோகத்தைச் சொல்லி வியந்தார். **திவி சூர்ய சஹஸ்ரஸ்ய ................** ஆயிரம் சூரியன் ஒரே சமயத்தில் உதித்தால் என்ன நிகழுமோ அதைப் பார்த்து எனக்கு கால்கள் தோறும் கூச்சம் ஏற்படுகிறது என்று சொல்லி அர்ஜுனர் வியந்ததை அப்படியே ராபர்ட் ஒப்பன்ஹீமர் சொல்லி உலகை வியப்பில் ஆழ்த்தினார்.

இப்பொழுது கருந்துளைகள் *(Black Holes)* பற்றி உலக விஞ்ஞானிகள் எழுதி வியந்து வருகின்றனர். வானவியலின் புதிய அதிசயங்கள் இவை. யாராவது ஒருவர் நியூ சைன்டிஸ்ட் *(New Scientist or Scietific American)* அல்லது சைன்டிபிக் அமெரிக்கன் போன்ற அறிவியல் இதழ்களை வாசித்துவிட்டு பகவத்கீதையைப் படித்தால் புதுப்புது அர்த்தங்கள் கிடைக்கும். பிளாக் ஹோல் என்னும் கருந்துளைகள் பற்றிய செய்திகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் (11ஆவது அத்தியாயத்தில்) உள்ளன. ஆனால் பிரம்மா பற்றிய விஞ்ஞான உண்மைகளை யாருமே அறிந்து எழுத வில்லை. ஒரு சில அறிவியல் உண்மைகளை மட்டும் இங்கே பட்டியலிடலாம்.







**அறிவியல் உண்மை 1**

கடந்த நூறு ஆண்டுகளாகத்தான் பில்லியன் கணக்கில் நட்சத்திரங்களும், அதைச் சுற்றி மில்லியன் கணக்கில் பூமி போன்ற கிரகங்களும் இருப்பதை உலகம் அறியும். அதில் பல் லாயிரம் கிரகங்களில் வெளிஉலக வாசிகள் (Extra Terrestrials) வசிக்க உள்ள வாய்ப்புகள் பற்றியும் விஞ்ஞானிகள் அறிவர். ஆனால் சத்ய லோகத்தில் வசிப்பதாகக் கருதப்படும் பிரம்மா பற்றிப் படிக்கையில் அவர் ஒரு வெளி உலகவாசியோ என்று வியக்கத் தோன்றும். அவருடைய வாழ்நாளின் காலம் நாம் இந்தப் பக்கத்தில் எழுத முடியாத அளவு பெரிய எண்ணிக் கையைக் கொண்டது. மற்ற கலாசாரங்களுக்கு 1000, 10,000 என்ற எண்கள் கூடத் தெரியாத காலத்ததில் நாம் உலகமே வியக்கும் ஆயுளை பிரம்மாவுக்குக் கொடுத்தோம். அது மட்டு மல்ல இது ஒரு பிரம்மாவின் ஆயுள். அவர் போனபின், அடுத்த பிரம்மா வருவார் என்றும் சொன்னோம். இன்னும் விஞ்ஞானிகளுக்கு காலம் என்பது சுழற்சி உடையது. (Cyclical)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமானது என்று கூடத்தெரியாது. இப்பொழுது கருந்துளை ஆய்வுகள் நிறைய நடப்பதால் நமது கொள்கையை வெகு விரைவில் உலகம் ஏற்கும்.

பிரம்மாவின் ஒரு நாள் என்பது *4,320,000,000* ஆண்டுகள். இது போல அவர் *100* ஆண்டுகள் வாழ்ந்த பின்னர் புது பிர ம்மா வருவார். இப்பொழுதுள்ள பிரம்மாவுக்கு வயது *51*. ஏதோ அறிவியல் புனைக்கதை *(Science Fiction)* படிப்பது போலத் தோன்றும். இது கதை என்று யாராவது நினைத்தாலும் முதலில் அறிவியல் புனைகதை எழுதிய பெருமை நமக்கே கிடைக்கும்.

அது மட்டுமல்ல. யுகம் பற்றிய எதைக் கூட்டிப் பார்த் தாலும் ஒன்பது என்ற எண் வரும். இதை சுமேரியர்கள் கூட நம்மிடமிருந்து எடுத்துக் கொண்டு பிரளயத்துக்கு முந்தைய சுமே ரிய மன்னர்களுக்கு இப்படி ஆட்சி ஆண்டுகளைக் கொடுத் துள்ளனர்.

**அறிவியல் உண்மை 2**

பிரம்மாவுக்கு ஒரு பெயர் ஹிரண்ய கர்பன். அதாவது தங்க முட்டை. உலகம் உருண்டை என்பதைக் கண்டுபிடிக்க மேலை நாடுகள் ஒரு கலீலியோ, ஒரு கோப்பர்நிகஸ் தோன்றும் வரை காத்திருந்தன. ஆனால் நாமோ துவக்க காலம் முதல் பிரபஞ் சத்தில் உள்ள அனைத்தும் கோள வடிவானவை என்பதை அறி ந்து, அண்டம் (முட்டை வடிவானது), பிரம்மாண்டம், பூகோ ளம் (புவியியல்) என்று பெயரிட்டோம். அதுமட்டுமல்ல. அந்த ஹிரண்யகர்ப்பன் ஒரு நாள் திடீரென வெடித்து வானமும் பூமியுமாகப் பிளந்ததென புராணங்கள் கூறும். இதையே இப்பொழுது மாபெரும் வெடிப்பு **Big Bang Theory - பிக் பேங்** என்று சொல்லுகின்றனர். இது ஏன் ஏற்பட்டது என்று விஞ்ஞானிகளால் விளக்க முடியவில்லை. நமது சாத்திரங்கள் மட்டுமே கடவுள் ஒரு சொல்லை நினைத்தார், அதைச் சொன் னார், உலகம் உருவாக்கப்பட்டது என்று சொல்லுகிறது. இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைபிள் அப்படியே நம்மிடமிருந்து எடுத்துக் கொண்டது. ஆனால் அதற்கு மேல் விளக்கவில்லை.

நாம் அதற்கும் மேலாக ஒரு படி சென்று மாபெரும் வெடிப்பு ஒரு நாளைக்கு பலூன் போல ஊதிக்கொண்டே போய் பின்னர் முடிவில் வெடிக்கும். அப்பொழுது காற்றுப் போன பலூன் போல பிரபஞ்சம் சுருங்கும், *(Big Crunch)* மீண்டும் பலூன் போல ஊதும், என்று ஸைக்ளீகல் *Cyclical* வட்டமான சுழற்சி உடையது என்று சொல்லியிருக்கிறோம். இந்த பிக் க்ரஞ்ச் *(Big Crunch)* கொள்கையை இப்பொழுது தான் விஞ் ஞானிகள் ஏற்கின்றனர்.

**அறிவியல் உண்மை 3**

தசாவதாரத்தில் முதலில் மீன், பிறகு ஆமை, பிறகு பன்றி, பிறகு பாதி மனிதன்-பாதி சிங்கம் என்பதெல்லாம் டார்வீன் சொன்ன பரிணாமக் *(Theory of Evolution)* கொள்கையை ஒட்டி இருப்பதை நாம் அறிவோம். ஆனால் முதல் மூன்று அவதாரங்களும் உண்மையில் ஆதி நூல்களில் பிரம்மாவின் பெய ரிலேயே (பிரஜாபதி) உள்ளன. ஆக அவரே படைப்புக் கடவுள், பரிணாம வளர்ச்சிக் கடவுள். இதை சதபத பிராமணம் *(Satapata Brahmana)* முதலிய நுல்கள் விளக்கும். பின்னர் இதை விஷ்ணுவின் அவதாரங்களாக புராணங்கள் எழுதின. இதை இன்னொன்றாலும் அறியலாம்.

**அறிவியல் உண்மை 4**


வெளிநாட்டுக்காரர்களுக்கு கிளுகிளுப்பூட்டும் ஒரு விஷயம் நம் இலக்கியங்களில் உண்டு. அதை எழுதி, எழுதி நம்மை நக்கல் செய்வது, பகடி செய்வது, கிண்டல் செய்வது அவர்களுக்குப் பொழுதுபோக்கு. அது என்ன, பலான கதை என்கிறீர்களா?

பிரம்மா ஒரு மகளைப் பெற்றார். அவள் பெயர் சதரூபா (நூறு உருவம்) கொண்டவள். அவள் அழகைக் கண்டு பிரம்மா அவளையே உற்று நோக்கினார். அவளுக்கோ வெட்கம் பிடுங்கித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்றது. வேறு திசையில் ஓடி ஒளிந்தாள். அங்கேயும் பிரம்மா திரும்பினார். ஒவ்வொரு திசையிலும் ஒரு முகம் வரவே அவருக்கு நாலு முகம் தோன்றி அவர் நான்முகன் ஆனார். அவளோ வெட்கப்பட்டுக் கொண்டு மேலே போனாள். அங்கு ஐந்தாவது முகம் உதித்தது. அவளுடன் ஒன்று கூடிப் *(Incestual Intercourse)* பின்னர் உலகத்தைப் படைத்தார். இதைச் சொல்லிச் சொல்லி வெளிநாட்டினர் மகிழ்வர்.




***Four faced God of Sumer (Brahma?) and Four faced Slavic God (Svetonvid)***

உண்மையில் இந்தக் கதையை நம்மிடமிருந்து பைபிளும் இரவல் வாங்கி முதல் அத்தியாயத்திலேயே எழுதிவிட்டது. ஆதாம் என்பவரின் இடுப்பு எலும்பை கடவுள் முறித்து ஏவாள் என்ற பெண்ணை உருவாக்கவும், ஆதாம் அவளுடன் கூடி *(Incest?)* மனித இனத்தை உருவாக்கினார் என்பது அக்கதை. ஒரே உடலில் இருந்து ஒருவரைப் படைத்தால் அந்த ஏவாளும் சதரூபா போல ஆதாமின் மகள் தானே?

இதில் உள்ள அறிவியல் உண்மை என்னவென்றால் முதலில் பாக்டீரீயா போல இருந்த உயிரினம் ஒரு செல் உயிரினங்களாக மாறி நீரில் நீந்தி பிறகு ஒரே உடலில் ஆண் பெண் உறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் பிறந்தன. (ஹெர்மாப்ரோடைட்-*Hermaphrodite*) பின்னர் தான் ஆண், பெண் என தனித்தனி உயிர் இனங்கள் தோன்றின. இதை அர்த்தநாரீஸ்வரர் என்னும் சிவனின் வடிவத்துடன் ஒப்பிடலாம்.

முதலில் ஆண் தோன்றினானா? பெண் தோன்றினாளா? முதலில் முட்டை வந்ததா? கோழி வந்ததா? (*Chicken and Egg question*) என்ற கேள்விக்கு விடை கூறும் கதை இது. பெரிய விஞ்ஞான உண்மைகளை, சுவையான கதைகளாகத் தருபவை நம் புராணங்கள்.

**அறிவியல் உண்மை 5**

பிரம்மாவின் தோற்றம் பற்றிய கதை பெரிய பூகர்ப்பவியல் (*Geolog*-ஜியாலஜி) கதையாகும். அவர் நீரில் படுத்து இருந்த நாராயணனின் தொப்புள் கொடியில் இருந்து உதித்த தாமரை மலரில் இருந்து தோன்றியதாக ஒரு கதை உண்டு. இது கண்டத்தின் நகர்வு (*Continental Drift*) எனப்படும் கதை ஆகும். முதலில் பூமி என்பது ஒரே நிலப்பரப்பாக இருந்தது பின்னர் அது தாமரை மலர்வது போல மெதுவாக நகர்ந்து இன்றுள்ளது போல ஆசியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா எனப் பிரிந்தது. இதையே தாமரையில் பிரம்மா தோன்றி உலகைப் படைத்தார் என்போம். புராணத்தில் கூட பிரம்மாண்டம் என்று இருப்பதைக் காணலாம். ப்ரு என்னும் வடமொழி வேர்ச்சொல் மூலமே பெருகுதல், பிரிதல், பெரிய, ப்ருஹத், ப்ரம்ம முதலிய சொற்கள் வந்தன.

கிரேக்க மொழியில், முதலில் இருந்த பெரிய கண்டத்தை பங்கேயா *Panagaea* என்பர். பங்கய என்றால் தாமரை எனப் பொருள். இது பங்கஜம் என்ற வடமொழிச் சொல். பிற்காலத்தில் இந்தப் பொருள் அறியாதோர் கிரேக்க மொழியில் பேன் + கயா எனப் புதுப் பொருள் கண்டனர். பெண்கள் குழந்தை பெறுவதையும் தாமரை மலரில் இருந்து குழந்தை வந்ததாக வடமொழி இலக்கியங்கள் வருணிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிவியல் உண்மை 6**

கணித விஷயத்தில், ஒன்பது என்ற எண்ணின் வியப்புறு குணங்களில் பல ஆராய்ச்சி செய்து அதன் பெயரில் பிரம்மாண்டமான எண்களைக் க(ல்)ற்பித்து (கல்பம் என்பதே பிரம்மாவின் ஒரு நாள், பரம் என்பது அவரது 100 ஆண்டு) உலகம் அறியாத புதுமைகளைச் செய்தனர் இந்துக்கள். ஒன்பது என்ற எண்ணின் பரிபூரணத் தன்மையை மனதிற் கொண்டே 108, 1008 என்ற அஷ்டோத்திரம், சஹஸ்ரநாமம் ஆகியவற்றைப் படைத்தார்கள்.

**அறிவியல் உண்மை 7**

நாரா (நீரா) அயனன் = நாராயணன், பிரம்மா மற்றும் முதல் இரண்டு அவதாரங்கள் எல்லாம் நீரில் தான் உயிரினங்கள் தோன்ற முடியும், பரிணாம வளர்ச்சி பெற முடியும் என்று காட்டுகின்றன. இன்று வெளி கிரகங்களிலும் நீரின் மூலக்கூறுகள் *(water molecules)* இருக்கின்றனவா என்று விஞ்ஞானிகள் தேடிக் கொண்டிருப்பதை நாம் அறிவோம்.

**அறிவியல் உண்மை 8**

உலகின் முதல் அகராதி *(Thesaurus/ Dictionary)* நூலான அமரகோசம் பிரம்மாவின் 29 வடமொழிப் பெயர்களை குறிப்பிட்டுக் காட்டுகிறது.

**பிரம்மா என்பவர் யார்?**

- வானவியலை *(Astronomy/ Cosmology)* விளக்கும் கடவுள்
- பூகர்ப்பவியலை *(Geology)* விளக்கும் கடவுள்
- உயிரியல், பரிணாம வளர்ச்சியை *(Biology / Theory of Evolution)* விளக்கும் கடவுள்
- கணிதம், பிரம்மாண்ட எண்களை *(Mathematics and Amazing Numbers)* விளக்கும் கடவுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெருவெடிப்பு, *(Big Bang and Big Crunch)* முதலிய அதி நவீன கொள்கைகளை *(Ultra Modern Theories)* விளக்கும் கடவுள்

**(நன்றி-*Tamil and Vedas*-லண்டன் சுவாமிநாதன்)**

## சிவலிங்கம் பற்றி ரஷ்ய விஞ்ஞானியின் ஆராய்ச்சியில் கிடைத்த முடிவு

சிவலிங்கங்களைப் பற்றிய டாக்டர் விளாதிமீரின் என்பவரின் ஆராய்ச்சி மிக வித்தியாசமானது. அதில் இந்த பூமியில் மொத்தம் எத்தனை லிங்கங்கள் உள்ளன என்று எண்ணிப் பார்க்கவோ, அவற்றின் பூர்வ புராணக் கதைகளை அறியவோ முயலவில்லை. இவற்றுக்கப்பால் சிவலிங்கங்கள் பற்றி நாம் யோசிக்கவும், அதை நாம் நேசிக்கவும் நிறைய அடிப்படைகள் இருப்பதாக டாக்டர் விளாதிமீர் கருதினார்.

அதில் முதலாவது, ஸ்தூல வடிவங்களில் இறை உருவங்களை உருவாக்கி வழிபாடு செய்யும் இந்து மதத்தில் ஒரு குழவிக் கல்லைப் போன்ற, லிங்கம் என்னும் உருவமற்ற ஒரு உருவம் எப்படி உட்புகுந்தது என்பது தான். உண்மையில் லிங்க சொரூபமானது மூன்று மதத்திற்கும், புத்த, ஜைனர்களுக்கும் கூட பொதுவானது என்பதையும் அவர் கண்டுபிடித்தார்.


ஒரு மலை உச்சி! அதில் பௌர்ணமி இரவில் கரிய நிழல் உருவாய் கண்ணுக்குத் தெரிந்த லிங்க உருவத்தை ஒரு கிருத் தவன் சிலுவைச் சின்னமாகப் பார்த்தான். ஒரு இஸ்லாமியன் தங்களின் மசூதிக் கூரை தெரிவதாக கருதினான்.. புத்த ஜைன சன்யாசிகள் தங்கள் குருமகான்கள் அமர்ந்து தவம் செய்து கொண்டிருப்பதாகக் கருதினார்கள். ஒரு இந்துவோ அது சிவ லிங்கம் என்று திடமாக கருதி இருந்த இடத்தில் இருந்தே வில்வ இலைகளை வாரி வாரி அர்ச்சித்தான். உருவம் ஒன்று. ஆனால் அனைத்து மார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசிகளையும் அது திருப்திப்படுத்தியது என் றால் சிவம் தான் முதலும் முடிவுமான அனைவருக்கும் பொது வான இறை ஸ்வரூபமா?

டாக்டர் விளாதிமீர் இப்படிதான் கேட்கிறார். மேலும் அவர் புராணங்களிலும், இதிகாசங்களிலும் சிவம் பற்றி சொன் னதை அவர் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை. லிங்க உருவம் பற்றி யாரும் சரியாக உணரவில்லை என்பது தான் அவரது கருத்து.




ஒரு ரஷ்ய நாட்டுப் பிரஜையாக இருந்தாலும் சிவலிங்க சொரூபம் அவருக்குள் ஆழமான பாதிப்புகளை உருவாக்கியதாக அவர் கூறுகிறார். லிங்கமானது சதுரம், செவ்வகம், வட்டம், முக் கோணம் என்று கணித வடிவங்கள் அவ்வளவையும் தனக்குள் கொண்டிருப்பதாகவும், ஒவ்வொரு கோணத்தில் இருந்து பார் க்கும் போதும் ஒரு பொருள் தருவதாகவும் இருக்கிறது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் கருத்து. குறிப்பாக அணு தத்துவம் சிவலிங்க சொரூ பத்துக்குள் பெருமளவில் இருக்கிறது. லிங்கத்தைப் பயன்படுத்தத் தெரிந்தால், அது மழை தரும், நெருப்பைத் தரும், காற்றைத் தரும், கேட்ட எல்லாம் தரும் என்றும் நம்புகிறார். அப்படி என்றால் சிவமாகிய லிங்க ஸ்வரூபம் என்பது மானுடர்கள் பயன்படுத்தத் தெரியாமல் வைத்திருக்கும் மகத்தான ஒரு எந்திரமா?

டாக்டர் விளாதிமீரின் சிவஸ்வரூப ஆராய்ச்சியில் ஒரு ஆச்சரியமூட்டும் தகவல் ஒன்றும் அவருக்குக் கிட்டியதாம். இந்த மண்ணில் பூமிக்கு மேலாக கண்ணுக்குத் தெரியும் விதத்தில் உள்ள லிங்க ஸ்வரூபங்கள் இல்லாமல் பூமிக்குள் புதைந்து கிடக் கும் ஸ்வரூபங்களும் ஏராளமாம். அதுவே அவ்வப்போது ஸ்வய ம்பு மூர்த்தியாய் வெளிப்படுகிறதாம். ஸ்வயம்பு மூர்த்தங்களின் பின்புலத்தில் பஞ்சபூத சக்திகளின் இயக்கம் ஒரு சீராகவும், ஆச்சரியம் ஊட்டும் விதத்தில் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த கூட்டுறவோடும் செயல்படுகிறதாம். சுருக்கமாகச் சொன்னால், அந்த மூர்த்தங்களைப் பஞ்ச பூதங்கள் ஆராதிக் கின்றன என்பதே உண்மை என்கிறார்.

இப்படிப்பட்ட ஆராதனைக்குரிய இடங்களில் கூர்ந்து கவ னித்தபோது பஞ்ச பூதங்களும் சம அளவிலும், அத்துடன் சீரான இயக்கத்துடனும் இருக்கின்றன. மனித சரீரத்திலும் பஞ்ச பூதங் கள் உள்ளன. இவை சுயம்புலிங்க ஸ்தலங்களில் இயற்கையோடு கூடிச் செயல்படுகின்றன என்கிறார். அதாவது சுயம்பு மூர்த்தி உள்ள ஸ்தலங்களில் வாழும் மனிதர்களே அந்த மண்ணுக்கான மழை. காற்று, அக்கினி, மண்வளம் ஆகியவைகளைத் தீர்மானிக் கிறார்கள் என்று கூறும் அவர், மதுரை போன்ற சுயம்புலிங்க ஸ்தலங்களில் கூடுதலான மழை அல்லது குறைவான மழைக்கு அங்கு வாழும் மக்களின் மனநிலையே காரணமாகிறது என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயம்பு லிங்கங்கள் உள்ள மண்ணில் வாழும் மக்கள் மனது வைத்தால் அங்கே எதை வேண்டுமானாலும் உருவாக்கிட இயலும் என்றும் கூறுகிறார். இந்த பூமியானது சூரியனில் இருந்து உதிர்ந்த ஒரு சிறிய அக்னித் துளி என்கிறது விஞ்ஞானம். மெல்லக் குளிர்ந்த இதில் அடுக்கடுக்காய் உயிரினங்கள் தோன்ற ஆரம்பித்தன. அந்த உயிரினங்கள் உயிர் வாழத் தேவையான அனைத்தும் கூட அப்போது தோன்றின. இதுதான் பல கோடி ஆண்டுகளைக் கண்டு விட்ட இந்த பூமியின் சுருக்கமான வரலாறு.

மாற்றம் என்பதே இந்தப் பூமியில் மாறாத ஒன்றாக என்றும் இருப்பது. அந்த மாற்றங்களால் வந்ததே இந்த மனித சமூகம். இதன் நடுவே மிக மாறுபட்ட கருத்துகளுடன், நமக்கிருக்கும் அறிவாற்றலால் நம்பமுடியவில்லை என்று ஒரு வார்த்தையில் கூறும் விதமாய் இருப்பதே மதப் புராணங்கள். இதில் புராணவழி அறியப்பட்ட சிவமானது தனித்து நிற்கிறது. "புராணம், விஞ்ஞானம் இரண்டையும் கடந்து மூன்றாவதாய் ஒன்றும் உள்ளது. அதுதான் நான். மானுடமே முடிந்தால் என்னைப் புரிந்துகொள் என்பது போல் இருக்கிறது அது" என்கிறார் டாக்டர் விளாதிமீர்.

இந்த பூவுலகில் சிவம் தொடர்பான அடையாளக் குறியீடுகள் பாரத மண்ணில் மட்டுமன்றி ஆப்பிரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களில் கூட இருக்கிறது என டாக்டர் விளாதி மிர் கூறுகிறார். அமெரிக்காவில் "கிராண்ட் கன்யான்" என்னும் வித்தியாசமான மலைப்பகுதியில் பராசக்தியின் அம்சங்கள் என்று வர்ணிக்கப்படும் "சிவம், விஷ்ணு, பிரம்மன்" மூன்றின் அடையாள உருவங்கள் காணப்படுகின்றனவாம். ஆயினும் இந்திய மண்ணில் மட்டும் சிவம் தொடர்பான சிந்தனைகளும், சைவம் என்கிற ஒரு பிரிவும் உருவாக ஆழமான ஒரு காரணம் இருப்பதாக விளாதிமீர் கருதுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் உயர்ந்த சிகரமான இமயம் பூகோள ரீதியில் கிட்டத்தட்ட பூமியின் மையத்தில் காணப்படுகிறது. அதன்படி பார்த்தால் இந்த உலகே கூட சிவலிங்க சொரூபம் எனலாம். ஒரு வட்டத்தில் இருந்து கூம்பு முளைத்தது போல் உலகமே ஆவுடையராகத் திகழ இமயம் சிவஸ்தம்பமாக எழும்பி நிற் கிறது. அங்கே பஞ்சபூத ஆராதனையாக குளிர்ந்த காற்றும் உறை ந்த பனியே நீராகவும், அதன் முற்றிய குணமே நெருப்பாகவும் இருக்கிறது. ஈர்ப்பு விசைக்கு உட்பட்ட வெளி வேறு எங்கும் காணப்படாத விதத்தில் தூயதாக எல்லாவித கதிர் வீச்சுக்க ளையும் கொண்டதாகக் திகழ்கிறது. இங்கே உயிராகிய ஜீவன் மிகச் சுலபமாக சிவத்தை அடைந்து விட அல்லது உணர்ந்து விட ஏதுவாகிறது. அதனாலேயே இங்கே ஞானியர் கூட்டம் அதிகம் இருக்கிறது என்பதும் அவரது கருத்து.

இந்த ரஷ்ய விஞ்ஞானி சொன்ன விஷயங்கள் எதையும் எந்த விஞ்ஞானியும் மறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சமஸ்கருதம் இந்தி மற்றுமின்றி அனைத்து மொழிகளும் தமிழி லிருந்து உருவானதே என அமெரிக்க மொழி ஆய்வார்வலர் அலெக்ஸ் கொலியா கண்டறிந்தார்.

## உலக அழிவு பற்றி அன்றே சொல்லி வைத்த மகாபாரதம்

மகாபாரதத்தில் இல்லாதது எதுவும் இல்லை. "வ்யாச் சோசி ஷ்டம் ஜகத் சர்வம்" என்பது பெரியோர் வாக்கு. அதாவது வியாச முனிவரின் எச்சில் தான் இந்த உலகம் முழுதும். அவர் வாயில் விழாத விடயம் இப்பூவுலகில் எதுவும் இல்லை. முன் னரே வெளி உலகவாசிகள் பற்றியும், பீஷ்மரின் ஊசி மருத்துவம் (அக்யுபஞ்சர்) பற்றியும், காலப் பயணம் பற்றியும் (டைம் ட்ராவல்) கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது மாயன் காலண்டரில் உலக அழிவு பற்றி இருப்பதாக வதந்தி கிளம்பி இருப்பதால் எல்லோருக்கும் இதில் ஆர்வம் பிறந்திருக்கிறது. மகாபாரதம் கலியுக முடிவு பற்றி என்ன சொல்லி இருக்கிறது என்பதைப் பார்க்கலாம். பல இடங்களில் உலக முடிவு பற்றிப் பேசப்பட்டாலும் வனபர்வத்தில் கலியுகத்தின் இறுதிக் காலம் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. நம்மைப் போலவே பாண்டவர்களில் மூத்தவரான தர்மருக்கும் இதில் ஆர்வம் இருந்திருக்கிறது. இது ஒரு அதிசயமான, ஆர்வ மூட்டும் விஷயம் என்று பீடிகை போட்டுவிட்டு, மார்க்கண் டேய முனிவரிடம் கீழ்கண்ட கேள்விகளைக் கேட்கிறார் தர்மர்.

தர்மங்களும், நற்குணங்களும் அழிந்த பின்னர் என்ன நடக்கும்? அப்போது மனிதர்கள் என்ன உண்ணுவார்கள்? எப்படிப் பொழுதைக் கழிப்பார்கள்? அவர்கள் எந்த அளவுக்கு பலம் உடையவர்களாக இருப்பார்கள்? கலியுகம் முடிந்த பின்னர் கிருதயுகம் தொடங்குமா?

தர்மரின் கேள்விகளை இந்தக் காலத்தில் படிக்கும்போது நம் முன்னோர்கள் எவ்வளவு தீர்க்க தரிசனம் படைத்தவர்கள் என்று எண்ணி வியக்க வேண்டியுள்ளது. அன்றாட விடயங்கள் பற்றிப் பேசாமல் இந்தப் பூவுலகின் தோற்றம், முன்னேற்றம், முடிவு குறித்து சிந்திப்பதை வேறு எங்கும் காண முடியாது. இந்துப் புராணங்களிலும், மகாபாரதத்திலும் மட்டுமே காண முடியும்.

மார்கண்டேய முனிவரின் பதிலில் உள்ள உட்கருத்துக்களை மட்டும் இங்கே பார்க்கலாம்.

1. கிருத யுகத்தில் ஏமாற்று, மோசடி, பேராசை, பொய் கிடையாது. அப்போது தர்மம் என்னும் மாட்டுக்கு நான்கு கால்கள் இருந்தன. திரேதா யுகத்தில் பாவங்கள், ஒரு காலை வெட்டி விட்டன. அடுத்த துவாபர யுகத்தில் பாவங்கள் பெருகி அறம் அழியவே தர்மத்துக்கு இரண்டு கால்கள் மட்டுமே எஞ்சின. கலியுகத்திலோ இது ஒரே கால் ஆகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஒவ்வொரு யுகத்திலும் மனிதனின் உடல் பலம், ஆன்ம பலம், புத்தி ஆகியன குறைந்து கொண்டே வரும். கலியுகத்தில் நான்கு வருணத்தாரும் பொய்யாக ஆசார அனுஷடானங்களைப் பின் பற்றுவர். ஒருவரை ஒருவர் ஏமாற்றுவர். போலி அறிஞர்கள் பொய்மை வாதத்தால் உண்மையை மறைப்பர். ஆயுள் குறை வால் அதிகம் கற்க முடியாது. கல்விக் குறைவால் விவேகம் வராது. பேராசை, காமம், கோபம், அறியாமை ஆகியவற்றால் ஒருவரை ஒருவர் வஞ்சிப்பர். முதல் மூன்று ஜாதியினர் நாலாவது ஜாதி அளவுக்கு தாழ்ந்து விடுவர்.

3. மீன், ஆடு முதலிய உணவு அதிகரிக்கும். பசுமாடுகள் குறைந்து விடும். ஆசை காரணமாக ஒருவரை ஒருவர் கொல்லு வர். மனைவியர் நண்பர்கள் போல இருப்பார்கள். திருடர்கள், நாஸ்தீகர்கள் அதிகரிப்பர். தானியங்கள் விளையாமையால் ஆறுக ளிலும்,ஏரிகளிலும் இறங்கி பயிர் செய்வர். அப்படியும் வறண்ட பூமியாகவே இருக்கும்

4. அப்பன் மகன் சொத்தையும், மகன் அப்பன் சொத்தையும் அபகரிப்பர். சாஸ்திர விதிகளுக்குப் புறம்பான விஷயங்களை அனுபவிப்பர். பிராமணர்கள் வேதங்களை நிந்திப்பர். ஹோமம் முதலியவற்றைப் பின்பற்ற மாட்டார்.

5. மிலேச்சர் போன்று நடக்கத் துவங்குவர். யாக யக்ஞங்கள் நடக்காது. மகிழ்ச்சி குறையும். பலமும், அறிவும் குறையும். ஒருவர் ஒருவருடன் வாதிடுவர். காக்கும் தொழிலில் உள்ளவர்கள் தண்டனை அளிப்பதில் மட்டும் கருத்தைச் செலுத்துவர். அவர் கள் நேர்மையான மக்களையும், அவர்களுடைய குழந்தைகள், மனைவிமார்களையும் அபகரிப்பர்.

6. மனைவிமார்கள், கணவனுக்கு பணிவிடை செய்ய மாட்டா ர்கள். பார்லி, கோதுமை விளையும் நாடுகளை நோக்கி மக்கள் செல்லுவர். ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் மதிக்க மாட்டார்கள். வருண வேறுபாடுகள் அகன்று எல்லோரும் ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி இருப்பர். தோட்டங்களையும், மரங்களையும் அழிப்பர். ஐயோ போன்ற கதறல்கள் அதிகரிக்கும்.

7. சூரியன், சந்திரன், குரு மூவரும் புஷ்ய நட்சத்திரத்துடன் ஒரே ராசியில் பிரவேசிக்கையில் புதிய கிருதயுகம் துவங்கும். பீஷ்ம பர்வத்தில் ஓரிடத்தில் யுகமுடிவில் சந்திரனை ஐந்து கிரகங்கள் பீடிக்கும் என்று கூறப்பட்டுள்ளது. நிறைய கிரகங்கள் ஒரே ராசியில் சேருவது பொதுவாக நன்மை இல்லை என்பது கருத்து.

இந்த நேரத்தில் சம்பல என்னும் ஊரில் ஒரு பிராமணர் குடும்பத்தில் கல்கி அவதரிப்பார். அவர் விஷ்ணுவின் புகழ் பாடுவார். தீயோரை அழித்து நல்லோரைக் காப்பாற்றுவார். அவர் பிறந்த பின்னர் பூமி எங்கும் மழையும், சுபிட்சமும், அமைதியும், நல்லாட்சியும் நிலைபெறும். அவர் கிருதயுகத்தைத் துவக்கி வைப்பார். அவர் துராசாரம் மிக்க மிலேச்சர்கள் அனை வரையும் ஒழிப்பார். அவர் மன்னர்களுக்கெல்லாம் மன்னராக விளங்குவார். அவர் நினைத்த மாத்திரத்தில் ஆயுதங்களும், படை பலமும் வந்து குவியும். கல்கி என்பவர் மகாபலவானாகவும், புத்திமானாகவும், குணவானாகவும், தேஜோமயமாகவும் ஜொலிப் பார். வேறு சில புராணங்களில் அவர் வெள்ளைக் குதிரையில் பவனி வருவார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

8. உலக அழிவின் போது ஏற்படும் இயற்கைச் சீற்ற வருணணை களைப் படிக்கையில் பூகம்பம், கடல் சீற்றம், சுனாமி, பெருந்தீ, வறட்சி, வெள்ளம், எரிமலைச் சீற்றம், விண்கல் வீச்சு ஆகிய எல்லாம் நினைவுக்கு வருகிறது. ஆக முன்னோர்களும் தர்மம் குன்றும் போது இயற்கையும் மாறுபடும் என்று எதிர்பார்க்கி ன்றனர்.

9. இவை எதுவும் நாளையே நடைபெறப் போவதில்லை. ஆனால் சில விஷயங்கள் இப்போதே நடப்பதை மறுப்பதற்குமில்லை. இன்னும் நூறு ஆண்டுகளுக்குப் பின் மகாபாரதத்தில் உள்ள இதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனபர்வத்தைப் படித்து புது அர்த்தம் ஏதேனும் புலப் படுகிறதா என்பதை அந்த காலத்தில் இருப்பவர்கள் கூறுவர்.

**மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்; வைகலும்**
**எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவில்லை**
-திருஞான சம்பந்தர்

**சேல் பட்டு அழிந்தது செந்தூர் வயல் பொழில், தேன் கடம்பின்**
**மால் பட்டு அழிந்தது பூங்கொடியார் மனம்; மாமயிலோன்**
**வேல் பட்டு அழிந்தது வேலையும் சூரனும் வெற்பும்; அவன்**
**கால் பட்டு அழிந்தது இங்கு என் தலைமேல் அயன் கை எழுத்தே**
-அருணகிரிநாதர்

**நன்றி-லண்டன் சுவாமிநாதன்**

## சூரியனைப் பற்றி அன்றே கூறிய நம் சித்தர்கள்

நமது பூமி சூரிய மண்டலத்தில், பால் வெளியில் சுற்றிக் கொண்டு இருப்பதை அன்றே அகத்தியர் கூறி விட்டார்.

**புவி தானும் ஜோதி வெளியின் ஒளியில்**
**மிதக்க மிதந்தே கண்டோம்**
**போகனும் புலிப்பாணியுஞ் சாட்சியே**
**பருதி குலத்து செம்மையான உயிர்**
**கோளிது புவியாமே...** என்றார் அகத்தியர்.

ஜோதி வெளி ஒளி என்பது பால் வழி என்று பொருள் பட, பருதி குலம் என்பது சூரிய குடும்பம் என்றும் பொருள் ஆகிறது. இனி சூரியனின் தன்மைகளைச் சித்தர்கள் விவரிப்பதை அவர்களின் பாடல்கள் மூலம் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனில் இருக்கும் வாயுக்களாவன ஹைட்ரஜன், மற்றும் ஹீலியம் என்பது விஞ்ஞானிகளின் ஆய்வு. இதனை கோரக்கர் என்னும் சித்தர் இவ்வாறு பாடினார்.

**பருதி தனில் பிரணமிலா நீரின்வாயு நிறைய**
**மீதக் காலே சோம்பல் பிராண காரிரும்பென**
**கண்டோமே...**

பிராணமிலா நீர் வாயு என்பது ஹைட்ரஜன் வாயுவைக் குறிக்கும். இது சூரியனின் எடையில் முக்கால் பகுதி எனவும், *INERT* எனப்படும் ஹீலியம், ஆக்சிஜன், கார்பன், இரும்பு என்றும் பொருள்படுகிறது. இதையே இன்றைய நாசா விஞ்ஞானி கள் உறுதிப்படுத்துகின்றனர்.

**பருதி நிறை சூடுமலராம் - புவியெப்ப**
**அஸ்டோத்திர நிறையாம் - மங்களவர்ண**
**மாய் புவி காட்ட, மண்டல நீலமே கரு...**
என்றார் புலிப்பாணி சித்தர்.

*HOT PLASMA* என்று சூரியனை அக்காலத்திலேயே சித்தர் வர்ணிக்கிறார். சூடுமலர் என்பதே இது. பூமியைப் போன்று நூற்றியெட்டு பங்கு எடை மிகுத்தது என்றும் பேசுகின்றார். பூமியிலிருந்து சூரியனைப் பார்க்க மஞ்சளாகத் தெரிவது, ஆகாய த்தில் ஏற்படும் *SCATTERING EFFECT & BLUE OF THE SKY* என்று பேசுவது அறிவியலையே வியக்கச் செய்யும் அளவுக்கு எந்த உபகரணமும் இன்றி இதனை சித்தர்கள் உணர் ந்து நமக்கு உரைத்தமை வியப்பளிக்கின்றது. சூரியனின் மேற் புறத்து வெப்பத்தை போகர் இவ்வாறு பாடினார்.

**அக்கனியே அடுதி அளவு இருக்க கண்டோமே...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுதி என்பதனை ஐந்தாயிரத்து ஐந்நூறு சென்டிகிரேடு என்று நாடி எண்ணிக்கையின் அகராதி கூறுகிறது. ஆக சூரியனின் மேற்பரப்பு வெப்பம் 5,500 டிகிரி செல்சியஸ் என்கிறார் போகர். வான்வெளி ஆய்வாளர்கள் 5,505 டிகிரி செல்சியஸ் என்று குறிப்பிடுகின்றனர். ஒவ்வொரு நொடியிலும் சூரியனின் ஐதரசன் வாயு சிதைவடைகிறது. இதன் அளவை சித்தர் தெளிவாக விவரிக்கின்றார்.

**அமிலவாயு தாழுமழியுஞ் சிதைவைச் செப்ப**
**சட்டிச் சதமிரு பாந்தோகை நிறையென**
**சாற்ற இஃது தாம் மாத்திரை பொழுதன்றோ...**

மாத்திரை என்றால் நொடி என்று பொருள். தோகை என்றால் பத்துலட்சம் அல்லது ஒரு மில்லியன் என்பது நாடியின் பொருள். ஒரு நொடியில் ஹைட்ரஜன் வாயுவை சிதைக்கும் இணைவு (FUSION) அளவு 620 மெட்ரிக் டன் மில்லியனில் என்று சித்தர் கூறுவது, கணக்காளர் மத்தியில் ஆய்வாளர் மத்தியில் ஆச்சரியத்தைத் தோற்றுவிக்கிறது. ஆய்வாளர்கள் 620 மில்லியன் டன் ஐதரசன் ஒரு நொடியில் இணைவு ( FUSION ) ஆகிறது என்பது மிகத் துல்லியமாக சித்தர்களால் சொல்லப் பட்ட கணிப்பாகும்.

**ஞாயிறான் ஓட்டமும் பால்வடிவமே**
**புவிக்கு மூபஞ்சமிரண்டு ஒளியாண்டே**
**பால்வழியும் பறக்குது பாரு, விழியறியாயளிக்**
**கற்றை ஒப்பிட கனியான தொலை மாத்திரையாகுமே...**

மேலே கூறப்பட்டுள்ள பாடலில் மிகுந்த நுட்பம் வாய்ந்த மையை காணக்கூடியதாக உள்ளது. வழியறியா ஒளிக்கற்றை என்பது பிரபஞ்ச நுண்ணலையின் பின்னணியில் ஏற்படும் கதிர்வீச்சு (COSMIC MICROWAVE BACKROUND RADIATION) என்பதாகும். இதனொடு ஒப்பிடுகையில் கனியான தொலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது 550 கி.மீட்டரைக் குறிக்கும். ஒரு நொடியில் இவ்வளவு தொலை பால்வழி பறக்கிறது. அதாவது MILKWAY நகர்கின்றது என்று தெளிவாகக் கூறுவது, விஞ்ஞானத்திற்கு சிறிதுகூட மாற்ற மில்லாது மெய்ஞானம் விளங்குகிறது என்பதனைக் காட்டு கின்றார் சித்தர். சூரியனிலிருந்து வரும் ஒளியானது பூமியை வந்து சேர ஆகும் காலம் எவ்வளவு என்பதனை விளக்கும் பாடல் இதோ.

**பருதி கிரணம் பாய்ந்து வந்திம் மண்ணை**
**யண்ட,யண்டத்தில் சஞ்சாரமாகுமே**
**பஞ்சரத மாத்திரை காலமே -** என்றார் போகர்.

அதாவது 500 வினாடிகள் என்கிறார் சித்தர். இதனை விஞ்ஞா னிகள் 499 நொடிகள் என்கின்றனர்.

**பருதியுமோர் விண்மீனே - கடுதிக்குரு**
**மீனே. பருதி குலத்து ஈரேழு கடுகித்தப்ப**
**விழுக்காடு குன்ற யீர்பிலா நிறையாமே.**
**சூடுமலர் உச்சியிறும் மையத்திலுஞ் சுற்றப் பார்ப்பீரே...**

இது ஒரு பழம் பாடல். இது சூரியனும் ஒரு நட்சத்திரம் தான் என்கின்றது. இதனை விஞ்ஞானிகள் G-TYPE MAIN-SEQUENCE STAR என்பர். ஆக சூரிய குடும்பத்தின் நிறையில் 99.86% சூரியனின் நிறை என்கிறது இப்பாடல். கடுதிக்குரு என்பது 0.14% என்பதாகும்.

**மதிப்பிலடங்கா உலோக முடைத்தான்**
**கதிரோன் - தங்கமுமுண்டு - ஒளியுலோக**
**முமுண்டு சாற்றுவோம் - இவையே**
**அணுச்சக்தி தமை யெழுப்பக் கரு....**

என்று பாம்பாட்டி சித்தர் எளிமையாகக் கூறுகின்றார். யுரேனி யம், தங்கம் போன்ற விலையுயர்ந்த உலோகங்கள் சூரியனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைய இருப்பதினால், அணு எதிர் விளைவு ( *NUCLEAR REACTION* ) அங்கு எளிதில் நடைபெறுகின்றது என்கிறார். இதனாலேயே மிகவும் ஆபத்து வாய்ந்த கதிர்கள் சூரியனிலிருந்து வெளிவருகின்றன. அவை பூமியை வந்தடைகையில்,

**கருணை மிகுந்த கடிவாளமிட்டான்**
**சங்கரன் வடிவாய் பற்பல வடி**
**கட்டிகளை நிறுத்தி நஞ்சைத்தடுக்க**
**நன்மையே நன்றான நற்கதிரே**
**மண்ணடைய வைத்தனனே பைத்தமா நிதியே...**

எனப் பாடுகிறார் கொங்கண சித்தர்.

அண்டத்தில் அதிகமான படலங்கள் அடுக்குகள் எனும் ( *LAYER* ) உண்டு. பிரபஞ்ச படலம் ( *COSMIC LAYER* ), ஓசோன் படலம் ( *OZONE LAYER* ), அப்ளேஷன் படலம் *(APPLETION LAYER)* என்று பற்பல உருவாகி, தீமை பயக்கும் கொடிய வெப்பக் கதிர்களை வடிகட்டி நன்மை மட்டும் தரும் கிரணங்களை நமது பூமிக்கு வந்தடைய கருணையே வடிவான கடவுள் வைத்த மாநிதி அனுகிரத்தனன் என்றார் சித்தர்.

**பகுதியானொலியின் ஏகத்துஞ் சற்றே**
**குன்ற யளி வருமண்டத்தே நம்புவீர்...**

எனும் கொங்கணர் வரியிலிருந்து, சூரியனின் புறத்தே ஏற்படும் ஒளி வெள்ளத்தில் 0.8 சதவிகிதமே பூமியை வந்து அடைந்து நம்மை வாழ்விக்கின்றது என்றால், சூரியக் கோளின் தன்மையைக் கண்டு வியப்பு மேலிடுகின்றதான்றோ. அகத்தி யரின் பாடலில்,

**ஆதித்யனவன் ஆற்றலனைத்துமாகாது**
**அதிலொரு காலே ஒளிக்குதவ, மீதமது**
**சூடேறி தாமிருப்ப, அடவில் மேலாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முப்பானேடு கோடியளவே மாத்திரையில்சலாட**
**நொடியில் காட்டும் கடுசி துகளே...**

சூரியனின் ஆற்றல் அனைத்தும் இனியும் வெளிவரவில்லை. கால்பகுதி சூரியனில் தான் *DIF-FUSION,NUCLEAR REACTION* நடைபெறுகின்றது. இதனால் ஏற்படும் வெப்பம், மற்ற இடங்களை வெப்பமடையச் செய்கிறது. புரோட்டான்-புரோட்டான் சங்கலி *38* கோடி முறை ஒவ்வொரு நொடியிலும் நிகழ்கின்றது. *3.7*-ஐ $10^{38}$ புரோட்டான் *ALPHA PARTICLE* ஆக உருவெடுக்கின்றது எனக் கூறுகிறார்.

**ஆதித்யனின் அபரிமித வெப்பமது**
**அளவாய் சாற்ற கேளீர் - ஈர்ப்பிலா**
**யெடையான சக்தியளி மாற்றமது**
**தகடேசான நிறையாம் - திறனே கசடானதா**
**மது மாத்திரை பொழுதெனப் பகரு...**

அதாவது சூரியனின் வெப்ப சக்தி வெளிவருதல் *4.3* மில்லியன் மெட்ரிக் டன் (தகடேசான்) *ENERGY WATT.9.000 X* $10^{11}$ *MEGATONS TNT PER SECOND* (கசடானதாம்-*3.9 X* $10^{26}W$) இவ்வளவு துல்லியமான கணிதத்தை அக்காலத்திலேயே சித்தர்கள் கூறியதை விஞ்ஞானிகள் உண்மை என ஆய்ந்து கூறுவது நமது சித்தர்களின் வான்வெளி புலமையைப் பறை சாற்றுகிறது. நம் சித்தர்கள் தலை சிறந்த விஞ்ஞானிகளா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது முன்னோர்கள் வானியல் நிபுணர்கள் என்பதை நிரூபிக்கும் சான்றுகள்

## சூரியனுடைய சஞ்சாரம் பற்றிக் கூறும் புராணங்கள்

### மத்ஸ்ய புராணம்

நமது முன்னோர்கள் வானியல் நிபுணர்கள் என்பதை நிரூபிக்கும் ஏராளமான கருத்துக்கள் புராணங்களில் உள்ளன. சூரியனுடைய சஞ்சாரம் பற்றி மத்ஸ்ய புராணம் இவ்வாறு கூறுகிறது. உத்தராயணத்தில் 18 முகூர்த்தத்தில் 13 நக்ஷத்திரங்களின் இடையே சூரியன் சஞ்சரிக்கிறான். தக்ஷிணாயனத்தில் 12 முகூர்த்தத்தில் 13 ½ நக்ஷத்திர மண்டலங்களில் சூரியன் சஞ்சரிக்கிறான்.

### வாயு புராணம்

மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி ஆகிய மாதங்களில் சூரியன் உத்தராயணத்தில் சஞ்சரிக்கிறான். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை ஆகிய மாதங்களில் சூரியன் தக்ஷிணானயத்தில் சஞ்சரிக்கிறான்.

### பவித்ர நதிகள்

கங்கை, யமுனை, கோமதி, சரயு, சரஸ்வதி, சந்த்ரபாகா, சர்மண்யவதி ஆகிய நதிகள் பவித்ரமான புண்ணிய நதிகளாகும்.

### தேவர்களை சந்தோஷம் அடையச் செய்பவை -நாரதீய புராணம்

1) கார்த்தவீர்ய தீப தானம்,

2) சூர்ய நமஸ்காரம்

3) விஷ்ணு ஸ்துதி

4) கனேஈச தர்பன்

5) துர்கா அர்ச்சனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) சிவ அபிஷேகம்

ஆகிய இந்த ஆறினாலும் தேவர்கள் சந்தோஷம் அடைகின்றனர்.

**ப்ரளயம் நான்கு வகைப்படும் -கூர்ம புராணம், அக்னி புராணம், சூர்ய புராணம்**

1) நித்யம்

2) நைமித்திகம்

3) ப்ராக்ருதம்

4) ஆத்யந்திகம்

என இவ்வாறு பிரளயம் நான்கு வகைப்படும்.

**துர்கா ஸப்த சதி - -மரீசி கல்பம்**

துர்கா ஸப்த சதி மார்க்கண்டேய புராணத்தில் வருகிறது. துர்கா ஸப்த சதியில் 13 அத்தியாயங்களே உள்ளன. முதல் அத்தி யாயத்திலிருந்து 13 அத்தியாயம் முடிய ஒவ்வொரு அத்தியாயத் திலும் முறையே 104, 69, 44, 42, 129, 24, 27,63,41,32,55,41,29 ஸ்லோகங்கள் உள்ளன. இவற்றை மொத்தம் கூட்டினால் வருவது 700 ஆகும். (ஸப்த சதி என்றால் எழுநூறு என்று பொருள்) **துர்கா ஸப்த சதியின் ப்ரவக்த ரிஷி சுமேதா.**

**மேலே உள்ள லோகங்கள் ஏழு! கீழே உள்ள லோகங்கள் ஏழு! கீழே ஏழு உலகங்கள் உள்ளன.**

1)அதல 2) விதல 3) நிதல 4) ரஸாதல 5) தலாதல 6) சுதல 7) பாதாள முதலிய ஏழு லோகங்கள் கீழே உள்ளன., **-ஸ்கந்த புராணம், விஷ்ணு புராணம், ப்ரம்மவைவர்த புராணம், நாரதீய புராணம், ப்ரஹ்ம புராணம், ஸ்ரீமத் பாகவதம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேலே ஏழு உலகங்கள் உள்ளன.**

*1) பூலோகம் 2) புவலோகம் 3) ஸ்வலோகம் 4) மஹலோகம் 5) ஜனகலோகம் 6) தபலோகம் 7) சத்யலோகம்*

**-ஸ்கந்த புராணம், ப்ரம்மவைவர்த புராணம், நாரதீய புராணம், ப்ரஹ்ம புராணம், ஸ்ரீமத் பாகவதம், விஷ்ணு சம்ஹிதா, சாம்ப புராணம், ஆருணிகோபநிஷத்**

## வானவியலை போதிக்கும் ரிக் வேதம்.

எப்போதும் அயல்நாட்டு அறிவியலை ஆர்வத்துடன் தேடிப் படிக்கும் நாம், நம் வேதங்களின் வாயிலாக பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் சொன்னதைத்தான் பல நூற்றாண்டுகளுக்கு பிறகு மேலைநாட்டவர்கள் கண்டுபிடித்துள்ளார்கள் எனும் உண்மையை ஏன் உணர மறுக்கிறோம்?

இதில் நம்மை சொல்லி குற்றமில்லை. நமது கல்வி முறையும் அயலானை துதிபாடுவதாகவே அமைந்துள்ளது. முதலில் நாம் நமது வேதங்களை பற்றியும், இலக்கியங்கள் பற்றியும் நன்கு அறிய வேண்டும். அதை அறிந்து விட்டால் நம் மூதாதையர்கள் எவ்வளவு வல்லவர்கள் என்பது புலப்படும்.

**இனி ரிக் வேதத்தில் உள்ள விஞ்ஞான பதிவை காணலாம்.**

***01.**மித்ரோ ததாரா ப்ரதவி முட்டாத்யம் மித்ர க்ரிஷ்டிஸ் (ரிக் வேதம் 3:55:91)***

இதன் பொருள்: தனது ஈர்ப்பு சக்தியால் சூரியன் பூமியையும் வேறு கோள்களையும் தாங்கிப்பிடித்த வண்ணம் உள்ளது.

***02.**த்ரின பிகா க்ரமஜார்மனர்வம் யெனிமா விஸ்வ பூவா னானி டஸ்தூ (ரிக்வேதம் 1:16:41)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்: எல்லா கிரகங்களும் விடுவதை கொண்ட ஓர் சுற்று வட்டத்தில் சுற்றுகின்றன.

***03.அயம் கவ் பிர்ஸ்னிரக்ராமிட் அசடன்மட்டராம் புரா பிடரம் க பிரயந்ஸ்வா (ரிக்வேதம் 10:16:91)***

இதன் பொருள்: சந்திரன் பூமிக்கு துணைக்கோள். பூமியானது தாய்க் கிரகமான சந்திரனையும் தந்தை கிரகமான சூரியனையும் சுற்றி வருகின்றது. சூரியன் தந்தை கிரகமாகவும் சந்திரன் தாய்க் கிரகமாகவும் இந்து மதத்தின் பாவிக்கப்படுவதுண்டு. அதாவது மென்மையான ஒளிவீசும் சந்திரன் பெண் தாயாகவும் கடுமை யான ஒளிவீசும் சூரியன் தந்தைக்கு உவமிக்கப்படுவதும் வழக்கம். உலகம் தட்டை என்று மனிதர்கள் சுற்றி கொண்டி ருந்த காலகட்டத்தில் என்ன ஒரு அற்புதமான விஞ்ஞான படை ப்பு பாருங்கள். ஆனால் நாம் இன்று கலிலியோ, வாஸ் கோடகாமா என்று படித்துக் கொண்டிருக்கிறோம். **நன்றி-**
***A.*விஜயகுமார்**


# சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயிலில் உள்ள சில அற்புதமான ரகசியங்கள்

பல கோடி டொலர்கள் செலவு செய்து எட்டு ஆண்டுக ளாக ஆராய்ச்சி செய்து சிதம்பரம் நடராஜர் கால் பெரு விரலில் தான் மொத்த பூமியின் காந்த மையப்புள்ளி இருப்பதாக உலக நாடுகள் கண்டுபிடித்துள்ளன. எந்த செலவும் செய்யாமல் எந்த தொலைநோக்கி கண்ணாடியும் இல்லாமல் இதனை கண்டறிந்த நமது முன்னோர்கள் எப்பேர்ப்பட்ட அறிவுமிக்கவர்கள். அதை உணர்ந்து அணுத் துகள் அசைந்து கொண்டே இருக்கும் என்ற உண்மையை ஆடும் நடராஜர் வாயிலாக உணர்த்தும்படி சிலை அமைத்து பூமியின் மையப்புள்ளியில் மறைமுகமாக அமர்த்திய அவன் சாதனை எப்பேர்ப் பட்டது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை 5000 வருடங்களுக்கு முன்பே கண்டறிந்து திருமந்திரத்தில் குறிப்பிட்ட திருமூலரின் சக்தி எப்படிப்பட்டது? புரிகிறதா? தமிழன் யார் என தெரிகிறதா? திருமூலரின் திருமந் திரம் உலகிற்கே வழிகாட்டும் மிகப்பெரிய அறிவியல் நூலாகும். இதை உணர்ந்து கொள்ள தற்போதுள்ள அறிவியலுக்கு இன்னும் ஒரு நூற்றாண்டு தேவைப்படலாம்.



சிதம்பரம் நடராஜர் கோயில் ரகசியம் என்று பலரும் பல விடயங்களை கூறிவரும் வேளையில், அந்த கோயிலில் இருக்கும் அறிவியல், பொறியியல், புவியியல், கணிதவியல், மருத்துவவியல் குறித்த ஆச்சரியங்களின் சில தகவல்கள் இங்கே தரப்படுகின்றன.

நம் முன்னோர்கள் செய்த எல்லா செயல்களும் ஒரு தெளி வான சிந்தனையை நோக்கியே பயணித்துள்ளது. அப்படி இருக்க அவர்கள் நிர்மாணியித்த பிரம்மாண்டமான கற்கோவில்களுக்கு பின் இருக்கும் சில அற்புதங்களையும் இங்கே கூறலாம். அந்த வகையில் சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள சில அற்புத மான ரகசியங்கள் இதோ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(1)* இந்த கோயில் அமைந்திருக்கும் இடமானது உலகின் பூ மத்திய ரேகையின் சரியான மையைப் பகுதி என்று கூறப் படுகின்றது. *(CenterPoint of World's Magnetic Equator)*

*(2)* பஞ்ச பூத கோயில்களில் ஆகாயத்தை குறிக்கும் தில்லை நடராஜர் ஆலயம், காற்றை குறிக்கும் காலஹஸ்தி ஆலயம், நிலத்தை குறிக்கும் காஞ்சி ஏகாம்பரேஸ்வர ஆலயமும் சரியாக ஒரே நேர்கோட்டில், அதாவது சரியாக 79 *Degrees-41 minutes East* தீர்க்க ரேகையில் *(LONGITUDE)* அமைந்துள்ளது. இன்று *Google map* உதவியுடன் நாம் வானத்தின் மேல் இருந்து பார்ப்பதை போன்று பார்த்தால் மட்டுமே இந்த துல்லியம் விளங்கும். அன்றைய காலகட்டத்தில் இது ஒரு பொறியியல், புவியியல் மற்றும் வானவியியலின் உச்சகட்ட அதிசயமாகும்.

*(3)* மனித உடலை அடிப்படையாக கொண்டு அமைக்கப் பட்டி ருக்கும் சிதம்பரம் கோயிலில் 9 நுழைவு வாயில்களும், மனித உடலில் இருக்கும் 9 வாயில்களை குறிக்கின்றது.

*(4)* விமானத்தின் மேல் இருக்கும் பொற்கூரை 21,600 தங்கத் தகடுகளை கொண்டு வேயப்பட்டுள்ளது, இது மனிதன் ஒரு நாளைக்கு சராசரியாக 21600 தடவைகள் சுவாசிக்கிறான் என் பதை குறிக்கின்றது *(15x60x24 = 21,600)*

*(5)* இந்த 21,600 தகடுகளை வேய 72,000 தங்க ஆணிகள் பயன் படுத்தப்பட்டுள்ளது, இந்த 72,000 என்ற எண்ணிக்கை மனித உடலில் இருக்கும் ஒட்டுமொத்த நாடிகளை குறிக்கின்றது. இதில் கண்ணுக்குத் தெரியாத உடலின் பல பாகங்களுக்கு சக்தியை கொண்டு சேர்ப்பவையும் அடங்கும்.

*(6)* திருமந்திரத்தில் திருமூலர்


**மானுடராக்கை வடிவு சிவலிங்கம்**
**மானுடராக்கை வடிவு சிதம்பரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மானுடராக்கை வடிவு சதாசிவம்**
**மானுடராக்கை வடிவு திருக்கூத்தே**

என்று கூறுகிறார், அதாவது " மனிதன் வடிவில் சிவலிங்கம், அதுவே சிதம்பரம், அதுவே சதாசிவம், அதுவே அவரின் நடனம்" என்ற பொருளைக் குறிக்கின்றது.



(7) "பொன்னம்பலம்" சற்று இடது புறமாக அமைக்கப்பட்டுள்ளது. இது நம் உடலில் இதயத்தை குறிப்பதாகும். இந்த இடத்தை அடைய ஐந்து படிகளை ஏற வேண்டும். இந்த படிகள் பஞ்சாட்சர படி என்று அழைக்கப்படுகின்றது. அதாவது "சிவாயநம" என்ற ஐந்து எழுத்தே அது. கனகசபை பிற கோயில்களில் இருப்பதை போன்று நேரான வழியாக இல்லாமல் பக்கவாட்டில் வருகின்றது. இந்த கனக சபையைத் தாங்க 4 தூண்கள் உள்ளன. இது 4 வேதங்களை குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(8)* பொன்னம்பலத்தில் 28 தூண்கள் உள்ளன, இவை 28 ஆகமங்களையும், சிவனை வழிபடும் 28 வழிகளையும் குறிக்கின்றன. இந்த 28 தூண்களும் 64+64 மேற்பலகைகளை கொண்டுள்ளது. *(BEAM)*. இது 64 கலைகளை குறிக்கின்றது. இதன் குறுக்கில் செல்லும் பல பலகைகள் *(CROSS BEAMS)*. மனித உடலில் ஓடும் பல ரத்த நாணங்களைக் குறிக்கின்றது.

*(9)* இங்குள்ள பொற்கூரையின் மேல் இருக்கும் 9 கலசங்கள், 9 வகையான சக்தியைக் குறிக்கின்றன. அர்த்த மண்டபத்தில் உள்ள 6 தூண்கள், 6 சாஸ்திரங்களையும், அர்த்த மண்டபத்தின் பக்கத்தில் உள்ள மண்டபத்தில் உள்ள 18 தூண்கள், 18 புராணங்களையும் குறிக்கின்றன.

*(10)* சிதம்பரம் நடராஜர் ஆடிக்கொண்டிருக்கும் ஆனந்த தாண்டவம் என்ற கோலம் "*Cosmic Dance*" என்று பல வெளிநாட்டு அறிஞர்களால் அழைக்கப்படுகின்றது. விஞ்ஞானம் இன்று சொல்வதை இந்துமதம் அன்றே கூறிவிட்டது.

## இந்து புராணங்களில் சொல்லப்பட்டுள்ள நெற்றிக்கண் என்ற ஒன்று உள்ளதா?

இந்து சமய புராணங்களிலும், நூல்களிலும் சிவனின் நெற்றிக்கண் பற்றிக் கூறப்பட்டுள்ளது. நெற்றிக்கண் என்று ஒன்று உண்டு என்பது இந்துக்களின் நம்பிக்கை. இந்துக்கள் சிவனை முக்கண்ணன் என்று அழைத்து வணங்குவார்கள். நக்கீரரை சோதிப்பதற்காக வந்த சிவன் தனது நெற்றிக்கண்ணை திறந்தார் என்று நாம் அறிந்திருக்கிறோம்.

கடவுள் என்று ஒருவரே இல்லை என்றும், இந்து மதத்தில் கூறப்படுவது எல்லாம் புராணக்கதை என்றும் கூறும் அறிவு ஜீவிகளுக்கு மத்தியில் வாழும் நாம் நெற்றிக்கண் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று உண்டு என்று கூறினால் அதற்கும் ஏதாவது வாதம் வைப் பார்கள். பகுத்தறிவு என்றால் என்ன என்றே விளங்கிக் கொள்ளாமல், இறை நம்பிக்கையற்ற தாங்கள் பகுத்தறிவுவாதிகள் என்றும், இறை நம்பிக்கையுள்ளவர்கள் பகுத்தறிவு அற்றவர்கள் என்றும் கூறி, மிகவும் வெப்பமான காலத்திலும் கருப்புச் சட் டையை அணிந்து கொள்வது எந்த பகுத்தறிவில் சேர்ந்தது என்று தெரியவில்லை.

ஆனால் இந்துமதம் பகுத்தறிவுள்ள விஞ்ஞானத்துடன் இணைந்த மதம் என்பதை இவர்கள் அறிந்தும் அறியாதவர் போல் இருப்பர். அதன் சிறப்பை மெல்ல மெல்ல இப்போது தான் சில இந்திய, மேற்கத்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்து நமது அறிவு ஜீவிகளுக்கு புரிய வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கோவில்கள் கட்டி வைத்ததற்கும், கடவுளை பல நாமங் களில் அவரவர் விருப்பப்படி வழிபட அனுமதிப்பதற்கும் மற்றும் அதன் சில கொள்கைகளுக்கும், வழிபாட்டு முறைகளுக்கும் பின்னால் பலமான காரணங்கள் உள்ளன. இதை விளங்கிக் கொள்ளும் அளவிற்கு நமக்கு அறிவு குறைவாக உள்ள காரணத்தால் அதை பொய் என்றோ மூட நம்பிக்கை என்றோ கூறக்கூடாது.

அதன் சில வழக்கங்களை சுயநலத்திற்காக சிலர் துஷ் பிரயோகம் செய்தால் அதற்கு மதம் பொறுப்பல்ல. எம்மதமா னாலும் அன்பையும், கடவுளை அடையும் வழியையும் தான் கூறுகின்றன. ஒரு சிலர் செய்யும் தவறுகளுக்கு மதங்களை பழிப்பது சரியல்ல.

இப்போது மூன்றாவது கண்ணை பற்றி பார்ப்போம்.

“த்ரியம்பகன்” என்பது சிவனின் திருநாமங்களில் ஒன்று. இது மூன்றாவது கண்ணைக் குறிக்கும். மற்ற இரண்டு கண்களும் புறக்கண்கள். பார்வையில் படும் குப்பைகளையெல்லாம் அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளைக்கு புகட்டிக் கொண்டிருக்கின்றன. இதன் மூலமாக யாரையாவது பார்த்தால், பழைய அபிப்பிராயங்கள் உங்களுக் குள் புறப்படுகின்றன. இந்த இரண்டு கண்களும் உண்மையை பார்ப்பதில்லை. எனவே அறிதலுக்கென்றே சிவனின் மூன்றாவது கண் திறக்கிறது. அதுவே ஞானக்கண். இந்திய மரபில் அறிதல் என்பது படிப்பால் பெறுவதல்ல. புத்தகங்கள் தருவதல்ல. ஆழ்ந்த புரிதலையே அறிதல் என்கிறோம். இந்த மூன்றாவது கண் திறக்கிற போது தான் சிவனை உணர்கிறீர்கள்.

படித்த மனிதர்கள் எல்லோருக்குமே ஐசக் நியூட்டன் புவி யீர்ப்பு விசையைக் கண்டறிந்த கதை தெரியும். ஆப்பிள் பழம் கீழே விழுந்தது பற்றியே அனைவரும் பேசுகிறார்கள். ஆனால், செடியாக இருந்த அந்த ஆப்பிள் மரத்தை ஒரு சக்தி மேல் நோக்கி வளர்த்திருக்கிறதே அது குறித்து யாரும் பேசுவதில்லை.

ஆனால் இப்போது ஆய்வுகளின் மூலம் மனிதனுக்கு ஒரு மூன்றாவது கண் இருப்பதாகவும், அதன் மூலம் பல அற்புதங்கள் நிகழ்த்த முடியும் என்றும் தெரியவருகிறது. இந்த மூன்றாவது கண்ணுக்கு பினியல் சுரப்பி என்று பெயர். *(Pineal Gland).* பிரெஞ்சு அறிவியல் நிபுணரான *Rene Descartes* இதனை ஆன்மாவின் இருக்கை என குறிப்பிடுகிறார்.

*René Descartes (1596-1650) was a French philosopher, mathematician and writer who spent most of his life in the Dutch Republic.*

மூன்றாவது கண் என்பது இந்துக்களின் ஆக்ஞா சக்கரத்து டன் (நெற்றி சக்கரம்) தொடர்புடையது. சிவபெருமானின் நெற் றிக்கண் எந்த வடிவில் எப்படி காணப்படுகிறதோ அதே மாதிரி இதுவும் அமைந்துள்ளது.

இந்த பினியல் சுரப்பி ஒளியின் மூலம் தூண்டப்படுகிறது. இது மெலெண்டொனின் எனும் திரவத்தை சுரக்கிறது. இத்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. மன அழுத்தத்தை குறைக்கிறது. நமது மதம் இந்த சுரப்பியை தூண்டுவதன் மூலம் ஞானம், பேரின்பம் அடையலாம் எனக் கூறுகிறது. இந்த மூன் றாவது கண்ணை தூண்டுவதன் மூலம் முக்காலங்களை அறியும் தன்மை, விழிப்புணர்வு, பல நல்ல சக்திகள் கிடைப்பதாக கூறப்படுகிறது.

குண்டலினி தியானம் மூலம் இந்த மூன்றாவது கண்ணை தூண்டலாம். நம் குருமார்கள் தீட்சயளிக்கும் பொருட்டு புருவ மத்தியில் ஆசீர்வாதம் செய்வது ஏன் என்பது இப்போது புரி கிறதா?

தகுந்த பயிற்சியுடனும், நம்பிக்கையுடனும் இந்த ஆக்ஞா சக்கரத்தை தூண்டி அளவில்லா ஆனந்தத்தையும், சக்தியையும் பெறலாம். ஒருவர் தகுந்த பயிற்சி பெற்றால் நினைவுகளைக் குவித்து நெற்றிப் பொட்டின் ஊடாக வெளியேற்றி தீயை கூட வரவைக்கலாம் என சித்தர்களின் நூல்கள் கூறுகின்றன. சிவன் திரிபுரங்களை எரித்த கதை நமக்குத் தெரியும். மனதிலுள்ள தீய எண்ணங்களை எரித்து நல்ல எண்ணங்களை வளர்க்கலாம். சிவன் காமனை எரித்த கதையும் முருகப்பெருமான் தோன்றிய கதையும் அனைவரும் அறிந்ததே.

இதை தகுந்த பயிற்சியுடன் எப்போதும் விழிப்பு நிலையில் வைத்திருந்தால் நாம் திறமைசாலிகளாக வாழலாம். அப்படி நாம் வாழக்கூடாது என்று நினைக்கும் சிலர் தான் இதையெல்லாம் போலி என்று கதை பரப்பினார்களோ தெரியவில்லை. நம் முன்னோர்களின் நல்ல சிந்தனைகளையும், வழிகாட்டல்களையும் நமது அறிவீனத்தால் போலி என்று கேலி செய்து இழந்து விட் டோம். இனியாவது விழிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று நடந்து கொண்டிருக்கும் கலியுகம் பற்றி 3500 ஆண்டுகளுக்கு முன்பே கூறிய இந்துக்கள்.

நாம் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் காலம் கலி யுகம் என்பது பலருக்குத் தெரிந்த விடயமாகும். ஆமாம், இது நம் புராணங்களில் சொல்லப்பட்ட கலியுகம் தான். உலகத்தில் ஊழல், போர்கள், பாரபட்சம், தங்கள் சக்திகளை தவறான வழிக்கு பயன்படுத்துதல், வேறுபாடு மற்றும் எண்ணிலடங்காத நோய்கள் இவைகள் தான் நம்மிடையே தலை விரித்தாடுகின் றன. நாம் என்ன தான் மருத்துவ துறையிலும், அறிவியல் துறை யிலும் முன்னேற்றம் கண்டிருந்தாலும் நமது சமுதாயம் பின்ன டைவில் தான் சென்று கொண்டிருக்கிறது. எல்லோரும் ஏதோ ஒரு வழியில் பாதிப்படைந்து கொண்டே தான் இருக்கின்றோம்.

உலகச் சுழற்சி வயது 4 விதமான படிகளை கொண்டுள்ளது. அதில் கலியுகம் தான் கடைசி சுழற்சி என்று நம் வேதங்களில் கூறப்பட்டுள்ளது. முதல் மூன்று சுழற்சிகள் சத்திய யுகம், த்ரேதா யுகம், துவாபர யுகம் ஆகும்.

இதில் கலியுகம் என்பது வயதின் களங்கம் என்று அழைக் கப்படுகின்றது. இது துஷ்டர்களின் ஆதிக்க காலம் ஆகும். கலி என்றால் சண்டை, வாதம் என்று பொருள். இதைப் பற்றி எல்லா மதங்களில் கூறியும் அதை இதுவரை நாம் நம்புவதற்கு தயாராக இருந்ததில்லை. நமது மனது முழுவதும் பேராசை, பொறாமை போன்ற தீய எண்ணங்கள் தான் நிரம்பி வழிகி ன்றன. புராணங்களில் இந்த துவாபர யுகத்தின் இறுதியில் அதாவது கலியுகம் தொடக்கத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அவதாரம் எடுத்து இப்பூமியில் தோன்றுவார் என்று சொல்லப் பட்டுள்ளது.

கலியுகம் என்பது அழிவின் தொடக்கமாகும். இந்த காலத் தில் மக்கள் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும், உணர்ச்சி ரீதியா கவும் பாதிக்கப்படுவர். இது ஒரு கருமை இருட்டு நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுறுத்தும் காலமாகும். மனிதன் கடவுள் பாதி மிருகம் பாதி என்று வாழக்கூடிய காலமாகும். தர்மம் என்பது நான்கு கால் களை கொண்ட காளையாக சித்தரிக்கப்படுகிறது. சத்ய யுகத்தில் இருந்து தர்மம் செய்வது படிப்படியாக குறைந்து கலியுகத்தில் ஒரு காலை உடைய காளையாகி விடுமாம். அதாவது தர்மம் செய்வது கலியுகத்தில் குறைந்து போய்விடும்.

கலியுகம் இப்படித்தான் இருக்கும் என 3500 ஆண்டு களுக்கு முன்பே நம் முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளார்கள். ஸ்ரீமத் பாகவத புராணத்தில் இன்று நடந்து கொண்டிருக்கும் கலியுகத்தைப் பற்றி மிகவும் துல்லியமாகக் கூறப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மிகவும் அபாயகரமானவை. அந்த மாற்றங்கள் தான் தற்போதைய உலகில் நடந்து கொண்டு இருக்கின்றன. இந்த கலியுகத்தின் தாக்கத்தால் அறநெறி,உண்மை, தூய்மை, பொறுமை, கருணை, ஆயுள்காலம், உடல்வலிமை, ஞாபகசக்தி ஆகிய அனைத்தும் மனிதர்களிடையே நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வரும் என ஸ்ரீமத் பாகவத புராணம் (12.2.1) கூறுகிறது.

கலியுகத்தில் செல்வம் உடையவர்கள் மட்டுமே மதிக்கப் படுவர். ஒரு மனிதனின் முறையான பழக்க வழக்கங்கள், நற்பண் புகள் எல்லாம் மதிக்கப்படாமல் தள்ளப்படும். எல்லாச் சட்டங் களும், செயல்களும் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழே செயல் படும். (ஸ்ரீமத் பாகவத புராணம் 12.2.2)

திருமணம் என்பது தான் ஒரு ஆண் மற்றும் பெண்ணின் முக்கியத்துவத்தை பறைசாற்றும். ஆனால் கலியுகத்தில் ஆணும், பெண்ணும் வெறும் உடலுறவுக்காகவே தொடர்பு கொண்டு இருப்பர். தொழிலில் வெற்றி என்பது வஞ்சகமும் சூழ்ச்சியும் நிறைந்திருக்கும். சமூகத்தில் பூணூல் அணிந்து கொண்டு தன்னை உயர்ந்தவன் என்று காட்டிக் கொள்வான். ஆனால் கடவுள் முன்னிலையில் எல்லோரும் சமம். (ஸ்ரீமத் பாகவத புராணம் 12.2.3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரின் வெளித்தோற்ற மாய ஜாலங்களை செய்யும் சாமியார்களையும், பண்டிதர்களையும் நம்பி அவர்கள் பின் னாலே செல்வார்கள். கண்களால் காட்டும் வித்தைகளை நம்பி தவறான வழியில் வழி தவறிப் போவார்கள். (ஸ்ரீமத் பாகவத புராணம் **12.2.4)** கலியுகத்தின் பிடியில் இருக்கும்,பொருட் செல் வம் உடையவர்கள் மட்டுமே மதிக்கப்படுவார்கள். பொருள், பணம் இல்லாத ஏழைகள் தீண்டத்தாகதவர்கள் ஆவார்கள். குளி ப்பதாலும், அலங்கரிப்பதாலும் ஒருவன் சுத்தமானவன் என்று கருதப்படுவான். (ஸ்ரீமத் பாகவத புராணம் **12.2.5)**

இந்து தத்துவ ஞானிகளின் கருத்துகளை வைத்து பார்த்தால் பொ.ஆ.மு-*BCE* **3102** பிப்ரவரி **18**ல் கலியுகம் தொடங்கி விட் டது. சூர்ய சித்தாந்தர் என்று அழைக்கப்படும் ஆர்யபட்டர் முதன்மை இந்திய கணிதவியலாளர் ஆவார். இவரின் கருத்துப் படி பார்த்தால் பிப்ரவரி **18** இரவில் பொ.ஆ.மு-*BCE* **3102** ஆண்டுகளிலே கலியுகம் தொடங்கி விட்டது. இந்த நேரத்தில் பகவான் கிருஷ்ணன் பூமியிலிருந்து வைகுண்டத்திற்கு சென்று விட்டார் என்று கூறியுள்ளார். இவர் கலியுகத்தை பற்றி நிறைய கருத்துகளை தனது புத்தகத்தில் கூறியுள்ளார். பொ.ஆ-*CE* **499**ல் இவரால் எழுதப்பட்ட ஆர்யபட்டீய எனும் நூலே கலியுகம் பற்றிய விபரங்களைக் கூறுகிறது. இந்த புத்தகத்தை ஆர்யபட்டர் எழுதும் போது அவருக்கு வயது **23.** அவர் பிறந்த வருடம் பொ.ஆ-*CE* **476.**

வான்கோள்கள் பற்றிய இயற்பியல் படித்த இந்திய மேதை கே.டி அய்யங்கார் கலியுக தொடக்கத்தின் போது எல்லா கோள் களும் இதுவரை பார்த்திராத அதிசயமான பாதையில் நகர்ந்தன என்று கூறியுள்ளார். இதற்கு சாட்சியாக மொஹஞ்சதாரா அகழ் வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு உள்ளது என்று சொல்கிறார். இவர் கலியுகம் பொ.ஆ.மு **3104** பிப்ரவரி **7** ல் தான் தொடங்கியிருக்கும் என்று கூறுகிறார். இது ஆர்யபட்டரின் காலத்திலும் பார்க்க **2** வருடங்கள் கூடியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுக முடிவு பற்றி லிங்க புராணம்

லிங்க புராணம் எழுதப்பட்டு 1500 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அப்போதே உலகம் இப்படி தறிகெட்டுப் போகும் என்று எப்படிக் கண்டுபிடித்தனர்? இதை ஞானிகளின் த்ரிகாலஞானம் (முக்காலப் பார்வை)என்றே சொல்ல வேண்டும். கலியுக முடிவு பற்றி லிங்க புராணம் என்ன கூறுகிறது என்று பார்ப்போம்.

1. திருடர்கள் மன்னர்கள் ஆகிவிடுவர். மன்னர்கள் திருடர்கள் ஆகிவிடுவர்.

2. மக்களின் சொத்துக்களை ஆட்சியாளர்கள் பறிமுதல் செய்து அதைக் கெட்ட வழியில் செலவிடுவர்.

3. கொஞ்சம் படித்த அடிப்படை ஒழுக்கம் இல்லாதவர்கள் பெரிய சாமியார்களாகக் கருதப்படுவர்.

4. நிறைய நாடோடிகள் நாடு நாடாகச் செல்வர். (இது அகதிகளை குறிப்பதாக இருக்க வேண்டும்)

5. தாய்மார்களின் கர்ப்பத்திலேயே கருக்கள் அழிக்கப்படும்.

6. கோர மிருகங்களின் தொல்லைகள் அதிகரிக்கும்.

7. மக்கள் தவறான முடிவுகளுக்கு ஜே போடுவார்கள்.

8. ஒருவரை ஒருவர் நம்பமாட்டார்கள்.பொறாமை அதிகரிக்கும்.

9. ஆயுட்காலம் குறையும். பலர் 16 வயதில் இறப்பார்கள்.

10. பசி, பிணி இவற்றால் கஷ்டப்படுவோர் பூமிக்கடியில் வசிப் பார்கள்.

11. இளம் பெண்கள் கற்பை விலை பேசுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மழைக்கான அதிபதி கண்ட கண்ட இடங்களில் கண்ட கண்ட காலங்களில் மழையைக் கொட்டுவான்.

13. கடைக்காரர்கள் கொள்ளை லாபம் அடிப்பர்.

14. கடுமையான, அசிங்கமான மொழி பயன்படுத்தப்படும்.

15. பிச்சைக்காரர்கள், வேலை இல்லாதோர் அதிகரிப்பர்.

16. ஆட்சியாளர்கள் மக்களுக்கு பாதுகாப்பு வழங்காமல் மக்களின் செல்வத்தை வரிகள் மூலம் பறிப்பதில் குறியாக இருப்பர்.

17. இவர்களுக்கு பணம் சம்பாதிப்பதே குறிக்கோளாக இருக்கும். வேறு லட்சியம் அதுவும் இல்லாமல் பணக்காரர்களின் சொல் கேட்பர்.

18. தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்.

19. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் விற்கப்படும்.

இன்று என்ன நடக்கிறது? *FUSION*, அணுசக்தி எதிர்வினை ( *NUCLEAR REACTION*) நடைபெறுகின்றது. இதனால் ஏற்படும் வெப்பம், மற்ற இடங்களை வெப்பமடையச் செய்கிறது. புரோட்டான்-புரோட்டான் சங்கலி 38 கோடி முறை ஒவ்வொரு நொடியிலும் நிகழ்கின்றது. 3.7-ஜ் $10^{38}$ புரோட்டான் அல்பாத் துணிக்கை (*ALPHA PARTICLE*) ஆக உருவெடுக்கின்றது எனப் கூறப்படுகிறது.

**ஆதித்யனின் அபரிமித வெப்பமது**
**அளவாய் சாற்ற கேளீர் - ஈர்ப்பிலா**
**யெடையான சக்தியளி மாற்றமது**
**தகடேசான நிறையாம் - திறனே கசடானதா**
**மது மாத்திரை பொழுதெனப் பகரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது சூரியனின் வெப்ப சக்தி வெளிவருதல் **4.3** மில்லியன் மெட்ரிக் டன் (தகடேசான்) *ENERGY WATT.* **9.000** *X* **$10^{11}$** *MEGATONS TNT PER SECOND* (கசடானதாம்-**3.9** *X* **$10^{26}$** *W)* இவ்வளவு துல்லியமான கணிதத்தை அக்காலத்திலேயே சித்தர் கள் கூறியதை விஞ்ஞானிகள் உண்மை என ஆராய்ந்து கூறுவது நமது சித்தர்களின் வான்வெளி புலமையைப் பறை சாற்று கிறதன்றோ. நன்றி-*Tamil and vedas*




## புறநானூறு காலத்தில் நீர் மூழ்கிக் கப்பல் இருந்ததா?

நமது தமிழ் அறிஞர்கள் எதையும் சரியாக ஆராயாமல் அர்த்தம் கற்பிப்பதில் மட்டுமே தங்களது முழு கவனத்தையும் செலவிட்டுள்ளனர். அவர்கள் மட்டும் ஒவ்வொரு செய்யுளையும் தெளிவாக ஆராய்ந்திருந்தால் இன்றைக்கு பல உண்மைகள் வெளிப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நிலம்பிறக் கிடுவது போலக் குளம்பு குடையூஉ**
**உள்ளம் அழிக்கும் கொட்பின் மான்மேல்**
**எள்ளுநர்ச் செகுக்கும் காளை கூர்த்த**
**வெந்திறல் எகம் நெஞ்சுவடு விளைப்ப**
**ஆட்டிக் காணிய வருமே; நெருநை,**
**உரைசால் சிறப்பின் வேந்தர் முன்னர்க்,**
**கரைபொரு முந்நீர்த் திமிலின் போழ்ந்து,**
**அவர் கயந்தலை மடப்பிடி புலம்ப,**
**இலங்கு மருப்பு யானை எறிந்த எற்கே."**

*(புறநானூறு: 303)*

**பொருள்:**

காணும் வீரன் பலரும் புகழும் பகை வேந்தன் படையை, கடலின் நடுவே திமில் படகு செல்வதுபோல ஊடுருவிச் சென்று அந்த வேந்தனின் ஆண் யானையை அதன் பெண் யானை புலம்பும்படி நேற்று வீழ்த்திய வீரன் நான். காட்டும் வீரன் நிலம் பின்னோக்கிச் செல்வது போலத் தோன்றும்படி தன் கால் குளம்பு நிலத்தில் பதியும் படியும், நெஞ்சம் கலங்கும் படியும் வளைந்தோடும் குதிரை மேல் அந்த வீரன் வந்தான்.

அவனை ஏளனம் செய்தவர்களையெல்லாம் கொன்று குவித்து விட்டு வந்தான். அப்படி வந்த அந்தக் காளையின் நெஞ்சில் வேல் ஆழமாகப் பதிந்திருந்தது. அந்த வேலைக் கையில் பிடித்து ஆட்டிக் காட்டிக் கொண்டே குதிரை மீது வந்தான். அதனை நான் காணவேண்டும் என்பதற்காகவே என் முன் வந்தான்.

**தெளிவுரை:**

இங்கே செய்யுளில் "கரைபொரு முந்நீர்த் திமிலின் போழ் ந்து" இந்த வரியை கூர்ந்து கவனித்தீர்களேயானால் "கடலின் நடுவே திமில் படகு செல்வதுபோல ஊடுருவிச் சென்று" என்று பொருள்படும். திமில் என்றால் திமிங்கலம், காளையின் திமில் என்று பொருள்படும். இங்கே கடலின் நடுவே என்று புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுவதால் நாம் திமில் என்பதற்கு திமிங்கலம் என்று பொருள் கொள்ளுவோம். அது போல ஊடுருவி என்று புலவர் கூறியுள்ளார். ஊருருவிச் செல்லுதல் என்றால் யாரும் அறியாமல் மறைந்து மூழ்கிச் செல்லுதல் என்று பொருள். இதையெல்லாம் கவனத்தில் கொள்ளும்போது இங்கே புலவர் நீர் மூழ்கிக் கப்பலைத் தான் சுட்டுகிறார் என்பது தெளிவு.




நீர்மூழ்கிக் கப்பலை கண்டுபிடித்தவர் யார் என்று கேட்டால் *Cornelis Drebbel* (1620) என்பார்கள். ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட புறநானூறில் நீர்மூழ்கியைப் பற்றி கூறப்பட்டுள்ளதே, இவர்கள் இந்த செய்யுளுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத நோய்கள் தீர வேண்டுமானால் பழனிக்கு காவடி எடுங்கள் என்று நம் முன்னோர்கள் சொன்னது முட்டாள் தனமா?

பாம்பின் விஷத்திலிருந்து தயாரிக்கப்பட்ட மருந்து தீராத பல நோய்களைக் குணப்படுத்தும் என தற்போது விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

2000 வருடங்களுக்கு முன் போகர் எனும் சித்தர் 9 வகையான விஷங்களை ஒன்று சேர்த்து உருவாக்கிய நவபாஷான சிலையின் அருகில் சென்றாலே நோய்கள் குணமாகும். அதன் மீது பட்ட விபூதியை உடலில் பூசிக்கொண்டால் நோய்கள் தீரும் என அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

போகர் உருவாக்கி பிரதிஷ்டை செய்த நவபாஷான முருகன் சிலையே பழனியில் உள்ளது. எனவேதான் தீராத நோய்கள் தீர வேண்டுமென்றால் பழனிக்கு காவடி எடுங்கள் என்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்தனர்.

# எந்தத் தொழில் நுட்ப கருவிகளும் இல்லாத காலத்தில், தண்ணீர் இருக்கும் இடத்தை சரியாகக் கண்டு பிடித்து நம் முன்னோர்கள் எப்படி கிணறு வெட்டினார்கள்?

கிணறு அமைப்பது என்பது அத்தனை எளிதான காரிய மில்லை. பலர் சேர்ந்து உழைத்து உருவாக்கிட வேண்டிய ஒன்று. ஒரு வேளை தோண்டிய கிணற்றில் தண்ணீர் வராமல் போய் விட்டால் அத்தனை உழைப்பும் வீணாகி விடும். அதே போல் கோடையில் கிணற்றில் நீர் வறண்டு போகும் வாய்ப்பும் உள் ளது. ஆனால் இவற்றிற்கெல்லாம் எளிய இலகுவான முறைகளை நம் முன்னோர் தெரிந்து வைத்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு வளவின் குறிப்பிட்ட ஏதாவது ஒரு பகுதியில் அதிகளவு பச்சை பசேலென புற்கள் வளர்ந்திருந்தால், அந்த இடத்தில் கிணறு தோண்டினால் குறைந்த ஆழத்தில் நீரூற்று தோன்றும் என்கின்றனர்.

சரி, நீரூற்று இருக்கும், ஆனால் நல்ல நீரூற்று என அறிவது எப்படி? நவதானியங்களை அரைத்து கிணறு வெட்ட வேண்டிய நிலத்தில் முதல் நாள் இரவு தூவி விடவேண்டும். அடுத்த நாள் கவனித்தால் எறும்புகள் இவற்றை சேகரித்து ஒரே இடத்தில் கொண்டு சென்று சேர்த்த அடையாளங்கள், அதாவது தடயங் கள் இருக்குமாம். அந்த இடத்தில் கிணறு வெட்டினால் தூய சிறப்பான நன்னீர் கிடைக்கும் என்கிறார்கள்.

சரி, தூயநீரும் கண்டு கொண்டாயிற்று, கோடைகாலத்தி லும் வற்றாத நீர் ஊற்று எந்த இடத்தில் இருக்கிறது என்று அறிவது எப்படி? கிணறு வெட்ட இருக்கும் நிலப்பகுதியை நான்கு பக்கமும் அடைத்து விட்டு பால் சுரக்கும் பசுக்களை அந்த நிலத்திற்குள் மேய விட வேண்டும். பின்னர் அந்த பசுக் களை கவனித்தால் மேய்ந்த பின் குளிர்ச்சியான இடத்தில் படு த்து அசை போடும். அப்படி அவை படுக்கும் இடங்களை நான்கு, ஐந்து நாட்கள் கவனித்தால் அவை ஒரே இடத்தில் தொடர்ந்து படுக்குமாம். அந்த இடத்தில் தோண்டினால் வற் றாத நீரூற்றுக் கிடைக்குமாம். தமிழர் அறிவியலை என்னவென்று சொல்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதல் அறிவியல் முன்னோடிகள்

## இந்துக்களின் மறைக்கப்பட்ட, மறக்கடிக்கப்பட்ட சாதனைகள், புதைக்கப்பட்ட வரலாறு மற்றும் திருடப்பட்ட அறிவு பற்றிய உண்மைகள்

## புவி ஈர்ப்பு சக்தியை முதன் முதலில் கண்டுபிடித்த இந்திய கணித மேதை பாஸ்கராச்சார்யர்

*பாஸ்கராச்சார்யா பொ.ஆ. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந் தவர். வராஹமிஹிரர் காலத்துக்குப் பின் உஜ்ஜைனி அரசவையை அலங்கரிக்க வந்த ரத்தினம். கணிதம் மற்றும் வானியல் துறை யில் முத்திரை பதித்த இந்திய மேதை.*


*முதன் முதலில் புவிஈர்ப்பு சக்தியை கண்டுபிடித்தவரும் இவரே. சூர்ய சித்தாந்தம் என்ற நூலில் அவர் இதுபற்றி குறிப் பிட்டு இருக்கிறார். எந்த ஒரு பொருளும் பூமியில் விழுவதற்கு காரணம், பூமியின் ஈர்ப்பு சக்திதான். அதேபோல மற்ற கிரகங் களுக்கும் ஈர்ப்பு சக்தி இருப்பதால் தான், வானில் எல்லா கிரகங்களும் தங்களது இடத்தில் அப்படியே இருக்கின்றன என்று அவர் கூறி இருக்கிறார்.*

*பூமியின் ஈர்ப்பு சக்தியை 1687-ம் ஆண்டு ஐசக் நியூட்டன் கண்டுபிடித்தார் என்று இப்போது உலகம் போற்றிக்கொண்டு இருக்கிறது. ஆனால், அவருக்கு 1000 ஆண்டுகளுக்கு முன்பே புவி ஈர்ப்பு சக்தியை கண்டறிந்தது நமது கணித மேதை பாஸ்கராச்சார்யா என்பது பெருமைக்குரிய விடயம் அல்லவா?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபற்றி சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில், இந்தியாவின் வானவியல் ஆராய்ச்சி அமைப்பான இஸ்ரோவின் முன்னாள் தலைவர் மாதவன் நாயர் கூறும்போது, 'பூமியின் ஈர்ப்பு சக்தி பற்றி ஐசக் நியூட்டன் கண்டு பிடிப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நமது இந்திய பழங்கால விஞ்ஞானிகள் பூமி மற்றும் கிரகங்களின் ஈர்ப்பு சக்தியை கண்டு பிடித்து இருக்கிறார்கள். வானவியலில் ஆர்யபட்டாவின் கண்டு பிடிப்புகளில் சிலவற்றை சந்திரயான் திட்டத்தில் பயன்படுத்தி இருந்தோம்' என்று கூறி இருக்கிறார்.



நமது மூதாதையர்களின் கணிதத்திறமைகள் இதுபோல ஏராளம் உள்ளன. மிகப்பெரிய எண்களை அவர்கள் என்ன பெயரிட்டு அழைத்தார்கள்? எடையளவு, கால அளவு ஆகியவற்றில் அவர்களின் சாதனைகள் என்ன? என்ற வியப்பான தகவல்களை சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் வெ.ராமசுப்பிரமணியன் அண்மையில் சுவைபடக் கூறியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்கராச்சார்யா தான் முதன் முதலாக பூஜியத்திற்கு *0* எனும் ஒரு வடிவத்தை தந்தவர். இந்து மேதையான ஆரிய பட்டர் எழுதிய நூல்களை எளிமை படுத்தியவர். கணித சாஸ்தி ரத்தை செம்மை படுத்தியவர்.

***eka*(1),**

***dasha*(10),**

***shata*(100),**

***sahastra*(1000),**

***ayuta*(10,000),**

***laksha*(100,000),**

***prayuta* (1,000,000=*million*),**

***koti*(107),**

***arbuda*(108),**

***abja*(109=*billion*),**

***kharva* (1010),**

***nikharva* (1011),**

***mahapadma* (1012=*trillion*),**

***shanku*(1013),**

***jaladhi*(1014),**

***antya*(1015=*quadrillion*),**

***Madhya* (1016)**

***parardha*(1017)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லியன், பில்லியன், டிரில்லியன் போன்ற வார்த்தைகள் ஆங்கிலத்தில் வருவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே"மஹா பாஸ்கரியா" எனும் நூலில் இவை பற்றி எழுதியவர். இவருக்கும் முன்பே ஆரியபட்டரும், அவருக்கும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு பிங்கலரும் பூஜ்யம் பற்றி குறிப்பிட்டு இருந்தாலும், அதற்கு என்று ஒரு வடிவத்தை தந்தவர் பாஸ்கராச்சார்யர்.

பாஸ்கராச்சார்யர் எழுதிய 'மஹா பாஸ்கரியா' என்ற நூலில் வானவியல் கணித முறைகள் இடம் பெற்றுள்ளன. இது எட்டு தொகுதிகள் கொண்டது. மேலும் இவர் 'லகு பாஸ்கரியா' என்ற நூலையும் எழுதியுள்ளார். இந்திய வானவியல் அறிஞரான ஆரியபட்டாவின் கொள்கைகளை எளிமைப் படுத்தி விளக்கும் உரையாக ஆர்யபட்டீய பாஷ்யா என்ற உரை நூலையும் இவர் தந்துள்ளார்.மேலும் மில்லியன், பில்லியன், டிரில்லியன் போன்ற வார்த்தைகளை மஹா பாஸ்கரியா எனும் இவரது நூலில் இவர் பயன்படுத்தியமை, இன்றைய கணித மேதைகளுக்கு பெரும் வியப்பை உண்டாக்கியுள்ளது.

இவருக்கு பின் 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் பாஸ்க்கராசாச்சார்யா இவரை விட பிரபல்யம் பெற்றிருந்தாலும், முதலாவது பாஸ்க்கராசாச்சார்யா கணிதத்தில் செய்த சாதனைகள் எந்த விதத்திலும் இவருக்கு குறைவாக இல்லை. பொ.ஆ.1114-1185 காலப்பகுதியில் வாழ்ந்த வாழ்ந்த இவர் கர்நாடக மாநிலத்தில் பிறந்தவர் என்று கூறப்படுகிறது. இவர் ஏறத்தாழ 500 செய்யுள்களில் தனது நூலை ஆக்கி இருக்கிறார். சித்தாந்த சிரோ மணி என்ற அந்த நூல் கூட்டல், கழித்தல் ஆகிய எண்கணிதம் மற்றும் அல்ஜீப்ரா, கிரகங்கள், பிரபஞ்சம் ஆகிய 4 பிரிவுகளைக் கொண்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன் முதல் தொலைக்காட்சி பார்த்தவரும், முதல் சோதனைக்குழாய் குழந்தையுமான அகத்தியர்

படித்தவர், பாமரர் அனைவரும் அகத்தியரை அறிவார்கள். ஆறுவகைச் சமயத்தினரும் அகத்தியரைப் போற்றுகின்றனர். குடுவையில் பிறந்தது, தென்புலம் தாழ்ந்த பொழுது பூமியைச் சமன் செய்தது, சிவன்-பார்வதி திருமணத்தைப் பொதிகையில் கண்டது, காவிரி நதியைக் கொண்டு வந்தது போன்ற அகத்தியர் தொடர்பான வரலாறுகள் அனைத்திலும் அறிவியல் கூறுகள் பொதிந்துள்ளன.

## தொலைக்காட்சி பார்த்தவர்.

முதன் முதலில் தொலைக்காட்சி பார்த்தவரும் அகத்தியரே. பார்வதி-பரமசிவன் திருமணத்தைக் காண அனைவரும் இமயத்தில் கூடியதால் வடபுலம் தாழ்ந்து தென்னாடு உயர்ந்திருந்தது. அதனைச் சமன் செய்ய, சிவபெருமான், அகத்தியரை தென்னாட்டிற்கு அனுப்பினார். அனைவரும் காணப்போகும் தங்கள் திருமணத்தை அடியேன் மட்டும் பார்க்க முடியாமல் போகுமே என்று வினவினார் அகத்தியர். இமயத்தில் நடைபெறும் எமது திருமண நிகழ்வை உமக்குப் பொதிகையில் காட்டியருள்வோம் என்றார் ஈசன். அவ்வாறே அகத்தியர் பார்வதி-பரமசிவன் திருமணக் காட்சியைப் பொதிகையில் கண்டு களித்தார்.

ஓரிடத்தில் நிகழும் நிகழ்ச்சியைப் பிறிதோர் இடத்தில் காணக்கூடிய அறிவியல் கூறு இதில் அமைந்துள்ளது. அங்கு திருமணம் நடந்த அதே நேரத்தில் அந்தக் காட்சியை இங்கு பார்த்தார் அகத்தியர். அகத்தியர் பார்த்தது நேரடி ஒளிபரப்பு. அதாவது லைவ் டெலிகாஸ்ட். ஈசன் திருமணம் நடந்து பல நாட்கள் கழித்து அதனை மீண்டும் காண விரும்பினார் திருமால். சீர்காழியை அடுத்த ஒரு தலத்தில் சிவபெருமான், திருமாலுக்குத் தனது திருமணக் கோலத்தை மீண்டும் காட்டியருளினார். திருமணத் திருக்கோலம் காட்டிய அந்தத் தலமே, திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலக்கா என்று பெயர் பெற்றது. ஏற்கனவே காட்டப்பட்ட காட்சியை மீண்டும் கட்டினார் சிவன், இது பதிவு செய்யப் பட்ட மறு ஒளிபரப்பு ஆகும்.

**அணுவுருவில் நதிகள்.**

அகத்தியர் தென்னாட்டிற்குப் புறப்பட்டபொழுது, காவிரியை அணுவுருவாக்கிக் கமண்டலத்தில் அடைத்து எடுத்து வந்தார் என்பது வரலாறு. மனிதன் தண்ணீர் இல்லாத வேறு கோள்களில் குடியேறும் காலத்தில், தண்ணீரை அணுவுருவாக்கி எடுத்துச் சென்று அங்கு மீண்டும் தண்ணீரை உற்பத்தி செய்து கொள்ள வேண்டியிருக்கும் என்பது நவீன அறிவியல். நானோ தொழில்நுட்பம் (நானோ டெக்னாலஜி) என்னும் தற்போதைய மூலக்கூறு தொழில் நுட்பத்திற்கு இந்த சம்பவம் புராண ஆதாரமாக உள்ளது.

**சோதனைக்குழாய் குழந்தை.**

உலகின் முதல் சோதனைக்குழாய் குழந்தை *(Test Tube Baby)* அகத்தியர் தான். குடுவையில் கருத்தரித்து, வளர்ந்து வெளிப்பட்டதால் அவரை கலயத்தில் பிறந்தோன் (கும்ப சம்பவர்) என்றும், குட முனி என்றும் கூறுவர். உயிர்கள் தாயின் கருப்பைக்கு வெளியே கருத்தரித்து வளர இயலும் என்ற அறிவியல் உண்மை, அகத்தியரின் பிறப்பிலேயே பொதிந்துள்ளது. அவ்வாறு, செயற்கை முறையில் உருவாக்கப்படும் உயிரினங்கள், தொடக்க நிலையில் இயல்புக்கு மாறான உருவத்தைப் பெற்றிருக்கும் என்பதும், இயல்பான வளர்ச்சி, மேம்பட்ட ஆய்வுகளுக் குப் பிறகே சாத்தியமாகும் என்பதும் அறிவியல் உண்மை. முதல் சோதனைக் குழாய் குழந்தையாகிய அகத்தியர் இயல்புக்குக் குறைவான உயரமே பெற்றிருந்தார் என்பது இந்த உண்மையை நிரூபிக்கிறது. *Ref.www.mugaputhagam.in*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரத்தை முதன் முதலில் கண்டுபிடித்த அகத்திய முனிவர்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் மின்சாரம் உற்பத்தி செய்வதை முதன் முதலில் கண்டுபிடித்தவர் நமது அகத்திய மாமுனிவர் என்று சொன்னால் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். ஆம். அதற்கு அவர் இட்ட பெயர் மித்ரவருண சக்தி.

மின்சாரம் பொ.ஆ.மு 6ஆம் நூற்றாண்டிலேயே கண்டு பிடிக்கப்பட்டது என கிரேக்க நாட்டில் தேல்ஸ் என்ற தத்துவ ஞானியின் குறிப்பின் மூலம் அறியலாம். மைக்கேல் பரடே என்பவரே **(1791-1867)** "மின்னியலின் தந்தை" எனக் கூறப்படுகிறது. தொமஸ் அல்வா எடிசன் **(1847-1931)** மின்சாரத்தை கண்டு பிடித்தவர் என நாம் பாட புத்தகத்தில் படித்தோம்.

ஆனால் இவர்களுக்கு முன்பே நம் குள்ள முனிவர் அகத்தியர் மின்சாரத்தை கண்டு பிடித்து விட்டார் என்பது தான் உண்மை. மின்சாரம் உற்பத்தி செய்வதைக் கண்டுபிடித்தவர் நம் குள்ள முனிவர் அகத்தியரே. அதற்கு அவர் இட்ட பெயர் மித்ர வருண சக்தி. மின்சாரம் உற்பத்தி செய்வதை கண்டுபிடித்து தனது "அகஸ்திய சம்ஹிதை" எனும் நூல் மூலம் இந்த உலகுக்கு தெரிவித்துள்ளார் அகத்திய முனிவர். அதைப் பற்றிய தகவலை கீழே பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் 7000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியர்கள் கண்ட விமான அறிவியல், வானவியல் சாஸ்திரம் என்ற வரிசையில் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் நாம் அறிந்து வைத்திருந்த ஒரு அரிய தொழில் நுட்பமே இது.

**"சன்ஸ்தப்ய ம்ரின்மாய பத்ரே தாம்ரப்பத்ரம் சுசான்ஸ்க்ரிதம்**
**சாட்யெச் சிகிக்ரிவன் சர்த்ரரர்ப்ஹி கஷ்த்பம்சுப்ஹி**
**தஸ்தலொஷ்தோ நிததவ்யாஹ் பர்தச்சடிதஸ்த்ஹா**
**சன்யோகஜ்ய்தே தேஜோ மித்ரவருன சங்கியதம்"**



மேலே உள்ள வரிகள் அகத்தியர் எழுதிய "அகத்திய சம் கிருதை" என்ற வடமொழி அறிவியல் பொக்கிஷத்தின் ஒரு சுலோகமாகும். இதற்கான விளக்கத்தை இப்போது பார்க்கலாம், ஒரு மண் குடுவையை எடுத்து அதனுள்ளே தாமிர தகடை செலுத்தி சிறிதளவு சிகிக்ரிவம் நிரப்ப வேண்டும். பின்னே அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரமான மரத்தூள், பாதரசம் மற்றும் துத்தநாகத்தைக் கொண்டு பூசி, இரண்டு கம்பிகளை இணைத்தால் மித்ரவருணசக்தியைப் பெறலாம்.

**அகத்தியரின் மித்ரவருணசக்தி எப்படி அறியப்பட்டது?**

கிருஷ்ணாஜி *(Rao Saheb Krishnaji Vajhe)* என்பவர் 1891 ஆம் ஆண்டு புனேயில் தமது பொறியியல் படிப்பை முடித்து விட்டு, தமது துறை சார்ந்த விடயங்களை பண்டைய கால படைப்புகளில் தேடத் தொடங்கினார். அப்போது உஜ்ஜெய்னி மாகாணத்தைச் சேர்ந்த ஜோஷி *(Damodar Tryambak Joshi)* என்பவரிடம் ஒரு சில பண்டைய ஆவணங்களைப் பெற்றுத் தனது ஆய்வுகளைத் தொடர்ந்தார். அது சுமார் பொ.ஆ.மு 1550 ஆம் ஆண்டின் ஆவணம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் மேலே பார்த்த அந்த வரிகளைப் படித்த உடன் அதைப்பற்றித் தெரிந்து கொள்ள சமஸ்கிருத வல்லுனரான *Dr.M.C.Sahastra buddhe* (புத்தே) அவர்களை அணுகினார். புத்தே அப்போது நாக்புர் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத் தலைவர். அவர் இதைப் படித்துப் பார்த்ததும் ஆச்சரியத்துடன் அதிர்ந்து போய் இது ஏதோ ஒரு டேனியல் செல்லைப் போன்ற மின்கலத்தின் கட்டுமானத்தைப் போன்று இருக்கிறது என்றார்.

இதை மேலும் ஆராய வேண்டும் என்ற ஆர்வம் தொற்றிக் கொள்ள புத்தே அதை நாக்பூரைச் சேர்ந்த பொறியியல் வல்லுனர் *P.P. Hole*(ஹோல்) அவர்களிடம் கொடுத்து ஆராயச் சொன்னார். இதைக் கேட்டதும் நமது கிருஷ்ணாஜிக்கு உற்சாகம் வரவே அவரும் களத்தில் குதித்தார்.

ஒவ்வொன்றாய் படித்துப் படித்து அதில் கூறப்பட்டதைப் போன்றே தனது மின்கலத்தை வடிவமைக்கும் போது அவர் வந்து முட்டி மோதி நின்ற இடம் சிகிக்ரிவம் என்ற சொல். இது என்னவாய் இருக்கும் எனத் திணரும் போது ஒரு சமஸ்கிருத அகராதியில் "மயிலின் கழுத்துப் பகுதி" என்று இருந்ததைப் பார் த்தார்கள். உடனே அவர்கள் இருவரும் பக்ஹ் என்ற ஒரு மயில் சரணாலயத்தில் தலைமைப் பொறுப்பாளராய் இருந்தவரிடம் போய் நிலைமையை விளக்கிக்கூற உடனே பக்ஹ் "அது மயிலின் கழுத்து அல்ல, மயிலின் கழுத்தைப் போன்ற நிறம் உள்ள பொருள்" என்று சொன்னார் இதைக் கேட்டதும் அவர்களுக்கு சிந்தனை முளைத்தது. அது தான் மயிலின் கழுத்து நிறம். அதே தான் காப்பர் சல்ஃபேட் எனக் கண்டுபிடித்தாகி விட்டது.

அடுத்த சில மணி நேரங்களில் மின்கலமும் தயாரானது. அந்த மின்கலத்தை ஒரு மல்டி மீட்டரை வைத்து ஆராய்ந்த போது *1.38 Open Circuit Voltage* மற்றும் *23 milliampere Short Circuit Current* கிடைக்கப் பெற்றது. ஆம், வெள்ளைக் காரன் *Electric current* என்று சொன்னதை மின்சாரம் என்று பெயர் மாற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தி வருகிறோமே அதற்கு நம் அகத்தியர் இட்ட பெயர் மித்ரவருண சக்தி.

இந்த மித்ரவருண சக்தி என்ற பெயருக்கும் கூட விளக்க முண்டு. வருணன் என்றால் தண்ணீர் என்பது நாம் அறிந்ததே. மித்ரன் என்றால் சூரியன் என்று பொருள். ஆனால் இங்கே ஹைட்ரஜன் என்ற பொருளைக் கொள்ளும். ஏனெனில் சூரிய னின் சக்தி ஹைட்ரஜனில் தான் உள்ளது. அதனால் இங்கே ஹைட்ரஜனைக் குறிக்க மித்ரா என்று குறிப்பிடுகிறார். தண் ணீரில் இருந்து ஹைட்ரஜனைப் பிரித்து எடுத்தால் மாபெரும் சக்தியை நாம் பெறலாம். எனவே அவ்வாறு பெறப்பட்ட சக்தி யையே மித்ரவருண சக்தி என்கிறார் அகத்தியர்.

மேலும் அவர் கூறுவது, இது போல 100 கலன்களை செய்து தண்ணீரைப் பயன்படுத்தினால் அது பிராண வாயுவாகவும், ஹைட்ரஜனாகவும் பிரியும் என்கிறார். இந்த ஹைட்ரஜன் மிதக் கும் தன்மையுடையது எனவும் இதை ஒரு பையில் அடைத் தால் பறக்கப் பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கிறார். அது மட்டுமல்லாமல் இதே அகஸ்திய சம்ஹிதாவில் நமது நவீன கால "*Electroplating*" என்று சொல்லக் கூடிய அதே முறையை தெள்ளத் தெளிவாக விவரித்து செயற்கையாக தங்கத்திற்கு சாயம் பூசுவது எப்படி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அகத்தியர் வாழ்ந்த காலகட்டம் பற்றிய தெளிவான புள்ளி விபரங்கள் கிடைக்கப் பெறவில்லை. சுமார் 7000 ஆண்டுகளில் இருந்து 3500 ஆண்டுகளுக்கு முன் வரை வெவ்வேறு கால கட்டங்களில் அவர் வாழ்ந்ததைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. அதனால் இந்த அறிவியல் பொக்கிஷம் நிச்சயம் குறைந்தது 3500 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தமிழனால் கண்டுபிடிக்கப் பட்டது என்று உறுதியாகக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதலாவது மகப்பேற்று மருத்துவர் (gynecologist) திருமூலர்

விஞ்ஞானத்தின் முதற்படியே இந்துமதம் தான் என்பதை நிரூபிக்கும் வகையில் திருமூலரின் திருமந்திர பாடல்களில் பல அறிவியல் விடயங்கள் பாடப்பட்டுள்ளன. இதன் மூலம் *3000* வருடங்களுக்கு முன்பே திருமூலர் உயிரியல் மருத்துவத்தில் கைதேர்ந்தவராக இருந்தமை புலப்படுகிறது. திருமந்திரத்தில் திருமூலர் வகுத்த உயிரியல் கூறும் வியத்தகு உண்மைகள் பல உள்ளன.

***1)* ஓர் கரு உயிர்பெறும் போது ஆண், பெண் - அலியாவது ஏன்?**

**"பாய்கின்ற வாயு குறையிற் குறளாகும்**
**பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்**
**பாய்கின்ற வாயு நடுப்படின் கூனாகும்**
**பாய்கின்ற வாயு மாதர்க்கில்லை பார்க்கிலே"-**(திருமந்திரம் *480)*

ஆணின் உடலிருந்து விந்து வெளிப்படும்போது அவனது வலது நாசியில் சுவாசம் ஓடினால் ஆண் குழந்தை தரிக்கும். இடது நாசியில் ஓடினால் பெண் குழந்தை பிறக்கும். ஆனால் இரு நாசிகளிலும் இணைந்து சுழுமுனை சுவாசம் ஓடினால் கருவுரும் குழந்தை அலியாகப் பிறக்கும் என மூலர் கீழ்வரும் வரிகளில் விவரிக்கிறார்.


**குழவியும் ஆணாம் வலத்தது ஆகில்**
**குழவியும் பெண்ணாம் இடத்து ஆகில்**
**குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்**
**குழவியும் அலியாகும் கொண்டகால் ஒக்கிலே-**(திருமந்திரம் *482)*

***2)* சிலருக்கு வழக்கத்திற்கு மாறாக ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் ஒரே சமயத்தில் பிறப்பதேன்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு திருமூலர் பதில் கூறுகிறார். விந்து வெளிப்படும்போது அபானவாயு அதனை எதிர்க்குமானால் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் தரித்துப் பிறக்கும்.







### *3) கருச்சிதைவு ஏற்படுவது ஏன்?*

கருத்தரித்து விட்டது, நமக்கும் ஒரு குழந்தை பிறக்கப்போகிறது என பல எதிர்ப்பார்ப்புடன் இருக்கும் தம்பதியினருக்கு அதிர்ச்சி தரும் கருச்சிதைவு ஏற்படுவது ஏன்? உடல் உறவின் போது ஆண்-பெண் இருவரின் சுவாசமும் நாடித் துடிப்பும் இயல்பாக இல்லாமல் தாறுமாறாக இருந்தால் கருச்சிதைவு ஏற்படும் என்கிறார் திருமூலர்.

**கொண்டநல் வாயு இருவர்க்கும் ஒத்தேறில்**
**கொண்ட குழவியும் மோமள மாயிடும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொண்டநல் வாயு இருவர்க்கும் குழறிடில்**
**கொண்டதும் இல்லையாம் கோல்வளை யாட்கே**

**4) மூளை வளர்ச்சி குன்றிய குழந்தை பிறப்பதற்குக் காரணம் என்ன?**

மூளை வளர்ச்சி குன்றிய குழந்தை பிறப்பதற்குக் காரணம், உட லுறவு கொள்ளும்போது பெண்ணின் வயிற்றில் மலம் மிகுந்தி ருத்தலே காரணம் என்கிறார் திருமூலர்.

**5) குழந்தை ஊமையாக, குருடனாக பிறப்பது ஏன் ?**

உடலுறவு கொள்ளும்போது பெண்ணின் வயிற்றில் சிறுநீர் அதிக மிருந்தால் கருத்தரிக்கும் குழந்தை ஊமையாக இருக்கும் என்கி றார் அவர். பெண்ணின் வயிற்றில் மலமும், சலமும் சேர்ந்து மிகுந்திருந்தால் குழந்தை குருடனாகவே பிறக்கும் என்றும் கூறுகிறார் திருமூலர். எப்படி?

**"மாதா உதரம் மலமிகில் மந்தனாம்**
**மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்**
**மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை**
**மாதா உதரத்தில் வந்த குழவிக்கே-**(திருமந்திரம் 481)

**6) குழந்தை குள்ளமாக, முடமாக, கூனாகப் பிறப்பது ஏன் ?**

ஆணின் சுவாசத்தின் நீளம் குறைவாக இருந்தால் கருத்தரிக்கும் குழந்தை குள்ளமாக இருக்கும். ஆணின் சுவாசம் திடமின்றி வெளிப்பட்டால் தரிக்கும் குழந்தை முடமாகும் என்று கூறுகி றார். வெளிப்படும் சுவாசத்தின் நீளமும், திடமும் ஒரு சேரக் குறைவாக இருந்தால் குழந்தை கூனாகப் பிறக்கும் என திருமூலர் கூறுகிறார்.

**6) குறைகளற்ற குழந்தைகள் பிறக்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு திருமூலர் தரும் பதில், உடலுறவின் போது ஆணின் விந்து வெளிப்படும் போது இருவருடைய சுவாசத்தின் நீளமும், திடமும் ஒத்து இருந்தால் குறையற்ற குழந்தை கருத்தரிக்கும் என்கிறார். விஞ்ஞானத்தின் முதற்படியே நம் இந்துமதம் என்று சொன்னால் மிகையாகாது. (நன்றி-அகில இந்துமத மகா சபை)

## நாசா விஞ்ஞானிகளை விட பல மடங்கு அறிவுத்திறன் கொண்ட வானியல் நிபுணர் திருமூலர்

பெருவெடிப்பிற்கு *(Big Bang)* முன்பு சூரியன் நிலவாகத் தான் இருந்தது என்ற பிரளய உண்மையை திருமூலர் தனது திருமந்திரத்தில் கூறியுள்ளார். ஒரு பொருள் வெடித்து சிதர வேண்டுமெனில் அதற்கு திடப்பொருள் ஆதாரமாக தேவைப் படும். வெறும் கதிர் வீச்சுக்களால் மட்டும் இத்தனை பாறை உருண்டைகளை (கோள்கள்) சிதறச் செய்ய முடியாது.

செய்யுளுக்கு செல்லும் முன் நாம் கதிரவன் என்ற சொல் லுக்கு பொருளை அறிவோம். கதிர்+அவன்,அதாவது கதிர் வீச்சுக் களால் நெருப்புக் கோலம் பூண்டவன் என்று பொருள்.

**அம்முத லாறுமவ் வாதி எழுத்தாகும் -**
**அம்முத லாறுமவ் வம்மையெழுத்தாகும்**
**இம்முதல் நாலு மிருந்திடு வன்னியே -**
**இம்முத லாகும் எழுத்தவை யெல்லாம்- (திருமந்திரம்: *1264*)**

**பொருள்:**

முதல் ஆறு சக்கரங்களில் உள்ளது பிரணவமான ஆதி எழு த்தாகும். அவை சக்தி எழுத்துகளாகும். இதற்கு மேல் உள்ள நான்கு சக்கரங்களிலும் கதிரவன்+திங்கள் சேர்க்கையால் ஆத்ம ஜோதி மண்டலம் உண்டாகும். இந்த ஜோதி மண்டலத்திலி ருந்தே எழுத்து வடிவானவை தோன்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிவியல்:**

*பெருவெடிப்பிற்கு (Big Bang) முன்னால் என்ன நடந்தது? என்ன இருந்தது?*

*சிறு சிறு அணுக்கள் சேர்ந்து சிறு சிறு மோதல்களை நிகழ்த்திய போது அதிலிருந்து ஒரு திடப்பொருள் உருவாயிற்று. அந்த திடப்பொருளானது கதிர்வீச்சுக்களை (Relic radiation) அதிகம் கொண்டதாக இருந்தது. பின்பு நெருப்பு கோலமானது. அதன் பின்னரே பெறுவெடிப்பாய் மாறியது.*

*பிரணவம் என்பதாவது "ஓம்" என்ற ஒலியாகும். பெரு வெடிப்பிற்கு முன்னால் சூரியனும் நிலவே. கதிர்களின் (Relic radiation) செயல்பாடுகளால் நிலவானது நெருப்புக் கோளம் பூணுகிறது. இதைத்தான் திருமூலர், திங்கள் கதிரவன் சேர்க்கை என்கிறார். இதன் பின்னரே ஓம் என்ற பிரணவ ஒளியுடன் பெருவெடிப்பு தோன்றிற்று. (நன்றி-A.விஜயகுமார்)*

## ஐரோப்பியருக்கு முன்பே அறுவைச் சிகிச்சையின் முன்னோடியாகத் திகழ்ந்த இந்து மகரிஷி சுஷ்ருதர்

*இந்திய மருத்துவ துறையின் தந்தை என்று அழைக்கப்படுபவரும் உலகில் முதன் முதலில் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை செய்தவருமான தலைசிறந்த மருத்துவரான சுஷ்ருதரைப் பற்றி நம்மில் பலருக்குத் தெரியாது.*


*ஆச்சாரியரான சுஸ்ருத மகரிஷி விஸ்வாமித்ரரின் மகனாவார். இவர் முதன் முதலில் அறுவை சிகிச்சை செய்யும் நுட்பத்தில் தகுதியடைந்து "சுஸ்ருத சம்ஹிதை (Sushrut Samhita) " என்ற நூலை உருவாக்கி வைத்தார். இவரின் இந்த படைப்பு ஒரு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தன்மையான மருத்துவக் கலைக்களஞ்சியம் *(Encyclopedia of surgery)* எனக் கூறலாம்.

பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சை மற்றும் மயக்க மருந்து மருத்துவம் *(science of Anesthesia)* ஆகிய துறைகளின் தந்தை என ஆச்சாரியர் சுஸ்ருதா அழைக்கப்பட்டார். ஏனெனில் ஐரோப்பிய நாடுகளில் அறுவை சிகிச்சைப் பற்றி போதிய அறிவு இருந்திராத காலத்தில் சுஸ்ருத முனிவர் சிதைந்து போன மூக்கு பகுதியை அறுவை சிகிச்சையால் *(Rhinoplasty)* சரிசெய்து கொண்டு இருந்தார்.



இவர் ஹரித்வாரில் பிறந்து காசியில் கல்வி கற்றவர். முக் காலமும் உணர்ந்த ஞானி, விஞ்ஞானி, மருத்துவர். இவரது சிலை ஹரித்வாரில் இருக்கிறது. உலகின் முதல் அறுவை சிகி ச்சை நிபுணர் இவர். 300 அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாகச் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுஷ்ருதா 2600 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். ஆயுர் வேதாவைச் சேர்ந்த மிகமுக்கிய மூன்று நூல்களில் ஒன்று தான் இவர் எழுதிய சுஷ்ருதா சம்ஹிதம். சுஸ்ருதா சம்ஹிதா தான் இந்திய பாரம்பரிய ஆயுர் வேதத்தின் முதல் நூலாகும். 184 அத்தியாயங்களைக் கொண்ட இந்த சம்ஹிதத்தில் 1120 வகையான நோய்களும், 700 மூலிகைகளும், 64 வகையான கனிமங்களும், 57 வகையான விலங்கியல் மருந்துகளும் குறிக் கப்பட்டுள்ளன.

இந்த நூலில் சுஷ்ருதா ஆழமான, நுணுக்கமான அறுவை சிகிச்சைகளைப் பற்றி மிகத்தெளிவாக விளக்குகியுள்ளார். சொத் தைப்பல் நீக்கம், மூலம் சிகிச்சை, குடல்சார்ந்த சிகிச்சைகள், பாலின உறுப்பு சார்ந்த சிகிச்சைகள், எலும்பு முறிவு சிகிச்சைகள் போன்ற பலவகையான சிகிச்சைகளும் குறிக்கப்பட்டுள்ளன. மனித எலும்புகளின் வகைகளும் அதன் விளக்கங்களும் கூட குறிக்கப்பட்டுள்ளன. மேலும், கண் சார்ந்த கோளாறுகள் பற்றி யும் அதற்கான சிகிச்சைகளும் பற்றிய குறிக்கப்பட்டுள்ளன. எட் டாம் நூற்றாண்டில் இந்த நூல் “கிதாப் இ சுஷ்ருத்” என்ற பெயரில் அரபுமொழிக்கு மொழிப்பெயர்க்கப்பட்டது.

இத்தனை மாமேதையாக விளங்கிய சுஸ்ருதர் இருக்கும் போது இந்திய மருத்துவர்கள் இவர் பேரில் சத்தியப் பிரமாணம் எடுக்காமல் இவருக்கு பிறகு 300 வருடங்கள் கழித்து பிறந்த ஹிப்போக்ரேட்ஸ் பெயரில் சத்தியப் பிரமாணம் எடுக்கிறார்கள்.

யார் இந்த ஹிப்போக்ரேட்ஸ்? இவர் கிரேக்க நாட்டை சேர்ந்த தலைசிறந்த மருத்துவர். அன்று இந்தியா அறிவின் உச்சத்தில் இருந்தது. ஆனால் கிரேக்க நாட்டில் ஒரு தலை வலி, தும்மல் என்றால் கூட அதற்கு மருந்தை சாப்பிடாமல் நாம் முற்பிறவியில் செய்த தவறுக்கு கடவுள் கொடுத்த தண்டனை என்று மருந்து சாப்பிடாமல் இருப்பார்கள். சிறு தலைவலி என்றாலும் அதற்கு உண்டான மருத்துவத்தை செய்யவில்லை என்றால் அது உயிரையே பறித்து விடும் அல்லவா. அது போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அங்கு நடந்தது. ஹிப்போக்ரேட்ஸ் நமது கர்மவினை பலனாய் நோய் கொடுக்கும் அதே இறைவன் அதற்கு மூலிகை எனும் இயற்கை மருந்தையும் கொடுத்து இருக்கிறான் என்று சொல்லி அவர் மக்களிடம் உள்ள அறியாமையை போக்கினார். ஏழை என்றாலும், பணக்காரன் என்றாலும் காசே வாங்காமல் இலவச வைத்தியம் பார்த்தார்.

அக்காலத்திலேயே இவர் மருத்துவ துறையில் பல புரட்சிகள் செய்தார். சுஷ்ருதா போல் இவரும் ஒரு சிறந்த மருத்துவர் தான். எனவே இவர் பெயரில் சத்தியபிரமாணம் எடுப்பதில் தவறு இல்லை. ஆனால் இவருக்கு 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் நமது சுஷ்ருதா. ஹிப்போக்ரேட்ஸ் நோய்க்கு மருந்து மட்டும் தான் கொடுத்தார். ஆனால் சுஷ்ருதா அறுவை சிகிச்சையே செய்தார். ஹிப்போக்ரேட்ஸ் ஏழை, பணக்காரன் யாரிடமும் காசு வாங்கவில்லை. சுஷ்ருதா ஏழைகளுக்கு மட்டும் இலவசமாக வைத்தியம் பார்த்து செல்வந்தர்கள் அவர்களாக கொடுக்கும் செல்வத்தை பெற்று கொண்டு அதை தனக்கு என்று வைத்துக் கொள்ளாமல் இல்லாதவர்களுக்கு கொடுத்தார். ஹிப்போக்ரேட்சை விட நமது சுஷ்ருதா தலை சிறந்த மருத்துவர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஒருவர் பெயரில் மட்டுமே சத்தியபிரமாணம் எடுக்கவேண்டும் என்று இல்லை. சுஷ்ருதாவின் பெயரிலும் எடுக்கலாம். சுஷ்ருதா தனது சுஷ்ருத சம்ஹிதாவில் அறுவை சிகிச்சையை 8 விதமாக பிரித்து உள்ளார். அவை.

1. செத்யா - துண்டித்தல்
2. லேக்யா- பிரித்தல்
3. வேதியா- போதைப்பொருளை உடலில் இருந்து நீக்கல்
4. இஷ்யா- நோயின் மூலக்காரணத்தைக் கண்டறிய ரத்தக் குழாய்களை ஆராய்தல்
5. அபர்வ கிரியா- தீமை விளைவிக்கும் பொருட்களின் உற்பத்தியை உடலிலிருந்து அழித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.விஸ்ராதேவ்யா- உடலிலிருந்து தண்ணீரை நீக்கல்
7.சிவ்யா- தைத்தல்
8.எத்தியகிரிய- துளைகள் போட்டு அறுவை சிகிச்சை செய்தல்

மிகவும் வளர்ச்சி அடைந்த அறுவை சிகிச்சை முறை பற்றியும் சுஷ்ருத சம்ஹிதாவில் அவர் குறிப்பிட்டு உள்ளார். கண் அறுவை சிகிச்சை மற்றும் மூக்கு, காது போன்ற உருப்புகளை புனரமைப்பு செய்வதற்கான இந்த அறுவை சிகிச்சை நடத்தப் பட்டுள்ளது. மேலும் தமது நூலில் 125 அறுவை சிகிச்சை கருவிகளை பற்றி இவர் குறிப்பிட்டு உள்ளார்.

ஆறுவிதமான எலும்பு முறிவுக்கு அவரது சம்ஹிதையில் சிகிச்சை முறைகளை விளக்கியுள்ளார். சுஸ்ருதரின் மூளையவியல் (Embryology) பற்றிய விஞ்ஞான விளக்கங்கள் அதிசயிக்க வைக் கின்றன. விலங்குகளின் தாடை எலும்புகளைப் பயன்படுத்தி 125 வகையாக "அறுவை சிகிச்சைக் கருவிகள் " அவரால் வடிவ மைக்கப்பட்டன. சிகிச்சைக்குபின் தையல் இடும் முறைகளையும் கண்டுபிடித்து தந்தார். குதிரையின் முடி மற்றும் மரப்பட்டை இழைகளை பயன்படுத்தி தைத்தார். கிட்டத்தட்ட 300 வகை யான அறுவை சிகிச்சைகளை அவரது சம்ஹிதையில் விளக்கமாக எழுதியுள்ளார். பழங்கால பாரதத்தில் மகரிஷி சுஸ்ருதா மருத்துவ விஞ்ஞானத்தின் ஞானக் களஞ்சியமாக விளங்கினார்.

*Ref.*ஆச்சார்யர் சுஸ்ருதா- *600 BCE Acharya Sushruta : FATHER OF PLASTIC SURGERY -Santhoshkumar Muthu, Dept of Biochemistry, PSG CAS*

**சுஸ்ருதாவின் மூக்கு அறுவை சிகிச்சை**


பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையின் வரலாறு என்பது 5000 ஆண்டுகளைத் தாண்டி பின்னோக்கி செல்கிறது. பொ.ஆ.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே இது எகிப்தில் பிறந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்து, இந்தியா போன்ற நாடுகளில் இதன் மூலகர்த்தாக்கள் அறுவைச் சிகிச்சையை செய்தனர்.

பொ.ஆ.மு. 800களில் வாழ்ந்த சுஸ்ருதர் தான் ஆரம்ப கால சிறந்த அறுவை சிகிச்சை நிபுணர் என அந்தக் கால மருத்துவ பதிவுகள் தெரிவிக்கினறன. அது மட்டுமின்றி அவர் தனது அறுவை சிகிச்சை முறைகளை சுஸ்ருதா சம்ஹிதா- ***Sushruta Samhita*** என்ற பத்தகத்தில் எழுதி வைத்துள்ளார்.




இதில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை எவ்வாறு செய்வது என்பதைப் பற்றியும், தெள்ளத் தெளிவாக ஒவ்வொரு செய்தி யையும் தெரிவிக்கிறது. இவற்றுடன், விரை வீக்க கட்டியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(hydrocele )*, புரோஸ்டேட் சுரப்பியை நீக்குதல், கல் நீக்க சிறு நீர்ப்பை அறுவை சிகிச்சை, கருப்பை மேற்திறப்பு போன்ற ஏராள மான அறுவை சிகிச்சைகள் பற்றி எழுதி வைக்கப்பட்டுள்ளது. கண்பொறை சிகிச்சை பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுஸ்ருதா தான் உலகின் முதல் பிளாஸ்டிக் அறுவை சிகி ச்சை நிபுணர். பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையின் பிதாமகன். அவ ரது சிகிச்சை முறைகள் கற்பனைக்கும் அப்பாற்பட்டது. சிகி ச்சை முறையைப் பின்பற்றி இங்கிலாந்தின் ஜோசப் கான்ஸ் டாண்டின் கார்ப்பு (***Joseph Constantine Carpue*** -4 *May* 1764-30 *January* 1846) என்ற மருத்துவர் மூக்கின் *rhinoplasty* என்னும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையை செய்தார்.

ஆனால் அதற்கும் முன்பே, ஆதிகால எகிப்திய முதல் அறுவை சிகிச்சை மருத்துவ புத்தகமான எட்வின் ஸ்மித் பாப் பிரசில் *(Edwin Smith Papyrus)* ல், எலும்பு உடைந்தால் எப்படி சரிசெய்வது, கட்டுப் போடுவது, அறுவை சிகிச்சை செய் வது என்றெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆச்சரி யமான விஷயம்தானே. ஏனெனில் அதன் வயது கி.மு 3000-2500. அப்போது ரோமானியர்களும், அழகுக்காக பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்தனர்

சுஸ்ருதாவின் மூக்கு அறுவை சிகிச்சை முறையைப் பின் பற்றி அறுவை சிகிச்சை செய்தவர் ஜோசப் கான்ஸ்டாண்டின் கார்ப்பு என்ற ஆங்கிலேய மருத்துவர்.
*(Ref.Account of Two Successful Operations for Restoring a Lost Nose, in December, 1815)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மருத்துவ ஆச்சார்யர் சரகர்

பாரத வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் வரலாற்றைக் கொண்டவர் ஆயுர்வேத ஆசார்யர் சரகர். இவரது சரக சம்ஹிதை 120 அத்தியாயங்களைக் கொண்டது. ஏன், 120 அத்தியாயங்கள் என்ற எண்ணிக்கை? ஒரு மனிதனின் பூரண ஆயுள் 120 என்பது சரகரின் தீர்மானமான எண்ணம். ஆகவே தான் 120 அத்தியாயங்களில் 120 வயது வரை எப்படி வாழலாம் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இதே போல பேலர், கஸ்யபர், சுஸ்ருதர் ஆகிய ஆயுர்வேத ஆசார்யர்களும் தங்கள் நூல்களை 120 அத்தியாயங்களாகப் பகுத்துள்ளதும் பாரதத்தின் புராதன மஹறிஷிகள் மனிதனுக்கு பூரண ஆயுர்தயா (பூரண ஆயுள்) 120 வருடங்கள் என நிர்ணயித்துள்ளதைச் சுட்டிக் காட்டுகிறது. சரகர் ஆத்ரேய முனிவரின் சீடர். அக்னி வேஸர் எழுதிய நூலை செம்மைப்படுத்தி இவர் சரக சம்ஹீதை எழுதி னார் என்று சொல்லப்படுகிறது. சரகர் ஆயுர் வேதத்தைப் பரப்பியவர்களுள் முக்கியமான ஒருவர். இவர் ஆஸ்துமா நோய் க்கு சொன்ன மூலிகைகளை நாம் முதலில் பார்ப்போம்.

இவை அனைத்து நாட்டு மருந்து கடைகளிலும் கிடைக் கும். இதில் இரண்டு, மூன்று நமக்கே தெரிந்தவை தான். சரகர் சொன்ன ஆஸ்துமாவிற்கான பத்து மூலிகைகள் பூலாங்கிழங்கு, புஷ்கரமூலம், புளிவஞ்சி, ஏலரிசி, பெருங்காயம், அகில், துளசி, கீழாநெல்லி, கீரைப்பாலை, காட்டுக் கோரை கிழங்கு ஆகியவையாகும்.

சரகரின் காலம் பொ.ஆ முதல் அல்லது இரண்டாம் நூற் றாண்டுகள் என்று கருதப்படுகிறது. ஆனால் இந்த வாதத்தை மறுக்கும் அறிஞர்கள் சரகர் கிறிஸ்து பிறப்பதற்கு முன் பல நூற்றாண்டு காலம் முன்னதாக வாழ்ந்தவர் என்று உறுதிபடக் கூறுகிறார்கள். ஆத்ரேய மஹறிஷியின் காலத்தை பல நூற்றாண்டு காலத்திற்கு முன்பேயே நிர்ணயிக்க வேண்டியிருப்பதால் சரகரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமும் மிக மிக முற்பட்டதாக இருக்க வேண்டும் என்பது இவர்களின் வாதம்.

ஆத்ரேயர் புராண கால முனிவர். அவர் காலத்தில் புத்தர் இல்லை. ஆனால் சரக சம்ஹிதாவில் இந்து வேதங்களில் கூறப் பட்ட மருத்துவ முறைகள் கூறப்பட்டாலும் சில இடங்களில் புத்தமத சித்தாந்தங்களும் பேசப்படுகிறன. புத்தர் 2600 ஆண்டு களுக்கு முன் பிறந்தவர். இவர் காலத்தில் தான் சுஷ்ருதாவும் வாழ்ந்தார். சரகர் நூலில் புத்த மத சித்தாங்களும் சில இடங் களில் சொல்லப்பட்டு இருப்பதால் அவர் புத்தருக்கு பின் வந்தவர் எனலாம். ஆத்ரேய முனிவரின் சீடர் என்பது கற்பனை என்று ஆகி விடுகிறது. சரகரது நூலில் புத்த மத சித்தாந்தங்கள் வந்ததற்கு ஆராய்ச்சியாளர்கள் சொல்லும் பின்னணி.

சரகரது சம்ஹிதையில் மூன்றில் ஒரு பங்கு கிடைக்காமல் போகவே, இந்த குறைபாட்டை 4ஆம் நூற்றாண்டில் சரி செய்தவர் த்ருதபாலா எனும் புத்த துறவியாவார். இவர் பாடுபட்டு பல இடங்களிலிருந்து செய்திகளை சேகரித்து சரக சம்ஹிதையை பூர்த்தி செய்தார். அதற்கும் முன்னே பொ.ஆ.மு. 323 ஆண்டில் நாகார்ஜூனா எனும் புத்த துறவி திபெத்திய மொழியில் மொழி பெயர்த்தார். கிகாயீ மற்றும் டான் ஐயவோ ஆகிய இரு சீன தேசத்து புத்த துறவிகள் பொ.ஆ 472 இந்த நூலை மொழி பெயர்த்தனர். அவ்வாறு செய்யும் பொழுது இவர் களில் யாரே னும் ஒருவரோ அல்லது அனைவருமே அவர்களது சொந்த கருத்தைக் கொஞ்சம் இதில் கலந்து இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சரகர் தனது குருகுலத்தை நடத்தி வந்த விதம், மாணவர் களுக்கு சொல்லிக் கொடுக்கும் திறமை அவரது சம்ஹிதை யிலிருந்து புரிகிறது. அவர் பட்டிமன்றம், விவாதங்கள், தர்க்கங் கள் மூலம் மருத்துவத்தை சொல்லி கொடுத்தார். க்ரூப் டிஸ்க ஷன்ஸ் எனப்படும் இன்றைய முறையை சரகர் பின்பற்றியிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார். சரகர் கண்டிப்பான, ஆனால் அறிவு மிகுந்த ஆசிரியர். அவர் மருத்துவர்களை பற்றி சொன்னது.

"அறிவில்லா வைத்தியரிடம் சிகிச்சை பெறுவதை விட இறப்பது மேல்","நோயாளிகளை குணப்படுத்த நான்கு விடயங்கள் சிறப்பாக அமைய வேண்டும். அந்த நான்கு மருத்துவர், மருந்துகள், உதவியாளர், நோயாளி" ஆகியவையாகும். சரகர் கொடுத்த கல்விப் பயிற்சி 7 வருடங்களுக்கு எட்டுவகை மருத்துவ முறைகளாக கற்றுத் தரப்படும். அதன்பின் Hippocratesன் சத்திய பிரமாணம் போலவே (இந்த யுக டாக்டர்கள் எடுக்கும் சத்யப் பிரமாணம்). சரகரும் ஒரு சத்திய பிரமாணத்தை எழுதியிருக்கிறார். எப்படி ஒரு மருத்துவர் பிரசவம் பார்க்க வேண்டும் என்று சொல்லியது மட்டுமல்லாமல், பிரசவத்திற்கு பின் கவனிக்க வேண்டியவை பற்றியும் சொல்லி இருக்கிறார். மேலும் சரகர் மருத்துவ உலகிற்கு சொன்ன அறிவுரைகளை பல உள்ளன. அவை எக்காலத்திற்கும் பொருந்த கூடியவை.

ஒரு மருத்துவன் நோயாளியை எவ்வாறு நடத்த வேண்டும் என்கின்ற கேள்விக்கு சரகர் கூறி இருக்கும் விடை,

**தம் புத்ர வத் உபாச்சறேத்**

நோயாளிகளை உன் சொந்த பிள்ளைகளை போல் கவனி.

**மம பூத தயா பிரதி**

நீ உன்னை எவ்வாறு நடத்துவாயோ அவ்வாறு உன்னிடம் வரும் அனைத்து ஜீவன்களையும் நடத்து.

இதை விட சிறந்த கருத்து எதுவுமே இல்லை. ஒரு மருத்துவர் அதிக வீர்யமுள்ள மருந்துகளை, ஒரே பெயருள்ள வெவ்வேறு நிறுவன மருந்துகளை, தேவையற்ற பரிசோதனைகளை, சந்தைக்கே வராத அல்லது சந்தையில் தடை செய்யபட்ட ஒரு மருந்தை தன் குழந்தைக்கோ, இல்லை தனக்கோ கொடுக்க முயல்வாரா? நிச்சயம் கிடையாது. நோயாளி என்பவன் வேறு யாரோ என்பதால் தான் இந்த அசிரத்தை, அஜாக்கிரதை எல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம். எத்தனை பெரிய தத்துவத்தை எளிமையாக ஒரு வரியில் அடக்கி விட்டார். இப்படி ஒவ்வொரு மருத்துவரும் எண்ணி மருத்துவம் செய்தால் உலகம் எத்தனை அற்புதமாக இருக்கும்.

**சரக சம்ஹீதையில் கொன்னை அத்யாயம்.**

சரக சம்ஹிதாவில் ஒரு மரத்திற்கு அவர் அதிக முக்கியத் துவம் கொடுத்துள்ளார். அது எந்த மரம் தெரியுமா?

கொன்னை மரம். இதன் ஆங்கில பெயர் *GoldenShower Tree. Botanical Name-CASSIA FISTULA* இதன் மருத்துவ பயன்பாடுகள் பற்றி சரகர் கூறியுள்ளார். இது சரகராலும், சுஸ் ருதாவாலும் பல தோல் குஷ்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டது. சரகர் எவ்வாறு சர்ம நோய்களுக்கு இந்த மருந்து பயன்படுத்த வேண்டும் என்பதை பற்றி ஒருஅத்தியாயமே எழுதியிருக்கிறார். தன்வந்திரி நிகண்டு, தோல் வியாதிகள், ஜுரம் இவற்றுக்கு மருந் தாக, கொன்னையை குறிப்பிடுகிறது. இதன் இலைகள் ஜுரத்தை குறைக்கும். பூக்களும் விதைகளும் பித்தத்தையும், கபத்தையும் குறைக்கும். பழக்கதுப்பு பசியை உண்டாக்கும் என்றும் ப்ருஹத் நிகண்டு ரத்னாகரா தெரிவிக்கிறது.

சரகர் கொன்னை பழக்கதுப்பை, **12** வகையான மருந்தாகத் தயாரிக்கும் விதத்தை கூறியிருக்கிறார். கொன்னை தோல் வியாதி கள், உடல் பருமன், கொலஸ்ட்ரால் குறைப்பு இவற்றுக்கு அரு மருந்து, குஷ்டம், வெண் குஷ்டம், போன்ற தோல் வியாதிகளுக் கும் பயன்படும். கொன்னை மரப்பட்டை வலிகளை குறைக்க வும், தொற்று நோய்கள் அண்டாமலும் தடுக்கும். கொன் னையின் வேர்ப்பட்டை, இலை, பூ போன்றவை அனைத்தும் மருத்துவ குணம் மிக்கவை. ஏராளமான நோய்களைக் குணப் படுத்தக் கூடியவையாகும். இவ்வளவு பயன்களை தரும் கொன்னை மரம், ராஜமரம் என ஆயுர்வேதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ப் புலவர் ஒளவையார் கண்ட அணுசக்தி

இரண்டாவது உலகப்போர் காலத்தில் தான் அணுகுண்டு கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் எழுபது ஆண்டு காலமாகத்தான் அணுசக்திக் கொள்கையை உலகம் அறியும். ஆனால் இந்த அணுகுண்டுக் கொள்கையை திருவள்ளுவமாலையில் காணும் போது அது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. திருக்குறளின் பெரு மையை உலகம் அறியும். குறுகிய அடிகளில் (குறள்) மிகப் பெரிய கருத்துகளைப் புகுத்தியது வள்ளுவனின் திறமையாகும். இதை விளக்க வந்த இடைக்காடர் என்ற புலவர் "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள்" என்று பாடினார்.

இதையே "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி குறுகத்தரித்த குறள்" என்றார் ஒளவையார். அணுவானாலும் கடுகானாலும் பிளந்து கொண்டே போனால் பிளக்கமுடியாத ஒரு சிறு துகள் (*Atom*) இருக்கும். அதைப் பிளக்கும் போது பிரமண்டமான சக்தி உண்டாகும்.இதை அணுவியல் படித்தோர் அறிவர்.

அணு என்பதும் பரமாணு என்பதும் இந்திய அறிஞர்கள் கண்ட மிகச் சிறிய துகள். எனவே அணு என்பதை அறிந்தே அவர்கள் "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி" என்று கூறினர். புலவர்கள் என்போர் முக்காலமும் உணர்ந்த ஞானிகள். ஊனக்கண்களால் காணமுடியாதவற்றையும் ஞானக்கண்களால் அறிவர். கையால் தான் ஒரு அணுவைப் பிளந்தால் ஏழு கடல் அளவு சக்தி கிடைக்கும் என்பதைச் சொல்லாமல் சொன்னார்கள் போலும்.

"இடைக்காடர் கூற வந்த விஷயம் வேறு, நீங்கள் அதில் விஞ்ஞான கருத்துகளை வலியப் புகுத்துகிறீர்கள்" என்று சிலர் கூறலாம். ஆனால் திருமூலரின் மற்றொரு பாடலைக் காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் அவர்களுக்கு நாம் நினைப்பதை விட அதிகமாகத் தெரியும் என்று தெளிவாகிறது. அதை இறுதியில் காண்போம்.

அணுவைப் பிளப்பதால் வரும் ஆற்றல் (*Nuclear fission*) அணுகுண்டு செய்யப் பயன்படுகிறது. அணுவை இணைப்பதால் (*nuclear fission*) உருவாகும் ஆற்றல் ஹைட்ரஜன் குண்டு செய்யப் பயன்படுகிறது.

இடைக்காடர் பாடல் அணுகுண்டுக் கொள்கையை நினைவுபடுத்தும். ஒரு அணுவைத் துளைத்தால் ஏழு கடல் ஆற்றல் கிடைக்கும். பரிபாடல் **(3-53)**, புறநானூறு **(2)** ஆகிய பாடல்களுக்கு உரை எழுதியோர் "உலகம் அணுக்களால் ஆனது" என்றும் "அணுச் செறிந்த உலகம்" என்றும் எழுதியுள் ளனர். இன்றைய அறிவியலில் நாம் படிக்கும் அணுவும் உரையாசிரியர்கள் கூறிய அணுவும் வேறுவேறாக இருக்கலாம். ஆயினும் மிகச் சிறிய பொருள் துகள் எனும் கருத்திலேயே அவர்கள் பயன்படுத்தினர்.

ஒரு கடுகில் **2,62,144** அணு.

ஒரு பழந்தமிழ்ப் பாட்டு அணு பற்றிய தமிழர்களின் அறிவை விளக்குகிறது.

8 அணு = ஒரு தேர்த்துகள்
8 தேர்த்துகள் =ஒரு பஞ்சிழை
8 பஞ்சிழை = ஒரு மயிர்
8 மயிர் = ஒரு மணல்
8 மணல் = ஒரு கடுகு
8 கடுகு = ஒரு நெல்,
8 நெல் = ஒரு விரல்
12 விரல் = ஒரு சாண்
2 சாண் = ஒரு முழம்
4 முழம் = ஒரு கோல்
500 கோல் = ஒரு கூப்பீடு
4 கூப்பீடு = ஒரு காதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அணுத்தேர்த்துகள் பஞ்சிற்றுய் மயிரன்றி மணற்கடுகு நெல் விரலென்றேற-வணுத்தொடங்க யெட்டோடு மன்னு விரற் பன்னிரண்டார் சாணாக்கி லச்சாணிரண்டு முழமாம்."**

- செந்தமிழ் தொகுதி *12 P127*

70 ஆண்டுகளுக்கு முன்பு அணுகுண்டு வெடித்துச் சோதித்த போது அந்த அற்புதக் காட்சியைக் கண்டவர்களில் ஒருவர் ஓபன்ஹீமர். இவர் அமெரிக்காவைச் சேர்ந்த பெரிய அணு விஞ்ஞானி *(nuclear physicist)*. சோதனைக்காக அணுகுண்டு வெடித்ததை நேரில் கண்டவுடன், அந்த அதிபயங்கரமான காட்சி கண்ணபிரானின் விஸ்வரூபக் காட்சிபோல இருந்தது என்று கூறி பகவத்கீதையில் விஸ்வரூப தரிசன யோகத்திலுள்ள ஸ்லோகத்தை மேற்கோள் காட்டினார்.

## திருமூலர் கணக்கு

உலகில் வாழும் உயிர்களின் வடிவத்தை சொல்ல வந்த திருமூலர் ஒரு அதிசயமான விசயத்தைச் சொல்லுகிறார். ஒரு மாட்டின் முடியை எடுத்து ஆயிரம் கோடி இழைகளாகப் பகுப்பது பற்றிப் பேசுகிறார். இதுவும் அணுவைப் பிளப்பது போலத்தான். ஒரு மாட்டின் முடியை எடுத்து அதை நூறு கூறாக்கச் சொல்கிறார். பின்னர் அதிலிருந்து ஒரு முடியெடுத்து ஆயிரம் கூறாக்கச் சொல்கிறார். அவ்வாறு ஆயிரம் கூறு போட்டதில் ஒரு முடியை எடுத்து அதை நூறாயிரம் கூறு போடச் சொல்கிறார். இதுதான் ஜீவனின் வடிவம் என்கிறார்.

*100 x 1000 x 100 000=100 000 00 000*

அதாவது ஒரு மாட்டின் முடியை ஆயிரம் கோடி இழைகளாகப் பகுப்பது பற்றிப் பேசுகிறார். இவர்கள் அணுவைப் பிளப்பதை மனக்கண்ணில் கண்டார்கள் என்றால் அது மிகையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவியது கூறது ஆயிரமானால்
ஆவியின் கூறு நூறாயிரத்தொன்றாமே"
-திருமந்திரம் 1974**

*(சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்)*

## வானொலியின் தந்தை மார்க்கோனியா? ஜெகதீஸ் சந்திரபோஸ் எனும் இந்தியரா?

ஒவ்வொரு கண்டுபிடிப்புக்கும் பின்னால் ஒரு பெரிய வரலாறு புதைந்து இருக்கிறது. நம்மில் பலரும் வானொலியைக் கண்டுபிடித்தது மார்க்கோனி என்றுதான் கூறுவோம். ஆனால், அது தவறு. உண்மையில் ரேடியோவை கண்டு பிடித்தது யார்?

வானொலியானது ஒருவரால் மட்டுமே கண்டுபிடிக்கப் படவில்லை. இது பலரின் கூட்டு முயற்சி. அந்தக் கண்டு பிடிப்புக்குப் பிதாமகனாக இருந்தவர் ஒரு இந்தியர் என்றால் அது நமக்கு எல்லாம் பெருமையே. மேற்கு வங்காளத்தில் பிறந்த ஜெகதீஸ் சந்திரபோஸ்தான் அந்தப் பெருமைக்குரியவர்.

அவரின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் தேசிய அமெச் சூர் வானொலி தினமாக நவம்பர் 30 ஐ நாம் கொண்டாடுகி றோம். ஜெகதீஸ் சந்திரபோஸ் 1858 நவம்பர் 30 இல் பிறந்தார். அவர் ஆற்றிய சாதனைகள் பல.

கிரஸ்கோகிராப் கருவியைக் கண்டுபிடித்த இவர், இந்தியத் துணைக்கண்டத்திலேயே முதன் முறையாக 1904-ஆம் ஆண்டு தனது புதிய கண்டுபிடிப்புக்காக அமெரிக்காவிடமிருந்து காப் புரிமை பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரத்துக்கு முன் பரந்து விரிந்த வங்காளத்தில், இன் றைய வங்கதேசத்தின் தலைநகர் டாக்காவிற்கு அருகில் உள்ள பிக்ராம்பூரில் பிறந்தாலும், அவர் கல்வி பயின்றது,பணியாற்றியது எல்லாமே கொல்கத்தாவில்தான்.

மேற்படிப்புக்காக லண்டன் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் படிக்கச் சென்றார். ஆனால் அவரது உடல் நிலை அதற்கு ஒத்து ழைக்கவில்லை. எனவே மருத்துவப் படிப்பினை இடையிலேயே நிறுத்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார். ஆனாலும் மனம் தளராமல், நோபல் பரிசு பெற்ற லார்ட் ரேலிக் அவர் களோடு இணைந்து கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொண்டு பட்டம் பெற்றார்.

ரிமோட் வயர்லெஸ் சிக்னல் ஆய்வில் வெற்றிகண்ட போஸ், முதன்முதலாக செமிகண்டக்டரைக் கொண்டு வானொலி அலைகளை ஒலிபரப்ப முடியும் என நிரூபித்தார். இந்த ஆய்வின் முடிவுகளைச் சுயநலத்தோடு வியாபாரம் ஆக்காமல் அனைவரும் இதில் மேற்கொண்டு ஆய்வு செய்ய வேண்டும் என்ற எண்ண த்தில் அனைவருக்கும் கிடைக்கச் செய்தார்.

செடி, கொடிகளின் மீது இவரின் கவனம் திரும்பியதன் பயனாக உருவானதே கிரஸ்கோகிராப். இது செடிகளின் தொடர் பியலையும், அது எப்படி பாதிக்கப்படும் போது வலிகளை வெளிப்படுத்துகிறது போன்ற அதிசயத் தகவல்களையும் ஆய்வின் மூலம் நிரூபித்தார்.

வானொலித் துறையில் ஜெகதீஸ் சந்திரபோஸ் பல முன் முயற்சிகளை மேற்கொண்டார். குறிப்பாக அவரின் கண்டுபிடிப் பான கிரிஸ்டல் ரேடியோ டிடக்டர், வேவ்கைடு, ஹார்ன் அண்டனா போன்றவற்றை தனது மைக்ரோவேவ் டிடக்டரில் முதன்முறையாகப் பயன்படுத்தி சாதனை படைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1893*-இல் நிக்கோலஸ் டெஸ்லா வெளிநாட்டில் ஒரு பொது இடத்தில் வைத்து முதல்முறையாக வானொலி ஒலி பரப்பினை சோதனை முறையில் செய்து காட்டினார். அதற்கு அடுத்த ஆண்டே இந்தியாவில் ஜெகதீஸ் சந்திரபோஸ் கொல் கத்தாவில் உள்ள டவுன் ஹாலில் வைத்து ஒரு சோதனையை மக்கள் மத்தியில் செய்து காட்டினார். போஸ் சர்வதேச ஆய்வி தழ்களில் தனது கண்டுபிடிப்பு களைப் பற்றி எழுதினார். இது சர்வதேச அளவில் இவருக்குப் பெயரையும் புகழையும் ஈட்டித் தந்தது.

இவ்வாறு உலகம் முழுவதும் உள்ள பல்வேறு அறிவியல் ஆய்வாளர்கள் வழங்கிய அரிய தகவல்களைக் கொண்டுதான் மார்க்கோனி, வானொலி ஒலி அலைகளை சாலிஸ்பெரி சதுப்பு நிலத்தில் இருந்து தொலைதூரத்துக்கு அனுப்பினார்.

மே *1897*-இல் ஜெகதீஸ் சந்திரபோஸ் அதே போன்றதொரு சோதனையை மீண்டும் கொல்கத்தாவில் செய்து, வெற்றியும் கண்டார்.

அதன் அடிப்படையில் அவர் லண்டனில் உள்ள ராயல் சொசைட்டியில் தனது ஆய்வுக்கட்டுரையைப் படித்தார். அது அங்கு கூடிய விஞ்ஞானிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அதன் பின் அவர் மார்க்கோனியைச் சந்தித்து தனது ஆய்வின் முடிவு களை விவாதித்தார். ஆனால் போஸ் தனது முடிவுகளைக் காப்பு ரிமை செய்ய விரும்பவில்லை. மார்க்கோனி முந்திக்கொண்டார். விளைவு, இன்று வானொலியைக் கண்டுபிடித்தவர் என்ற பெருமைக்குரியவராக மார்க்கோனி திகழ்கிறார்.

இதன் மூலம் வானொலி கண்டுபிடிப்பில் போஸின் பங்க ளிப்பு எவ்வளவு முக்கியம் என்பதை நாம் அறியலாம். அதனா லேயே இவரின் நினைவாக தேசிய அமெச்சூர் வானொலி நாள், இவரது பிறந்தநாளில் கொண்டாடப்பட்டு வருகிறது.

நன்றி:- சிறுவர் மணி, தினமணி, **01-12-2012**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஹரர் என்கிற கருவியை ஏற்கனவே பான்லி என்கிற அறிஞர் உருவாக்கி இருந்தார். அதன் மூலம் ரேடியோ அலை களை கண்டறிய முடியும் என்று அதை செம்மைப் படுத்திய லாட்ஜ் சொன்னார். ஆனால், அந்தக்கருவி நிறைய குறைபாடுக ளோடு இருந்தது. அதனால் சீராக எந்த ரேடியோ அலைகளை யும் உணரமுடிய வில்லை. போஸ் நிறைய மாற்றங்களை அந்த கருவியில் கொண்டுவந்தார்.

இன்னமும் குறித்து சொல்வதென்றால் அதை முழுமையாக மாற்றியமைத்தார். பாதரசத்தை *(Mercury)* அதில் சேர்த்தார். சுருள் வடிவ ஸ்ப்ரிங்குகளை இணைத்தார். கூடவே டெலிபோனை பயன்படுத்தினார். கூடவே குறைகடத்தி படிகத்தை கருவியில் இணைத்து பார்த்தார். வெறுமனே அலைகள் இருக்கிறது என்று கண்டறிந்து கொண்டிருந்த கருவியானது அலைகளை உற்பத்தி செய்து, மீண்டும் அதை திரும்பப்பெறுகிற மாயத்தை செய்தது. ஐந்து மில்லிமீட்டர் அளவில் அலைகள் உண்டானது. இவையே இன்றைக்கு மைக்ரோவேவ் என்று அறியப்படுகின்றன. மின்காந்த அலைகளின் எல்லா பண்பும் அவற்றிடம் இருப்பதை நிரூபித்தார் போஸ். கம்பியில்லா தகவல் தொடர்பை சாதித்த முதல் ஆளுமை ஆனார். அதைக்கொண்டு ஒரு பெல்லை ஒலிக்க வைத்து வெடிமருந்தை வெடிக்க வைத்தும் காண்பித்தார் போஸ். கூடவே அதைக்கொண்டு சில மைல் தூரத்துக்கு ரேடியோவை கொண்டு சென்று மீண்டும் பெறவும் செய்து சாதித்து காண் பித்தார் போஸ்.

அதாவது உலகின் முதல் ரேடியோ எழுந்தது. இது நடந்து இரண்டு வருடங்கள் கழித்து மார்க்கோனி ரேடியோ பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுவதாக சொன்னார்.

ஜகதீஷ் சந்திரபோஸ் பயன்படுத்திய கொஹரரை மார்க் கோனிக்கு இத்தாலிய கடற்படையில் இருந்த அவரின் நண்பர் சோலாரி அறிமுகப்படுத்தினார். அப்படியே அதை எடுத்து தன்னுடைய கருவியில் பொருத்தினார் மார்க்கோனி. ஒரே ஒரு மாற்றம் *U* வடிவத்தில் போஸ் அமைத்திருந்த பாதரச ட்யூபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேராக மாற்றினார். *S* என்கிற மோர்ஸ் குறியீட்டை தான் அனுப்பியதாக வேறு அறிவித்தார். அதை பதிவு செய்த ஆவணங்கள் இல்லை என்பது தனிக்கதை.

போஸ் செய்த ஒரு தவறு தான் கண்டுபிடித்த கொஹரர் கருவியை பேடண்ட் செய்ய மறுத்தார். என் தந்தையைப் போல நானும் மக்களுக்கு சேவை செய்ய எண்ணுகிறேன். வணிக நோக்கங்கள் எனக்கில்லை என்றார். அந்த போஸ் கண்டுபிடித்த கருவியை தான் கண்டு பிடித்தேன் என்று வரலாற்றில் பதிவும் செய்துகொண்டார் மார்க்கோனி.

தன்னுடைய வாழ்க்கை வரலாற்றில் போஸ் செய்த உதவி அளவில்லாதது என்று ஒன்றரை பக்கம் எழுதி வைத்த மார்க் கோனி, தான் போஸிடம் இருந்து எடுத்தவை பற்றி ஒரு வரி கூட மறந்தும் சொல்ல வில்லை.

உண்மையில் மார்க்கோனிக்கு மின்காந்த அலைகளை பற்றி தெரியாது. அவரே ஒரு நேர்முகத்தில் இதை ஒப்புக்கொண்டார். போஸ் தான் அதைக் கண்டுபிடித்தார் என்று வருங்காலத்தில் வந்த அறிவியல் அறிஞர்கள் கண்டறிந்தார்கள். மார்க்கோனி அவரை ஏமாற்றியது ஊர்ஜிதமானது.

உலகின் முதல் ரேடியோவை உருவாக்கியவர் போஸ் தான் என்று நியூயார்க்கில் உள்ள *IEEE (The Institute of Electrical and Electronics Engineers)* 14.9.2012 அன்று அதிகார பூர்வமாக அறிவித்தது.

அதுமட்டும் அல்லாது அமெரிக்காவில் உள்ள நாசா போல் லண்டனின் ராயல் ஸொஸைட்டீ எனும் அமைப்பில் இதற்கான ஆதாரம் உள்ளது. மார்க்கோனி தான் ரேடியோவை கண்டு பிடித்தார் என்று இனிமேல் யாராவது சொன்னால் இல்லை, அதை கண்டுபிடித்தது ஜெகதீஷ் சந்திரபோஸ் எனும் இந்திய இந்துக் குடிமகன் என்று தைரியமாகச் சொல்லுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகாய விமானம், விமான தொழில் நுட்பம் ஆகிய அற்புத படைப்புக்களின் முன்னோடிகள் நம் இந்துக்களே

எதற்கெடுத்தாலும் வெளிநாட்டு விஷயங்களையே புகழும் நமது மனப்பான்மையாலும், நமது இந்து மதத்தில் உள்ள அற்புதமான விஷயங்கள் நமக்கு வெளிப்படுத்தப்படாமல் இருப்பதாலும் நாம் நமது முன்னோர்களின் அரிய, அற்புத கண்டுபிடிப்புக்களை அறியாமலேயே வாழ்ந்து வருகிறோம். இதனால் வெள்ளையர்கள் செய்தவற்றையே புகழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உண்மையில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்திய ரிஷிகளாலும், முனிவர்களாலும் பெரும் விஞ்ஞானப் புதையல் கள் நமக்கு அளிக்கப்பட்டுள்ளன. நாம் அதைத் தெரிந்து கொள்ளவில்லை என்பது தான் வேதனையான விடயம்.

இன்று விஞ்ஞானம் பல மடங்கு வளர்ந்துவிட்டது. வான் வெளியில் விண்கலங்கள், ஏவுகணைகள் என்பன விண்ணை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. இவை அனைத்தும் விண்வெளி உலகின் தத்துவ மேதை எனப்படும் ரஷ்யா நாட்டைச் சேர்ந்த கொன்ஸ்டன்டின் ஸியோல்கோவிஸ்கி என்பவரின் தீர்க்க தரிசனத்தால் உருவானவையே என்றும், இன்று உலகை வலம் வந்து கொண்டிருக்கும் விமானங்களுக்கு வித்திட்டவர்கள் ரைட் சகோதரர்களே (1903) எனவும் நாம் கூறிக் கொண்டாலும், உண்மையில் முதன் முதலில் விமானத்தைக் கண்டு பிடித்து அதைப் பயன் படுத்தியவர்கள் இந்துக்களே என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

உலகில் உள்ள எல்லா நாட்டு நூல்களிலும் விமானங்கள், ஏவுகணைகள் பற்றிய செய்திகள் காணப்பட்டாலும் கூட தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் மிகப்பழைய காலம் முதலே இவை பற்றிய குறிப்புக்கள் காணப்படுவதோடு அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு முறைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருப்பது விமானத்தின் முன்னோடிகள் நம் மூதாதையர் தான் என்று நமக்கு எண்ணத் தோன்றுகின்து.

ரிக்வேதம். இராமாயணம். மகாபாரதம். சமரங்கன சூத்திரா. வைமானிக சாஸ்திரம் போன்ற பழைய நூல்களில் விமானம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகிறன. இவை வெறும் கற்பனையில் உருவானவை என்றோ மூடநம்பிக்கையை விதைக்கின்ற புராண இதிகாசங்கள் என்றோ நம்மால் அப்படியே ஒதுக்கி விடவும் முடியாது.

ரிக் வேதம் நான்காயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது எனக் கருதப்படுகிறது.இதில் போர்க்கடவுளான இந்திரன் விமான ரதத்தில் பறந்து வந்து அசுரர்கள் மீது போர் நடத்தியதாகவும், மயன் இவ்வானவூர்தியை ஓட்டியதாகவும் தகவல்கள் உள்ளன. அத்துடன் வருணன் போன்ற தேவர்கள் மிகச்சிறந்த வானவூர்தியில் வானவெளியில் சென்றதாகவும், புஷன் என்பவன் மிகச் சிறந்த ஓட்டியாக திகழ்ந்தான் எனும் குறிப்புகளும் காணப்படு கின்றன. இது கற்பனையில் உருவானது எனக் கூறினாலும் வானில் பறப்பது சாத்தியமே எனக்கூறியதிலிருந்து விமானத்தின் முன்னோடிகளாக எமது மூதாதையர்கள் திகழ்ந்தனர் எனக்கருதவும் இடமுண்டு.

அடுத்தது இராமாயண காலத்தில் இராவணன் என்னும் தமிழ் மன்னன் புஷ்பக விமானத்தில் பறந்ததாகவும், மயன் என்பவனின் கைவண்ணத்தினால் இது உருவாகியதாகவும், குபே ரன் என்னும் மன்னனுக்கே இப்புஷ்பக விமானம் சொந்தமா னது எனவும் இதை இராவணன் கைப்பற்றி அதில் அவன் விண் வெளி முதல் கொண்டு பல உலகங்களையும் சுற்றி வந்தான் எனவும் இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையில் விஞ்ஞானக் கருவிகள் இல்லாத அந்தக் காலத்தில் ஆகாயத்தில் விமானங்கள் மூலம் பறப்பது பற்றியும், பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைல்கள் ஏவுகணைகள் போல நெடுந்தூரம் தாண்டிச் சென்று தாக்கக் கூடிய அஸ்திரங்கள் பற்றியும் எப்படி நம் முன்னோர்க ளால் கற்பனை செய்ய முடிந்தது என்று நாம் சற்று நேரம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாகவும், எம் இந்துக்களான பழந்தமிழர் விமானத்தின் முன்னோடிகள் தானா என ஆராயவும் தலைப்பட்டவர்களாக உள்ளோம்.

அத்துடன் மயனால் எழுதப்பட்ட மயன் மதம் என்னும் நூலிலும் அதன் விளக்க உரை காட்டும் நூலிலும் வானவூர்தி யைப் பற்றியும், அவற்றின் அமைப்புமுறை பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளது.

“சமரங்கன சூத்திரா” எனும் நூல் 11ம் நூற்றாண்டில் இரா மச்சந்திர தீட்சிதர் என்பவரால் எழுதப்பட்டது. இதில் வான வெளிக்கப்பல்கள் எப்படிச் செலுத்தப்பட்டன, அதன் அமைப்பு முறை என்ன என்பது பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்நூல் மூன்று விதங்களில் வான்வெளிக் கப்பல்களைச் செலுத்த முடியும் எனக் கூறுகிறது.

1. கீழிலிருந்து (பூமியிலிருந்து) விண்ணை நோக்கிப் பறப்பது.

2. வானவெளியில் பல திசைகளில் பறப்பது.

3. மேலிருந்து (விண்ணிலிருந்து) கீழே இறங்குவது. (பூமி நோக்கி வருதல்)

சில வான்வெளி விமானங்கள் சூரியமண்டலம் மற்றும் நட்சத்திரங்கள் வரை சென்று வர முடியும் என்றும், இவை மிக வேகமாகச் செல்லக்கூடியவை என்றும், அத்துடன் அவை பூமி யிலிருந்து பறக்கும் போது அதன் ஒலி புவியில் உள்ளவர்களுக்கு மிக மெல்லிதாகவே கேட்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மகாபாரதத்திலும் இராமாயணத்திலும் வான்வெளி விமான ங்கள், விண்வெளியில் ஏவப்படும் போர்க்கருவிகள் பற்றியெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் கூறப்பட்டாலும் கூட இதில் சில விடயங்கள் இருந்திருக்க லாம் என்று கருத இடமுண்டு.

நம்முன்னோர்கள் கர்ணபரம்பரையாகச் சொல்லப்பட்ட கதைகளை காவியமாக வடித்தனர். எனவே அந்தக் காவியங்க ளில் கற்பனை இடம் பெறுவது தவிர்க்க முடியாததே. இருந்த போதும் அந்தக்கால நம் முன்னோருக்கு விமானம் பற்றி தெளி வான சிந்தனை இருந்துள்ளது என்பது வியப்பான விடயமே.



அடுத்தது சுமார் 1500 வருடங்களுக்கு முன்பு பரத்வாஜ முனிவரால் எழுதப்பட்ட "வைமானிகா சாஸ்திரம்" எனும் நூல் இப்போதுள்ள சமஸ்கிருத வடிவில் சுப்புராய சாஸ்திரியால் உரு வாக்கப்பட்டது. எனினும் இதை மொழிபெயர்த்த மொழி பெயர்ப்பாளர்கள் இதனை "பறக்கும் சாஸ்திரம் பற்றிய விஞ்ஞா னம்" என்றே குறிப்பிட்டுள்ளனர். இதில் உள்ள கருத்துக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழங்கால விஞ்ஞான அறிவுக்கு அப்பாற்பட்டு, நவீனகால விஞ் ஞான அறிவையும் மிஞ்சி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**பரத்வாஜ் முனிவரின் வைமானிக சாஸ்திரம் நூல் கூறும் முக்கிய விடயங்களாவன,**

விமானம் என்றால் என்ன என்பதற்கு வைமானிகா சாஸ் திரம் கூறும் இலக்கணம் "ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு காற்று வழியாக பறந்து செல்லும் கருவியே விமா னம்" என்கிறது.

விமானத்தில் *32* சூட்சுமங்கள் இருப்பதாகவும், இவை அனைத்தும் விமானிக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்றும் கூறியிருப்பதுடன் விமான அமைப்பு, விமானம் பறப்பது, விமா னத்தை தரையில் இறக்கும் போது அதன் கட்டுப்பாடு எனும் *3* தலைப்புக்களில் இந்த *32* சூட்சுமங்களும் அடக்குகின்றன.



அத்துடன் இந்நூல், விமான ஓட்டத்தைப் பதிவு செய்யும் கருவி, விமானத்திலிருந்து எதிரிகளைத் தாக்கும் ஏவுகணைகள், விஷவாயுக்கள், இறக்கைகளை நீட்டுவதும் மடக்குவதும், பருவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகளை உணர்த்தும் அமைப்பு, சூரிய சக்தியைப் பயன் படுத்துதல், விமானஓட்டி அணிய வேண்டிய உடை, உணவுப் பழக்க வழக்கம், விமானம் செய்யப் பயன்படுத்தப்படும் உலோ கம் என்பன பற்றியெல்லாம் விரிவாகக் கூறுகின்றது. குறிப்பாக விமானம் செய்யப்பயன்படும் உலோகம் பற்றிக் கூறும் போது வெப்பத்தைக் கிரகித்துக் கொள்ளும் உலோகமே உகந்தது எனக் கூறுகிறது. அத்துடன் விமானம் செய்யப் பயன்படும் உலோகங்க ளின் வகைகளும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் விமானத்தில் ஏழுவகையான கண்ணாடிகளும், கண்ணாடி வில்லைகளும் *(Lens)* பொருத்தப்பட வேண்டும் என வும், இந்த கண்ணாடி வில்லைகள் ஆயுதங்களைப் பிரயோகிக்க உதவியதாகவும் வைமானிகா சாஸ்திரம் கூறுகின்றது.

அத்துடன் எதிரி விமானியின் கண்களை இருட்டாக்க கண் ணாடி வில்லைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும், சூரிய ஒளியில் மின்சத்தியைப் பெற்று அதன்மூலம் எதிரி விமானிகளை அழிக்கும் முறைகளையும் குறிப்பிட்டுள்ளது. (இது நவீன விமான த்தின் லேசர் தொழில் நுட்பத்தையும் விஞ்சிக் காணப்படும் முறையாகும்.)


மேலும் ஏழு மோட்டார்கள் மூலம் இவ்விமானங்களை இயக்க சக்தி கிடைப்பதாகவும், சூரியசக்தி. இரசாயண சக்தி. மின்சக்தி. என்பவற்றின் மூலம் விமானம் முன்னோக்கி செலுத்தப் பட்டு வெற்றிகரமாக பறப்புக்களை மேற்கொண்டதாகவும், இதில் பெரும்பாலும் சூரிய ஒளியே பயன்படுத்தப்பட்டது எனவும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இதில் ருக்ம, சுந்தர, திரிபுர, சகுண என நான்கு வகையான விமான வகைகள் இருந்ததாக அந்நூல் கூறுகின்றது. அதில் ருக்ம விமானம், சுந்தர விமானம், ஆகியன சந்திர மண் டலத்திற்குச் சென்ற அப்போலோ விண்கலத்தை போன்ற அமை ப்புடன் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிபுர விமானம் தரையிலும், நீரிலும் செல்லக்கூடியது. இதன் வேகம் குறைவானது என்றும் கூறப்பட்டுள்ளது. அத்து டன் சகுன விமானமானது நம்முடைய நவீன விமானத்திற்கும், ராக்கெட்டுக்கும் இடைப்பட்ட அமைப்பைக் கொண்டது. இந்த விமானம் மூலம் எந்தக் கிரகத்திற்கும் சென்றுவர முடியும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.



ஆகவே வைமானிக சாஸ்திரம் எனும் இந்நூல் வெறும் கற்பனையில் உருவான நூல் என்று கூறமுடியாதுள்ளது. அப்படி யும் அவற்றை கற்பனை எனக் கூறினாலும், அதில் உள்ள விமானம் பற்றிய வியத்தகு நவீன தொழில் நுணுக்கங்கள் பற்றி பழங்கால மனிதன் ஒருவனுக்குத் தெரிந்திருந்தது எனும் விடயம் பெருமை கொள்ளக்கூடியதும், வியப்பானதுமாகும்.

சங்க இலக்கியமான புறநானூறு மணிமேகலை, சீவக சிந்தாமணி, பெருங்கதை, போன்றவற்றிலும் வானவூர்தி பற்றிய கருத்து காணப்படுகிறது. பெருங்கதை என்னும் பழந்தமிழ்க் காவி யத்தில் வானவூர்தி வடிவமும், அதை இயக்கும் விதமும் விவரி க்கப் பட்டுள்ளன. சீவகசிந்தாமணியில் வரும் மயிற்பொறியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மயில் போன்ற பறக்கும் பொருள்) செய்தியானது நமக்கு வியப்பினை ஏற்படுத்துகிறது.

அதன் பொறியினை வலஞ்சுழி மற்றும் இடஞ்சுழியாக திருகுவதன் மூலம் அம்மயிற்பொறி வான மேகங்களிடையே பறக்கவோ காண்பவர் மயிர் சிலிர்க்கும் வகையில் தரையில் இறங்கச் செய்யவோ முடியும் என்கின்றது அந்நூல்.

இராமாயணத்தில் இராவணன் செலுத்திய புட்பக விமா னம், சீவகசிந்தாமணியில் விவரித்த மயிற்பொறி விமானத்தை விட எல்லாவகையிலும் மேம்பட்டது என்கின்றனர் சான்றோர். மணிமேகலையிலும் கூட வான் வழிப் பயணங்கள் பற்றிச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்திலும் வானவூர்தி பற்றிய செய்திகள் காணப் படுகின்றன. சங்க இலக்கியமான புறநானூற்றில் "வலவன் ஏவா வான ஊர்தி" (புறம் -27) என்ற வரி விமானத்தை ஓட்டுபவர் இல்லா வானவூர்தியைக் கொண்டிருந்தான் என்கின்ற கருத்து நம் தலையைச் சுற்ற வைக்கின்றது. விமான ஓட்டியை வலவன் என அழைக்கின்றது புறநானூறு. இது நிச்சயமாக கற்பனையில் உருவான கதை எனக் கூற முடியாது.

புறநானூற்றுத் தமிழர் உண்மையில் நமக்கு முன்னோடி களே. அந்த முன்னோட்டத்தை இன்றைய தமிழராகிய நாம் உணரவில்லை. மாறாக தமிழை மறக்கவோ, மறைக்கவோ முனைவது கவலையையே தருகின்றது. ஒரு காலத்தில் கற்பனையாக இருப்பது பிறிதொரு காலத்தில் நிஜமாகி விடுவதுண்டு. உதாரணமாக ஜூல் வொர்னி என்பவர் 100 ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய உலகைச் சுற்றிவர எண்பது நாட்கள் எனும் கற்பனை நூலில் நீருக்கடியில் செல்லும் கப்பல்கள். சந்திர மண்டலத்திற்கு வான் வெளிக்கப்பல்களின் மூலம் பயணம் செய்வது பற்றியெல்லாம் எழுதியிருந்தார். ஆங்கிலத்தில் விமானப் பயணம் பற்றி எழுந்த நூல்களில் இதுவே முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக ஆங்கிலத்தில் எழுந்த நூல்கள் எல்லாம் பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் பின்னரே எழுந்தது எனலாம். விண்ணியல் பற்றிய வரலாற்றை இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பே மனித இனம் அறிந்திருந்தது. ஆனால் இது எங்கே அறிமுகமானது எனத் தெரியவில்லை. தமிழில் மட்டுமல்ல வேறு மொழிகளிலும் இவை பற்றிய அறிவு காணப்பட்டது.

1232 ஆம் ஆண்டு சீனத்தார்த்தாரி இனத்தவர்கள் ராக்க ட்கள் பயன்படுத்தியதற்கான வரலாற்றுச் சான்றாக மொங்கோ லிய அரசனான ஜெங்கிஸ்கானின் மகனான ஒக்டாயின் தலைமை யின் கீழ் மொங்கோலியர்கள் சீனத் தார்த்தாரியர்களின் காய் பெங்பூ நகரைத் தாக்கிய போது சீனர்கள் தமது நகரைக் காக்க ராக்கட்களை பயன்படுத்தினர் என்பதிலிருந்து அவர்கள் வானி யல் பற்றி அறிந்திருந்தனர் என்பதனை உணர்ந்து கொள்ளலாம்.

மேலும் கி.பி.1280ல் ஹசன் அல்ரமா என்பவரால் அரபு மொழியில் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதி ஒன்றில் ராக்க ட்டுக்களை அமைப்பது, விண்வெளியில் பயணத்தை மேற் கொள்வது, அவற்றை எப்படி அமைப்பது, வெடிமருந்து தயாரி ப்பது என்பது பற்றிய குறிப்புக்கள் காணப்படுகிறது.

ஆங்கிலேயருக்கெதிராக 1780 இல் இளவரசன் ஹைதர் அலிகான் ராக்கட் தாக்குதல் செய்து ஆங்கிலேயரை வியப்பில் ஆழ்தினான் என்று ஒரு குறிப்பும் உண்டு.

ஆனால் இவை எல்லாம் பிற்பட்ட காலத்தில் எழுந்தவை களே எனலாம். சீன. மற்றும் இலத்தீன் மொழிகளில் விமானம் பற்றிய செய்திகள் அந்நூல்களில் காணப்பட்டாலும் அவை எல்லாம் பிற்காலத்தில் எழுந்தவைகளே எனலாம். ஆகவே இந்து தர்மத்தைக் கூறுகின்ற புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள். ஆகியவற்றில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே விமானம் பற்றிய சிந்தனை இருந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலிருந்து விமானத்தொழில் நுட்பத்தின் முன்னோடிகள் இந்தியர்களே என்ற கருத்தே முதன்மை பெறுகின்றது. இவை கற்பனைக்கதை எனக் கூறினாலும் இதிலுள்ள விமானத் தொழில் நுட்பம் வியப்புக்குரியதே. அதை மறுக்க முடியாதல்லவா?

*http://kodimaraa.blogspot.com/2012/02/blog-post_8565.html*

சுமார் ஈராயிரம் ஆண்டுகள் முன்பு இருந்த பரத்வாஜ மகரிஷியை உலகின் முதல் விஞ்ஞானி என்று நாம் நெஞ்சு நிமிர்த்தி சொல்லலாம். ஆம் அவர் உண்மையில் விஞ்ஞானியாக இருந்த ரிஷிதான்.

அவருடைய முக்கியப் படைப்பு "யந்திர சர்வாசா" என்னும் நூலாகும். இது இன்றைய ஆங்கில *THEORY OF MACHINES* எனும் புத்தகத்துக்கு ஈடானது. அதையும் விட மேம்பட்டது எனலாம். இந்த நூலின் பெரும்பகுதிகள் கிடைக்கவில்லை. இந்த நூலின் ஒரு அங்கமாக நமக்குக் கிடைத்துள்ள நூல் வைமானிக சாஸ்த்ரா என்னும் நூல். இது இன்றைய *A BOOK OF AERONAUTICS* எனும் நூலுக்கு இணையான நூலாகும். இந்நூலும் கூட நமக்கு முழு அளவிலும் கிடைக்காமல், காலப்போக்கில் காணாமல் போய், சுமார் 3000 சுலோகங்கள் என்ற அளவிலேயே கிடைத்துள்ளது. இந்த நூலில் பல வேறு விதமான ஆகாய விமானங்கள் மற்றும் அதன் வடிவமைப்பு, இயக்கம் பற்றிய பல தகவல்களும் உள்ளன.

யந்திர சர்வாசா என்னும் நூல் பல வகைப் பொறிகளை உருவாக்கும் முறைகளைப் பற்றி விளக்கும் நூலாகும். ( *DESIGN OF THE MACHINES*). இதில் வைமானிக சாஸ்த்ரா விமானங்கள் உருவாக்கத்தைப் பற்றி மட்டும் விளக்குகிறது.

இந்த நூலில் உள்ள மூவாயிரம் சுலோகங்களில் பல்வேறு வகையான விமானங்களின் உருவாக்கம் கட்டமைப்பு மற்றும் இயக்கும் முறைகள் சொல்லப்பட்டுள்ளன. இந்த நூலைப் படிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போருக்கு நமது புராண இதிகாசங்களில் சொல்லப்படும் புஷ்பக விமானம் போன்றவை எல்லாம் கட்டுக்கதை அல்ல என்பது புரிய வரும். அது மட்டுமல்ல பிற்காலங்களில் (அதாவது நம் காலத்தில்) வரக்கூடிய விமானங்கள் பற்றியும் கணித்துச் சொல்லியுள்ளார்.

அதில் பிற்கால விமானங்கள் அதிகம் பேரை ஏற்றிச் செல்லும் வகையில் இருந்தாலும் அதிக எடையும், அதிகமான எரிபொருளும் தேவைப்படுபவையாக இருக்கும் என்றும் சொல்லியுள்ளார். *(HE TELLS THAT THE FUTURE AEROPLANES WILL BE INFERIOR TO THAT OF HIS TIME IN MANY ASPECTS)*

இன்றைய விமானங்களில் கூட இல்லாத பல நவீனமான முறைகள் பற்றி வைமானிக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. இந்நூலில் பொதுவாக சொல்லப்பட்ட விஷயங்கள்,

1.விமானங்கள் கட்டமைப்பு மற்றும் இயக்கம்.

2.விமானங்களை ஒரே இடத்தில் நிற்க வைக்கும் முறை

3.எதிரி விமானங்களின் ராடார் பார்வையில் இருந்து படாமல் மறைக்கும் முறை

4.எதிரி விமானங்களில் உள்ளவர்களின் புகைப்படம் மற்றும் அவர் தம் பேச்சுக்களை அறியும் வழிமுறைகள்

5.ஆபத்துக் காலங்களில் விமானத்தை செலுத்த வேண்டிய வழிமுறைகள்

6. எதிரி விமானங்களைத் தாக்கி அழிக்கும் வழிமுறைகள்

விமானக் கட்டமைப்பு என்பது ஏதோ பொம்மை விமானம் செய்வது போலன்றி விமானத்தின் பல்வேறு பொறிகள் பற்றியும் (விமானம் மேலெழும்ப மற்றும் தரையிறங்க வைக்கும் பொறி கள், விமானத்தைத் திருப்ப உபயோகிக்கும் பொறிகள், விமானத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் வேகத்தைக் கூட்ட மற்றும் குறைக்கும் பொறிகள் மற்றும் ஆபத்துக் காலங்களில் விமானத்தை பாதுகாப்பாகத் தரையிறக்கும் குறைகள் இப்படிப் பல விஷயங்கள் உள்ளன.)

பரத்வாஜ மகரிஷியின் 'வைமானிக சாஸ்த்ரா' எனும் நூல் ஆகாய விமானம் பற்றிய பல தகவல்களைத் தருகின்ற போதும்,

துரதிருஷ்டவசமாக காப்புரிமை போன்ற பல விஷயங்களாலும், அரசுகளின் அடக்கு முறைகளாலும் பல்வேறு கண்டுபிடிப்புக்கள் ஆள்மாற்றி சொல்லப்பட்டு புகழ் வேறு எவருக்கோ சென்று விடுகிறது.

நமது நாட்டின் விஞ்ஞானி ஜகதீஷ் சந்திரபோஸ் அவர்கள் கண்டு பிடித்த ரேடியோவின் புகழ் கடைசியில் மார்க்கோனியிடம் சென்றடைந்ததும் இப்படித் தான். மார்க்கோனி காப்புரிமை (பேடன்ட்) வாங்கிவிட அவருக்கு முன்பே கண்டு பிடித்த போஸின் பெயர் அடிபட்டுப் போனது.

அதேபோல் தான் விமானமும். உலகின் முதல் விமானத்தை ரைட் சகோதரர்கள் கண்டுபிடித்தார்கள் எனும் கூற்று. அவர் கள் **1903** ஆம் ஆண்டு விமானத்தை கண்டுபிடித்து பறக்க விட்டனர். ஆல்பிரட் ரைட் என்னும் சகோதரர்களில் ஒருவர் அவ்விமானத்தில் ஏறிப்பறக்க, அது **100** அடிகள் உயரத்தில் **20** செகண்டுகள் பறந்து விழுந்தது. இதுதான் ரைட் சகோதரர்களின் சாதனை.

ஆனால் ரைட் சகோதர்களின் கண்டு பிடிப்புக்கு எட்டாண்டுகளுக்கு முன்பே ஒரு இந்தியர் பரத்வாஜ மகரிஷியின் 'வைமானிக சாஸ்த்ரா' புத்தகத்தின் அடிப்படையில் ஒரு விமானத்தை வெற்றிகரமாக தயாரித்து அதைப் பொதுமக்கள் முன்னிலையில் வெற்றிகரமாக பறக்கவிட்டு காட்டினார் என்றால் உங்களால் அதை நம்ப முடிகிறதா? ஆனால் அதுதான் உண்மை!! வெள்ளையரின் அடக்கு முறைகளாலும், நம் நாட்டவர்களின் அலட்சியத்தாலும் கவுரவிக்கப் படாமலே மறைந்து போன ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரும் விஞ்ஞானியே, மும்பையைச் சேர்ந்த சமஸ்கிருத அறிஞரும், மும்பை பல்கலையில் சமஸ்கிருதப் பேராசிரியரா கவும் விளங்கிய திரு. ஷிவ்கர் பாபுஜி தல்பாடே என்னும் இந்திய விஞ்ஞானி. இவர் தன்னுடன் பணிபுரிந்த நண்பர் சுப்பராய சாஸ்திரியுடன் இணைந்து தயாரித்து வெள்ளோட்டம் விட்ட விமானம் தான் நவீன உலகின் முதல் விமானம்.

தல்படே விமானத்தை உருவாக்கிய 1895ம் ஆண்டில் விமான இஞ்சின்கள் தயாரிப்பில் மேலைநாடுகளே ஆராய்ச்சி அளவில்தான் இருந்து வந்தன. விமான இஞ்சின்கள் *WHITE PETROL* எனப்படும் சுத்திகரிக்கப்பட்ட வெள்ளை பெட்ரோல் என்னும் எரிபொருளை அடிப்படையாக கொண்டவை. அவ்வா றான இன்ஜினின் பாகங்கள் மிக நுணுக்கமான அளவுகளுடன் தயாரிக்கப்படுபவை. மற்றும் மிகவும் அற்புதமான முடிவு நிலையில் ( *PRECISION FINISH* ) செய்யப்படுபவை! தல்படே வெளிநாடு எங்கும் சென்ற தில்லை. எந்த நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றவுமில்லை.

பின் எப்படி அவர் அம்மாதிரியான ஒரு இன்ஜினைத் தயார் செய்திருக்க முடியும் என்பதே வியப்பானது. இதற்குக் காரணம், பரத்வாஜ முனிவரின் வைமானிக சாஸ்திரம் நூலில் இருந்த சுலோகங்களை ஆராய்ந்து அந்த சுலோகங்களுக்கான பொருளை தல்படேவுடன் இணைந்து கண்டறிந்தார். அதே போல சாஸ்திரி அவர்கள் பரத்வாஜர் தந்திருந்த அந்தக்கால அளவுகளை எல்லாம் இக்காலத்து அளவுகளில் மாற்றி மகரிஷி சொல்லியிருந்த விமானங்களின் வரை படத்தை யும் தயாரி த்தார். அவ்வாறு தயாரித்த வரைபடங்களை அடிப்படையாக வைத்தே தல்படே தன்னுடைய விமானத்தை உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய இந்துக்களின் விமானத் தொழில் நுட்பம்

பரத்வாஜ முனிவரின் வைமானிக சாஸ்திரம் 8 முக்கிய தலைப்புகள், 100 உபதலைப்புகள், 500 சூத்திரங்கள், 3000 சுலோகங்கள் மற்றும் 32 வானவியல் ரகசியக் குறிப்புகள் அடங்கிய அரிய நூலாகும். பல்வேறு விமானம் பற்றிய நூல்களி லிருந்து 1923 விமானங்கள் பற்றிய வரைபட விளக்கங்கள் காணப்படுகின்றன.

இந்த நூலில் அந்தக் காலக்கட்டத்தில் இருந்த 25 விமான சாஸ்திரம் பற்றிய நூல்களிலிருந்து தகவல்கள் எடுக்கப்பட்டன என்பது ஆச்சரியமான செய்தி.

அகஸ்தியரின் சக்தி சூத்ரம், ஈஸ்வரன் என்ற வல்லுநர் எழுதிய சௌதாமினி கலா, சாகதாயனா என்பவர் எழுதிய வாயு தத்வ ப்ரகரணா, நாரதரால் எழுதப்பட்ட வியஸானல தந்திரா, தூம ப்ரகரணம், சௌனகர் எழுதிய வஸ்ராயானா தந்த்ரா, நாரா யண மகரிஷி எழுதிய விமான சந்திரிகா, கர்கரால் எழுதப்பட்ட யந்த்ர கல்பா, வாசஸ்பதி எழுதிய யானபிந்து ஆகியவை தகவல் சேகரிப்புக்காகப் பயன்பட்டவையாகும்.

பரத்வாஜர், விமானங்களை ஓட்டப் பயன்படுத்தக்கூடிய நான்கு வித எரிபொருள் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

1. வனஸ்பதி,
2. பாதரஸ வாயு,
3. சூரிய சக்தி,
4. காற்றிலிருந்து நேரடியாக சக்தியைப் பெறுவது.

மேலும் வைமானிக சாஸ்திரம் என்ற 31 வகையான எந்திரங்களைக் குறிப்பிடுகிறது. அவற்றில் சில.

1. விஷ்வ கிரியா தர்ப்பணம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது காரின் பக்கவாட்டில் கண்ணாடி போன்ற ஒன்று. வான வூர்தியின் 4 பக்கங்களிலும் உள்ளவற்றை இது விமான ஓட்டி க்குக் காட்டும். பாதரசமும், மைக்காவும் கொண்டு தயாரிக் கப்படுவது இது.

*2. பரிவாஷ கிரியா எந்திரம்:*
இது விமானம் தன்னைத் தானே முன் செலுத்த உதவும் எந்திரம்.

*3. தமோகர்ப்ப எந்திரம்:*
வான்வெளிப் போரில், வானவூர்தியில் இருந்துகொண்டு எதிரிக் குத் தெரியாமல் மறைந்து தாக்க, விமானத்தை மறைக்கும் கருவி. தமோ கர்ப்பம் என்ற விசேஷக் கலப்பு உலோகம் இக்கருவி தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

விமானத்தைத் தரையிலிருந்து ஆகாயத்தில் செலுத்துவது, அந்தரத்தில் நிறுத்துவது, வானத்தில் குட்டிக்கரணங்கள் அடிப் பது, துரிதமாக வேகத்தை அதிகரிப்பது, குறைப்பது, எதிரிகளால் தாக்கப்படும்போது விமானத்தை பாதுகாப்பது போன்றவற்றில் நிபுணத்துவம் பெற்றவராக இருப்பது போன்ற விமான ஓட்டி களுக்கான 32 தொழில் நுட்பத் திறமைகள் பற்றி வைமானிக சாஸ்திரம் கூறுகிறது.

ஒரு விமானஓட்டி எதிர்கொள்ளும் ஐந்து விதமான வானி லைச் சூழ்நிலைகளைப் பற்றி சௌனக முனிவர் குறிப்பிட்டு ள்ளதை தமது விமான சாஸ்திரத்தில் பரத்வாஜர் எடுத்துக் காட்டியுள்ளார்.

**விமான வகைகள்**

சத்ய மற்றும் திரேதா யுகத்தில் விமானங்கள் மாந்திரிக விமானங்கள் என அழைக்கப்பட்டன. இவை மொத்தம் 25 வகைகள். அவை மனிதர்களின் உடல் திறனாலும் அற்புத சித்திகளாலும் இயக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவாபர யுகத்தில் விமானங்கள் 56 வகைகளைக் கொண்ட தாந்திரிக முறையிலானவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கலியுகத்தில் விமானங்கள் கிரித்திக முறையிலானவை. இவை எந்திரங்களால் இயங்கக்கூடியவை. இவை 25 வகை யானவை.

பண்டைய பாரதத்தில் ஆகாய விமானம் பற்றிய ஆராய் ச்சி மிகப் பழங்காலத்திலேயே இருந்தது என்பதை உணர்த்தும் தகவல்களில் சில:

ரிக்வேதத்தில் திரிசக்கர ரதம் என்னும் மூன்று சக்கரங்கள் கொண்ட, காற்றில் செல்லக்கூடிய வாகனம் (4.36.1) மற்றும் ஒரு வகை வாயுவின் சக்தியால் இயங்கக்கூடிய ஆகாய ஊர்தி யைப் பற்றியும் (5.41.6) குறிப்பிடப்பட்டுள்ளது. எரிபொருள் மூலம் செலுத்தப்படக்கூடிய ரதங்கள் பற்றிய குறிப்பும் உள்ளது. (ரி.வே. 3.14.1)

புராணங்களும் விமானங்களைப் பற்றிய பல செய்திகளைத் தருகின்றன. திரிபுரசூரர்கள் ஆகாயத்தில் பறக்கவும், நிலத்திலும், நீரிலும் செல்லக்கூடிய நகரங்களை நிர்ணாமித்திருந்தனர்.

இராமாயணத்தில் வால்மீகி முனிவர் விளக்கும் புஷ்பக விமானம் காற்றில் நகரும் ஒரு நகரமாக விளங்கியது. ராவணன் குபேரனிடமிருந்து இதைக் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீமத் பாகவதத்தில், சிசுபாலனின் நண்பன் சால்வன், கிருஷ்ணன் மீது ஒரு வான்வழித் தாக்குதல் நடத்துகிறான். அவன் பயன்படுத்திய விண்வெளிக்கலம் ஸௌபா என்ற பெயர் கொண்ட, இரும்பினால் செய்யப்பட்டு உறுதியாக விளங்கியது. அது மறைந்தும், மீண்டும் தோன்றியும் மாயா ஜாலமாகத் தாக் கும் சக்தி உடையது; தன்னிடமிருந்து மேலும் பல விமானங் களை வெளிப்படுத்தும் சக்தி கொண்டது. உண்மையில் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானமல்ல, ஓர் ஆகாய நகரம். கபிலமனியின் பெற்றோர்கள் கபர்தா முனிவரும் அவரது மனைவி தேவஹூதியும் விமானத்தில் நக்ஷத்திரங்களுக்கிடைய பயணித்ததாக ஒரு குறிப்பும் பாகவதத்தில் வருகிறது.



அர்த்த சாஸ்திரத்தில் கௌடில்யர் நிர்வாகக் கொள்கைகளைப் பற்றிக் கூறும்போழுது தமது, விமான ஓட்டிகளுக்கு உரிய மரியாதையையும் அங்கீகாரத்தையும் அரசு அளிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் குறிப்பிடுகிறார். விமான ஓட்டிகளை ஸௌபிகாஸ் என்றும் வான்வெளிப் போரில் ஈடுபடுபவர்களை ஆகாசயோத்தா என்றும் கௌடில்யர் அழைக்கிறார்.

நமது நவீனரக விமானங்கள் சூடான வாயுக்களை எரிப் பதன் மூலம் செலுத்தப்படுகின்றன. உண்மையில் நாஸாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள், வைமானிக சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாதரசத்தைப் பயன்படுத்தும் தொழில் நுட்ப உத்திகளைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்துள்ளனர். இதன் விளைவாக பாதரச வோர்டெக்ஸ் இயந்திரங்களை வடிவமைப்பதில் வெற்றி பெற்றுள்ளனர்.

போஜ அரசர் எழுதிய சமரங்கன சூத்ரதாரா என்ற நூலில் தரப்பட்டுள்ள நுணுக்கங்களைப் பின்பற்றி, இந்த இயந்திரத்தை வடிவமடைத்ததாகக் கூறப்படுகிறது.

இந்திய வானவியல் பற்றிய பல செய்திகள் சதபத பிராமணம், ஹரிவம்சம், மார்க்கண்டேய புராணம், விஷ்ணு புராணம், உத்தர ராமசரிதம், ஹர்ஷசரிதம், விக்ரமோர்வசீயம், சீவக சிந்தாமணி (தமிழ்) போன்றவற்றில் கிடைக்கின்றன.

நம் ரிஷிகளும் விமானங்களைப் பற்றி கூறியுள்ளனர். அவை பற்றிய விபரங்கள் இதோ.

1. **சக்தி யுகம் :** வானத்திலிருந்தே எரிபொருளை சேமித்துக் கொண்டு பல நாட்கள் பறந்து கொண்டே இருக்கும் திறன் படைத்த விமானம்.

2. **பூதவாஹா :** முன்னும் பின்னும் சமவேகத்தில் பறக்கும் இயல்புடைய விமானம்.

3. **தூமாயனா :** எரிக்கப்பட்ட எரிபொருளையே தாமே புதிய எரிபொருளாக கொண்டு இயக்கக் கூடிய விமானம்.

4. **கிதோகமா :** சிகி. சிரிகாசினி போன்ற மரங்களை எரித்துப் பெரும் எண்ணையில் இயங்கக் கூடிய விமானம்.

5. **ஹம் சுவாகா :** சேமித்து வைக்கும் சூரிய சக்தியின் மூலம் இயங்கும் அபாரத்திறன் படைத்த விமானம்.

6. **தாரமுஹா :** வானிலிருந்து பூமியை நோக்கிவரும் எரிகற்களை எரிபொருளாக்கி இயங்கக் கூடிய விமானம்.

7. **மாணிவஹா :** சுரங்கத்திலிருந்து எடுக்கப்படும் விஜய. பாத்ரா. ஆஷ்ஹா போன்ற உலோகப் பொருட்களாலும் செயற்கை ரசாயன உப்புகளாலும் செல்லக் கூடிய விமானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. **மாராதசாஹரா :** இது வானில் இருந்தபடியே காற்றை உறிஞ்சி மின்சார சக்தியை எடுத்து இயங்கும் விமானம்.

இது தவிர **"ஷக்டிங்கர்ப்பம்"**, **"விக்யுதம்"**. **"துருபதம்"** **"குண்டலிகமும்"** போன்ற விமானங்கள் இருந்ததாகவும் பரத் வாஜர் குறிப்பிடுகிறார். இது மட்டுமல்லாது ஒரு விமானத்தில் இருப்பவன் பேசும் ஒலி அதிர்வுகளை வைத்து அடுத்த விமானத் திற்கு தகவல் சொல்லும் "அநுக்கிரம ஷாபிதா" என்ற கருவி இருந்ததாக கௌதாமினி மஹரிஷி குறிப்பிடுகிறார்.

"ரூப கார்ஷண ரகசியம்" என்ற கருவி எதிர் விமானத்திற்குள் ஒளிக்கதிர்கள் பிரயோகித்து அந்த விமானத்தில் அமைக்கப் பட்டுள்ள கருவிகள் மற்றும் சாதனங்கள் அங்கே இருப்ப வர்களின் வண்ண ஆடைகள் ஆயுதங்கள் போன்றவற்றை மிகத் துல்லியமாக தாம் பொருத்தப்பட்டிருக்கும் விமானத்தின் தலை மையகத்திடம் தெரிவித்து விடும் என்று நாராயண மகரிஷி தமது நூலில் கூறுகிறார்.

"தீஷமபதி" என்ற கருவி எதிரிகள் விமானத்தை கவனித்து அதன் வருகையை முன்கூட்டியே "சதபிதா" என்ற விமானத்தில் பொருத்தப்பட்டுள்ள "அபஸ்மாராதாபம்" என்ற ஆயுதப் பகுதி க்கு தகவல் அனுப்பும் என்றும், உடனே அந்த அபஸ்மரா கருவி "ஷர்ஷன்" என்ற ஏவுகணையை 87 டிகிரி வெப்பதில் வெளி யிட்டு எதிரி விமானத்தை அழித்துவிடுமென்றும் "திக்பிர தர் ஷண" ரகசியம் என்ற நூல் கூறுகிறது. இன்னும் பலவிதமான விமானங்களைப் பற்றியும் அவற்றின் செயல்பாடுகளைப் பற்றியும் பழமையான ஏட்டுச் சுவடிகளிலும் கிரகந்த நூல்களிலும் காணக் கிடைக்கின்றன

பழங்கால விமான இயலைப் பற்றிய இத்தனை நூல் ஆதார ங்கள் கிடைக்கின்றனவே நமது முன்னோர்களால் உருவாக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு பாதுகாக்கப்பட்ட விமானங்களோ அல்லது அதன் கருவி களோ ஒன்று கூட இன்றைய ஆதாரத்திற்கு இல்லையா? என்ற கேள்வி நம்மில் பல பேருக்கும் எழக்கூடும்




அதற்கான பதில் எந்த புறக்கருவிகளுமே இன்றுவரை நம் மிடம் கிடைக்கவில்லை என்பது தான் அதற்கு காரணம். அவை ஏதோ ஒரு மகா பிரளயத்தினால் அழிந்து இருக்க வேண்டும் அல்லது அவற்றை உருவாக்கினவர்களே எந்த காரணத்தின் அடிப்படையிலேயோ அழித்து இருக்க வேண்டும். பின்னர் நூல் ஆதாரம் மட்டும் எப்படி இருக்கிறது என்று கேட்டால் அக்கால நூல்கள் எதுவுமே எழுதப்படவில்லை காலங்காலமாக குருமுக மாக மனப்பாடம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. அதன் பின்னரே தற்போது கிடைக்கின்ற நூல்கள் எழுத்து வடிவம் பெற்று இருக்கிறது. இருப்பினும் இந்த விஷயத்தில் இன்னும் ஆராய்ச் சிகள் மேற்கொண்டால், பல புதிய ஆதாரங்கள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாயிரம் ஆண்டு காலமாக இந்து சமயத்தில் ஏராளமான வழிபாடுகளும், தத்துவங்களும், நடைமுறைகளும், சடங்குகளும், சம்பிரதாயங்களும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை நாம் அறிந்த விடயமே. இந்து சமயத்தில் இந்துக்களுக்கு வழிகாட்டியாக வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், உபநிடதங்கள், திவ்யப் பிரபந்தங்கள், பக்தி இலக்கியங்கள் ஆகியவை விளங்குகின்றன. இவற்றில் சொல்லப்படாத விடயங்களே இல்லை எனலாம். மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்து சமய நூல்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் இந்து சமய வழிபாடுகள், தத்துவங்கள், நடைமுறைகள் ஆகியவை அனைத்திற்கும் அறிவியல், விஞ்ஞானம், மருத்துவம் மற்றும் உடல் சுகாதாரம் தொடர்பான அர்த்தங்கள் பல உள்ளன. இதுவரை காலமும் இவ்வர்த்தங்கள் பற்றி சாதாரண மக்கள் அறிந்திருக்கவில்லை. இவற்றை அறிந்து வைத்திருந்த ஒரு சில அறிஞர்களும் இவை பற்றிய விபரங்களை சாதாரண மக்களிடம் எடுத்துச் செல்லவுமில்லை. இந்நூல் அக்குறையை தீர்க்கும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ISBN 978-955-3726-05-6

விலை ரூபா 650.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org